# மோகினி வனம்

சாண்டில்யன்

www.cleanindians.com

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு: செப்டம்பர், 1985
Copyrights with The Author

திருநாவுக்கரசு தயாரிப்பு

884

2191969

விலை ரூ. 24-00

அச்சிட்டோர்:

ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ்
49, காரணீஸ்வரர் கோவில் தெரு
மயிலாப்பூர், சென்னை-600 004

# முன்னுரை

'மோகினி வனம்' என்ற இந்த சரித்திர நாவலை மிகுந்த மகிழ்ச்சியும் துக்கமும் கலந்த உணர்ச்சிகளுடன் தமிழ் மக்கள் முன்னால் சமர்ப்பிக்கிறேன். இது நூற்றுக்கு தொண்ணூற்றொம்பது சரித்திர நிகழ்ச்சிகளைக் கொண்டதாலும் அவற்றில் ராஜபுத்ர வீரர்களின் வீரச்செயல்கள் விளக்கப்படுவதாலும் மகிழ்ச்சியும், அத்தனை வீரமும் பயனற்று கோழையான ஒரு அரசனால் ராஜபுதனத்தின் வீரமரபு அழிந்ததைப் பற்றிய கதையாகையால் துக்கமும், என் மனத்தைப் பாதிக்க இம்முன்னுரை எழுதுகிறேன்.

கி. பி. 1784-வது வருஷத்தில் 8-வது வயதில் மேவார் சமஸ்தான அரியணை ஏறிய ராணா பீம்சிங் ஆரம்பத்தில் சிறுவயதின் காரணமாகவும் வாலிபனான பிறகு கோழையாகவும் பெண்பித்துப் பிடித்தவனாகவும் அலைந்து அரசைக் கவனிக்காமல் அதன் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்த வரலாறு Lt. Col James TOD எழுதிய Annals and Antiquities of Rajasthan என்ற வரலாற்று நூலின் முதல் பாகத்தில் 183-வது பக்கம் முதல் 202-வது பக்கம் வரை விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மகாராணாவையும் மேவாரையும் எப்படியாவது காப்பாற்ற அவர் தாயார் ராம்பியாரி தேவியும், மந்திரி சோம்ஜி என்ற சோம்சந்த் காந்தியும், மகாராஷ்டிர மாவீரர் மாதாஜி சிந்தியாவும் செய்த முயற்சிகள் வீணாயின என்பதை சரித்திரம் விரிவாகக் கூறுகிறது. சந்தாவதர்கள், சக்தாவதர்கள் என்ற மேவார் படைப்பிரிவுகளுக்கிடை அவர் சிக்கி சீரழிந்த விவரமும் சரித்திரத்தில் தெளிவாக இருக்கிறது.

'மோகினி வனம்' என்ற இடமே சரித்திர பிரசித்தி பெற்றது. இதன் பெயர் ராஜஸ்தானி மொழியில் 'ஸுஹைலா பாரி' என்று அழைக்கப்படுகிறது. உதயபூருக்கு அருகிலுள்ள இந்த பள்ளத்தாக்கில்தான் மகாராணா உல்லாச வாழ்க்கை நடத்தி உருப்படாமல் போனார்.

மேவாரின் அழிவு பற்றிய இந்தக் கதையில் நூற்றுக்கு 99-க்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் சரித்திரத்தில் இருக்கின்றன. புஷ்பாவதி என்ற காதாநாயகி பாத்திரம் தவிர மற்ற எல்லோருமே சரித்திரத்தில் ஜீவித்தவர்கள். கதை ஓட்டத்துக்காகவும் ரசத்துக்காகவும் மிகச் சிறிய மாறுதல்களைச் செய்திருக்கிறேன்.

'மோகினி வன'த்தைப் படிப்பதால் இந்திய சரித்திரத்தின் ஒரு முக்கிய பகுதியை நீங்கள் தெரிந்து கொள்கிறீர்கள். சுவையான ஒரு கதையையும் படிக்கிறீர்கள்.

இதைத் தொடர் கதையாகப் பிரசுரித்த 'ராணி' நிறுவனத்துக்கும் புத்தக வடிவில் கொண்டுவரும் 'வானதி' திருநாவுக்கரசு அவர்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

13-9-85 சாண்டில்யன்

www.cleanindians.com

## 1. கொல்லும் விழிகள்!

அரசனாயிருப்பதில் எந்தவித சுகமும் இல்லை என்பதை சிறு வயதிலேயே புரிந்துகொண்ட மேவார் ராணா பீம்சிங், வாலிப வயதை அடைந்த பின்பும் அந்த சித்தாந்தத்தை மாற்றிக் கொண்டாரில்லை. ஆகவே, உதயபூர் அரண்மனையில் தமது பள்ளியறையில் நின்று திவாசுகள் போடப்பட்ட பஞ்சணையில் சாய்ந்து கொண்டிருந்த சமயத்திலும் அவரது அழகிய முகத்தில் ஒரு வெறுப்பும், உதடுகளில் உலகத்தைப் பற்றிய கசப்பைக் காட்டும் புன்முறுவலும் விரவி நின்றன. பஞ்சணை மிக மிருதுவாக இருந்தாலும், உடலுக்கு சுகமளிக்க முயன்றாலும், மனதில் இருந்த வேதனை அந்த சுகத்துக்கு இடம் கொடுக்காததை ராணா புரிந்து கொண்டார் மிகவும் வேதனை நிரம்பிய நேரங்களில் தத்துவம் தலைகாட்டும் சுபாவம் உடையது! தத்துவத்தை என்றும் எண்ணிப் பார்க்காத ராணா கூட அன்று தத்துவ ரீதியில் தமது வாலிப மனதை ஓடவிட்டார்.

பாலநாயகம், பகுநாயகம், ஸ்திரீநாயகம், அநாயகம் (குழந்தையின் அரசு, பலபேர் சேர்ந்து நடத்தும் அரசு, பெண் அரசு) இந்த மூன்றும் அராஜகத்தில், அதாவது அரசின் அழிவில் கொண்டுவிடும் என்ற வடமொழி வரிகளை எண்ணிப்பார்த்த ராணா, அந்தப் பழமொழி தமது விஷயத்தில் எத்தனை உண்மையாகி விட்டது என்று நினைத்ததால், லேசாக நகைக்கவும் செய்தார். எட்டு வயதில் தாம் அரியணை ஏறியதால் தமக்குப் பதில் தம்

அரசின்
முடைய தாயார் ராஜமாதா ராம்பியாரி
கடிவாளங்களை கையில் பிடித்துக் கொண்டதும்,
மேவாரின் இரு பெரிய வீரக்கூட்டங்களான சந்தாவத்
கூட்டமும், சக்தாவத் கூட்டமும் யார் ராஜாங்கத்தை
நடத்துவது என்று போரிட்டுக் கொண்டதும், பழய
வடமொழி சுலோகத்துக்கு ஒரு பூர்த்தியை அளித்துவிட்ட
தால் நாட்டின் கதி அதோகதி என்றும் ராணா சொல்லிக்
கொண்டார், நகைப்பின் ஊடே.

ராஜமாதா தம்மை கைப்பொம்மையாக வைத்துக் கொண்டிருக்கும் வரையில் தம்மால் ஏதும் செய்ய இயலா தென்று முடிவு கட்டியபடியால் பெருமூச்சும் விட்டார், பஞ்சணையில் சாய்ந்தபடியே. ராஜமாதாவை அடக்க அமர் சந்த் பருவா இப்பொழுது இல்லையே என்று தமக் குள் கேட்டுக் கொண்டு வருத்தமும் அடைந்தார் ராணா. அமர்சந்த் பருவா வணிகர் வம்சத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தம்முடைய தந்தை அர்சி ராணாவையும் மேவாரையும் எப்படிக் காப்பாற்றினார் என்று நினைத் துப் பெருமிதம் கொண்டார். அந்தக் கதையை பலர் சொல்லிக் கேட்டும் இருந்த ராணா, அதைப்பற்றி அந்த சமயத்தில் எண்ணவும் முற்பட்டார்.

ராணா அர்சி இறந்தும் இறவாததுமாக நிர்வாகத்தை ஏற்ற ராம்பியாரி தேவி, கணவன் இறந்த மூன்றாவது மாதமே உதயபூர் தெருக்களில் பவனி வந்தாள், தன்னந் தனியாக ஒரு புரவியில். அதைக்கேட்ட அமர்சந்த் பருவா புரவியை மறித்து, ராணியை அரண்மனைக்குத் திரும்பும் படி கட்டளையிட்டார். அந்தக் கட்டளையை மீறமுடி யாத ராம்பியாரி அரண்மனை திரும்பினாள். அவளைத் தொடர்ந்து வந்த அமர்சந்த், அரணமனை வாயிலில் அவளைக் கடிந்துகொண்டார். "தேவி! கணவன் இறந்து ஓராண்டுக்குள் பெண்கள் வெளியில் [illegible]ரக்கூடாது என்ற வழக்கத்தை நீ உணரவில்லையா? இ[illegible]ன் பதவிக்குத் தகுமா? நீ ராணி என்பதை மறந்து [illegible]ளா? போ



டன்னே. இனிமேல் அரண்மனையை விட்டு வெளியே வராதே" என்று சினத்துடன் பேசினார்.

"நாட்டை எப்படி நிர்வாகம் செய்வது?" என்று கேட்டாள் ராஜமாதா.

"வெளியே வரும் பெண்களைவிட வீட்டுக்குள் இருக் கும் பெண்களின் சக்தி அதிகம். அரண்மனைக்குள் இருந்தே அரசை நடத்த முடியும்" என்று சுட்டிக் காட் டினார் அமைச்சர் அமர்சந்த்.

ராம்பியாரின் அழகிய முகம் அந்திவானமென சிவந்தது சினத்தின் மிகுதியால். பதில் சொல்லாமல் அவள் அரண்மனைக்குள் சென்றாள். அந்த தினத்திலிருந்து பதினைந்தாவது நாள் அமர்சந்த் காலமானார். அவரது மரணத்துக்கு நஞ்சு காரணம் என்று வதந்தி இருந்தது. அமர்சந்த் சக மந்திரிகளைப் போல் அல்லாமல் மிக ஏழை யாக இறந்து போனார். அவரது பூத உடலை எடுக்கப் பிச்சை வசூலித்தார்கள்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மனக்கண்ணில் ஓட்டிப் பார்த்த ராணா பீம்சிங் "கண்ணியமான அமைச்சரா யிருப்பதில் எத்தனை ஆபத்து இருக்கிறது!" என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டு, பஞ்சணையிலிருந்து எழுந்து தமது சயன அறை சாளரத்தின் வழியே வெளியே எட்டிப் பார்த்தார். கதிரவன் நன்றாக எழுந்துவிட்ட தால், உதயபூர் மிக அழகாக இருந்ததைக் கவனித்தார். தூரத்தே தெரிந்த உதயசாகரத்தின் பளபளத்த நீர்ப் பரப்பில் தவழ்ந்து வந்த காலைநேர இன்பக் காற்றை நன்றாக முகர்ந்தார். அந்த அரண்மனைக்கு எதிரே தெரிந்த ராஜ வீதியில் இருபக்கங்களிலும் இரண்டு வரிசைகளாக வீரர்கள் சென்று கொண்டு இருந்ததையும், ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தை கவனிக்காததையும் நோக்கிய ராணா, "இந்த இரு கட்சியே போதுமே,

www.cleanindians.com

மேவாரை குலைக்க'' என்று சொல்லிக் கொண்டார். ''இப்பொழுது அமர்சந்த் மட்டும் இருந்தால்...'' என்று கேட்டு வாசகத்தை முடிக்காமல் விட்டார்.

அந்த சமயத்தில் ராணாவின் அறைக்குள் புகுந்த பணிமகள் ''அமைச்சர் தங்களை காண வந்திருக்கிறார்'' என்றாள் தலைவணங்கி.

பழய நினைவுகளில் இருந்த ராணா ''அமைச்சர் தான் போய்விட்டாரே'' என்றார்.

பணிமகள் தலைவணங்கினாள். மீண்டும், ''இல்லை மகாராணா! வாயிலில் காத்திருக்கிறார்,''

ராணா அனுமதி கொடுப்பதற்கு முன்பாகவே உள்ளே நுழைந்த மகாமந்திரி சோம்ஜி, ''மகாராணா!'' என்று அழைத்து தலை தாழ்த்தினார்.

''என்ன மகாமந்திரி?'' ராணாவின் குரலில் இடக்கு இருந்தது.

''நான் போகவில்லை ராணா. உயிரோடுதான் இருக்கிறேன்.'' மந்திரியின் குரலில் வருத்தம் ஒலித்தது.

''மகிழ்ச்சி'' என்ற ராணா, புன்முறுவலும் செய்தார்.

சோம்ஜிக்கு ராணாவின் இதயம் தெரிந்ததால் மேற்கொண்டு பேசு முன்பு ஓரிரு முறை தொண்டையை கனைத்துக் கொண்டார். ''ஒரு முக்கிய விஷயம். மகாராணாவின் காதில் போட வந்தேன்'' என்றார், சிறிது அச்சத்துடன்.

மந்திரியை உற்றுப் பார்த்தார் ராணா. ''ஆமாம், என் காதில் போடுவதால் ஏதாவது பயன் உண்டு என்று நினைக்கிறீரா?'' என்று கேட்டார்.

''தாங்கள் ராணா அல்லவா?'' மென்று விழுங்கினார் மந்திரி.



''என்ன கேட்டீர் மந்திரி?''

''தாங்கள் தானே ராணா?''

''அதிலும் சந்தேகம் வந்துவிட்டதா?''

''இல்லை. ராணாவைக் கேட்காமல் நான் ஏதும் செய்வதற்கு இல்லை...''

''இந்த ஞானம் உமக்கு எத்தனை நாளாக ஏற்பட்டது?''

''மகாராணா!'' அச்சத்துடன் அழைத்தார், சோம்ஜி.

மகாராணா மந்திரியை அணுகி, அவர் தோள்மீது கையை வைத்து அவரைக் கண்களால் கூர்ந்து நோக்கினார்.

அந்தக் கண்களில் இருந்த நீட்சண்யத்தைக் கண்டு சோம்ஜி பிரமித்துப் போனார். வெளிக்கு அச்சா பிச்சமாக நடக்கும் ராணா உண்மையில் மிகக்கூரிய அறிவுடையவர் என்பதை உணர்ந்தார். ''மகாராணா நேரிட நிர்வாகத்தை நடத்தினால் எங்களைப் போன்றவர்களுக்கு தொந்தரவில்லை'' என்று உபசாரமாகக் கூறினார்.

மகாராணா மந்திரியின் தோளின்மீதிருந்த கையை எடுத்துவிட்டு, அறையில் ஒரு முறை உலாவினார். பிறகு மீண்டும் பஞ்சணையில் அமர்ந்து, ''மகா மந்திரி!'' என்று அழைத்தார் ஒரு முறை.

''மகாராணா?'' என்று வினவினார், மந்திரி.

''இப்பொழுது இருக்கும் நிர்வாகத்தில் தொந்தரவு இருக்கிறதா?'' என்று ராணா வினவினார் மெதுவாக.

மகாராணாவின் குரலில் கபடம் இருந்ததைப் புரிந்து கொண்ட மகா மந்திரி ''அப்படியொன்றும் இல்லையே'' என்று சமாளித்துக் கொண்டார்.

''மந்திரி! உண்மையைச் சொல்லும். இப்பொழுது தான் நிர்வாகத்தை நான் ஏற்றால் உமக்கு தொந்தர வில்லை என்று சொன்னீர்?'' என்று கேட்ட ராணா, புன் முறுவல் செய்து, ''அஞ்சவேண்டாம். தைரியமாகச் சொல் லும். உண்மையின் பலம் தனி'' என்று ஊக்கினார்.

''அது இந்தக் காலத்தில் இல்லை'' என்றார் சோம்ஜி.

''எது?'' ராணா கேட்டார்.

''உண்மையின் பலம் தனி என்பது'' என்று அறிவித் தார் சோம்ஜி

''எப்படிச் சொல்கிறீர்?' என்று வினவினார் ராணா.

திரும்பத் திரும்ப ராணா கேட்ட கேள்விகளால் நிதானத்தை இழந்த மந்திரி சற்று மனம் விட்டே பேசி னார். லேசாக துணிவையும் காட்டினார். ''ராணா! உண்மையைச் சொன்னதால் மகாமந்திரி அமர்சந்த் இறந் தார். தமது சொத்தையெல்லாம் செலவழித்து அரசைக் காத்ததால் அவர் செத்தபின்பு பிணத்தை தூக்கப் பண மில்லை. தர்மம், கடமை, சத்தியம் எல்லாம் அந்தக் காலத் துத் தத்துவம். இந்தக் காலத்துக்குப் பொருந்தாது'' என்ற சோம்ஜி, ''மகாராணா! தாங்கள் ஒரு வார்த்தை ராஜ மாதாவின் காதில் போடவேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

''ஏன், நீங்களே போடுவதுதானே?'' என்று ராணா கேட்டார்.

''என் தலை போய்விடும். உங்கள் தாயார் குணம் உலகமே அறியும்'' என்றார் மந்திரி.

அப்பொழுது அந்த அறையின் பக்கத்துக் கதவு ஒன்று எந்தவித ஓசையும் இல்லாமல் மெதுவாகத் திறக்கப்பட் டது.

www.chennaiindians.com



அந்த வாயிற்படியில், இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பிறகும் சிறிதும் கட்டுக்குலையாத உடலுடனும், அழகிய கண்களுடனும், ஒரு கையை சிற்றிடையில் கொடுத்து லேசாக வாயிற்படியில் சாய்ந்த வண்ணம் ராஜமாதா ராம்பியாரி நின்றாள்.

அவளை அரசரும் நோக்கினார், அமைச்சரும் நோக் கினார். தூக்கு மேடைக்கு செல்லும் குற்றவாளியின் முகம் போல இருந்தது அமைச்சரின் முகம். அரசர் மட்டும் தாயை இன்பப் புன்முறுவலுடன் நோக்கினார்.

ராஜமாதா இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

விழிகளாலேயே கொல்லமுடியும் என்பதற்கு சான்று அவள் அழகிய விழிகளிலேயே இருந்ததை மகாமந்திரி புரிந்துகொண்டார்.

## 2. தரையில் கிடந்த தாமரை

ராஜமாதா ராம்பியாரிக்கு வயது நாற்பத்தி ஐந்தை எட்டிக்கொண்டு இருந்தாலும் அவள் இளமை மாறாத இருபத்தி ஐந்து வயது பெண்ணைப் போலவே காணப்பட் டாள். மேவாரைப் போல ஒரே சண்டையும் சச்சரவும் உள்ள ராஜ்யத்தையே ஆளும் வன்மைபெற்ற ராம்பியாரி, தன் மகனும் மகாமந்திரியும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டே உள்ளே வாயிற்படியில் நின்ற போதும் எந்தவித கோபத்தையோ தாபத்தையோ காட்டி னாள் இல்லை.

இடையை ஒடித்து வாயிற்படியில் இடது கையை இடுப்பில் வைத்துக்கொண்டு நின்ற ராஜமாதாவின்

செவ்விய உதடுகளில் அப்பொழுதும் புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்ததைக் கண்ட மகாமந்திரி சோம்ஜி, அந்த புன்சிரிப்பு நன்மைக்கு அல்ல என்று புரிந்துகொண்டார். ராம்பியாரியின் கட்டுக்குலையாத உடலின் அழகைக் கண்டு பிரமித்துப்போன மகாமந்திரி "இந்த அழகும் வலுவும் மேவாரின் நன்மைக்கு உபயோகப்படுத்தப்பட்டால் எத்தனை நன்றாயிருக்கும்?" என்று தமக்குள் கேட்டுக்கொண்டார். இருப்பினும் அச்சத்தின் காரணமாக மாதாவை நோக்கி குனிந்த தலையை நிமிரவில்லை.

ராஜமாதா தனது கமல முகத்தின் மீது தவழ்ந்த இரண்டு மயிரிழைகளை விரல்களால் நீக்கியபோது தாழம்பூவில் இருக்கும் சிறு நாகங்கள் இரண்டு நெளிவது போன்ற பிரமையை ஏற்படுத்தியது மகாமந்திரிக்கு. இத்தனைக்கும் ராம்பியாரி தேவி தனது புன்முறுவலை நன்றாக விரியவிட்டுக் கொண்டாள் உதடுகளில். செங்கமல விழிகளால் தனது மகனையும் மந்திரியையும் மாறி மாறிப் பார்த்தாள் ஒருமுறை. மந்திரி மீது கடைசியாக தனது விழிகளை நிலைக்கவிட்டாள். ஏதோ இரு வேல்கள் இதயத்தில் பாய்ந்துவிட்டது போலிருந்த அந்த விழிகளின் பார்வையால் நின்ற இடத்திலேயே சங்கடப்பட்டு சிறிது அசைந்தார் மகாமந்திரி.

www.cleanindians.com

மூவரும் பேசாமடந்தைகளாய் நின்றிருந்த காரணத்தினால் ராணாவின் பள்ளியறையில் நீண்டநேரம் மௌனம் நிரவி நின்றதை ராஜமாதாவே உணர்ந்தாள். "இத்தனை காலையில் எங்கு வந்தீர்கள் மந்திரி?" என்று வினவினாள் ராம்பியாரி தேவி.

மந்திரி சோம்ஜி "அரசாங்க விஷயமாய் பேச வந்தேன்" என்று பணிவுடன் சொன்னார்.

ராம்பியாரியின் அழகிய கண்கள் சிரித்தன மந்திரியை நோக்கி. "மன்னரிடம் அரசாங்க விஷயம் பேச வந்தீரா?" என்று வினவினாள் சர்வசாதாரணமாக.



"இல்லை, இல்லை. தங்களிடம்தான் பேச வந்தேன்" என்றார் சோம்ஜி.

"என்னிடம் பேச வந்தீரா, என்னைப் பற்றி பேச வந்தீரா?" என்று ராஜமாதா வினவினாள்.

அதுவரை பஞ்சணையில் சாய்ந்து கொண்டிருந்த ராணா பீம்சிங் தனது சொரூபத்தைக் காட்டி "அம்மா! தங்களிடம் பேசுவதற்கும் தங்களைப் பற்றி பேசுவதற்கும் அரசாங்கத்தைப் பற்றி பேசுவதற்கும் அதிக வித்தியாசமில்லை என்று மந்திரி நினைக்கிறார்" என்று மந்திரியின் எண்ணத்துக்கு விளக்கம் தந்தார்.

அதுவரை சாதாரணமாயிருந்த ராஜமாதாவின் முகத்தில் சிறிதே கோபம் உதயமாகவே "பீம்! வர வர உன் இடக்கு அதிகமாகிறது. பேச்சிலுள்ள கெட்டிக்காரதனத்தை அரசு நிர்வாகத்தில் காட்டினால் எவ்வளவு நல்லதாயிருக்கும்?" என்று கேட்டாள் குரலிலும் கோபம் ஒலிக்க.

ராணா பீம்சிங் லேசாக புன்முறுவல் செய்தார். "அம்மா! தலையிருக்கும்போது வால் ஆடுமா? நீ இருக்கும்போது நான் அரசாள வேண்டிய அவசியமென்ன?" என்று வினவினார்.

மகன் தன்னைப் பாராட்டுகிறானா ஏளனம் செய்கிறானா என்பதை புரிந்துகொள்ள முடியாததால் ராம்பியாரிதேவி "என்னடா சொல்கிறாய்?" என்று வினவினாள்.

"தங்கள் ஆட்சித் திறமை எனக்குக் கிடையாது. நான் அரியணை ஏறும்போது எனக்கு எட்டு வயது. இன்று மேவாரில் பல கட்சிகள் இருக்கின்றன. இவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டைப் போட்டுக் கொள்வதால் வெளியிலிருந்து வரும எதிரிகளுடன் சண்டை போட முடியவில்லை. இந்த நிலையை சமாளிக்க உங்களால்தான்

முடியும். இதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். உங்களிடம் படைகளுக்கும் நிர்வாக மந்திரிகளுக்கும் இருக்கும் பயம் வேறு யாரிடமும் கிடையாது. அதனால் மகா மந்திரியும் உன்னிடம் வராமல் என்னிடம் வந்து சிபாரிசு கேட்கிறார்'' என்ற பீம்சிங் பஞ்சணையில் நன்றாகக் கால்களை நீட்டிக் கொண்டார்.

ராம்பியாரி மகன்மீது வெறுப்பு கலந்த பார்வையை நிலைக்கவிட்டாள். ''பீம்! மன்னன் படுத்தால் நாடு படுத்துவிடும். எழுந்திரு'' என்று அதட்டவும் செய்தாள்.

அப்பொழுதும் ராணா எழுந்திருக்காமல் படுத்த படியே பேசினார். ''அம்மா! நீங்கள் இருக்கும்போது யார் படுத்தாலும், நாடு படுக்காது. எப்பொழுதும் விழித்துக் கொண்டே இருக்கும்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போது அரண்மனைக்கு வெளியே பெரும் கூச்சலும் சச்சரவு ஒலிகளும் கிளம்பின. ராணா சிரித்தார். ''நாட்டின் விழிப்புக்கு சான்று அரண்மனை முன்பே இருக்கிறது'' என்று சொன்னார்.

ராஜமாதா வாயிற்படியில் இருந்து சாளரத்தண்டை சென்று எட்டிப் பார்த்தாள். வீரர்கள் கூட்டமாக நின்றிருந்தார்கள். வாட்கள் உருவப்பட்டிருந்தன. எந்த நிமிடத்திலும் கைகலக்கும் நிலை ஏற்பட்டிருந்தது.

ராஜமாதா சாளரத்தில் இருந்து விலகி மீண்டும் அறை நடுவுக்கு வந்து ''மந்திரி! இதற்கு என்ன அர்த்தம்?'' என்று வினவினாள்.

மந்திரி தலையை அளவுக்கு அதிகமாக வணங்கினார். ''ராஜமாதாவுக்கு தெரியாதது எதுவும் நடக்கவில்லை. சந்தாவத் கட்சியும் சக்தாவத் கட்சியும் சேர்ந்த சிலர் கைகலக்க இருக்கின்றனர். இது ஒன்றும் புதிதல்ல'' என்றார் சோம்ஜி.

''இதை நிறுத்த வழி இல்லையா?'' என்று கேட்டாள் ராஜமாதா.

www.cleanindians.com



''அதைப்பற்றிதான் தங்களுடன் பேச வந்தேன்'' மந்திரி மிக அடக்கமாக பதில் சொன்னார்.

அப்பொழுதும் ராம்பியாரி நிதானத்தை இழக்க வில்லை. ''என்னிடமா என் மகனிடமா?'' என்று கேட்டாள்.

''ராணா மூலம் தங்களிடம் ஒரு விஷயத்தைத் தெரிவிக்கலாம் என்று வந்தேன்'' என்றார் மந்திரி.

''ஏன் நேரில் தெரிவித்தால் என்ன?'' என்று ராணி கேட்டாள்.

''அச்சமாயிருந்தது.''

''சரி சரி. விஷயத்தைச் சொல்லும்.''

''தலைநகரில் நிலைமை வெடிக்கும் போலிருக்கிறது.''

''ஏன்?''

''மேவாரில் யார் ஆதிக்கமிருக்க வேண்டும் என்ற போட்டி படைப் பிரிவுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிறது.''

ராஜமாதா சிந்தனையில் இறங்கினாள். இத்தகைய நிலையை நீண்ட நாளாக அவள் எதிர்பார்த்துக் கொண்டு தான் இருந்தாள். ஆனால் அந்த பூசல் புகை இத்தனை சீக்கிரம் வெடிக்கும் என்று அவள் எதிர்ப்பார்க்கவில்லை. ஆகையால் கேட்டாள்: ''நீர்தான் மந்திரியாயிற்றே. இதற்கு ஏதாவது பரிகாரம் வைத்திருக்கிறீரா?''

''அதைப் பற்றித்தான் பேச வந்தேன்'' என்றார் மந்திரி.

''சொல்லும்.'' ராணியின் குரலில் அதிகாரத்துடன் கவலையும் ஒலித்தது.

''இப்பொழுதுள்ள குழப்பத்தை சமாளிக்க வல்லவன் ஒருவன் இருக்கிறான்...'' மந்திரி வாசகத்தை முடிக்க வில்லை. எதையோ சொல்லத் தயங்கினார்.

''யாரது?'' என்று கேட்டாள் ராஜமாதா.

''தீப்சந்த் யாருக்கும் அஞ்சாதவன்'' என்றார் அமைச்சர்.

அவனைப் பற்றி ராஜமாதாவும் கேள்விப்பட்டிருந்தாள். ''தீப்சந்த் மகாவீரன்தான், ஆனால் யாருக்கும் அடங்கமாட்டான் என்று கேள்வி'' என்றாள் ராஜமாதா.

''தங்களுக்கு அடங்காத வீரன் உலகத்தில் கிடையாது'' என்ற ராணாவும் உரையாடலில் கலந்துகொண்டார்.

அரண்மனைக்கு வெளியே மீண்டும் கூச்சல் கேட்டது, கூச்சல் பிறந்த நேரத்தில் அடங்கியது. அதற்கு காரணம் என்ன என்று ராஜமாதா கேட்க எத்தனித்த சமயத்தில் பணிமகன் உள்ளே வந்து ''ராஜமாதா! தீப்சந்த் தங்களைக் காண வந்திருக்கிறார்'' என்று அறிவித்தான்.

அதை தொடர்ந்து மாடிப்படிகளில் யாரோ முரட்டுத்தனமாக ஏறி வரும் சத்தம் கேட்டது. இருபத்திரண்டு வயதைக்கூட எட்டாத ஒரு வாலிபன் அறைக்குள்ளே அலட்சியமாக நுழைந்தான். அவன் தோளில் ஒரு பெண்ணையும் சுமந்திருந்தான். அந்தப் பெண்ணை தரையில் கிடத்தி ''ராணா! ராஜமாதா! உங்கள் அரசு இந்த லட்சணத்தில் நடக்கிறது'' என்று சீற்றத்துடன் பேசினான்.

www.cleanindians.com

தரையில் கிடந்த எழில் தாமரையைக் கண்டு ராணா ராஜமாதா இருவருமே திகைத்தார்கள்.

## 3. நீதி கேட்டவன் நிலை!

இருபத்திரண்டு வயதைக்கூட எட்டாத தீப்சந்த் ஆறடிக்கும் மேற்பட்ட உயரத்துடனும் மிக ஒல்லியாயும்



இருந்ததால், அந்த ஒற்றை நாடி உடம்பு வஜ்ரம் போலிருந்தது.

அவன் முகத்தை மிக அழகான முகமென்று சொல்ல முடியாவிட்டாலும், அதில் ஒரு கம்பீரமும் அசட்டையும் இருந்ததால் ஒரு தனிக் கவர்ச்சி இருக்கவே செய்தது. அவன் நீண்ட கைகளும் உரமாக நின்ற கால்களும் அவன் திடத்துக்கும் வீரத்துக்கும் சான்று கூறின. அவன் இடையில் அணிந்திருந்த நீண்ட வாள் கணுக்கால் வரையில் தொங்கிக் கொண்டிருந்தாலும், அதுவரை சுமந்து வந்த பெண்ணை அவன் கீழே கிடத்திய பிறகு அவன் வலதுகை வாளின் பிடி அருகில் பதிந்து விட்டதாலும் எந்த விநாடியிலும் அவன் போருக்குத் தயாராயிருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

அவனது நீண்ட நாசியும் கூர்மையான கண்களும் வலிய உதடுகளும் அவற்றுக்கு மேலே லேசாக வளர்ந்திருந்த மீசையும் அவன் எதற்கும் துணிந்தவன் என்பதை வலியுறுத்தின.

இதையெல்லாம் அணுஅணுவாகக் கவனித்த ராஜமாதா ராம்பியாரி, சோம்ஜி அவனைப் பற்றி போட்ட எடை தவறில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். அத்துடன் அவன் தோளில் தூக்கி வந்த பெண்ணை தரையில் கிடத்தி ''உங்கள் அரசு இந்த லட்சணத்தில் இருக்கிறது'' என்று குற்றம் சாட்டியதையும், குற்றம் சாட்டிய குரலில் மரியாதை சிறிதேனும் இல்லாததையும் கவனித்த ராம்பியாரி, அவன் மிகவும் கர்வம் பிடித்தவன் என்ற முடிவுக்கும் வந்ததால் ''இவனிடம் எந்த பொறுப்பை ஒப்படைப்பதும் அபாயம்'' என்ற முடிவுக்கும் வந்தாள்.

இப்படி தீப்சந்தை ஆராய்ந்து அவனை வேலைக்கு வைத்துக் கொள்வதால் ஏற்படக்கூடிய பலாபலன்களை ராம்பியாரி எடை போட்டுக்கொண்டிருந்த சமயத்தில்,

ராணா பீம்ஸிங், திப்சந்தைவிட்டு தரையில் கிடந்த தாமரையை அலசலானார்.

திப்சந்தால் கீழே கிடத்தப்பட்ட நிலையில் அந்த பெண் ஒருக்களித்து விழுந்து, கால்களை அரைகுறையாக மடக்கியும், கையொன்றை தலைக்குமேல் வளைத்தும் கிடந்ததே ஏதோ ஒரு நாட்டிய பாவம் போலிருந்தது மகாராணாவுக்கு. அவள் உடல்களின் வளைவுகளிலும் வளைவுகளை அடுத்த எழுச்சிகளிலும் வனப்பின் வசீகரம் சர்ச்சைக்கு அப்பாற்பட்டதாயிருந்ததை ராணா கவனித்தார். இடையை அடுத்த பின்னெழில்களின் அளவான எழுச்சியும், ஒருபுறம் மட்டுமே தெரிந்த மார்பின் பங்கஜ மொட்டின் அமைப்பும், ராணாவின் மனதை பெரிதும் அலைக்கழித்தன. செந்தாமரையின் நிறத்தையொத்த முகமும், கார்மேக தலைக்குழலும் சிற்ப சாஸ்திரப்படி அமைந்த அவள் முழுத் தோற்றமும் ஏதோ தேவ மகள் ஒருத்தி தரையில் விழுந்துவிட்ட பிரமையை அளித்ததால் ராணா உணர்ச்சி மிகுதியால் பெருமூச்செறிந்தார்.

www.cleanindians.com

ஆனால் திப்சந்தின் ஒரு பார்வை ராணாவின் பெருமூச்சை சட்டென்று அடக்கியதாலும், அவன் கண்கள் ராணியையும் நோக்கியதால் மகனும் மாதாவும் அதிர்ச்சியே அடைந்தார்கள் என்றால், அந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்ட சோம்ஜிக்கு பிராணனே போய்விடும் போலிருந்தது. இருப்பினும் அவர் சமாளித்துக்கொண்டு "திபசந்த்! ராஜமாதாவையும் மகாராணாவையும் பார்த்து நீ பேசிய முறை சரியல்ல" என்று தமது ஆட்சேபணையைத் தெரிவித்தார்.

திப்சந்த் தனது பார்வையை சோம்ஜி மீது திருப்பினான். "நீர் யார்?" என்று முரட்டுத்தனமாகக் கேட்கவும் செய்தான்.

தம்மைத் தெரியாத ஒருவன் மேவாரில் இருக்கிறான் என்பதை நினைக்கவும் சக்தியற்ற சோம்ஜி "என்னைத்



தெரியாதவர் யாரும் மேவாரில் கிடையாது" என்று உள்ளத்தில் இருந்ததை வெளிப்படையாகவே சொன்னார்.

திப்சந்த் அதற்கெல்லாம் மசியாமல் "இதோ நான் இருக்கிறேன். உம்மை எனக்குத் தெரியாது" என்று மூர்க்கத்தனமாக பதில் சொன்னான்.

சோம்ஜியின் முகத்தில் அசடு தட்டியது. "நான்தான் சோம்ஜி" என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"யார் மகாமந்திரி சோம்ஜி நீர்தானா?" திப்சந்தின் கேள்வியில் வெறுப்பு இருந்தது.

"ஆம், நானேதான்." சோம்ஜி தமது பதவியை வலியுறுத்தினார்.

"அமர்சந்த் பரூவாவின் இடத்தில் நீர் இருக்கிறீர்?" திப்சந்தின் குரலில் வெறுப்பு அதிகமாக ஒலித்தது.

"ஆம்." மந்திரி மென்று விழுங்கினார்.

"அதற்கு நீர் தகுதிதானா என்பதை யோசித்தீரா?"

"தகுதியென்றுதான் ராஜமாதா என்னை நியமித்திருக்கிறார்கள்."

"அமர்சந்த் செல்வமிழந்த ராஜ்யத்துக்கு பணம் சேர்த்தார். படை சேர்த்தார். நீர் என்ன சேர்த்தீர்?"

சோம்ஜி ஏதும் பதில் சொல்ல இயலாமல் நின்றார். இந்த மூர்க்கனைப் பற்றி தாம் ராஜமாதாவிடமும் ராணாவிடமும் ஏற்கனவே பாராட்டியதைப் பற்றி மனம் நொந்து கொண்டார். அந்த சமயத்தில் ராஜமாதா குறுக்கிட்டு "திப்சந்த்! மகாவீரர்கள்கூட நடந்து கொள்ளும் முறை இருககிறது..." என்றாள் சற்று அதிகார குரலில்.

திப்சந்த் ராஜமாதாவை அச்சம் சிறிதுமற்ற கண்களால் நோக்கினான். "ராஜமாதா! எதுவுமே அரசு நடக்கும் முறையிலிருக்கிறது. இதோ இந்தப் பெண்ணை பல வீரர்கள் சேர்ந்து தூக்கிச் செல்ல முயன்றார்கள். அவன்

போரிட முயன்றதால் ஒருவன் அவனை வாள் பிடியால்
தலையில் அடித்தான். அவள் புரவியிலிருந்து சுரணை
யற்று விழுந்தாள். அவளை அப்படியும் தூக்கிச் செல்ல
முயன்றார்கள். அந்த சண்டையில் இவள் ஆடையும்
கிழிக்கப்பட்டது. இவள் நிலையைப் பாருங்கள். இது
தங்கள் அரசில் ஏற்பட்டிருக்கிறது'' என்றான் தீப்சந்த்.

மகாராணி அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தாள்.
அவள் கிடந்த இடத்தில் சென்று அவள் ஆடையையும்
ஆராய்ந்தாள். இடைக்குக் கீழே இருந்த ஆடையின் ஒரு
பகுதி கிழிந்திருந்தது. அதை யாரோ புரட்டி சாமர்த்திய
மாக கிழிசல் தெரியாமலும் அந்தப் பெண்ணின் உள்ளழகு
தெரியாமலும் மறைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து
கொண்ட ராஜமாதா, அந்த மனிதன் தீப்சந்தாகத்தான்
இருக்க வேண்டும் என்ற முடிவுக்கும் வந்தாள். ராஜமாதா
அந்த பெண்ணின் அருகில் உட்கார்ந்து தலையின் குழ
லைப் பிரித்து சோதித்தாள். அத்தனை அடர்த்தியான
கரிய குழலைக் கண்டு ராஜமாதா சிறிது பொறுமை கூட
கொண்டாள். ஆனால் அந்த குழலுக்கு இடையில் கசிந்
திருந்த ரத்தக் கறையைக் கண்டதும் சினத்தின் பிம்பமாகத்
திகழ்ந்தாள். ''தீப்சந்த்! இந்த அக்கிரமத்தைச் செய்தவர்
கள் யார்? எங்கு இந்த சம்பவம் நடந்தது?'' என்று வினவி
னாள்.

''அந்த இழிச்செயலில் வேறு யார் இறங்குவார்கள்?
ராணாவின் வீரர்கள்தான்'' என்றான் தீப்சந்த் சினம்
குரலில் துலங்க.

''யார் சந்தாவதர்களா, சக்தாவதர்களா?'' என்று
ராம்பியாரி வினவினாள்.

''சந்தாவதர்கள்தான். ராணாவின் மெய்க்காவலர்
கள்'' என்றான் தீப்சந்த்.

மகாராணி பிரமை பிடித்து நின்றாள். சந்தாவதர்
களை விசாரிக்கும் திறன் தனக்கோ தன் மகனுக்கோ

www.cleanindians.com



இல்லாததை உணர்ந்தாள். மகன் அரியணையைக் காத்து
நிற்கும் சந்தாவதர்களில் யாரைத் தொட்டாலும் விபரீதம்
ஏற்படும் என்பதைப் புரிந்துகொண்ட மகாராணி பேசவும்
முடியாமல் திகைத்தாள்.

தீப்சந்த் அவள் சிந்தனையைக் கண்டான். முகத்தில்
ஏற்பட்ட மருட்சியைக் கண்டான். ராணாவின் முகத்தில்
விரிந்த கிலியையும கண்டான். சோம்ஜியின் முகத்தில்
விளைந்த பிணக்கலையையும் கண்டான். அந்த இடத்தில்
இந்த பெண்ணுக்கு நியாயம் கிடைக்காது என்ற முடிவுக்
கும வந்து ''மகாராணி! மொகலாயர்கள் தான் பெண்
களை தூக்கிச் செல்லும் பழக்கமென்று கேள்விப்பட்டிருக்
கிறேன். இப்பொழுது ராஜபுத்திரர் பண்பாடும் அந்த
லட்சணத்துக்கு வந்திருக்கிறது. நீதிக்கும் வீரத்துக்கும்
பெயர்போன மேவாரில் இரண்டுக்கும் இடமில்லை போலி
ருக்கிறது. சரி நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு கீழே
கிடந்த பெண்ணை எடுக்க முயன்றான்.

''அப்பொழுது ஒலித்தது ராஜமாதாவின் குரல் ''நில்
தீப்சந்த்'' என்று.

பெண்ணை எடுக்க குனிந்த தீப்சந்த் எழுந்து நின்று
ராஜமாதாவை ஏறிட்டு நோக்கினான். ''மகாராணி!
என்ன சொல்கிறீர்கள்? நியாயம் வழங்கப் போகிறீர்
களா?'' என்று வினவினான்.

''மேவாரில் நியாயமில்லையென்று யார் சொன்னது?''
என்று ராஜ தோரணையில் பேசிய ராஜமாதா ''இவளைப்
பிடிக்க முயன்றவர்களை உன்னால் காட்ட முடியுமா?''
என்று வினவினாள்.

''இருவரை காட்ட முடியும்'' என்றான் தீப்சந்த்.
''மொத்தம் எத்தனை பேர்?''
''நான்கு பேர்.''
''மற்றவர்கள்?''

''இருவரை நான் கொன்றுவிட்டேன். மற்ற இருவரை கொல்ல முடியவில்லை.''

''ஏன்?''

ஓடிவிட்டார்கள்.''

இதைக் கேட்ட ராஜமாதா சினத்தின் வசப்பட்டு ''அவர்களை யார் உன்னை தப்பவிடச் சொன்னது?'' என்று சீறினள்.

''புரவியிலிருந்து மயக்கமாகி சரிந்துவிட்ட இந்த பெண்ணை பார்க்க வேண்டியதாயிருந்தது...'' என்றான் தீப்சந்த்.

ராஜமாதாவின் முகத்தில் கவலை விரிந்தது. ''தீப்சந்த்! முட்டாள்! உன்னிடமிருந்து தப்பிய இருவரும் சந்தாவதர்களின் தலைவரிடம் விஷயத்தை சொல்லியிருப்பார்கள். சந்தாவதர்களின் தலைவர் சலூம்பிரா தமது வீரர்களுக்கு இழைக்கப்படும் தீங்கை பொறுக்காதவர். இந்த பெண்ணை நான் பார்த்துக்கொள்கிறேன். நீ ஓடிவிடு'' என்று கூறினள்.

தீப்சந்த் மகாராணியை வெறுப்புடன் நோக்கினன். ''மகாராணி! உங்கள் யோசனையை மானமுள்ள எந்த ராஜ புத்திரனும் ஏற்கமாட்டான். அதுவும் தீப்சந்த் ஓடுவதா!'' என்று கூறி நகைத்தான்.

மகாராணியின் முகத்தில் திகில் விரிந்தது. ''இவளை தூக்கிச் செல்ல முயன்ற நிகழ்ச்சி நடந்த இடம் எது?'' என்று வினவினள்.

''மோகினி வனம்'' என்றான் தீப்சந்த்.

''அங்கு இருப்பது சலூம்பிராவின் தம்பி அல்லவா?'' என்று வினவினள் ராம்பியாரி.

''கவலைப்படாதீர்கள். நான் கொன்ற இருவரில் அவனும் ஒருவன்'' என்றான் தீப்சந்த்.



''தீப்சந்த்! சொல்வதைக் கேள். உதயபூரை விட்டு ஓடிவிடு. சலூம்பிரா தனது தம்பியின் மரணத்துக்கு பழி தீர்க்காமல் உறங்க மாட்டார்'' என்றாள் ராஜமாதா.

''நன்று சொன்னீர்கள் மாகராணி'' என்று கூறிக் கொண்டே உருவிப்பிடித்த வாளுடன் சலூம்பிரா உள்ளே நுழைந்தார். அவருக்குப் பின்னால் நான்கு வீரர்களும் உருவிய வாட்களுடன் உள்ளே நுழைந்தார்கள்.

## 4. பிரம்மச்சாரி!

பல போர்களைக் கண்ட மகாவீரனும் பயம் என்பதை அறவே அறியாதவனும், நடுத்தர வயதை அடைந்தும் தளராத வஜ்ரம் போன்ற தேகத்தைப் படைத்தவனும், சலூம்பிரா இனத்தின் தலைவனுமான சலூம்பிரா, அறைவாயிலில் தோன்றியதும் அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்தால் மகாராணா கைகால்கள் நடுங்க மீண்டும் தமது பஞ்சணையில் அமர்ந்து கொண்டார். சோம்ஜி என்று அழைக்கப்பட்டு வந்த சோம்சந்த் காந்தியும் அந்த சமயத்தில் தமது தலையீடு எந்த பயனையும் அளிக்காது என்ற எண்ணத்தால் பேச்சு மூச்சின்றி சிலையென நின்றுவிட்டார்.

ராஜமாதாவான ராம்பியாரி தேவிக்கு உள்ளூர சிறிது அச்சமிருந்தாலும் அதை உதறிவிட்டு தலைநிமிர்ந்து கம்பீரமாக சலூம்பிராவை நோக்கி ''சலூம்பிரா! ராணாவின் கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டிய நீர் எப்படி முன்னறிவிப்பில்லாமல் திடீரென வாளும் கையுமாக இங்கு நுழைந்தீர்?'' என்று சற்று கடுமையுடன் வினவினள்.

அவள் கேட்டதை ஒரு பொருட்டாக மதிக்காத சலூம்பிரா வாயிற்படியைத் தாண்டி ராணாவின் பள்ளி

யறைக்குள் நுழைந்தார். நுழைந்து அந்த அறையை சுற்று முற்றும் நோட்டம் விட்டார் நிதானமாக. பிறகு ராஜ மாதாவை நோக்கி "மகாராணி! மகாராணாவின் பள்ளியறையில் மகாமந்திரி இருக்கிறார். இதோ என் தம்பியைக் கொன்ற வீரன் நிற்கிறான். பெண்ணொருத்தி தரையில் கிடக்கிறாள். நான் மட்டுந்தானா இந்த பள்ளியறை பிரவேசத்துக்கு விலக்கு?" என்று கேட்டு கோபப் புன்முறுவலும் செய்தார்.

மகாராணி அந்த கோபப் புன்முறுவலை லட்சியம் செய்யாமல் "மகாமந்திரி சோம்ஜி அவசர அரசாங்க அலுவலாக ராணாவின் அனுமதி கேட்டு வந்திருக்கிறார். இந்த வீரன் திடீரென காயமடைந்த பெண்ணுடன் பிரவேசித்துவிட்டான். அந்தப் பெண்ணின் நிலையைக் கண்டு நான் விசாரித்துக் கொண்டிருக்கும்போது நீர் திடீரென்று வந்தீர். பெண் அடிபட்டு மயக்கத்தில் இருந்ததால் அந்த வாலிபன் முறையின்றி உள்ளே வந்தபோது நான் விசாரணை செய்தேன். அபாயத்தில் சரணடைய வந்த அவனுக்கும், வாளை உருவிக்கொண்டு ராணாவிடம் மரியாதையின்றி உள்ளே நுழைந்த உமக்கும் வித்தியாசமில்லை?" என்று வினவினாள். அவள் குரலில் கடுமையும் இருந்தது, ராஜதோரணையும் இருந்தது.

அவள் கண்டனத்தைக் கேட்டதும் சலூம்பிராகூட சிறிது தயங்கினார். பிறகு தமது குரலை சிறிது தணித்துக் கொண்டு "மகாராணி! இவன் எனது தம்பியைக் கொன்று விட்டான். அவன் இங்கு வந்துவிட்டதால் அவனை நாடி வந்தேன். அவனுக்கு புகலிடம் கொடுத்திருக்கிறீர்கள்" என்று சுட்டிக் காட்டினார்.

அதுவரை தனது வாளை உருவாமலும் அலட்சியத்துடன் அவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த தீப்சந்த் "சலூம்பிரா!" என்று மெதுவாக குரல் கொடுத்தான்.

www.cleanindians.com



சலூம்பிரா தமது பெரிய பயங்கர விழிகளை தீப்சந்தை நோக்கி திருப்பினார். "யார் நீ?" என்றும் வினவினார் உக்கிரம் நிரம்பிய குரலில்.

தீப்சந்த் புன்முறுவல் செய்தான் அந்த மகாவீரனின் உக்கிரத்தை லட்சியம் செய்யாமல். "நான் யாரென்பதை தாங்கள் தானே இப்பொழுது சொன்னீர்கள்" என்று சொன்னான்.

"என்ன சொன்னேன்?" சலூம்பிரா கேட்டார் அவன் துணிவை நினைத்து வியந்து.

"தங்கள் தம்பியைக் கொன்றவன் என்று" என விளக்கினான் தீப்சந்த்.

"குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?" என்று சலூம்பிரா கேட்டார்.

"தம்பியை வாட்போரில் கொன்றதை ஒப்புக்கொள்கிறேன். அதை குற்றம் என்று ஒப்புக்கொள்ள முடியாது. மகாவீரன் என்று பிரசித்திபெற்ற நீங்கள் கூட உங்கள் தம்பியும் இன்னும் மூவரும் இந்த அபலையை தலையில் அடித்ததையோ தூக்கிச் செல்ல முயன்றதையோ நியாயமென்று ஒப்புக்கொள்ள முடியாது. இவனைக் காப்பாற்றிய என்னையும் குற்றவாளியென்று கூறமுடியாது. நல்ல ரத்தம் ஓடும் எந்த ராஜபுத்திரனும் உங்கள் தம்பியின் செயலுக்கு நியாயம் கற்பிக்க முடியாது..." என்று கூறி—சிறிது தயங்கிய தீப்சந்த் "நான் இங்கு வந்தது புகலிடம் பெற அல்ல. நீதி கேட்க வந்தேன். இந்த பெண்ணை யாரும் அணுக முடியாத இடத்தில் ஒப்படைக்க வந்தேன்" என்று விளக்கினான்.

சலூம்பிரா முன்பு அவன் காட்டிய துணிவைக் கண்டு சோம்ஜி பதறினார். பெரிய படையை உடைய சலூம்பிரா இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு மகாராணாவை கைவிட்டுவிட்டால் என்ன செய்வதென்று திகைத்தார்.

மகாராணாவுக்கு அப்பொழுதும் இடக்கு பிடித்திருந்த படியால் "கீழே மூர்ச்சையாக ஒரு பெண் கிடக்கிறாள். அவளை கவனித்துவிட்டு விவாதத்தைப் பிறகு நடத்தலாமே" என்று யோசனை சொன்னார். "மகாமந்திரி! இந்த பள்ளியறையை நீதி மண்டபமாக்கிவிட்டு பள்ளியறைக்கு வேறு இடம் பாரும்" என்றும் தெரிவித்தார்.

மகாராணாவின் இடக்கான பேச்சைக்கண்டு அது வரை நிதானத்தைக் காட்டிய சலூம்பிரா சற்றே சினத்தை முகத்தில் காட்டினார். "இது விசாரணை மண்டபமானால் மகாராணாதான் அதற்குக் காரணம். இவன் வந்தவுடன் இவனை வெளியேற்றியிருந்தால் நான் வந்திருக்க மாட்டேன். பள்ளியறையை விவாத மேடையாக்கியது எனது குற்றமல்ல. இந்த பள்ளியறையில் இருக்க வேண்டியது பெண்கள்" என்றார் சலூம்பிரா.

அப்பொழுது தீப்சந்த் இடைமறித்து "பெண்கள் வர்க்கத்தில் தாங்களும் சேர்ந்துகொண்டது பற்றி மகிழ்ச்சி" என்று கூறி லேசாக நகைத்தான்.

சலூம்பிரா நிதானத்தை இழந்தார். "இந்த வாயாடியின் பெயர் என்ன?" என்று சோம்ஜியை நோக்கி கேட்டார்.

"என்னை நேரடியாகவே கேட்கலாம். பெயர் தீப்சந்த். இந்த சிறுவன் பெயரை தாங்கள் கூட கேள்விப்பட்டிருக்கலாம்" என்ற தீப்சந்த் சலூம்பிராவுக்கு தலை வணங்கினான்.

அந்த பெயரை கேட்டதும் சலூம்பிரா ஒரு விநாடி திகைத்து நின்றார். மறுவிநாடி அவர் முகத்தில் சந்தேகம் விரிந்ததால் "யார்? மண்டலக் கோட்டையின் தீப்சந்தா?" என்று வினவினார்.

"ஆம்" என்றான் தீப்சந்த்.

www.cleanindians.com



"மிகவும் சிறுவனாயிருக்கிறாய்..." என்றார் சலூம்பிரா.

"வயதை வைத்து வீரத்தை யாரும் எடை போடுவதில்லை" என்றான் தீப்சந்த்.

"ஆமாம் தீப்சந்த்! உன் வீரத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இருப்பினும் நீ என் தம்பியைக் கொன்றது குற்றம். அதற்கு விசாரணையை நடத்த வேண்டும்" என்றார் சலூம்பிரா.

"நீதி விசாரணையைவிட நமது வாட்கள் முடிவு சொல்லலாமே. ராஜபுத்திரர்களிடம் அந்த பழக்கம் நீண்டகாலமாக இருக்கிறதே" என்ற தீப்சந்த் தனது வாட்பிடியின் மீது கையை வைத்தான்.

"உன்னைப்போன்ற சிறுவனுடன் நான் வாட்போர் புரிவது கிடையாது" என்று தெரிவித்தார் சலூம்பிரா.

"வயதைப் பற்றி கவலைப்படாதீர்கள் தாங்கள் கூறுமிடத்தில் தங்களை சந்திக்கிறேன்" என்றான். தீப்சந்த்.

"எந்த இடத்தில் நீ என் தம்பியைக் கொன்றாயோ அங்கேயே சந்திப்போம், நாளை இரவு" என்ற சலூம்பிரா மகாராணிக்கும் மகாராணாவுக்கும் தலை வணங்கி வெளியேறினார்.

அந்த அறையிலிருந்த மற்றவர்கள் தீப்சந்தின் காலம் மறுநாளுடன் முடிந்துவிடுமென்றே நினைத்தார்கள். மகாராணி சொன்னாள் "தீப்சந்த்! இளங்கன்று பயமறியாது! என்ற பழமொழிக்கு நீ ஒரு உதாரணம்" என்று.

தீப்சந்த் மகாராணியை புன்முறுவலுடன் நோக்கினான். "மகாராணி! இந்த சலூம்பிராவைப் போல் பலரை நான் பார்த்திருக்கிறேன். கவலைப்படாதீர்கள். ஒரு உறுதி மட்டும் கூறுகிறேன். உங்கள் படைத் தலைவரை, நான் கொல்லவில்லை" என்று சொல்லிவிட்டு

கிழே கிடந்த பூங்கொடியை எடுத்து மீண்டும் தோளில் போட்டுக்கொண்டு இந்த பெண்ணுக்கு சீக்கிரம் ஏதாவது சிகிச்சை செய்யவேண்டும். நான் இந்த நகரத்தின் பிரதான மருத்துவர் இல்லத்துக்கு இவளை எடுத்துச் செல்கிறேன்'' என்று கூறிவிட்டு படியை நோக்கி காலடி எடுத்து வைத்தான்.

''தீப்சந்த்! நில்! அபலையான ஒரு பெண்ணுக்கு சிகிச்சை செய்ய மேவார் ராணி மறுத்தாள் என்ற அவப் பெயர் எனக்கு வேண்டாம். அவளை உள்ளே கொண்டு வா'' என்று கூறி உள்ளே நடந்தாள்.

அவளைப் பின்பற்றிச் சென்ற தீப்சந்த் உள்ளறையொன்றில் இருந்த பஞ்சணையை மகாராணி காட்ட அதில் படுக்கவைத்தான் அந்தப் பெண்ணை, மகாராணி உத்தரவிட உள்ளிருந்து பணிமகள் ஒருத்தி கொண்டு வந்த நீரால் அந்த அழகியின் தலைக்காயத்தைத் துடைத்தான். பிறகு சிறிது மது கொண்டுவரச்சொல்லி அதையும் புகட்டினான் அவள் வாய்க்குள். அவள் மதுவை மெதுவாக உறிஞ்சினாள். பிறகு லேசாகக் கண்விழித்தபோது மிரள மிரள விழித்தாள். பிறகு முனகினாள். ''நான் எங்கிருக்கிறேன்?'' என்றும் வினவினாள் மிக தீனமான குரலில்.

''மகாராணியின் அறையில் இருக்கிறீர்கள். கவலை வேண்டாம்'' என்றான் தீப்சந்த்.

அதற்குள் மகாராணியும் அவளை நோக்கி குனிந்து அஞ்சவேண்டாம். நீ தகுந்த பாதுகாப்பில் இருக்கிறாய். மருத்துவர் இப்பொழுது வந்துவிடுவார்'' என்றாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வந்த மருத்துவர் பெண்ணின் நாடியை பிடித்துப் பார்த்தார். தலைக் காயத்தையும் சோதித்தார். இந்த அடியின் அதிர்ச்சிதான் சிறிது பலவீனத்தை அளித்திருக்கிறது. நாளைக்கு சரியாகி



விடும். தலைக்கு மட்டும் சிறிது களிம்பு தருகிறேன்'' என்று கூறி அதற்கான களிம்பு ஒன்றையும் அவரே தலையில் தடவிவிட்டுச் சென்றார்.

''தீப்சந்த்! இவள் ஒரு நாள் இங்கேயே இருக்கட்டும். நாளைக்கு நீ வந்து அழைத்துச் செல்'' என்ற மகாராணி ''அவள் யார்? பெயரென்ன?'' என்று வினவினாள்.

''எனக்குத் தெரியாது!'' என்றான் தீப்சந்த்.

அந்த பெண்ணே மெதுவாகப் பேசினாள். ''மகாராணி! என் பெயர் புஷ்பாவதி'' என்றாள்.

இதைக் கேட்ட மகாராணி ''எந்த புஷ்பாவதி! சக்தாவதர்களின் வம்சத்தைச் சேர்ந்தவளா?'' என்று திகைப்புடன் கேட்டாள்.

''ஆமாம். அவளேதான் நான்'' என்றாள் புஷ்பாவதி.

''இது சலூம்பிராவுக்குத் தெரிந்தால் உதயபூர் இரண்டுபடுமே'' என்று அச்சத்துடன் சொன்னாள் மகாராணி. பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு ''சரி, தீப்சந்த்! நீ போய் நாளை வா'' என்றாள்.

புஷ்பாவதி மகாராணியை நோக்கி ''அவர் என்னுடனேயே இருக்கட்டும்'' என்றாள்.

மகாராணி வியப்பின் எல்லையை அடைந்தாள். ''உன்னுடன் தனியாகவா! இந்த அறையிலா!'' என்று வினவினாள் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''ஆம் மகாராணி! அவரை நீங்கள் அறியமாட்டீர்கள். சத்தியசந்தர். எந்தப் பெண்ணையும் அவரிடம் நம்பி ஒப்படைக்கலாம்'' என்றாள் புஷ்பாவதி.

''இவரை உனக்கு முன்னமே தெரியுமா?'' என்று மகாராணி கேட்டாள்.

''எனக்குத் தெரியும். அவருக்கு என்னைத் தெரியாது. தீப்சந்த் பெண்களை வெறுப்பவர். திரும்பியும் பாராத

வர். திருமணம் செய்துகொள்வதில்லையென சத்தியமும் செய்திருக்கிறார். ஆயுள் பிரமசாரி விரதம் ஏற்றிருப்பவர்'' என்றாள் புஷ்பாவதி.

மகாராணி வியப்புடன் நோக்கினாள் தீப்சந்தை. ''அப்படியானால் நீ இவளுடன் இரு'' என்று கூறி விட்டு அவர்களை தனிமையில் விட்டுச் சென்றாள். அறைக்கு வெளியே சென்றதும் பணிமகள் ஒருத்தியை விளித்து ''இவர்களை எதற்கும் அடிக்கடி கண்காணித்து வா'' என்று உத்தரவிட்டுச் சென்றாள்.

## 5. பற்றிய கை!

தீப்சந்தையும் புஷ்பாவதியையும் உள்ளறை ஒன்றில் விட்டு, அவர்களை கண்காணிக்கும்படி பணிப்பெண்ணொருத்தியையும் நியமித்துவிட்டு மகாராணி மீண்டும் ராணாவின் பள்ளியறைக்குத் திரும்பினாள். அங்கு அப்பொழுதும் சோம்ஜி நின்று மகாராணாவை ஏதோ கேட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு ''சோம்ஜி! நீர் இன்னும் இல்லம் செல்லவில்லையா?'' என்று வினவினாள்.

''இல்லை மகாராணி'' என்று மிகுந்த அடக்கத்துடன் பதில் சொன்னார் சோம்ஜி.

''மகாராணாவும் மகாமந்திரியும் எந்தக் கோட்டையைப் பிடிக்க திட்டம் போடுகிறீர்கள்?'' என்று சற்று ஏளனத்துடன் கேட்டாள் மகாராணி.

''மகாராணி!''மென்று விழுங்கினார் சோம்ஜி.

மகாமந்திரி ஏதோ சொல்ல முயன்று அச்சத்தால்



தவிக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட மகாராணி தனது குரலில் சிறிது கனிவைக் காட்டினாள். ''என்ன சோம்ஜி?''

''இப்பொழுது எந்தக் கோட்டையையும் பிடிக்கும் நிலையில் நாம் இல்லை. இருக்கும் கோட்டைகளை விடாதிருப்பதற்குத்தான் முயற்சி செய்யவேண்டும்'' என்றார் சோம்ஜி

மகாராணியின் முகத்தில் சிறிது கவலைக்குறி தோன்றியது. ''எந்தக் கோட்டைக்கு இப்பொழுது ஆபத்து வந்திருக்கிறது?'' என்று விசாரித்தாள் கவலை குரலிலும் ஒலிக்க.

சோம்ஜி மகாராணியை நன்றாக ஏறெடுத்து நோக்கினார். ''தனிக்கோட்டை எதற்கும் ஆபத்தில்லை. மேவார் அரசாங்கத்துக்கே ஆபத்து, மகாராணி. அது விஷயமாக பேசத்தான் இங்கு வந்தேன். ஆனால் இங்கு நடந்த விவகாரங்கள் அதற்கு இடம் கொடுக்கவில்லை'' என்று சொன்னார் சோம்ஜி.

www.cleanindians.com

மகாராணியின் முகத்தில் கவலை அதிகமாக விரிந்தது ''விளக்கிச் சொல்லுங்கள் மகாமந்திரி. என்ன அப்பேர்ப்பட்ட ஆபத்து?'' என்று வினவவும் செய்தாள்.

மகாமந்திரி அப்பொழுதும் வாயைத் திறக்கவில்லை. சிறிது சிந்தனைவசப்பட்டார். ''சொல்லும் மகாமந்திரி! உள்நாட்டுக் கலகம் ஏதாவது ஏற்பட இருக்கிறதா? அல்லது யாராவது படையெடுக்க முயற்சி செய்கிறார்களா?'' என்று சற்று அழுத்தமாக வினவினாள் மகாராணி.

மகாமந்திரி சற்று துணிவை வரவழைத்துக்கொண்டு ''கஜானாவில் பணம் அடியோடு இல்லை'' என்று மெதுவாகச் சொன்னார்.

''வரிப்பணமெல்லாம் என்ன ஆயிற்று?'' மகாராணியின் கேள்வியில் கடுமை இருந்தது.

''வரிப்பணம் என்பது அதிகமாக எதுவும் கிடையாது...'' தயங்கித் தயங்கிச் சொன்னார் சோம்ஜி.

''ஏன் கிடையாது? மேவாரில் வரியே விதிப்பதில்லையா?'' மகாராணியின் கேள்வியில் உக்கிரம் இருந்தது.

''விதிக்கிறோம். ஆனால் அதை சலூம்பிராவே வசூலிக்கிறார்.''

''வசூலித்து...!''

''சிறிது நமக்கும் காட்டுகிறார்.''

''மற்றது?''

''அவரே வைத்துக் கொள்கிறார். இப்பொழுது மேவாரில் பெரிய பணக்காரர் சலூம்பிராதான். அவரிடமிருக்கும் பணம் மகாராணாவிடம் கிடையாது. அவர் பெயரும் பீம்சிங். மகாராணாவின் பெயரும் தமது பெயரும் ஒன்றாயிருப்பதைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொள்கிறார் அவர் படாடோபத்தைப் பார்க்கிறவர்கள் பீம்சிங் சலூம்பிராவையே மகாராணா என்று நினைத்தாலும் அதைப்பற்றி நாம் வியப்படைவதற்கில்லை'' என்ற மகாமந்திரி பெருமூச்செறிந்தார்.

ராஜமாதா ராம்பியாரி இதைக் கேட்டு மிகவும் கலங்கினாள். ''சோம்ஜி! இதற்குப் பரிகாரம் ஏதுமில்லையா?'' என்று வினவினாள்.

''இருக்கிறது மகாராணி. அது தங்கள் கையில்தான் இருக்கிறது. இப்பொழுது மேவாரில் சந்தாவதர்களின் கை ஓங்கியிருக்கிறது. சந்தாவதர்களை நாம் சிறிது தூக்கிவிட்டால் சலூம்பிராவை நாம் ஓரளவு சமாளிக்கலாம்'' என்றார் சோம்ஜி.

''இருவரும் கைகலந்தால்?'' என்று மகாராணி கேட்டாள்.

''நமக்கொன்றும் நஷ்டமில்லை. அவர்கள் பரஸ்பரம் வெட்டிக் கொண்டு சாவார்கள்'' என்ற சோம்ஜி ''இப்



பொழுது சலூம்பிரா வரி வசூலிப்பதைத் தடுக்கவேண்டும். அதற்குப் பதில், வரி வசூலிப்பதை சக்தாவதர்களிடம் ஒப்படைப்போம்'' என்று யோசனை சொன்னார் சோம்ஜி.

மகாராணி சிந்தனையில் இறங்கினாள்.

சோம்ஜியின் யோசனை அபாயமானதென்பதை ராஜமாதா அறிந்தே இருந்தாள். சக்தாவதர்களிடம் வரி வசூலிப்பதை ஒப்படைத்தால் அவர்கள் மாத்திரம் கஜானாவுக்கு பணம் அனுப்புவார்கள் என்பது என்ன நிச்சயம் என்று எண்ணினாள். ராணுவத்திடம் பணம் வசூலிப்பை ஒப்படைப்பது மிக அபாயம் என்பதை உணர்ந்த மகாராணி அதில் தலையிட யோசித்து ''வரி வசூலிக்கும் அதிகாரிகள் நம்மிடம் தனியாக இல்லையா?'' என்று கேட்டாள்.

''இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மக்களிடம் போக முடியாது. ராஜ்யத்தில் நாம் குடிமக்களுக்கு எந்த சவுகரியத்தையும் செய்து கொடுக்கவில்லை. ஆகையால் வரி வசூலிக்கும் அதிகாரிகள் வெளிப்புற கிராமங்களுக்கு போக அஞ்சுகிறார்கள். அப்படிச் சென்ற இருவர் ஏற்கனவே கொலை செய்யப்பட்டார்கள்'' என்று விளக்கிய மகாமந்திரி ''மகாராணி! நான் சொல்லும் திட்டத்தில் அபாயமிருக்கிறது. ஆனால் மேவாரின் மன்னர்களுக்கு தூண்களாக நின்று மடிந்த அந்த வீர சமுதாயம் இப்பொழுது நாட்டில் இல்லை. ஆகையால் சந்தாவதர்களையும் சக்தாவதர்களையும் மோதவிட்டு நமது காரியத்தை சாதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. தவிர வெகு சீக்கிரம் நமக்கு நிரம்ப பணம் வேண்டும்'' என்றார்.

''எதற்கு?''

''மகாராஷ்டிரர்களை சமாளிப்பதற்கு. வீரம் இப்பொழுது ராஜபுதனத்தில் இருந்து மகாராஷ்டிரத்துக்கு மாறியிருக்கிறது. மகாராஷ்டிரம் இப்பொழுது பெரிய

www.cleanindiana.com

சாம்ராஜ்யமாக உருவாகிவிட்டது. டில்லியே அதைக் கண்டு நடுங்குகிறது. இப்பொழுதுகூட ராஜபுதனத்தின் எல்லைகளில் மகாராஷ்டிரப் படைகள் நடமாடுகின்றன.''

இது மகாராணிக்கு ஏற்கனவே தெரிந்ததுதான் என்றாலும் மகாமந்திரி விளக்கியபோது, சிறிது அச்சத்தையே அடைந்தாள் மகாராணி. மேவார் இருக்கும் பயங்கர நிலையும் மகாராணிக்கு சந்தேகத்துக்கு இடமில்லாமல் புரிந்தது ''சரி, மகாமந்திரி! உமது இஷ்டம்போல் செய்யும். முந்திய மந்திரி அமர்சந்த் பருவா இந்த மாதிரி ஒரு சமயத்தில் மேவாரைக் காப்பாற்றினார். அந்த பணியை இப்பொழுது நீர் செய்தால் மேவார் ராஜ வம்சம் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கும்'' என்று மகாராணி உத்தரவு கொடுத்தாள்.

''இந்த ஏழையால் ஆனதைச் செய்கிறேன் மகாராணி. புது உத்தரவுக்கான பத்திரங்களை தயார் செய்து மகாராணாவின் கையெழுத்துக்கு அனுப்புகிறேன்'' என்று கூறி தலை வணங்கி ''மகாராணா!'' என்றார் மந்திரி.

''போய்வாரும். நீங்களும் எனது தாயாரும் தயாரிக்கும் திட்டங்களுக்கு கையெழுத்துப் போடுவதைத் தவிர வேறு வேலை எனக்கு என்ன இருக்கிறது?'' என்ற மகாராணா லேசாக நகைத்தார்.

அத்துடன் மந்திரி வெளியேறியதும் மகாராணி மகனைக் கடிந்து கொண்டாள். ''பீம்சிங்! இது நகைக்கும் விஷயமல்ல'' என்று.

''ஆமாம் மகாமந்திரியின் காலம் சீக்கிரம் முடிந்துவிடும். ஆகவே இது நகைக்கும் நேரமல்ல'' என்று மகாராணா இடக்காக பதில் சொன்னார்.

பெரிய ஆபத்தில் மகாமந்திரி தலை கொடுப்பதை மகாராணி புரிந்து கொண்டிருந்தாலும், அந்த சமயத்தில் தான் செய்யக்கூடியது ஏதுமில்லை என்பதை உணர்ந்து

www.cleanindians.com



கொண்டதால் பெருமூச்செறிந்தாள். உள்கட்டுக்கு செல்லவும் முயன்றாள்.

அப்பொழுது மகாராணா கேட்டார் ''அம்மா! அந்தப் பெண் எப்படியிருக்கிறாள்?'' என்று.

மகாராணி உஷ்ணமாக மகனைப் பார்த்தாள். ''அவளைப் பற்றி உனக்குக் கவலைவேண்டாம் அவளுக்காக உயிரைக் கொடுக்க ஒரு மகாவீரன் சித்தமாயிருக்கிறான்'' என்றாள், மகாராணி குரலிலும் உஷ்ணத்தைக் காட்டி.

''அம்மா!'' பீம்சிங் மெதுவாக அழைத்தான்.

''என்ன பீம்சிங்?''

''உயிரைவிட அவன் சித்தமாயிருப்பதாகச் சொன்னாயே, அது எத்தனை உண்மை?''

''என்ன உண்மையைக் கண்டுவிட்டாய்?''

''நாளைக்கு அவன் சலூம்பிராலை சந்திக்கப் போகிறான். அப்புறம் அவனுக்கு உயிர் ஏது?''

''நீ நினைக்கிறபடி தீப்சந்த் அத்தனை சாமானியமானவன் அல்ல'' என்றாள் மகாராணி.

''இப்பொழுது அவன் எங்கே?'' என்று மகாராணா விசாரித்தார்.

''அவளது அறையில் இருக்கிறான்.''

''ஒரே அறையில் இருவருமா?''

''ஆம்.''

''அப்படி இருக்கலாமா?''

''இருக்கலாமென்று அந்த பெண்ணே அபிப்பிராயப்படுகிறாள். அவன் ஆயுள் பிரமசாரியாம்'' என்று சொல்லிவிட்டு மகாராணி சென்றுவிட்டாள்.

மகாராணா இதை நம்பவில்லை ''பஞ்சையும் நெருப்பையும் ஒன்றாக வைத்தால் பற்றிக் கொள்ளாமல் இருக்குமா'' என்று தனக்குள் கேட்டுக் கொண்டார்.

''பஞ்சும் நெருப்பும் பற்றுதிருப்பது இயற்கைக்கு விரோதந்தான். என்றாலும் இந்திரியங்களையும் வெற்றி கொள்ளும் உத்தமர்கள் உலகத்தில் இருக்கத்தானே செய்கிறார்கள். பீஷ்மர் பிரமசாரியாக நின்றுவிடவில்லையா? அத்தகைய மகான்களில் திப்சந்த் ஏன் ஒருவனாக இருக்கக் கூடாது?'' என்று மகாராணியும் தனக்குள் சமாதானம் செய்துகொண்டாள். அந்த எண்ணத்துடன் புஷ்பாவதி இருந்த அறைக்குச் சென்றாள். மருத்துவர் கொடுத்த மருந்தின் காரணமாக புஷ்பாவதி பஞ்சணையில் நித்திரை செய்து கொண்டிருந்தாள். அறையின் ஒரு கதவை திறந்து வைத்துக் கொண்டு, கதவில் சாய்ந்து கொண்டு கண்களை மூடி கையில் ஒரு ஜெபமாலையை உருட்டிக்கொண்டு, வாயால் ஏதோ மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு இருந்தான் திப்சந்த்.

அவன் இருந்த நிலையைக்கண்டு, அவன் உண்மையில் பிரமசாரிதான் என்று மகாராணி தீர்மானித்தாள். இருப்பினும் அவனை விசாரிக்க எண்ணி ''திப்சந்த்?'' என்று மெள்ள அழைத்தாள்.

www.cleanindians.com

திப்சந்த் கண்களை விழித்து மகாராணியை நோக்கினான். ''மகாராணி!'' என்று அழைத்து எழுந்திருக்க முயன்றான்.

அவனை எழுந்திருக்க விடாமல் தனது கைகளின் சைகையாலேயே தடுத்து ''திப்சந்த்! உட்கார். உன் தவத்தை கெடுக்க நான் விரும்பவில்லை. உனக்கு தனி அறை வேண்டுமானாலும் தருகிறேன்'' என்றாள்.

''வேண்டாம் மகாராணி! இந்த பெண்ணின் விருப்பப்படி இங்கேயே நான் தங்குகிறேன். இவளுக்கு சிறிது சுரணையும் சக்தியும் வந்ததும் நான் போய்விடுகிறேன். பிறகு இவள் உங்கள் அடைக்கலம்'' என்றான்.

மகாராணி அதற்குப் பிறகு அங்கு நிற்கவில்லை.



திப்சந்த் அன்று முழுவதும் அந்த அறைக் கதவை
திறந்துவைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான் எ
பதையும், உணவைக்கூட உட்கார்ந்தபடியே உண்டா
என்றும் பணிப்பெண் கூறவே, திப்சந்த் மீது பெரு
மதிப்பு ஏற்பட்டது மகாராணிக்கு. இந்த பீம்சிங்குக்கு
பதில் திப்சந்தைப் போன்ற ஒரு வீரன் தனது வயிற்றி
பிறந்திருக்கக் கூடாதா என்று கூட சிந்தித்தாள்.

இரவும் வந்தது. அப்பொழுதும் கதவை மூடவில்
திப்சநத். மாலையே சுரணை அடைந்துவிட்ட புஷ்பாவ
அவன் ஜெபமாலையைப் பார்த்து எரிச்சல் கொண்டாள்
சாயந்திர ஜெபத்துக்குப் பிறகு எழுந்த திப்சந்த், ப
மகள் கொண்டு வந்த பாலை தானே புஷ்பாவதியி
வாயில் ஊற்றினான். பாலைப் பருகியபோது சற்றே உத
டில் இருந்து வழிந்த பாலை தனது கையாலேயே துடை
தான். இரவு மூண்டு அந்த அறையில் விளக்கேற்றப்பட்
பிறகும், அவளது பஞ்சணையை அணுகாத திப்சந்
''கண்களை மூடி உறங்கு'' என்றான்.

கண்களை அவள் மூடிக்கொண்டாள். திப்சந்த் கட்
லின் அருகில் நின்றபடியே அவளைக் கவனித்தான். கட்
லில் அவள் புஷ்பமாலையெனக் கிடந்தாள். அவள
அழகைக் கண்டு பிரமித்த திப்சந்த், தனது பிரமசா
விரதத்துக்கு பங்கம் ஏற்படப்போகிறது என்று அஞ்
அவளைக் கூர்ந்து பார்ப்பதைவிட்டு அறையின் மோட
வளையைப் பார்த்தான். அதில் சிருங்கார சித்திரங்கள் ப
பல வண்ணங்களில் பற்பல கோணங்களில் தீட்டப்பட்
ருப்பதைப் பார்த்தான். மனிதன் மனதை, உறுதியை
கலைப்பதற்கே அந்த ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பன
உணர்ந்து அவற்றை வெறுத்து கட்டிலில் கிடந்த புஷ்ப
வதியைப் பார்த்தான். அந்த ஓவியங்களுக்கு இவள் அழ
சிறிதும் குறைந்தவள் அல்லவென்று நினைத்தான். அவ
கட்டிலில் மல்லார்ந்து கிடந்த நிலை, உணர்ச்சி அளி
பதாயிருந்தது. தாமரை வதனம், செம்பருத்தி இதழ்கள்

மார்பின் எழுச்சிகள், கால்களின் இணைப்பினால் ஏற்பட்ட இந்திரஜால ஊசலங்கள் எல்லாமே இவளை புஷ்பசோலையாக காட்டியது. அந்த அழகைக் கண்ட தீப்சந்தின் திடமனமும் சிறிது கலங்கவே அவன் தனது பார்வையை வாயிற்புறம் திருப்பினான்.

இரவு நன்றாக ஏறியும் அவன் உறங்கவில்லை. பஞ்சணையில் படுத்திருந்த புஷ்பாவதி ஏதோ முனகினாள் ஒரு முறை. அது என்னவென்று பார்க்க கட்டிலுக்கு அருகில் சென்று குனிந்து அவள் முகத்தை நோக்கினான். லேசாக அவளுக்கு காய்ச்சல் கண்டிருந்ததால் கழுத்தில் கையை வைத்தான். அவள் கையொன்று எழுந்து அவன் கையைப் பற்றியது.

## 6. விசுவாமித்திரன் மனம்!

பஞ்சணையில் கிடந்த அந்த பைங்கிளியின் காய்ச்சலின் முழுவேகத்தை அறிய அவள் கழுத்தில் கையை வைத்தவுடன் அவள் கையொன்று எழுந்து தனது கையைப் பற்றியதைக் கண்ட தீப்சந்த், அவள் முழுசுரணை அடைந்துவிட்டாள் என்பதைப் புரிந்துகொண்டதால் முகத்தில் திருப்தியைக் காட்டினான். ''காய்ச்சல் அதிகமாக அடிக்கிறதா?'' என்று வினவவும் செய்தான்.

''அதிக காய்ச்சல் இல்லை. தாங்கும்படியாகத்தான் இருக்கிறது'' என்று அவள் கண்களைத் திறக்காமலே உதடுகளை மட்டும் அசைத்து பதில் சொன்னாள். அப்பொழுதும் பற்றிய அவன் கையை அவள் விடுதலை செய்யவில்லை.

அவள் கை பட்டதாலும் சற்றே இறுகிய பிடிப்பாலும் சற்று சங்கடப்பட்ட அந்த வாலிபன் ''பெண்ணே! சற்று கையை விடு'' என்றான் மெதுவாக.



அவள் செவ்விய இதழ்களில் வெட்கம் கலந்த புன்முறுவல் ஒன்று தவழ்ந்தது. ''எதற்கு?'' என்று விஷமமாக வினவினாள் புஷ்பாவதி.

தீப்சந்தின் சங்கடம் முன்னைவிட அதிகமானாலும் அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமலே ''தலைக்காயத்தைப் பார்க்க வேண்டும்'' என்று சொன்னான் கூடியவரையில் குரலை திடப்படுத்திக்கொண்டு.

அவள் கைவிரல்கள் மெதுவாக அகன்று அவன் கையை விடுதலை செய்யவே, தீப்சந்த் சற்று நன்றாகக் குனிந்து இரு கைகளாலும் அவள் குழலின் இழைகளை நீக்கிக் காயத்தை பரிசோதித்தான். மருத்துவர் கொடுத்த களிம்பு ரத்தக்கசிவை அடியோடு நிறுத்திவிட்டதையும், அந்த வாள் பிடிக் காயம் கூட ஓரளவு ஆறிவிட்டதைப் போல் தோன்றியதையும் கண்டு ''மருத்துவர் நல்ல திறமைசாலிதான்'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டதோடு, ''பெண்ணே! நாளை இந்த காயம் முற்றும் ஆறிவிடும்'' என்று அவளுக்கு தைரியமும் சொன்னான்.

அவன் அவள் மீது நன்றாகக் குனிந்து காயத்தை பரிசோதித்தபோது அவன் மார்பு அவள் முகத்துக்கு நேராக இருந்தது. இரவில் படுக்க உத்தேசித்ததன் காரணமாக அவன் தனது மேல் சட்டையை மட்டும் கழற்றியிருந்ததால் அவன் கழுத்திலிருந்து தொங்கிய நவரத்தின ஜெபமாலை அவள் நெற்றியில் புரளவே செய்தது. அவள் கண்களுக்குப் புலனான அவனது விரிந்த மார்பும், வாலிபத்தின் காரணமாக அதில் லேசாக வளர்ந்திருந்த கரிய முடியும், அவன் ஆண்மைக்கும் தேகபலத்துக்கும் சான்று கூறுவதைக் கவனித்தாள் அந்த பருவ மகள். ''அப்பா! எத்தனை கெட்டியான மார்பு! இதில் கத்தி பாய்ந்தால் கூட அதுதான் மழுங்கும்'' என்று உள்ளூர அவன் வலிமையை வியந்தாள்.

அவளது குழலைப்புரட்டி காயத்தை பார்த்த கைகளின் மேல்பாகங்கள் மெல்லியதாயிருந்தாலும் இரும்புத் தண்டுகள் போலிருந்ததைக் கவனித்தாள் புஷ்பாவதி. அதில் இரண்டொரு காயங்களும் இருப்பதைப் பார்த்து ''இவருக்கு சண்டையென்றால் விருந்து போலிருக்கிறது!' என்றும் சொல்லிக்கொண்டாள். மார்பில் இருந்த ஓரிரு காயங்களும் கூட கருமையான முடியின் இடையே பளிச்சிட்டது மிக அழகாக இருந்ததை கவனித்தாள் புஷ்பாவதி. தலையைக் கவனித்ததால் வளைந்திருந்த அவன் தேகமே கடினம் நிறைந்த மென்மையுடனும் சாட்டையை உருவிட்டது போலும் இருந்ததால் அது எப்படியும் வளையக் கூடிய மிக லாவகமான சரீரம் என்பதைப் புரிந்துகொண்டாள் அந்த பருவ மங்கை.

அவன் சிறிது நேரமே அவள் தலைக் காயத்தைப் பரிசோதித்தாலும் அதற்குள்ளாகவே அவன் உடலை எடைபோட்டுவிட்ட அந்த ஏந்திழையிடம் இருந்து விலகி நின்று கொண்டு அவளை நோக்கினான் தீப்சந்த்.

அரண்மனை அந்தப்புரத்தில் அந்த சிறு அறையின் சாளரத்தின் மூலம் வெண்மதி வீசிய நிலவு கட்டிலில் கிடந்த அந்த கட்டழகி மீது பூர்ணமாக விழுந்திருந்ததால் அவள் எழில்களின் ஒவ்வொரு அம்சமும் மிகத் தெளிவாகத் தெரிந்தது, தீப்சந்தின் கண்களுக்கு. கழுத்தில் ஜெபமாலையுடன் இடையில் சராய் மட்டும் தரித்து நெடியனாய் நின்ற தீப்சந்த் நிலவில் கிடந்த புஷ்பாவதியை உற்றுப் பார்த்துக்கொண்டே நீண்ட நேரம் சிலையென நின்றான். நிலவில் அவள் முகத்தைக் கண்ட தீப்சந்த் வெளியில் வானில் தவழ்ந்த சந்திரனைவிட அவள் முகம் அழகாயிருப்பதைக் கவனித்தான். நீலவானத்தில் அந்த அரைசந்திரன் சதா ஓடிக்கொண்டிருப்பதற்குக் காரணம் புஷ்பாவதியின் முழுமதி முகத்தைக் கண்டதனால்தான் என்று நினைத்த தீப்சந்த் ''இவள் கன்னங்களில சிவப்பு தட்டியிருக்கிறது செந்தாமரை வண்ணத்தில். அந்த அரை



சந்திரனிடம் வெளுத்த ஒரே வண்ணந்தானே இருக்கிறது?'' என்று அரைமதியை கண்டிக்கவும் செய்தான்.

ஏற்கனவே வெளுத்திருந்த அவள் கழுத்து வெண்ணிலவில் அதிகமாக வெளுத்துவிட்டதையும், அவளது வெண்ணிற சேலை கூட சந்திரன் வெண்மையைக் குறைத்துக் காட்டியதையும் பார்த்தான். அந்த வெள்ளை ஆடைக்குள் அவள் மூச்சுவிட்டதால் எழுந்து எழுந்து தாழ்ந்த அவள் மார்பின் கெட்டி மொட்டுகள் இரண்டும் மறுக்க முடியாத அழைப்பை விடுத்ததால் அவற்றை பார்க்க முடியாமல் பார்வையை சற்று கீழே இறக்கினான் தீப்சந்த். கீழே இன்னும் உன்மத்தம் ஊட்டக்கூடிய நிலை இருந்தது. படிந்த ஆலிலை வயிறும் நீண்ட கால்களும், கால்களின் மேற்புற பெரிய உருண்ட பகுதிகளும் அவை இணைந்த இடமும் தீப்சந்தின் மனதை அலைத்தாலும் அவன் தன் மனத்தை ஓரளவு கட்டுப்படுத்தவே செய்தான். ''பெண் சிருஷ்டியே மயக்கமான சிருஷ்டி. ஆண்களின் மனத்தை அலைக்கழிப்பதற்கே ஆண்டவன் இந்த இனத்தை படைத்திருக்கிறான்'' என்று சொல்லிக்கொண்டு அவள் கவர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள கழுத்திலிருந்த ஜெபமாலையை எடுத்து உருட்டலானான். அவன் உதடுகளும் மந்திரத்தை முணுமுணுத்தன.

அந்த சமயத்தில் விசுவாமித்திரன் தவத்தைக் கலைத்த மேனகைபோல் ''அது என்ன ஜெபமாலையா!'' என்று கேட்டாள் புஷ்பாவதி.

''ஆம்.'' என்றான் தீப்சந்த் அவளைப் பார்க்காமல் நிலத்தில் கண்களை ஓட்டி.

''இது இரண்டாம் ஜாமம்'' என்றாள் புஷ்பாவதி.

''அதனால் என்ன?'' அதுவரை கலைந்த மனதை திடப்படுத்திக் கொண்டு கேட்டான் தீப்சந்த்.

"ஜெபத்துக்கு இது சமயமல்ல" என்று சொன்ன அவள் லேசாக நகைத்தாள்.

"உன்னை யோசனை கேட்கும்போது சொல்லலாம். கண்களை மூடிக்கொண்டு உறங்கு" என்ருன் தீப்சந்த் கடுமையாக.

"நிலத்தை ஏன் பார்த்துக்கொண்டு பேசுகிறீர்கள்? பெண்கள்தான் வெட்கத்தால் நிலத்தைப் பார்ப்பார்கள்" என்று சுட்டிக்காட்டினுள் புஷ்பாவதி.

"எதைப் பார்த்தால் உனக்கென்ன? நிலம் பெண்களுக்கு மட்டுந்தான் சொந்தமா? ஆண்கள் பார்த்தால் என்ன?" என்று முரட்டுக் குரலில் கேட்டான் தீப்சந்த்.

"நிலத்தைப் பெண்கள் வெட்கத்திஞல் பார்ப்பார்கள்..."

"சரி, சரி பேசிக்கொண்டே இருக்காதே தூங்கு. நான் ஜெபம் செய்யவேண்டும்"

www.chennaiindians.com

"ஜெபமா!" லேசாக நகைத்தாள் புஷ்பாவதி. அந்த நகைப்பு ஜலதரங்கம் போல் அவன் காதில் விழுந்தது.

அந்த நகைப்பு மிக இன்பமாயிருந்தாலும் கோபத்தையே காட்டிய தீப்சந்த் "நட்ட நடு இரவில் சிரிப்பென்ன வேண்டியிருக்கிறது?" என்று சீறிஞன்.

"உங்களைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது" என்ருள் அவள்.

"என்னைப் பார்த்தால் சிரிப்பு வருகிறதா?" என்று அவன் கேட்டான். கட்டிலை நெருங்கவும் செய்தான்.

"ஆம்."

"ஏன்?"

"உங்கள் கோலத்தைப் பாருங்கள். ஒரு அறையில் ஒரு பருவப் பெண்ணுடன் தனித்து இருக்கிறீர்கள். கையில்



ஜெபமாலையை உருட்டுகிறீர்கள். உங்களைப் பார்த்தால்..."

"என்னைப் பார்த்தால்?"

"ருத்திராட்சப் பூனை மாதிரி இருக்கிறது" என்று கூறி அவள் சற்று பெரிதாகவே நகைத்தாள்.

தீப்சந்தின் கோபம் உச்சத்துக்குச் சென்றது. அவ அருகில் நின்ற வண்ணம் "வாயை மூடுகிருயா இல்லையா?" என்று சூடாகக் கேட்டான்.

"மூடாவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்று அவ கேட்டாள்.

அவன் சட்டென்று ஜெபமாலையுடன் இருந் கையால் அவள் வாயை மூடிஞன். ஜெபமாலை அவ இதழ்களில் உறுத்தியது. அந்த உறுத்தலும் இன்பம யிருந்தது. ஜெபமாலையுடன் அழுந்திய அவன் உள்ள கையில் தனது உதடுகளைக் குவித்து பொருத்திஞ புஷ்பாவதி.

அவன் சட்டென்று கையை எடுத்துக்கொண்டா அப்பொழுது புஷ்பாவதி லேசாக முறுவல் செய்து "வீரே எனக்கு காய்ச்சல் அதிகரித்திருக்கிறது. இதயவேக அதிகமாயிருக்கிறது. வேண்டுமாஞல் பாருங்கள்" என் கூறி அவன் ஜெபமாலைக் கையைப் பிடித்து தன மார்பில் வைத்தாள். அவள் மார்பில் கைபட்டவுட அவள் மார்பைவிட அவன் மார்பு படபடவென்று அதி மாக அடித்துக்கொண்டது. அதே சமயத்தில் அவ இணைந்திருந்த கால்களைப் புரட்டிஞள். அவ தொடையை மறைத்திருந்த கிழிந்த துணிப்பகுதி விலகூ அந்த பகுதி செவேலென அவன் கண்களுக்குப் புலஞ யது.

மேனகையை சந்தித்த விசுவாமித்திரன் நிலை தீப்சந்த் வேகமாக எய்திக்கொண்டிருந்தான்.

# 7. ருத்திராட்சப் பூனை

கூட்டிலில் கிடந்த கட்டழகி புஷ்பாவதி, பக்கத்தில்
ன்றிருந்த அந்த கட்டிளங்காளையின் கையைப் பிடித்து
னது மார்பு மீது வைத்து காய்ச்சலை பார்க்கும்படி
றியபோதே சிறிது நிதானத்தை இழந்துவிட்ட மகாவீர
)ன தீப்சந்த், அவள் கால்களில் இணைப்பு நீங்கி சேலை
ின் கிழிந்த பகுதியின் மூலம் அவள் தொடையும் செவே
னைத் தெரியவே கொந்தளித்த உணர்ச்சிகளில் சுழன்
ன்.

மார்பில் புதைந்திருந்த அவன் கையில் அவள் உடலின்
டு அதிகமாகத் தெரிந்தாலும், அதைவிட மார்பின்
முச்சி அவன் கையின் பக்கமாக திருப்பப்படவே, காய்ச்
ல் சூட்டை விட மோகச் சூடு அதிகமாகி திண்டாடினன்
ப்சந்த். போதாக்குறைக்கு அவள் சேலைக் கிழிசலும்
ால் அழகையும் திண்மையையும் வழவழப்பையும் கண்
ுக்குத் தோற்றுவித்ததால் சித்தம் லேசாக சிதற மார்பி
ருந்த கையை எடுத்து அவள் சேலையின் கிழிந்த
குதியை மூடினன்.

அப்பொழுது அவள் தொடைப் பகுதியிலும் கை
டவே அது நெருப்பை வாரிக் கொட்டுவது போலிருக்
லவே ''ஆம், காய்ச்சல் சற்று அதிகமாகத்தான் இருக்கி
து'' என்று வாய்விட்டுச் சொன்னன்.

அவனது ஒவ்வொரு சங்கடத்தையும் சித்தத்தின் சுழற்
யையும் கவனிக்கவே செய்த புஷ்பாவதி மெள்ள புன்முறு
ல் ஒன்றை படரவிட்டுக் கொண்டு ''எதற்கும் நெற்றி
பயும் தொட்டுப் பாருங்கள்'' என்று சொன்னள்.

''எதற்கு?'' எரிச்சலுடன் கேட்டான் தீப்சந்த்.

''காய்ச்சல் எப்படியிருக்கிறது என்று பார்க்க'' என்று
க்கு சொன்னள் அவள்.

அவன் கண்களில் கோபச் சாயை படர்ந்தது லேசாக.
ாய்ச்சலை அறிய உன் உடம்பு முழுவதையும் தொட்

www.cleanindians.com

மோகினிவனம்



டுப் பார்க்க வேண்டுமா? காய்ச்சல் இடத்துக்கு இடம் மாறுமா?'' என்று வினவினன் சினம் சிறிது குரலிலும் ஒலிக்க.

புஷ்பாவதி அவனது கோபத்துக்கு காரணத்தை புரிந்துகொண்டாள். பிரமச்சாரி விரதம் பூண்டிருக்கும் அவன் உணர்ச்சிகள் தன்னை தொட்டுப் பார்த்ததால் சிதறமுற்படுவதுதான் காரணம் என்பதை உணர்ந்த அந்த பருவ மகள் ''ஏன் மாறக் கூடாது?'' என்று வினவினள்.

''சுத்த முட்டாளாக இருக்கிறாய்? உடலில் காய்ச்சல் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாயிருக்காது'' என்றான் தீப்சந்த்.

''இருக்கும். சில வேளைகளில் எனது நெற்றி மாத்திரம் சுடும். அப்பொழுது தலைவலி மட்டும் இருக்கும். சில வேளைகளில் காலில் குடைச்சல் இருக்கும். அப்பொழுது கால் மட்டும் சுடும்...'' என்று மேலும் விளக்கப் போன புஷ்பாவதியை ''போதும் வாயை மூடு. நீ சொல்வதெல்லாம் வீண் பிரமை. காய்ச்சல் தனித்தனி இடங்களில் வராது'' என்று கூறிவிட்டு ''பெண்ணே! இரவு ஓடிக்கொண்டிருக்கிறது. கண்களை மூடி உறங்கு. இரவு முழுவதும் பேசி என் பிராணனை வாங்காதே'' என்று சொற்களால் அடக்க முயன்றான்.

அவள் அதற்கு மசியவில்லை. மறுபுறம் புரண்டு அவனைப் பார்த்த நிலையில் ஒருக்களித்துப் படுத்தாள். ''வீரரே! கண்களை மூடினல் மட்டும் தூக்கம் வருமா?'' என்றும் கேட்டாள்.

''ஏன் வராது?''

''மண்டை காயம் வலிக்கிறது.''

''வாயாடினல் மட்டும் வலி தீர்ந்துவிடுமா?''

''பொழுது போக்காகப் பேசிக்கொண்டு இருந்தால் வலி தெரியாது.''

''உனக்கு வலி தெரியாதிருப்பதற்காக நானும் விடியும் வரை விழித்திருக்க வேண்டுமா?'' என்று கேட்ட தீப்சந்த், கையில் இருந்த மாலையை உருட்டலானான்.

புஷ்பாவதி, அவனது அலட்சியத்தைக் கண்டு உள்ளூர சினந்தாள் மனத்துள். சினந்து நகைக்கவும் செய்தாள். ''என்ன மனிதர் இவர்? கேவலம் மரக்கட்டையா?'' என்றும் கேட்டுக்கொண்டாள்.

ஜெபமாலையை உருட்டிக்கொண்டே தீப்சந்த் சொன்னான் ''கிருஷ்ணன் நாமத்தை உச்சரி. நாளைக்கு காய்ச்சல் சரியாகப் போய்விடும்'' என்று.

''இப்பொழுது தலைவலிக்கிறது'' என்றாள் புஷ்பாவதி.

''அதற்கும் கிருஷ்ண ஜெபம்தான் மருந்து'' என்று சுட்டிக்காட்டினான் தீப்சந்த்

''அப்படியானால் மருத்துவரை வரவழைப்பானேன்?'' என்று கேட்டாள் புஷ்பாவதி.

''உன்னைப்போல் நம்பிக்கையற்றவர்களுக்கு மருத்துவர் தேவை'' என்று சுட்டிக்காட்டிய தீப்சந்த், ''கிருஷ்ண ஜெபம் செய். காலையில் காய்ச்சல் இருக்கிறதா பார்'' என்று திட்டமாக அறிவித்தான்.

அவன் திட நம்பிக்கையைக் கண்ட புஷ்பாவதி பிரமித்தாள். இந்த வாலிப வயதில் இத்தனை பக்தி எப்படி அவனுக்கு வந்தது என்று வியந்தாள். அதனால் கேட்டாள் ''கிருஷ்ண ஜெபத்தால் சகல சங்கடங்களும் தீரும் என்று நீங்கள் உண்மையாக நம்புகிறீர்களா?'' என்று வினவினாள் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''உண்மையாக நம்புகிறேன். அந்த நம்பிக்கையில் தான் சாப்பிடுகிறேன். வாளை சுழற்றுகிறேன். இது வரை தோல்வியைப் பார்த்ததில்லை'' என்ற தீப்சந்தின் முகத்தில் நம்பிக்கையின் ஒளி சுடர் விட்டது.



ஏற்கனவே கம்பீரத்துடன் அழகுடன் விளங்கிய தீப்சந்தின் முகம் நம்பிக்கையின் சுடரால் பெரிதும் பிரகாசித்ததைக் கண்ட புஷ்பாவதி அவனிடம் ஏதோ தெய்வீக சக்தி இருக்கிறது என்றே நினைத்தாள். ''அந்த மந்திரத்தை எனக்கும் சொல்லிக் கொடுங்கள்'' என்று வினயத்துடன் கேட்டாள்.

தீப்சந்தின் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது. ''புஷ்பாவதி!'' என்று அன்புடன் அழைத்தான்.

''என்ன?'' என்று மெதுவாகப் பேசினாள் அவள்.

''உனக்கும் கிருஷ்ணன் அருள் வந்துவிட்டது. உனது மனமும் மாறிவிட்டது. இனி யாரும் உன்னை எதுவும் செய்ய முடியாது'' என்ற தீப்சந்த் ''நன்றாக திரும்பிப் படு'' என்றான்.

''எதற்கு?'' என்று வினவினாள் புஷ்பாவதி.

''உனக்கு மந்திர உபதேசம் செய்யப் போகிறேன்.''

''அதற்கு நான் திரும்பிப் படுப்பானேன்?''

''உன் வலது காதில்தான் சொல்ல வேண்டும்'' என்று கூறியதோடு அவளை நெருங்கி அவள் உடலில் கையைக் கொடுத்து நன்றாகத் திருப்பினான். மேற்புறம் வந்துவிட்ட வலது கன்னத்தையும் சங்கு மலர் போலிருந்த காதையும் உற்றுப் பார்த்தான். நிலவொளியில் இரண்டும் பளபளத்தன. அதுவும் கன்னத்தின் வழுவழுப்பு அவனுக்கு உணர்வை அளித்தாலும் மனதை கட்டுப்படுத்திக் கொண்டான். மெள்ள அவள் காதுக்கு அருகில் குனிந்து உதடுகளை தாழ்த்திய போது அவள் முகத்தை லேசாகப் புரட்டவே அவள் கன்னத்தில் அவன் உதடுகள் உராய்ந்தன.

மலரின் மென்மையைப் பெற்றிருந்த அந்த கன்னத்தில் உதடுகளை புரட்டிய வண்ணம் காதுக்கருகில் சென்ற தீப்சந்த் பெண்ணே! நன்றாக மனதில் வாங்கி

கொள்'' என்று சொல்லி கிருஷ்ண மந்திரத்தை அவள் காதில் மும்முறை ஓதினான். அப்பொழுது அவள் உதடுகள் அடுத்தடுத்து காதிலும் படவே அவள் கிருஷ்ண மந்திரத்தைவிட தீப்சந்தின் பெயரையே மனதில் ஏற்றாள். இப்படி அவளுக்கு மந்திர உபதேசம் செய்த தீப்சந்த் திருப்தியடைந்த மனதுடன் எழுந்து நின்றான். ''புஷ்பாவதி! நான் சொன்ன மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே கண்களை மூடிவிடு. உறக்கம் தானாக வரும். காலையில் காய்ச்சலும் இருக்காது'' என்று கூறி மீண்டும் கதவிடம் சென்று உட்கார்ந்து கொண்டவன் அப்படியே கதவில் சாய்ந்து கண்களை மூடினான். அன்று பூராவும் ஏற்பட்ட அதிர்ச்சியால் உறக்கத்துக்கும் ஆட்பட்டான்.

ஆனால், புஷ்பாவதிக்கு உறக்கம் அணுவளவும் வராததால் அவள் புரண்டு புரண்டு கட்டிலில் படுத்தாள். தீப்சந்தின் பணிவிடையும் அசனால் தனது புஷ்ப உடலை அவன் கை தீண்டிய இடங்களையும் நினைத்து உணர்ச்சிகளில் சிக்கி தவித்தாள் புஷ்பாவதி. ''இவர் என்னை தோள் மீது தூக்கி போட்டுக்கொண்டு வந்தபோது நான் சுரணையற்று இருந்ததால் பிழைத்தேன்'' என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

புஷ்பாவதி கட்டிலில் இருந்தபடியே கதவில் சாய்ந்திருந்த தீப்சந்தை கவனித்தாள். உறக்கத்திலும் அவன் முகம் மிக அழகாயிருந்தது. உதடுகள் சற்றே மூடியிருந்ததால் வாலிப மீசை லேசாக இழுக்கப்பட்டதில் வீரமும், உறுதியும் தெரிந்தது. அவன் தனது பக்கத்தில் படுக்க வைத்திருந்த நீண்ட வாளைப் பார்த்த அவள் அதை சுழற்றும் அவன் நீண்ட கைகளையும் பார்த்தாள். ''வாளுக்குத் தகுந்த கைகள் கைகளும் இரும்பைப் போலத்தான் இருக்கின்றன'' என்று சொல்லிக் கொண்டாள் உள்ளூர.

அந்த வலிய கைகள் தன்னை இறுக அணைத்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தாள். அந்த

www.clevindians.com



எண்ணத்தால் வெட்கம் அவள் முகத்தை ஆட்கொண்டது. புன்சிரிப்பு உதடுகளை ஆட்கொண்டது. ''சே சே! என்ன எண்ணம் இது? குலமகள் எண்ணக்கூடிய எண்ணமா?'' என்று தன்னை கடிந்தும் கொண்டாள். ஆனால் அவள் மன விகாரம் அவளை விடவில்லை. அதன் விளைவாக மெதுவாக கட்டிலில் இருந்து எழுந்து அவனை நோக்கி நடந்தாள். அவன் பககத்தில் சிறிது நேரம் உட்கார்ந்தவள் அவன் காலடியிலேயே படுத்து விட்டாள்.

பொழுது புலர சிறிது நேரம் இருக்கும் போதே கண் விழித்த தீப்சந்த் தனது காலடியில் படுத்துக் கிடந்த புஷ்பாவதியைப் பார்த்து ''இவள் எப்பொழுது இங்கு வந்தாள்? ஏன் வந்தாள்? தரையில் படுத்தால் காய்ச்சல் அதிகமாகுமே'' என்று சினந்து எழுந்து அவளை இரு கைகளாலும் தூக்கி கட்டிலில் கொண்டு போய் மீண்டும் படுக்க வைக்க முயன்றான். அவள் கழுத்தை வளைத்திருந்த கைகள் அவனுக்கு விடுதலை அளிக்க மறுத்தன.

அந்த சமயத்தில் உள்ளே வந்த பணிப்பெண் அந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சியுற்று நின்றாள். பிறகு மகாராணியிடம் செய்தி சொல்ல ஓடினாள்.

மகாராணி புன்முறுவல் கொண்டாள். ''இது எதிர்பார்த்ததுதான்'' என்று கூறி அந்த அறையை நோக்கி வந்தாள்.

அவள் வந்தபோது புஷ்பாவதி கட்டிலில் கிடந்தாள். தீப்சந்த் கதவில் சாய்ந்த வண்ணம் ஜெபமாலையை உருட்டிக்கொண்டிருந்தான்.

''நல்ல ருத்திராட்சப் பூனை இவன்?'' என்று சீறிய மகாராணி ''இவன் விழித்ததும் என்னிடம் இவனை அழைத்து வா'' பணிப்பெண்ணுக்கு உத்தரவிட்டாள்.

அப்பொழுது ருத்திராட்சப் பூனை லேசாகக் கண் விழித்து மகாராணியைப் பார்த்தது. ''விழித்துக்கொண்

தான் இருக்கிறேன். மகாராணி சொல்லவேண்டியதை இங்கேயே சொல்லலாம்'' என்றான்.

''எதற்காக பிரமசாரி வேடம் போடுகிறாய்?'' என்று மகாராணி வினவினாள்.

''வேடமில்லை. உண்மை'' என்றான் தீப்சந்த்.

''சற்று முன்பு இங்கு நடந்தது என்ன?'' என்று மகாராணி வினவினாள்.

''நியதிக்கு புறம்பாக எதுவும் நடக்கவில்லை'' என்றான் தீப்சந்த்.

ஆனால், மகாராணி அதை நம்பவில்லை. அவனது பலவீனத்தை தனக்கு அனுகூலமாக திருப்பிக் கொள்ள திட்டமிட்டாள். ஏதாவது காரணத்தால் அவனை ராணாவின் மெய்க்காவலனாக ஆக்கிவிட்டால் ராணாவுக்கு பெரும் பாதுகாப்பு என்று நம்பினாள். அதற்கு ஒரு திட்டமும் தீட்டினாள்.

## 8. வைத்தியர் என்ன செய்வார்?

புஷ்பாவதியை தூக்கிக் கொண்டு பஞ்சணைக்குச் சென்றதை பணிப்பெண் சொல்லக் கேட்டு, அந்த அறைக்கு விரைந்த மகாராணி, ஜெபமாலையை உருட்டிக் கொண்டிருந்த தீப்சந்தைப் பார்த்ததாலோ, தனது கேள்விகளுக்கு அவன் சொன்ன பதில்களாலோ சிறிதளவும் ஏமாறவில்லை.

அவன் சொன்னபடி நியதிக்கு மாறாக எதுவும் நடக்காவிட்டாலும் ஒரு பெண்ணை தொட்ட பின்பு எந்த மனிதனும் மாறுவான் என்பதை உணர்ந்திருந்த மகாராணி



''இந்த பிரமசாரி மட்டும் பொதுவிதிக்கு எப்படி விலக்காக முடியும்?'' என்று எண்ணவே செய்தாள். ஆகவே அவனை எப்படியும் புஷ்பாவதியின் வலையில் சிக்க வைத்து அவனை ராணாவின் வலதுகரமாக ஏற்படுத்திவிட்டால் ராணாவுக்கு உயிர் பயம் ஏதுமிருக்காது என்று நிச்சயமாக நம்பினாள். அதற்கு தகுந்தபடி தனது திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டாள்.

ஆகவே பொழுது விடிந்ததும் தீப்சந்த் என்ன செய்கிறான் என்று பார்த்து வரும்படி பணிப்பெண்ணை அனுப்பியதும், அவன் அறையில் காணவில்லை என்று பணிப்பெண் சொல்லவே ''எங்கு போயிருக்கிறான், விசாரி'' என்று கடிந்துகொண்டாள்.

சூரியன் உதயமாகும் வரை தீப்சந்தின் இருப்பிடம் தெரியாததால் ''ஒருவேளை சொல்லாமல் போய் விட்டானா?'' என்ற சிந்தனையிலும் இறங்கிய மகாராணி ராம்பியாரி, தனது சாளரத்து அருகே சென்று வெளியே எட்டிப் பார்த்தவள் புன்முறுவல் கொண்டாள் அரண்மனை அந்தப்புரத்தை அடுத்த நந்தவன குளத்தின் படிகளில் நின்ற வண்ணம் கைகளை கூப்பிக் கொண்டு சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருந்த தீப்சந்தை வியப்பு ததும்பிய விழிகளுடன் மகாராணி பார்த்தாள்.

தீப்சந்த் அன்று காலை அந்த குளத்தில்தான் நீராடியிருக்க வேண்டும் என்பது அவன் உடைகளும் வாளும் குளக்கரையில் இருந்ததன் விளைவாக சந்தேகமறத் தெரிந்ததால், ''இத்தனை குளிரில் இவன் எப்படி இந்த பனி நீரில் நீராடினான்?'' என்று மகாராணி தன்னைத்தானே வினவிக்கொண்டாள். அத்துடன் இடுப்பில் மட்டும் ஈர ஆடை அணிந்து நெற்றியில் கோபிசந்தனத்துடன் அவன் நின்ற நிலையையும், திறந்த பாதி உடலையும் கைகளை தலைக்கு மேலே அவன் கூப்பியிருந்ததால் இளம் முனிவர் போலவே விளங்கிய அவன் தோற்றத்தையும் பார்த்து ''இத்தனை உறுதியுள்ளவன் தன் திட்டத்தில் சிக்கு

வானா?'' என்று வினா ஒன்றை தன்னுள் எழுப்பிக் கொண்டாள். ஆனால் தனது திட்டத்தில் சிக்காதவன் அன்றுவரை கிடையாது என்ற உறுதியால் மனதை திடப் படுத்தியும் கொண்டாள்.

இதே காட்சியை தனது அறைச் சாளரத்தின் மூலம் பார்த்த புஷ்பாவதியின் எண்ணங்கள் வேறு திசையில் ஓடிக்கொண்டிருந்தன.

காலை கதிரவன் வெய்யிலில் தங்கம் போல் ஜொலித்த அவன் தேகத்தைக் கண்டு ''அப்பா! என்ன அழகு என்ன நிறம்!'' என்று வியந்தாள். ''என்ன வீர உடல்! எத்தனை திண்மையான கைகள்! என்ன பரந்த மார்பு! இரும்பு போன்ற கால்களின் திடம்தான் என்ன?'' என்று பலவாறு எண்ணினாள். அத்துடன் கண்களை மூடிக்கொண்டிருந்த அவன் நிலையையும் சாந்தம் நிலவிய விசால நெற்றியை யும் கண்டு அவன் செய்யும் ஜெபம் உண்மையானதுதான் என்று தீர்மானித்தாள். ''இத்தனை உறுதியான மன முள்ளவன் என்னை எங்கே கவனிக்கப் போகிறான்!'' என்று மன ஏக்கமும் கொண்டு பெருமூச்செறிந்தாள்.

இப்படி அரண்மனை அந்தப்புரத்தில் இருந்து இரு மாதர்கள் தன்னை எடைபோடுவதை அறியாமலே சுமார் இரண்டரை நாழிகை நேரம் சூரிய நமஸ்காரம் செய்து முடித்துக்கொண்ட தீப்சந்த், நந்தவனத்தில் இருந்த ஒரு பெரிய செடியின் மறைவுக்குச் சென்று ஈர உடையைக் களைந்து தனது பழைய உடைகளை அணிந்து வாளைக் கையில் பிடித்த வண்ணம் வெளியே வந்தான். வாளை இரு கைகளாலும் சூரிய பகவானுக்கு முதலில் அர்ப்பணம் செய்த பிறகு, இடையில் அணிந்து கொண்டு அந்தப்புர பின் வாசற்படி வழியாக உப்பரிகைக்கு ஏறிச்சென்று புஷ்பாவதி இருந்த அறையை அடைந்தான். அப்பொழுது அவள் சாளரத்தின் மூலம் வெளியே பார்த்துக் கொண்டி ருப்பதைக் கண்டு ''நான் இங்கு வந்துவிட்டேன்'' என்று கூறி புன்முறுவலும் செய்தான்.

www.cleanindiane.com



அவன் குரல் கேட்டு சரேலெனத் திரும்பிய புஷ்பாவதி யின் முகம் குங்குமம் எனச் சிவந்தது. ''உங்களை நான் பார்ப்பதாக யார் சொன்னது?'' என்று சீற்றத்துடன் வினவவும் செய்தாள் அவள்.

''உங்கள் கோபமும் கேள்வியுமே சொல்கின்றன'' என்ற தீப்சந்தின் புன்வறுவல் மேலும் விரிந்தது.

அதற்கு புஷ்பாவதிக்கு பதில் சொல்லத் தெரியாததால் சம்பந்தம் இல்லாமல் கோபத்தைக் காட்டி ''உங்களை யார் நந்தவனத்து குளத்தில் நீராடச் சொன்னது?'' என்று வினவினாள்.

''எனக்கு என் விருப்பப்படி நீராடக்கூட உரிமை கிடையாதா?'' என்று தீப்சந்த் வினவினான் வாயிற்படி யில் சாய்ந்து நின்று.

''இல்லையென்று யார் சொன்னது?''

''நீதானே கேட்டாய் யார் அந்த குளத்தில் நீராடச் சொன்னதென்று?''

''சொன்னேன். அந்தப்புரத்து நந்தவன குளம் பெண் கள் நீராட ஏற்பட்டது.''

''இல்லை.''

''எப்படித் தெரியும் உங்களுக்கு?''

''நீரில் நறுமணப் பொடிகளின் சுகந்தமோ தைலங் களின் நறுமணமோ இல்லை.''

இதைக்கேட்ட அவள் நகைத்தாள். ''பெண்கள் நீரா டும் இடங்களில் நீங்கள் நீராடி பழக்கம் போலிருக்கிறது?'' என்று வினவினாள் நகைப்பின் ஊடே.

தீப்சந்த் இந்த கேள்வியால் சங்கடப்படவில்லை. ''அந்த மாதிரி அசந்தர்ப்பம் என்னை அறியாமலே சில சமயங்களில் ஏற்பட்டு இருக்கிறது'' என்றான் சர்வசாதா ரணமாக.

நீங்கள் அறியாமலே பெண்களுடன் சேர்ந்து நீராடும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றனவா?'' இகழ்ச்சியுடனும் சினத்துடனும் பேசினாள் புஷ்பாவதி.

தீப்சந்த் அப்பொழுதும் இடித்த புளிபோல் நின்றிருந்தான். ''அந்த சந்தர்ப்பம் இன்னும் கிடைக்கவில்லை. கிடைக்காதிருக்க கிருஷ்ணன் அனுக்கிரகம் செய்வான்'' என்றான்.

''கிருஷ்ணனா!'' ஏளனத்துடன் கேட்டாள் புஷ்பாவதி.

''ஆம்''

''அது நடவாது.''

''ஏன்?''

''அவன் ஆயிரக்கணக்கான பெண்களுடன் நீராடியவன். அவன் உங்களுக்கு எப்படி அருள் புரிவான்?''

''பெண்ணே!''

''உம்.''

''கிருஷ்ண தத்துவத்தை நீ அறியவில்லை.''

''என்ன அறியவில்லை?''

''கிருஷ்ணன் பிரமசாரி.''

''என்ன உளறுகிறீர்கள்?''

''உளறவில்லை. அவன் விளையாடிய கோபஸ்திரீகள் ரிஷிகள். நீ நினைக்கிற முறையில் பெண்கள் அல்ல. தத்துவத்தை சரியாகப் புரிந்துகொண்டு பேசு. ஏதோ விவரமறியாதவர்கள் கிருஷ்ணனை இகழ்வதுபோல் நீயும் இகழாதே. உன் அறியாமையைக் காட்டாதே'' என்று சற்று கோபமாகவே கூறினான் தீப்சந்த். சட்டென்று ஜெபமாலையையும் இடைக் கச்சையில் இருந்து எடுத்துக் கொண்டான்.

புஷ்பாவதியின் முகம் எரிமலைபோல் ஜொலித்தது. ''முதலில் அந்த மாலையை மறுபடியும் கச்சையில் வைத்து

684 | 2/9/1969



விடுங்கள்'' என்று சொற்களை உதிர்த்தாள் கடுமையாக.

''அது என்ன செய்தது உன்னை?'' என்று வினவினான் தீப்சந்த்

''அதைப் பார்த்தாலே எனக்கு எரிச்சலாய் வருகிறது'' என்று சொல்லிக்கொண்டே அவனை அணுகி அந்த மாலையை அவன் கையில் இருந்து பிடுங்க எத்தனித்தாள்.

அவன் கையை தலைக்கு மேலே தூக்கிக்கொண்டதால் போன வேகத்தில் அவன் மார்பு மேல் விழுந்தாள். மேலும் சரிந்துவிடப் போகிறாளே என்ற பயத்தால் அவன் ஜெபமாலைக் கையால் அவளை சுற்றிப் பிடித்தான்.

அந்த சமயத்தில் அறை அருகில் வந்த ராஜமாதா ராம்பியாரி தேவி சட்டென்று நின்று ''தீப்சந்த்! புஷ்பாவதி!'' என்று இருவரையும் அதட்டி குரல் கொடுத்தாள்.

மகாராணியைத் திரும்பிப் பார்த்த இருவரில் தீப்சந்தின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லாவிட்டாலும் புஷ்பாவதியின் முகத்தில் அவமான உணர்ச்சி விரிந்தது. அதனால் அவள் உடலும் லேசாக நடுங்கவே அவளைப் பிடித்தவண்ணம் அழைத்துக்கொண்டு போய் படுக்கையில் உட்கார வைத்த தீப்சந்த் ''மகாராணி! தாங்கள் ஏன் இங்கு வரவேண்டும்? என்னை அழைத்திருந்தால் நானே வந்திருப்பேனே'' என்று மிகுந்த பணிவுடன் சொன்னான்.

அவன் பணிவையும் துணிவையும் கண்ட மகாராணி சிறிது அசந்து போனாலும் அதை வெளிக்குக் காட்டாமல் ''தீப்சந்த்! இங்கு என்ன நடக்கிறது? கிருஷ்ண ஜெபமா அல்லது ராதா கிருஷ்ண நாடகமா?'' என்று வினவினாள் போலி கோபம் குரலில் ஒலிக்க.

தீப்சந்த் முகத்தில் முறுவலின் சாயை நன்றாகவே ரிந்தது. "மகாராணி! ஒன்றுக்கொன்று சம்பந்தமுடை பது தான். இருந்தாலும் பெண்களைப்போல் சமயத்துக் த் தகுந்த நாடகம் ஆட எனக்குத் தெரியாது" என் ான் புன்முறுவல் இதழ்களிலும் பரவ.

"அப்படியானால் அவள் நாடகமாடினாளா?"

"இல்லை."

"ஏன் உன் மார்புமேல் விழுந்துகிடந்தாள்?"

"என் கையிலிருந்த ஜெபமாலையைப் பிடுங்க வந் தாள். சற்று நகர்ந்தேன். தவறி விழுந்துவிட்டாள்."

மகாராணிக்கு உள்ளூர சிரிப்பு வந்தாலும் அதை வெளியில் காட்டவில்லை அவள். ஆகவே அந்த பேச்சை விட்டு "தீப்சந்த்! மருத்துவர் வந்து போனதும் நீ என் அறைக்கு வா. உன்னுடன் பேசவேண்டியது இருக் கிறது" என்றாள்.

"ஏன் இப்பொழுதே வருகிறேன் மகாராணி" என்றான்.

"வேண்டாம். மருத்துவர் வந்தபின் வரலாம். புஷ்பாவதியின் காய்ச்சலைப் பார்த்துவிட்டு அவர் என்ன சொல்கிறார் என்பதையும் கேட்டுக்கொண்டு வா" என்ற மகாராணி திரும்பிச் செல்ல முயன்றாள்.

"மகாராணி! சற்று இருங்கள்" என்றாள் புஷ்பாவதி.

"என்ன புஷ்பாவதி?" என்று வினவினாள் மகாராணி.

"எனக்கு காய்ச்சல் இல்லை மகாராணி. வேண்டு மானால் பாருங்கள்" என்றாள் புஷ்பாவதி.

ராம்பியாரிதேவி கட்டில் அருகே சென்று அவள் டம்பை தொட்டுப் பார்த்துவிட்டு குனிந்து அவள் ாதுக்கருகில் "இந்த காய்ச்சலை சொல்லவில்லையடி ெடி. மோகக் காய்ச்சலை சொன்னேன்" என்று கூறி ள்.



"அதற்கு வைத்தியர் என்ன செய்வார்?" என்று கேட்ட புஷ்பாவதி மகாராணியின் கண்களுடன் தனது கண்களைக் கலந்தாள். நான்கு கண்களும் சிரித்தன.

மகாராணி அப்புறம் நிற்கவில்லை அங்கு வேகமாக விரைந்தாள் அறையில் இருந்து. சிறிதுநேரத்தில் வைத்தி யரும் வந்தார். புஷ்பாவதியின் நாடிகளைப் பரிசோதித்து மண்டை காயத்தையும் பார்த்து "இனி ஒன்றும் பய மில்லை" என்று கூறிவிட்டு எழுந்தார். போகும்போது "இனி நீங்கள் உங்கள் சகோதரியை அழைத்துச் செல்ல லாம்" என்றார்.

"இவள் என் சகோதரி அல்ல" என்றான் தீப்சந்த்

"வேறு எப்படி...?" என்று வைத்தியர் குளறினார் சந்தேகத்துடன் இருவரையும மாறி மாறிப் பார்த்தார்

## 9. விளைவு நாளை தெரியும்!

புஷ்பாவதி தனது சகோதரி அல்ல என்று தீப்சந்த் சொன்னதைக் கேட்ட மருத்துவர் பலைத்தார் என்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது.

ராஜபுதனத்தின் கெடுபிடியான சமுதாய பழக்கத்தின் படி சம்பந்தம் இல்லாத ஒரு பெண்ணை தூக்கி வருவதே குற்றம். அவளுடன் தனியறையில் இருப்பது பெரும் குற் றம். இப்பேர்ப்பட்ட குற்றத்தை எந்த வீரனும் செய்ய துணிய மாட்டான் என்பதையும், அதுவும் மகாராணி யின் அரண்மனையிலேயே இத்தகைய அசம்பாவிதம் நடப் பது என்றால் நினைக்கவும் முடியாத விசித்திரம் என்பதை யும் மருத்துவர் உணர்ந்தே இருந்தார். ஆகையால்தான் தீப்சந்தையும் புஷ்பாவதியையும் அண்ணன் தங்கை

www.cleanindians.com

யென்று மருத்துவர் நினைத்தார். கணவன் மனைவியாக அவர்கள் இருக்கமுடியாது என்பதற்கு அத்தாட்சி இருந்தது.

க்ஷத்திரியர்கள் முறைப்படி தீப்சந்த் பிரமசாரிகள் அணியும் ஒற்றைப் பூணூலையே அணிந்திருந்தான். இந்த நிலையில் அந்த இருவரையும் ஒரே அறையில் இருக்க மகாராணி எப்படி அனுமதித்தாள் என்று சிந்தை வசப்பட்ட மருத்துவர், பெரிய இடத்து விவகாரங்களை அதிகமாக ஆராய்வதில் ஆபத்து இருப்பதை உணர்ந்து ஏதும் பேசாமல் புறப்பட்டார்.

மிகுந்த சந்தேகத்துடனும் சலனத்துடனும் புறப்பட்ட மருத்துவரை நோக்கி தீப்சந்த் ''மருத்துவரே! நாங்கள் இங்கு இருப்பதைப்பற்றி சந்தேகப்பட அவசியம் இல்லை'' என்று சொன்னான்.

''இல்லை இல்லை'' என்று துரிதமாக ஒப்புக்கொண்டார் மருத்துவர்.

''ஒன்று நீர் புரிந்துகொள்ள வேண்டும்'' என்ற தீப்சந்த் மருத்துவரை உற்று நோக்கினான்.

''என்ன?'' மருத்துவர் கேள்வியில் திகில் இருந்தது.

புஷ்பாவதியை தீப்சந்த் கையால் சுட்டிக்காட்டி ''எங்கள் உறவில் தவறு இருந்தால் மகாராணி எங்களை இங்கு தங்கவிட மாட்டார்கள்'' என்று அறிவித்தான்.

''ஒருக்காலும் தங்கவிட மாட்டார்கள். மகாராணியின் கட்டுதிட்டங்களை ராஜஸ்தானமே அறியும்'' என்றார் மருத்துவர்.

அவர் உண்மையாகத்தான் பேசுகிறாரா நகைக்கிறாரா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத தீப்சந்த் ''ஆகையால் இந்த சிறு நிகழ்ச்சியைப் பற்றி நீர் பேசாதிருப்பது நல்லது'' என்று சொன்னான்.

www.atozindians.com



''ஏன் பேசுகிறேன்? எனக்கு பைத்தியமா என்ன?'' என்றார் மருத்துவர்.

''இதில் இன்னொருவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்''

''யாரது?''

''ராவுத் சலூம்பிரா''

''ஐயோ...சலூம்பிராவா?''

''ஆம்.''

அதற்கு மேல் மருத்துவர் எந்த தகவலையும் கேட்கவில்லை. தமது மருந்து பைகளை எடுத்துக்கொண்டு வெகுதுரிதமாக விரைந்துவிட்டார்.

அவருடைய வேகத்தைக் கண்ட புஷ்பாவதி புன்முறுவல் செய்தாள். ''ஆம் எதற்காக மருத்துவரை அப்படி பயமுறுத்தினீர்கள்'' என்று தீப்சந்தை நோக்கி வினவவும் செய்தாள்.

தீப்சந்தின் அழகிய முகத்தில் கவலை விரிந்தது. ''பெண்ணே! அவரை நான் அச்சுறுத்தியது உன்னை உத்தேசித்து மட்டுமல்ல. மகாராணாவின் பெயர் ஏற்கனவே ராஜஸ்தானத்தில் கெட்டுக்கிடக்கிறது. அவர் உனக்கு அடைக்கலம் கொடுத்தது வெளியில் தெரிந்தால், இந்த ராஜவம்சத்தின் பெயர் கெடும். அப்படிக் கெட்டால் ஏற்கனவே பலவீனப்பட்டிருக்கும் மகாராணாவின் கட்சி இன்னும் பலவீனப்படும். இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் விபரீதமானவை'' என்றான் கவலை அபரிமிதமாக ஒலித்த சொற்களில்.

புஷ்பாவதியின் முகத்திலும் கவலையின் சாயை விரிந்தது. ''நான் இங்கு வந்திருப்பது ஏற்கனவே சலூம்பிராவுக்கு தெரியுமே'' என்று குறிப்பிட்டாள்.

தீப்சந்த் முகத்தில் அதுவரை இல்லாத பெருமை விரிந்தது. ''புஷ்பாவதி! சந்தாவதர் தலைவரும் மகாராணாவின் பெயரையே உடையவருமான ராவுத் பீம்சிங்

சளும்பிரா மகாவீரர். மமதை பிடித்தவர். ஆனால் புரளியைப் பரப்பும் ஈனச் செயலில் அவர் ஈடுபடமாட்டார். அவர் வீரர்களில் யாராவது வதந்தி கிளப்பினாலும் அவனை கொல்ல தயங்கமாட்டார். அவரிடமிருந்து நமக்கு எந்த பயமும் இல்லை'' என்று சொன்ன தீப்சந்த் ''நான் மகாராணியாரைப் பார்த்து வருகிறேன்'' என்று கூறி வெளியே சென்றான்.

அறையைவிட்டு அவன் வெளியே வந்ததும் அவனை அழைத்துச் செல்ல பணிப்பெண் ஒருத்தி தயாராகக் காத்திருந்தாள். அவள் தீப்சந்தை அந்தப்புரத்தின் பல உட்கட்டுகள் மூலமாக அழைத்துச்சென்று, கோடி அறை ஒன்றின் முன்பு வந்ததும் அங்கு சாத்தியிருந்த அலங்கார கதவை தட்டினாள்.

அடுத்த வினாடி இன்னொரு பணிப்பெண் கதவைத் திறக்க, தீப்சந்த உள்ளே சென்றான்.

அந்த விசாலமான அறையைப் பார்த்து தீப்சந்த் பல விநாடிகள் பிரமித்து நின்றான்.

அறை விசுவகர்மாவினால் சிருஷ்டிக்கப்பட்ட சொர்க்க அறைபோல் இருந்தது. பல நாடுகளில் இருந்தும் கொண்டு வரப்பட்ட சிலைகளும், அங்கேயே தீட்டப்பட்ட ஓவியங்களும் தீப்சந்தின் கண்களைக் கவர்ந்தன. ஓவியங்கள் அனைத்தும் வீரக்காட்சிகளையும் போர்க்களங்களையுமே விளக்கின. சிலைகள் மட்டும் சிருங்கார பிம்பங்களாயிருந்தன. அந்த சூழ்நிலையிலிருந்து மகாராணி சிருங்காரத்தைவிட வீரத்தை அதிகமாக மதிக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட தீப்சந்தை நோக்கி ''அந்த உள்ளறையில் மகாராணி இருக்கிறார்கள்'' என்று பணிப்பெண் கூற, அந்த அறை மூலையில் இருந்த உள்ளறையை நோக்கி நடந்த தீப்சந்தை ''உள்ளே வரலாம்'' என்ற மகாராணியின் சொற்கள் வரவேற்றன.

உள்ளே நுழைந்த தீப்சந்த் அந்த அறை சிறியதாயிருந்தாலும் அங்குள்ள அமைப்பு மிக அழகாக இருப்

www.cleanindians.com



பதை கவனித்தான். எல்லாவற்றையும்விட அந்த அறையின் நட்ட நடுவில் இருந்த பெரிய சாளரமும் அதற்குப் பக்கத்தில் இருந்த கட்டிலும் தீப்சந்தின் கவனத்தைக் கவர்ந்தன. அவன் கண்கள் சென்ற இடங்களை கவனித்த மகாராணி தீப்சந்தை நோக்கி ''வீரனே! அந்த சாளரத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினாள்.

''அறைக்கு பொருத்தமாக இல்லை. அளவுக்கு மீறி பெரியதாக இருக்கிறது. கட்டில் அதை ஒட்டி இருப்பதால் தங்கள் சித்தமும் தெரிகிறது'' என்றான் தீப்சந்த். அந்த சாளரத்தின் மூலம் வெளியே நோக்கவும் செய்தான்.

மகாராணி முகத்தில் வியப்பைக் காட்டினாள். ''என் சித்தம் தெரிகிறதா? என்ன தெரிகிறது?'' என்று வினவினாள் மகாராணி வியப்பை அடக்கிக் கொண்டு.

''அந்த சாளரத்தின் மூலம் ஆரவல்லி மலைத்தொடரைப் பார்க்கலாம். தவிர அது மேவாரின் பெரிய ராணாக்கள் இருந்து அரசாண்ட தலைநகரமான சித்தூரும் அந்தப் பக்கம் இருப்பதால் அதையும் மனக்கண்ணில் பார்க்கலாம்'' என்றான் தீப்சந்த்.

அதுவரை நின்றிருந்த மகாராணி அந்த கட்டிலுக்குச் சென்று அதில் உட்கார்ந்து கொண்டு வெளியே நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே இருந்தாள். பிறகு திரும்பி தீப்சந்தை நோக்கி ''வீரனே! உன் புத்தி கற்பூர புத்தி நீ அருகில் வந்ததுமே கற்பூரம் பிடித்துக்கொள்வது போல் எதையும் வேகமாக பிடித்துக் கொள்கிறாய்'' என்று பாராட்டினாள். ''ஆம் தீப்சந்த்! தினமும் நான் சித்தூரை நோக்குகிறேன். என்றாவது ஒரு நாள் நாம் மீண்டும் அங்கு செல்லலாம். ராஜசிம்மனும் பிரதாப சிம்மனும் உட்கார்ந்த அரியணையில் எனது மகனும் ஒரு நாள் அமருவான் என்ற கனவில் நான் அந்த திக்கில் பார்க்கிறேன், கனவு காண்கிறேன்'' என்று தொடர்ந்து பெருமூச்செறிந்தாள்.

சிறிது மௌனத்துக்குப் பிறகு "தீப்சந்த்! மேவாரின் மகாராணி உன்னிடம் ஒரு வரம் கேட்கிறாள்!" என்று தீனமான குரலிலும் கூறினாள்.

தீப்சந்தின் மனம் உருகியது. "எப்பேர்ப்பட்ட வம்சத்தில் வந்தவள் எத்தனை பணிகிறாள்! இத்தனையும் உபயோகமற்ற ஒரு பிள்ளையைப் பெற்றதால் தானே" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டாமல் "உத்தரவிடுங்கள் மகாராணி" என்றான்.

குனிந்த தலையை நிமிராமலே பேசினாள் மகாராணி. "தீப்சந்த்! நீ மகாராணாவின் மெய்க் காவலனாக பதவி ஏற்க வேண்டும்" என்றாள் தழுதழுத்த குரலில்.

"மகாராணி! நாளைக்கு பதில் சொல்கிறேன்" என்றான் தீப்சந்த்.

மகாராணி தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள். "ஏன் தீப்சந்த்?" என்று கேட்கவும் செய்தாள்.

"இன்றிரவு நான் சலூம்பிராவின் தலைவரை சந்திக்க ஒப்புக்கொண்டிருக்கிறேன்."

"அது எனக்கும் தெரியும்."

"அவர் என்னைக் கொல்லாவிட்டால் நாளை இதைப் பற்றி பேசலாம்."

மகாராணி சிந்தனையில் இறங்கினாள். சந்தாவதர்களின் தலைவரின் வீரம் உலகமறிந்தது. அவரிடம் வாட்போரை விரும்பியவர்கள் குறைவு. தப்பித் தவறி விரும்பி அகப்பட்டுக் கொண்டால் பிழைத்தவர்களும் சொற்பம். இதை அறிந்திருந்த மகாராணி "இந்த சண்டையை நீதானே வலுவாக வரவழைத்துக் கொண்டாய்?" என்றாள் சிந்தனைக்குப் பிறகு.

"வலுவில் இந்த சண்டையை நான் ஏற்கவில்லை மகாராணி. தனது தம்பி மாண்டதற்கு சலூம்பிரா பழிவாங்க

www.cleanindians.com



நினைத்ததில் தவறில்லை. அதை நான் ஏற்காவிட்டால் கோழையாவேன். கோழை என்ற பெயரை சம்பாதிக்க நான் விரும்பவில்லை" என்ற தீப்சந்த் "எதையும் கிருஷ்ணன் தீர்மானிப்பான். விளைவு நாளை தெரியும்" என்றான்.

ஆனால் அன்று மாலை சலூம்பிராவை சந்திக்க அரண்மனையை விட்டு அலட்சியமாகவே புறப்பட்டான்.

அவன் புஷ்பாவதியிடம் விடைபெற்றபோது அவள் மிகுந்த கவலையுடன் சொன்னாள் "ஜாக்கிரதையாகப் போரிடுங்கள்" என்று. "நீங்கள் வரும்வரை நான் உறங்க மாட்டேன்" என்றும் தெரிவித்தாள். அவள் குரலில் சோகம் ததும்பியது. கண்களில் நீர் ததும்பியது.

## 10. அரசை துண்டாடும் அழகு

உதயபூர் அரண்மனையில் அந்தப்புர வாயில் வழியாக வெளியே வந்த தீப்சந்தின் மனக்கண்ணில் புஷ்பாவதியின் கலங்கிய கண்கள் தொடர்ந்து தென்பட்டுக் கொண்டு இருந்தபடியால் சிறிது சஞ்சலத்துடனேயே அவன் புரவிக் கொட்டடியை நோக்கிச் சென்றான். அங்கிருந்த அவனது புரவி அவனைப் பார்த்து பெரிதாக கனைக்கவே அவன் அதன் அருகில் சென்று அதன் மூக்கையும் வாயையும் தன் கையால் தடவிக் கொடுக்க புரவியும் அவன் மீது ஆசையுடன் உராய்ந்தது.

அந்த உரசலில் பேரானந்தத்தைக் கண்ட தீப்சந்த், அதை அவிழ்த்துக்கொண்டு வெளியே வந்து கொட்டடிக் காவலன் எடுத்து வந்த முதுகுத் தோலை அதன் மீது பொருத்தி சேணத்தையும் தானே அணிவித்து அதன்மேல்

ஏறி அரண்மனைப் பாதைகளில் அதை செலுத்தி வாயிலுக்கு வந்து ஆகாயத்தை நோக்கினான்.

மாலைக் கதிரவன் அரைகுறையாக மறைந்திருந்ததால் அந்திவானம் பெரிதாக சிவந்து கிடந்தது. வெண்மதியும் காட்சியளித்தது அப்பொழுதுதான் நட்சத்திரங்கள் ஒவ்வொன்று எங்கெங்கோ தெரியத் தொடங்கின. இவற்றையெல்லாம் கவனித்ததால் நேரம் அதிமாகவில்லை என்பதை கணக்கிட்ட தீபசந்த் "எதற்கும் முன்னால் செல்வது நலம் நேரம் கழித்துப் போனால் ஒருவேளை சலூம்ப்ரா நான் ஓடிவிட்டதாகவும் கோழையென்றும் நினைக்கலாம்" என்று தனக்குள் கூறிக்கொண்டே உதயபூரை அடுத்த மலைப் பள்ளத்தாக்கை நோக்கி புரவியை செலுத்தினான். இருப்பினும், நேரம் அதிகம் இருந்ததால புரவியை நிதானமாகவே நடத்திக்கொண்டு மலைப் பள்ளத்தாக்கில் உள்ள மோகினி வனத்தை ஒரு நாழிகைக்குள் அடைந்தான். மலைச்சரிவில் இருந்து சமவெளியை நோக்கி புரவியை நடத்தினான்.

www.cleanindians.com

அன்றைய இரவில் மதி வீசிய வெளிச்சத்தில் மோகினி வனம் அற்புதமாகக் காட்சியளித்தது. மலைச்சரிவில் புல்லடர்ந்த தரையை அடுத்திருந்த காட்டு முகப்பில் பெரும் புஷ்பச் செடிகள் மலர்க்கொத்துக்களை ஆட்டி தீபசந்தை வரவேற்றன. அவற்றை அடுத்திருந்த அடர்ந்த காட்டிலும் மகுடம் போன்ற பெரிய மரங்கள் ஆகாயத்தை அளாவி நின்று, தங்கள் சிறு மலர்களால் நறுமணத்தை எங்கும் பரப்பின. அந்த பள்ளத்தாக்கின் இயற்கை அழகின் விளைவாக எட்ட எட்ட இடம்விட்டு சின்னஞ்சிறு மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. அதில் ஒன்று மகாராணாவின் உல்லாச மாளிகை என்பதற்கு அறிகுறியாக அதன் கவிழ்ந்த மகுடத்தில் கலசமொன்று சூட்டப்பட்டு அதன்மீது சூரியன் கொடியும் பறந்தது.

அந்த சூரியன் கொடிமீது விழுந்த சந்திர வெளிச்சத்தைக் கண்ட தீபசந்த் அந்த கொடியின் அழகு பதின்



மடங்கு அதிகமாகிவிட்டதைக் கண்டு "சந்திரனும் சூரியனுக்கு அஞ்சலி செலுத்துகிறான். அப்படியிருக்க சலூம்பிரா ஏன் இதற்கு அடங்க மறுக்கிறார்? அவரும் சூரிய வம்சத்தின் அடிமை தானே?" என்று வினவிக் கொண்டான். இந்த எண்ணங்களுடன் புரவியில் இருந்து இறங்கி முதல் நாள் சண்டையிட்ட இடத்தை நாடிச் சென்றான்.

அந்த சண்டைக்குப் பிறகு, இறந்த சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டு இருந்தாலும் நிலத்தில் புரவிகளின் காலடிகளால் நேர்ந்த உளைசலும், பிளவுபட்ட புல்பத்தைகளின் சீரழிவும் பழயபடியே இருந்ததைக் கவனித்தான்.

இப்படி அந்த இடத்தை ஆராய்ந்து கொண்டே சென்றவன் கண்களுக்கு நிலத்தில் பளிச்சென்று ஏதோ தென்படவே அதை கையில் எடுத்துப் பார்த்து பெரும் பிரமை கொண்டான். அது யாரோ ஒரு பெண்ணின் தலை ஆபரணமான உச்சிப்பூ என்பதைப் புரிந்துகொண்ட தீபசந்த் "மிக விலை உயர்ந்த ஆபரணம். என்ன அழகான மாணிக்கங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அதை இருமுறை திருப்பிப் பார்த்தான். அதன் பின்புறத்தில் ஒரு சிறு கோடாரி செதுக்கப்பட்டு இருந்ததைப் பார்த்து சிந்தனைக்குள்ளானான். "இருக்காது. ஒருக்காலும் இருக்காது. மன்னர் வேட்டைக்குத் தங்கும் வேட்டைக்கார விடுதி இங்கிருந்து தொலைதூரம் இருக்கிறது. அங்கிருந்து இத்தனை தூரம் புஷ்பாவதி இங்கு எப்படி எதற்காக வருவாள். இந்த உச்சிப்பூ அவளுடையதாயிருக்க முடியாது" என்று வினாக்களை எழுப்பி தானே பதிலும் சொல்லிக்கொண்டாலும் அந்த தலைக்குழல் ஆபரணத்தை தனது கச்சையில் சொருகிக் கொண்டான்.

சலூப்பிரா வருவதற்கு நேரம் இருப்பதால் அந்த புல் தரையிலேயே உட்கார்ந்து ஜெபமாலையை எடுத்து

கிருஷ்ண தியானத்தில் ஆழ்ந்துவிட்டதால் அடுத்த ஒரு நாழிகைக்கெல்லாம் சலும்பிராவும் அவரது சகாக்கள் நால்வரும் வந்ததை அவன் கவனிக்கவில்லை. சற்று எட்ட புரவியை நிறுத்திவிட்ட சலும்பிரா தீப்சந்த் இருக்குமிடத்தை அணுகி ''தீப்சந்த்! தீப்சந்த்!'' என்று இருமுறை அழைத்த பிறகே கண்களை விழித்த அந்த வாலிபன் ''மகாவீரரே! மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லி எழுந்திருந்து ஜெபமாலையை கச்சையில் மறைத்துக் கொண்டான்.

அதைக் கண்ட சலும்பிரா பெரிதாக நகைத்தார். ''தீப்சந்த்! அதென்ன ஜெபமாலையா?'' என்று வினவினார்.

''ஆம்'' என்று சொல்லி புன்முறுவல் செய்தான் தீப்சந்த்.

''இத்தனை நேரம்...'' இளக்காரமாகப் பேசிய சலும்பிரா வார்த்தையை முடிக்கவில்லை.

''கிருஷ்ண ஜெபம் செய்து கொண்டிருந்தேன்'' என்றான் தீப்சந்த்.

''உயிர் பிழைக்க பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாய்?''

''ஆம்.''

''பயமாயிருந்தால் சொல்லிவிடு. உன்னை மன்னித்து விடுகிறேன்.

''சலும்பிரா! தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.''

''தவறாகவா?''

''ஆம்.''

''என்ன தவறோ?''

''நான் உயிர் பிழைக்க ஜெபம் செய்யவில்லை. உங்கள் உயிர் பிழைக்க கிருஷ்ணனை வேண்டினேன். போரில்

www.clearindians.com



நிதானமிழந்து நான் ஏதாவது வாளை எக்கச்சக்கமாக உங்கள் மார்பில்...'' என்றான் தீப்சந்த்.

அதுவரை நிதானம் காட்டிய சலும்பிரா எரிமலையானார். ''தீப்சந்த்! இளங்கன்று பயமறியாது என்று தமிழ்நாட்டில் பழமொழி இருக்கிறது...'' என்று சீறினார்.

''இருக்கலாம். ஆனால் அது ராஜஸ்தானத்துக்கும் பொருந்தும். இங்கு பிறக்கும் குழந்தைகளின் இரத்தத்திலேயே வீரம் ஓடுகிறது'' என்று சுட்டிக் காட்டினான் தீப்சந்த்.

சலும்பிரா அதற்குமேல் பேசவில்லை. சற்று எட்ட சென்று தமது மேலங்கியை கழற்றி பக்கத்தில் இருந்த வீரனிடம் கொடுத்துவிட்டு, தமது வாளையும் உறையிலிருந்து உருவிக் கொண்டார்.

அவரைப் போலவே அங்கியை கழற்றிய தீப்சந்தும் வாளை உருவிக் கொண்டான். உருவிய வாளுடன் சலும்பிராவை நெருங்கினான். கீழே சல்லடம் மட்டுமே அணிந்து நின்ற சலும்பிராவின் மார்பிலிருந்த பல வடுக்களைக் கண்ட தீப்சந்த் ''இவர் உடலில் எத்தனை வீரச் சின்னங்கள்?'' என்று வியந்தான்.

ராட்சசன் போல் உயரமாக நின்ற சலும்பிராவும் தீப்சந்தை பார்த்து வியந்து நின்றார். அவன் மார்பிலும் வடுக்கள் இருப்பதைக் கண்டு ''இத்தனை சிறு வயதிலேயே பல சண்டைகளைப் பார்த்திருக்கிறான்'' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார். என்ன ஒல்லியான அழகான சரீரம் என்றும் வியப்படைந்தார். பிறகு அனாவசியமாக காலம் தளர்த்தாமல் தமது சகாக்களை அழைத்து ''இந்த சண்டையில் நான் இறந்தால் இந்த சிறுவனுக்கு எந்த ஆபத்தும் நேரிடக்கூடாது. அவன் சுதந்திரமாகப் போகட்டும் என் சடலத்தை சித்தூருக்குக் கொண்டு சென்று என் தாயிடம் ஒப்படைத்து விடு'' என்றார்.

தீப்சந்த் சொன்னன் ''சலூம்பிரா! நான் இறந்தால் என் சடலத்தை இங்கயே எங்காவது எரித்துவிடுங்கள். மண்டலக் கோட்டைக்கு செய்தி அனுப்பினல் போதும்'' என்று. ''நீங்கள் இறக்கப் போவதில்லை. ஆகையால் நீங்கள் சொன்ன ஏற்பாடுகள் எதுவும் தேவையில்லை'' என்றும் கூறினன்.

''ஏன்?'' என்று வியப்புடன் வினவினர் சலூம்பிரா.

''உங்களை கொல்லும் உத்தேசம் எனக்கில்லை. மேவார் இன்றிருக்கும் நிலையில உங்களைப் போன்ற வீரர்களை இழகக முடியாது'' என்றும் கூறினன்.

இதைக்கேட்ட சலூம்பிரா சிந்தனையில் இறங்கினர். ''இவனுடன் ஏன் போராட வந்தோம்'' என்ற எண்ணம் உள்ளூர எழுந்தது அவருக்கு. ''இருக்கட்டும் இவனை நிராயுதபாணியாக்கி அனுப்பிவிடுகிறேன்'' என்று தீர்மானித்துக் கொண்டார். ''சரி, சரி. எடு வாளை'' என்று சொல்லி தமது வாளைக் கொண்டு முன்னேறவும் செய்தார்.

அவரது பெரிய வாளை தீப்சந்தின் நீண்ட மெல்லிய வாள் அனுவசியமாக தடுத்தது. வாளை மீட்டு மீண்டும் பக்கத்தில செலுத்த முயன்றார் சலூம்பிரா. அங்கும் அவர் வாளை திபசந்தின் வாள் தடுத்தது. போரை துரிதப் படுத்தி வேகமாக வாளை சுழற்றி போராடினர் சலூமபிரா. அவரது அத்தனை சுழற்றல்களையும் சமாளித்த திபசந்த். அவர் வாள் தனது தற்காப்புக்குள் சிறிதும் நுழையாதபடி செய்தான்.

போர் உக்கிரமாக ஆக சலூம்பிராவின் வியப்பும் அதிகமாயிற்று. எத்தனையோ மகாவீரர்களின் வாட்களை சில விநாடிகளில் பறக்க அடித்திருக்கும் சலூம்பிரா தீப்சந்தின் வாளை சிறிதும் சுழற்றி எறிய முடியாமல் சங்கடபபட்டார். ஆகவே அதுவரை காட்டிய அசிரத்தை

www.cleanindians.com



யைக் கைவிட்டு சிரத்தையாகவும் சாஸ்திர ரீதியாகவும் போரிட்டார்.

தீப்சந்த் அவருடைய அடிக்கு அடி, நுணுக்கத்திற்கு நுணுக்கம், தனது திறமையைக் காட்டினன். சண்டை மூண்ட ஒரு நாழிகைக்குப் பிறகும் அவன் நின்ற இடத்தை விட்டு நகராமல் நிற்பதைக் கண்ட சலூம்பிரா சற்றே நிதானத்தை இழந்து அவனை அதிகப்படியாக நெருங்கி வாளை அவன் வலது தோளை நோக்கி பாய்ச்சினர். ஆனல் அவர் வாள் தோளைத் தொடுவதற்கு முன்பாகவே பலமான எதிர்த்தாக்குதலுக்கு உள்ளாகி சட்டென்று நிலத்தில் தாழ்ந்து, மண்ணில் அதன் நுனி புதைந்தது. அதை அவர் மீட்பதற்குள் அவன் வாள் அவர் வலது கைத்தோளில் பாய்ந்துவிடவே, வாளை எடுக்க முடியாமல் தவித்தார் சலூம்பிரா. தீப்சந்த் அவரை அணுகி அவரது வாளை நிலத்திலிருந்து பிடுங்கி அவர் கையில் திணித்தான். ''சலூம்பிரா! மன்னிக்கவேண்டும். உங்கள் தோளில் எனது வாள் ஆழமாகப் பதிந்திருக்கிறது. நீங்கள் வாளை சுழற்றுவது கஷ்டம். நீங்கள் பிரியப்பட்டால் இன்னெருமுறை சந்திப்போம்'' என்றன்.

சலூம்பிரா அந்த வாலிபனை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் பார்த்தார். ''தீப்சந்த்! என்னல் இடது கையாலும் போரிட முடியும்'' என்றர்.

''அப்படி அவசியமில்லை. இந்த காயம் ஆறும்வரை நான் காத்திருக்கிறேன்'' என்றன்.

சலூம்பிராவின் சகாக்களில் ஒருவன் ''எசமான்! உத்தரவு கொடுங்கள். நான் இவனுடன் போராடுகிறேன்'' என்று முன்னே வந்தான்.

சலூம்பிராவின் தீட்சண்ணியமான ஒரு பார்வை அவனை பின்னடையச் செய்துவிட்டது. சலூம்பிரா கேட்டார் ''தீப்சந்த்! நீ எந்தப் பெண்ணுக்காக என் தம்பியைக் கொன்றயோ, அவள் யார்?'' என்று வினவினர்.

''தெரியாது.''

''தெரியாமலா அவள் உதவிக்குச் சென்றாய்.''

''ஆம். பெண் யாராயிருந்தால் என்ன? ராஜபுதனத் தவள். அவளை காப்பது ஒவ்வொரு வீரன் கடமை யாகும்.''

''உண்மை'' என்ற சலூம்பிரா ''அவளை எங்கேயோ பார்த்த நினைவு எனக்கிருக்கிறது. அவளையே கேட்டு சொல் எனக்கு'' என்று கூறினார்.

''இதோ இதைப் பாருங்கள். இந்த உச்சிப் பூவை இப்பொழுதுதான் கண்டு எடுத்தேன். இது அவளுடையதா யிருந்தால்...'' என்ற தீப்சந்த் சொற்களை முடிக்கவில்லை.

சலூம்பிரா அந்த உச்சிப்பூவை வாங்கி இரு முறை திருப்பிப் பார்த்தார். பிறகு பிரமை பிடித்த முகத்துடன் சொன்னார். ''இது அவள் ஆபரணமானால் ராஜபுதனம் இரண்டுபடும்'' என்றார்.

தீப்சந்த் புன்முறுவல் கொண்டு ''இப்பொழுது ராஜ புதனம் ஒன்று பட்டிருக்கிறதா சலூம்பிரா?'' என்று வினவினான்.

''இல்லை தீப்சந்த்? ஆனால் இந்த ஆபரணம் பெரும் ரத்தக் கிளறியை உண்டுபண்ணும்'' என்ற சலூம்பிரா வின் குரலில் கவலை அதிகமாயிருந்தது. ''எதற்கும் புஷ்பா வதியை நீ கேட்டு நாளைக்கு எனக்குச் சொல்'' என்றும் சொன்னார்.

''தங்களை எங்கு சந்திப்பது?'' என்று தீப்சந்த் வினவினான்.

சலூம்பிரா சிறிது சிந்தித்தார் ''சோம்ஜியின் மாளிகையிலேயே சந்திக்கலாம் நாளை இதே சமயத்தில்'' என்று கூறிவிட்டு தீப்சந்தின் பதிலுக்குக் காத்திராமல் தமது புரவியில் ஏற முயன்றார்.



''இருங்கள் உங்கள் தோள் காயத்தில் குருதி அதிகமாக வருகிறது. ஒரு கட்டுப் போட்டு விடுகிறேன்'' என்றான் தீப்சந்த்.

குருதி ஒழுகிக்கொண்டிருந்த காயத்தை அலட்சியமாகப் பார்த்தார் சலூம்பிரா ''பாதகமில்லை. நான் மருத்துவரிடம் கட்டுப்போட்டுக் கொள்கிறேன்'' என்று புரவியில் ஏறி சகாக்களுடன் சென்றுவிட்டார்.

தீப்சந்த் அந்த மகாவீரன் போவதை பார்த்துக் கொண்டே நின்றான் ''ஒரு மகாவீரன் போகிறான் அதோ'' என்று உள்ளூர சலூம்பிராவை சிலாகித்துக் கொண்டே தனது புரவியில் ஏறி உதயபூர் அரண்மனையை நோக்கி அதை செலுத்தினான். அரண்மனைக் கொட்டடியில் புரவியைப் பிணைத்துவிட்டு, அந்தப்புர நந்தவனத்தை அடைந்தவன் சற்று தலை நிமிர்ந்து நோக்கினான்.

புஷ்பாவதி சாளரத்தின் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கமல முகத்துக்கு வான்மதி புது மெருகைத் தீட்டியிருந்தான்.

அவள் முகத்தைப் பார்த்த தீப்சந்த் ''ராஜபுதனத்தை பிளக்கும் வதனம். இந்த அழகுக்காக ராஜபுதனம் ரத்தத்தில் நனையும்'' என்று முணுமுணுத்தான்.

## 11. பிரமசாரிக்கு ஆபத்து!

அரண்மனை அந்தப்புரத்து நந்தவனம் வழியாக வந்த தீப்சந்த் அந்தப்புரத்து சாளரம் ஒன்று மேலே திறக்கும் சத்தம் கேட்டு அண்ணாந்து பார்த்தவன் நின்ற இடத்திலேயே நின்றுவிட்டான் பல விநாடிகள்.

www.cleanindians.com

சாளரத்தைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்த முகம் வெண்மதியின் அபாரமான மெருகைப் பெற்றிருந்ததால் இருந்த இடத்தில் இருந்து நகரவும் சக்தியற்றவனானான் தீப்சந்த். தனது தந்தையின் கோட்டைக்கு வந்த தமிழ்நாட்டு புலவர் ஒருவர் தமிழகத்தில் இருந்த கம்பன் என்ற ஒரு கவியைப்பற்றி பேசிக் கொண்டிருக்கையில், அந்த கவியின் வர்ணனைச் சிறப்பைப் பற்றி புகழ்ந்தது அவனது கவனத்துக்கு வரவே "ஆம். அது உண்மைதான். அந்த வர்ணனைக்கு புஷ்பாவதியும் நானுமே உதாரணங்கள்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பயணம் வந்த புலவர் கம்பன் "விலங்கு மெல்லியல்" என்று பெண்களைப்பற்றிய கம்பன் இலக்கணத்தை எடுத்துரைத்து "சரியான அழகு, பார்ப்பவர் கால்களுக்கு விலங்கு போட்டு நிற்கச் செய்யும்" என்று விளக்கமும் தந்திருந்ததை அந்த சமயத்தில் தீப்சந்த் நினைவு படுத்திக் கொண்டான். "இவள் அழகு என் கால்களுக்கு விலங்கைத் தான் மாட்டியிருக்கிறது. இல்லாவிட்டால் நான் ஏன் இப்படி இங்கேயே நிற்கிறேன்?" என்று தன்னைக் கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

ஏதோ மலர்ச் செடியின் கிளையொன்று காற்றுக்கு வசப்பட்டு வெளியே மலர்க்கொத்தை நீட்டுவது போல் சாளரத்தின் வழியாக தலை நீட்டிய புஷ்பாவதி அவனைப் பார்த்து லேசாக நகைத்ததைப் பார்த்த தீப்சந்த் "என்ன அழகான முல்லை மலர் வரிசை! எப்படித்தான் தொடுத்திருக்கிறது இயற்கை!" என்று உள்ளூர வியந்தான். "முல்லைப் பல் வரிசையின் வெண்மைக்கு வெண் மதிக் கிரணங்கள் காரணமா?" என்று வினாவையும் உள்ளே எழுப்பிக்கொண்ட அந்த வாலிப வீரன் "இருக்காது, இருக்காது. வெண்மதி கிரணங்களுக்கு இத்தனை வெளுப்பேது?" என்று உவமைக்கு சிறப்பு கொடுக்காமல் உவமையின் பொருளுக்கே சிறப்பை கொடுத்தான்.

www.cleanindians.com



அத்தனை சந்திர வெளிச்சத்திலும் அகல விழித்த புஷ்பாவதியின் விழிகளில் கருமணிகள் சிறிதும் நிறம் மாறாததைக் கண்டு "சந்திரனுக்கு மெருகு கொடுக்கும் சக்தியிருந்தால் இவள் கருவிழிகளை ஏன் வெளுப்பாக அடிக்கவில்லை?" என்று கேட்டான். அத்துடன் புஷ்பாவதியின் கருத்த தலைக்குழலின் ஒரு பகுதி அவள் தோளில் தவழ்ந்து முன்னால் தொங்கவே "குழலை மட்டும் இவனால் என்ன செய்ய முடிந்தது!" என்று சந்திரன் தோல்வியை உறுதி செய்தான்.

புஷ்பாவதி வெளியே நீட்டிய தனது கழுத்தை சாளரக் கட்டையில் பதித்திருந்ததால், அதுவும் கன்னங்களும் சிவந்து கிடந்ததைக் கண்டு, அவள் மோகனாகார வதனத்தின் அழகைப் பருகி நின்று கொண்டே இருந்தான் தீப்சந்த்.

அந்த சமயத்தில் புஷ்பாவதி தனது உடலை இன்னும் சிறிது வெளியே நீட்டி மார்பகத்தை சாளரக் கட்டையில் பதிய வைக்கவே கூர்மையான இரட்டை எழில்கள் தன்னை உற்று நோக்குவதைக் கண்ட தீப்சந்த் பிரமை பிடித்து நின்றான். அப்பொழுது அடித்த லேசான காற்று அவள் மேலாடையை சற்று விலக்கவே "காற்றுத் தேவன் சுத்த அயோக்கியன். அவள் மார்பைத் தொட இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று வினவினான், அந்த உரிமை தனக்குத்தான் உண்டு என்ற நினைப்பால்.

இப்படி அந்த வாலிபன் அண்ணாந்த தலையை நிமிராமல் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கண்ட புஷ்பாவதி தனது அழகிய உதடுகளில் புன்முறுவல் ஒன்றை படரவிட்டாள். பிறகு தீப்சந்தை அங்கேயே இருக்கும்படி சைகை செய்துவிட்டு வேகமாக படிகளில் இறங்கி நந்தவனத்துக்கு வந்தாள்.

அந்தப்புரப் பகுதியின் நந்தவனப் பெரும் கதவு திறக்கப்பட்டதும், அதன் மூலம் வெளிவந்த புஷ்பாவதி

வேகமாக நடந்து அவன் இருப்பிடத்தை அடைந்து "எதற்காக இங்கேயே நின்றுகொண்டு என்னைப் பார்க்கிறீர்கள்? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" என்று கேட்டாள். என்றாலும் அவனை சற்று அதிகமாக நெருங்கியே நின்றாள். அதனால் அவள் ஆடையின் நடுப்பகுதி அவனது ஆடையுடன் உராயவே உணர்ச்சி வசப்பட்ட தீப்சந்த் ஆடைக்கும் உயிர் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். அவள் கேட்ட கேள்விக்கு பதிலேதும் சொல்லாமல் அவள் முகத்தை கூர்ந்து நோக்கினான். வண்டு விழிகள் அவன் கூரிய விழிகளுடன் கலந்தன. சந்திரமுகம் திடீரென மென்மை பெற்று சிவக்கவும் செய்தது. நீரோட்டம் பெற்ற மாணிக்க உதடுகள் ஒருமுறை உட்புறமாக மடிந்து வெளியே வந்ததால் புதிதாக செம்பருத்தி மொட்டொன்று மலர்வது போன்ற பிரமையை ஏற்படுத்தின.

அப்பொழுது புஷ்பாவதி சற்று முன்னுக்கு நகர்ந்தாள். அவளுடைய பருத்த புஷ்ப தொடைகள், அந்த வீரனின் வலிய தொடைகளைத் தொடவே ஏதோ மின்னலின் வேகம் தனது உடலில் ஊடுருவது போன்ற பிரமையை அடைந்தான், தீப்சந்த்.

அவள் கேட்ட கேள்விக்கு அவன் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லும் நிலையிலும் அவன் இல்லை, மேற்கொண்டு கேள்வி கேட்கும் நிலையை அவளும் இழந்து நின்றாள் வாய்ச்சொற்கள் யாதும் பயனிலாத நிலை அது. ஆனால் உணர்ச்சிகள் இறைந்தே பேசின. உறுதியான வாள் பிடிக்கும் கை, சற்று முன்பு மகாவீரனை சலூம்பிராவையே பதம் பார்த்த அந்த இரும்புக் கை கூட அந்த அழகின் அருகாமையால் லேசாக நடுங்கியது.

அதை சமாளித்துக் கொள்ள, தீப்சந்த் இன்னொரு கையை கச்சையில் வைத்தான். அதன் விளைவாக

www.cleanindians.com



திடீரென சுயநிலை அடையவும் செய்தான். கச்சையில் இருந்த ஜெபமாலை அவன் கையில் உறுத்தவே பெண் மாயையில் இருந்து விடுபட்ட தீப்சந்த் "பெண்ணே! உன்னை யார் இங்கு வரச் சொன்னது?" என்று சற்று கடுமையான குரலில் விசாரித்தான். அது போலிக் கடுமையென்பதையும், துள்ளும் உணர்ச்சிகளை மறைக்கவே அவன் சூடாகப் பேசுகிறான் என்பதையும் புரிந்து கொண்ட புஷ்பாவதியும் "உங்களை யார் அண்ணாந்து என்னைப் பார்க்கச் சொன்னது?" என்று வினவினாள். "பெண்களை அண்ணாந்து பார்ப்பது யோக்கியத்தனமா?" என்றும் கேட்டாள்.

"அண்ணாந்து பார்த்தவுடன் பெண் ஓடிவருவது மட்டும் யோக்கியமோ?" என்று அவன் வினவினான்.

"நீங்கள் பேசுவது ஒழுங்காயில்லை."

"நீ பேசுவது மட்டும் என்ன ஒழுங்காம்!"

"என் ஒழுக்கத்தைப பற்றி யாரும் இதுவரை தவறு சொன்னதில்லை."

"என்னைப் பற்றியும் சொன்னதில்லை."

அதுவரையில் சாதாரணமாகப் பேசிவந்த தீப்சந்த் "நான் கிருஷ்ண பக்தன்" என்றான்.

"தெரிகிறது" என்றாள் புஷ்பாவதி. மெல்ல நகைக்கவும் செய்தாள்.

"என்ன தெரிகிறது?" என்று அவன் சூடாகக் கேட்டான்.

"நீங்கள் கிருஷ்ண பக்தனென்பது. கிருஷ்ணன் செய்த வேலையெல்லாம் நீங்களும் செய்கிறீர்கள்" என்றாள் புஷ்பாவதி.

"அபசாரம் அபசாரம் புஷ்பாவதி. கிருஷ்ண தத்துவத்தை நீ அறியமாட்டாய். அவன் லீலை ஒவ்வொன்

றிலும் தத்துவம் இருக்கிறது. ராதையுடன் அவன் நடத்தியது இகலோக லீலையல்ல'' என்றான் தீப்சந்த்.

''யமுனா நதிக்கரையில் குன்றுமணி மரங்களின் கீழ் அவன் செய்தது என்ன?''

இதை புஷ்பாவதி கேட்டதும் காதுகளைப் பொத்திக்கொண்ட தீப்சந்த் ''பெண்ணே வீணான பாவச் சொற்களைப் பேசி மீளா நரகத்துக்குப் போகாதே'' என்றவன் எதையோ நினைத்துக்கொண்டு சிறிது நேரம் திகைத்து நின்று'' அடடே! மறந்துவிட்டேனே'' என்றான் குரலிலும் அதிர்ச்சியைக் காட்டி.

புஷ்பாவதிக்கு அவன் திடீர் அதிர்ச்சியும் பேச்சும் சலனத்தை அளிக்கவே ''எதை மறந்துவிட்டீர்கள்?'' என்று கேட்டவள், ஒருவேளை அவன் சலூம்பிராவைக் கொன்று விட்டானோ என்று திகிலடைந்து ''நீங்கள் சலூம்பிராவை...'' என்று பேசினாள்.

அவள் மனப்போக்கை புரிந்துகொண்ட தீப்சந்த் ''சே! சே! சலூம்பிராவை நான் கொல்லவில்லை கொல்லவில்லையென்று சொல்லித்தானே சென்றேன்'' என்று கூறியவன் ''நான் பேசமுற்பட்டது வேறு விஷயம்'' என்று கூறினான்.

''என்னவோ?'' என்று வினவினாள் அவள்.

''அதோ அந்த மலர்ச்செடிகளின் மறைவுக்கு வா'' என்றான் தீப்சந்த்.

அவள் அச்சத்தின் வசப்பட்டாள். ''ஐயையோ அங்கு எதற்கு?'' என்று வினவினாள்.

''இது நான் பகிரங்கமாக செய்யும் அலுவல் அல்ல'' என்றான் தீப்சந்த்.

அவள் அச்சம் அதிகமாகவே ''என்ன உளறுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

www.cleanindians.com



''உளறவில்லை. வா'' என்று கூறி அவள் கையைப் பிடித்து இழுத்தான் தீப்சந்த்.

அவள் திமிறினாள் அவன் கையில் இருந்து விடுபட. ஆனால் அவன் இரும்புப் பிடியிலிருந்து அவளால் தப்ப முடியவில்லை. அவளை தரதரவென்று இழுத்துக்கொண்டு புஷ்பச் செடிகளின் மறைவுக்குச் சென்ற தீப்சந்த் அவள் கைக்கு விடுதலை அளித்து ''உனக்கு ஒரு பொருளைக் காட்டப்போகிறேன்'' என்றான்.

என்ன பொருள் என்று அவள் கேட்கவில்லை. மவுனமே சாதித்தாள். அவன் கச்சையிலிருந்து மெள்ள உச்சிப்பூவை எடுத்து அவள் கையில் திணித்து ''பெண்ணே! இதைப் பார்'' என்றான்.

புஷ்பாவதி அதைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாததால் ''இது என்னுடைய உச்சிப்பூ. உங்களுக்கு எங்கு கிடைத்தது?'' என்று வினவினாள்.

''நேற்று உன்னை தூக்கிச்செல்ல சந்தாலதர்கள் முயன்ற இடத்தில் கிடந்தது'' என்றான் தீப்சந்த்.

அதைக் கையில் வைத்துக் கொண்டபடி தரையில் உட்கார்ந்தாள் புஷ்பாவதி ''இப்படி நீங்களும் உட்காருங்கள்'' என்று தனது பக்கத்தில் இடத்தைக் காட்டினாள் அவனுக்கு. அவன் உட்கார்ந்தவுடன் சொன்னாள் ''வீரரே! நீங்கள் இதை எடுத்து வந்தது பிசகு. நீங்கள் இதை கண்ட இடத்திலேயே புதைத்திருக்க வேண்டும்'' என்று.

''ஏன்?''

''இதில் ஒரு சாபம் இருக்கிறது.''

''என்ன சாபம்?''

''இதை உடையவளால் நாடு இரண்டு படும் என்று எங்கள் குடும்ப சோதிடர் கூறினார்.''

''அப்படியானால் ஏன் குடும்பத்தில் வைத்திருந்தீர்கள்? உதயசாகர ஏரியில் எறிந்துவிடுவதுதானே.''

''அதற்கு மனம் வரவில்லை.''

''ஏனோ?''

''இது என் தாயாருடையது. என் தந்தை அதை விற்கவோ அழிக்கவோ விருப்பப்படவில்லை. எனக்குக் கொடுத்தார்.''

''நல்ல கதை.''

''என் தந்தையை தவறாக நினைக்கவேண்டாம் அவர் சோதிடத்தை நம்புவதில்லை. இந்த கல் எப்படி வாழ்க்கையை கெடுத்துவிடும்? நீ போட்டுக்கொள் என்று என் தலையில் அவரே சூட்டினார்? அடுத்த நாளே மோகினி வனம் வந்தேன். நடந்தது உங்களுக்குத் தெரியும்'' என்றாள்.

''அப்படியானால் இது என்னிடம் இருக்கட்டும்'' என்ற தீப்சந்த் ''இப்படி வா புஷ்பாவதி'' என்று அவள் கழுத்தை தன்னை நோக்கி வளைத்து அவள் தலைக் குழலில் முன்னுச்சியில் அந்த ஆபரணத்தை வைத்துப் பார்த்தான். ''உன் தலையில் இது மிக அழகாகயிருக்கிறது'' என்றும் சொன்னான்.

அவள் அவனை நிமிர்ந்து நோக்கினாள். அவள் உதடுகள் துடித்தன.

அந்த சமயத்தில் தீப்சந்துக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. துடித்த உதடுகளை அந்த பிரமசாரி தனது உதடுகளால் தீண்டினான். பிரமசரியத்துக்கு அந்த ஆபரணம் ஆபத்து விளைவித்துவிட்டதை புஷ்பாவதி புரிந்துகொண்டாள்.

விளைவு?

அவள் இதழ்கள் அவன் இதழ்களுடன் நன்றாகவே இழைந்தன.

## 12. அவன் சொன்ன காரணம்!

புஷ்பத்தைவிட மென்மையான புஷ்பாவதியி
இதழ்கள் தனது வலிய இதழ்களுடன் இழைந்துவிட
தனது உணர்ச்சிகளை பறக்கவிட்ட அந்த கட்டை பிர
சாரி சிறிது நேரம் பெரும் சங்கடத்துக்குள்ளான
இதழ்கள் இழைந்த வேகத்தில், அவள் பாவாடையா
மறைக்கப்பட்ட பருத்த தொடைகளும் அவன்மீது அழு
திய நிலையில் அவன் பிரமசரியம் காற்றில் பறந்துகொ
டிருந்தது. அதன் விளைவாக ஜெபமாலையைப் பிடி
வேண்டிய அவன் கை அவள் இடையில் தவழ்ந்து அவ
மலர் உடலை தன்னை நோக்கி இழுத்தது.

அந்த சமயத்தில் மலர் போல் தோற்றமளித்த அவ
உடல் கடினப்பட்டதாலும் வேகமாக நெருங்கி
தாலும் அந்த வலிமையும் எத்தனை இன்
அலைகளை தனது உடலில் பாய்ச்சுகின்றன என என்
வியந்தான். அந்த வியப்பு அதே நிலையில் இருந்திரு
தால் தீப்சந்தின் வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்
ருக்கும். ஆனால் அவளை சூழ்ந்துகொள்ள எழுந்
இன்னொரு கையில் அவன் வைத்திருந்த அந்த சிறு உச்சி
பூ சிறிது உறுத்தவே, எழுந்த கையை அவன் கீழே போ
டான். அவள் இடையை வளைத்த கையையும் எடுத்து
கொண்டான். அவளிடம் இருந்து சற்று விலகியும் நி
றான்.

அவன் திடீர் மாற்றத்தைக் கண்ட அவள், அவ
கன்னத்துடன் தனது கன்னத்தை இழைத்து ''ஏன்? என்
வந்துவிட்டது உங்களுக்கு?'' என்று அவன் காதுக்கருகி
உதடுகளை விரித்து விசாரித்தாள்.

''எதுவுமில்லை'' என்று அவன் பொய் சொன்னான்

''பொய் சொல்கிறீர்கள்'' என்று அவள் அவன் மீ
குற்றம் சாட்டினாள்.

www.cleanindians.com

அவன் சிந்தித்தான் ஒரு விநாடி. "இருக்கலாம் ஷ்பாவதி! சிலவேளைகளில் பொய்யும் அவசியமாகிறது" ன்று திடமாகவே பதில் சொன்னான்.

"அத்தகைய வேளைகளில் இது ஒன்று போலிருக் றது." அவள் குரலில் ஏளனம் இருந்தது.

"ஆமாம் புஷ்பாவதி."

"இந்த வேளைக்கு என்ன? இடமும் சுகம். நெறி வறச் கூடியவனுக்கு இதைவிட சிறந்த வேளையும் சிறந்த டமும் அமைவது கஷ்டம்."

அவள் அவன் கன்னத்திலிருந்து தனது கன்னத்தை டுத்து அவன் தோள்களில் தனது இரு கைகளையும் வத்து அவன் கண்களை கூர்ந்து நோக்கினாள். "இதில் நறி தவறுவதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்கவும் சய்தாள்.

அவனும் தனது கண்களை அவள் கண்களுடன் றவாடவிட்ட வண்ணம் "என்ன இல்லை? புஷ்பத்தின் மன்மையையும், வசந்தத்தின் உல்லாசத்தையும், தென்ற ன் குளுமையையும் தோற்கடிக்கும் பெண்ணொருத்தி ருகில் இருக்கிறாள். வானில் வெண்மதி இருக்கிறான். றைவுக்கு மரங்கள் இருக்கின்றன. ஒரு மனிதன் கெட்டுப் பாவதற்கு இவற்றைவிட வேறு சாதனம் தேவையா?" ன்று வினவினான்.

அவன் செய்த தோத்திரத்தாலும், சுட்டிக் காட்டிய பாயத்தாலும் அவள் சற்றே இதழ்களில் முறுவல் காண்ட வண்ணம் "வீரரே!" என்று மெதுவாக அழைத் ாள்.

"என்ன புஷ்பாவதி?" அவன் குரலில் கனிவு இருந்தது.

"காதல் குற்றமாகுமா?" என்று அவள் கேட்டாள். வள் குரலில் நெகிழ்ச்சி இருந்தது.

www.cleanindians.com



"முறையான காதல் குற்றமாகாது" என்று திப்சந்த்

"இது முறையற்றதா?"

"அப்படித்தான் தோன்றுகிறது."

"எப்படி முறையற்றதாகும்?"

"நாம் இருவரும் ரகசியமாக சந்தித்திருக்கிறோம்

"அதனால் என்ன?"

"திருட்டுத்தனம் எதிலும் உதவாது."

"காதல் பகிரங்கமாக நடக்குமா? உங்களுக்கு பு யிருக்கிறதா?"

"இல்லை. உன்னை கண்ட தினத்திலிருந்து புத்தி யாக வேலை செய்யவில்லை."

"விளையாடாதீர்கள்" என்று கடிந்துகொண்ட புஷ்பாவதி.

"புஷ்பாவதி! இத்தனை நேரம் நான் விளையா வில்லை என்று குற்றம் சாட்டினாய். இப்பொழுது வி யாடுவதாக குற்றம் சாட்டுகிறாய். முன்னுக்குப் ட முரணாக இருக்கிறதே விவகாரம்."

"முன்னுக்குப்பின் முரணாயிருப்பதுதான் கா இது புரியவில்லையா உங்களுக்கு?"

"இது என்ன? காதலைப் பற்றி எதுவுமே தெரியா யாரும் சொல்லிக்கொடுத்ததும் கிடையாது."

"சொல்லிக்கொடுக்க வேண்டிய கலையல்ல இ என்று கூறிய புஷ்பாவதி மீண்டும் அவனை நெரு அவன் மார்பு மீது சாய்ந்தாள்.

அவன் கைகளும் மெதுவாக அவளை சுற்றிச் செ றன. "உன் பெயர் புஷ்பாவதிதானே?" என்று அ காதில் குனிந்து கேட்டான்.

அவள் மார்பில் முகத்தைப் புரட்டியபடி அவள் C டாள் "அதிலென்ன சந்தேகம்?" என்று.

அவன் சற்று தலையைத் தூக்கி அவள் குழல்களை
கர்ந்தான். ''மேனகையா, ரம்பையா என்று சந்தேகம்
ந்தது'' என்ருன், அவள் குழலில் இருந்து வீசிய தைலத்
ன் நறுமணத்தை இழுத்து முகர்ந்து.

சொர்க்க நிலைக்குப் போயிற்று அவள் மனம். ''நான்
த்தனை அழகா?'' என்று வினவிய அவள் குரலில்
ந்துஷ்டி, வெட்கம் இரண்டுமே கலந்து ஒலித்தன.

''அவர்களைவிட அழகு.''

''புகழ்ச்சி அதிகமாயிருக்கிறது.''

''புகழவில்லை. உண்மையைச் சொல்கிறேன். அவர்
ன் மனோபலமற்ற விசுவாமித்திரன் தவத்தை......''

''கெடுத்தார்கள் என்று சொல்வதுதானே? ஏன்
ழுங்குகிறீர்கள் சொற்களை'' என்று அவள் சீறினுள்.

மனோபலமற்ற தவசியை ஒருத்தி வசப்படுத்தினுள்,
ற்ருெருத்தி அவருக்கு கோபமூட்டினுள். ஆனுல்
னுபலமுள்ள என்னையே நீ ஆட்டி விட்டாய்'' என்ற
பசந்த் ''புஷ்பாவதி! இன்றுவரை எனது உணர்ச்சிகள்
ந்த பெண்ணைப் பார்த்தும் அசையவில்லை. ஆனுல்
ற்றவர்கள் சாதிக்க முடியாததை நீ சாதித்து விட்டாய்.
நப்பினும் உன் தூய்மையை கெடுக்க நான் விரும்ப
லை. திருமணமான பின்பு கவுரவமாக உன்னை ஏற்
ன்'' என்ற தீப்சந்த் தனது கைகளை நீக்கினுன் அவள்
டலில் இருந்து.

அவள் மனம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.
ன் இப்பொழுது திருமணத்துக்கு என்ன தடை?''
ன்று அவள் முணுமுணுத்தாள் அவன் மார்பில் கிடந்த
.

''இங்கா? இப்பொழுதா?'' அவன் குரலில் பெரும்
பப்பு இருந்தது.

''ஆம். இங்கேயே. இப்பொழுதே'' என்ருள்
ஷ்பாவதி.

www.cleanindians.com



''அது எப்படி சாத்தியம்?''

''ஏன் சாத்தியமில்லை? நீங்கள் க்ஷத்திரியர்தானே?''

''ஆம்.''

''நானும் க்ஷத்திரியப் பெண்தான்.''

''அது எனக்குத் தெரியும். உன் உச்சிப்பூவே அதை நிருபிக்கிறது.''

''க்ஷத்திரியர்களுக்கு காந்தருவம் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது'' என்று மெதுவாகச் சொன்னுள்.

தீப்சந்த் இந்த விவாதத்தில் தன்னை திடப்படுத்திக் கொண்டு ''பெண்ணே! உன் தாய் தந்தை யார் என்று எனக்குத் தெரியாது அவர்கள் அனுமதியின்றி நான் உன்னைத் தொடுவதும் தவறு. பழய தர்மங்கள் இப்பொழுது நாட்டில் இல்லை. ஆகையால் நமக்கு சௌகரியமான விஷயங்களுக்கு பழய சட்டதிட்டங்களை உபயோகிக்கிறேம். காந்தர்வம் நமக்கு இந்த சமயத்துக்கு உபயோகமானது. பின்னுல் தீவிர விரோதங்களில் கொண்டு விடும்'' என்ருன் தீப்சந்த். ''தவிர நான் அதிக நாள் உயிருடனிருப்பேன் என்று சொல்லவும் முடியாது'' என்றும் சொன்னுன்.

அவள் முகத்தில் திகில் தெரிந்தது. ''என்ன சொல்கிறீர்கள்? ஏன் இப்படி சகுனக்குறைவாகப் பேசுகிறீர்கள்'' என்று கேட்டாள் திகிலுடன்.

''புஷ்பாவதி! ராஜபுதனத்துக்கு நான் இந்த வாளை அர்ப்பணித்திருக்கிறேன். இந்த நாடு சீர்படும் வரை, அல்லது அடியோடு சீர்படாது என்ற நிலைமை வரும் வரை, எந்தப் பெண்ணை நான் மணந்தாலும் அவள் வாழ்க்கை பயனற்றுப் போகும். அதற்கு உடந்தையாயிருக்க நான் விரும்பவில்லை'' என்று திட்டமாகச் சொல்லிவிட்டு ''வா அந்தப்புரத்துக்குப் போவோம்'' என்று அவள் கையைப் பிடித்தான்.

அவள் கையை உதறி விடுவித்துக் கொண்டாள். "நான் வரவில்லை. நீங்கள் போங்கள்" என்றாள் கோபத்துடன்.

"புஷ்பாவதி! நான் மணப்பதானால் உன்னைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன். இது சத்தியம். இப்படி வா" என்று அவள் கையைப் பிடித்து இழுத்தான். அவள் அருகில் வந்ததும் தனது கச்சையில் இருந்த நவரத்தின ஜெபமாலையை எடுத்து அவள் கழுத்தில் போட்டு "இது உன்னை எந்த நிலையிலும் காப்பாற்றும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இதைக் கழற்றாதே" என்று கூறினான்.

அந்த மாலையின் ஸ்பரிசம் அவனே அவளை ஸ்பரிசிப்பது போலிருந்தது. மார்பில் அது புரண்டது, அவனே புரள்வது போலிருந்தது அவளுக்கு. அந்த உணர்ச்சியில் அவள் ஈடுபட்டிருக்கையில் அவன் கேட்டான் "புஷ்பாவதி! நீ சக்தாவதர்களைச் சேர்ந்தவள் என்பதைப் புரிந்து கொண்டேன், சக்தாவதர்கள் உன்னைத் தூக்க முயன்றதில் இருந்து ஆனால் நீ யார்? எந்த ஊர்? உன் தந்தையின் பெயர் என்ன?" என்று விசாரித்தான்.

முதலில் அவள் ஊரைச் சொன்னாள். எனது ஊர் "நகராமக்ரா?" என்று.

அதைக்கேட்ட தீப்சந்த் பிரமைபிடித்து அதிர்ச்சியின் எல்லையை அடைந்து நின்றான். "நகராமக்ராவா!" என்று மீண்டும் கேட்டான்.

"ஆம்."

"அப்படியானால் நீ?"

"அதன் தலைவரின் மகள்."

இதைக்கேட்ட தீப்சந்த் பெரிதாக நகைத்தான். "நமது திருமணம் நடந்த மாதிரிதான்" என்றான் நகைப்பின் ஊடே.

"ஏன்?" ஏதும் புரியாமல் கேட்டாள் புஷ்பாவதி.



"உன் தந்தை என்னைக் கொன்று விடுவதாக சபதம் செய்திருக்கிறார்."

இதை சர்வசாதாரணமாகச் சொன்னான் தீப்சந்த்.

## 13. பொறுமை எனும் முள் செடி!

தங்கள் இருவருக்கும் திருமணம் நடக்கமுடியாது என்பதற்கு தீப்சந்த் சொன்ன காரணத்தைக் கேட்டதும் புஷ்பாவதி அதிர்ச்சியுற்று பல விநாடிகள் நின்றுவிட்டாள்.

"என் தந்தை உங்களை எதற்காகக் கொன்றுவிட சபதம் செய்தார்? நீங்கள் அப்படி என்ன தவறு செய்தீர்கள்?" என்றும் விசாரித்தாள் அதிர்ச்சியின் ஊடே.

அவன் முகத்தை ஒருமுறை ஏறெடுத்தும் நோக்கி "சிறிதும் களங்கமற்ற இந்த வீர முகத்துக்கு உடையவர் எந்த அபராதத்தைச் செய்திருக்க முடியும்?" என்று உள்ளுக்குள்ளும் கேட்டுக்கொண்டாள்.

தீப்சந்தின் கண்கள் அவளை ஊடுருவி அளவெடுத்தன. அவள் முகத்தில முதலில் விரிந்த அதிர்ச்சியையும் கவனித்தான்; பிறகு தனது முகத்தை ஆராய்ந்து உள்ளுக்குள் வினா எழுப்பிக்கொண்டு குழம்பிய பார்வையையும் கவனித்தான். இவற்றின் விளைவாக அவளிடம் அனுதாபம் கொண்டு "பெண்ணே! நான் தவறு எதுவும் செய்யவில்லை. ஆனால் ராஜபுதனம் இன்றிருக்கும் நிலையில் தவறு எது, சரி எது என்று நிர்ணயிக்கவும் முடியாது. மேவார் ராணாவை பாதுகாக்க வேண்டிய சந்தாவதர்களும் சக்தாவதர்களும் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ள

தயாராயிருக்கிறார்கள். இதனால் ராஜபுதனம் அழிந்துவிடும் என்ற கவலை அவர்களுக்குக் கிடையாது. கடந்த காலத்தில் ராணாவுக்கு பாதகமாக நடப்பது ராஜதுரோகம் என்று கருதப்பட்டது. ராஜதுரோகம் செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இப்பொழுது ராஜதுரோகம் நாட்டு துரோகம் அனைத்தும் சாதாரணமாகிவிட்டது'' என்றான் தீப்சந்த்.

தான் கேட்ட கேள்விக்கு நேரிடையாக பதில் சொல்லாமல் தீப்சந்த் சுற்றிவளைத்துப் பேசுவதைக் கண்ட புஷ்பாவதி சீற்றத்துக்குள்ளானாள். ''நான் இந்த நாட்டு சரித்திரத்தைப்பற்றி கேட்கவில்லை. ராணாவின் நிலைபற்றியும் கேட்கவில்லை. ராஜதுரோக தத்துவங்களை பாடம் கேட்கவும் இங்கு வரவில்லை'' என்று சூடாகப் பேசினாள்.

www.cleanindians.com

தீப்சந்த் மெதுவாக அவள் தோளைப்பற்றி தன்னை நோக்கி இழுத்து ''வேறு என்ன பாடம் கேட்க வந்தாய்?'' என்று வினவினான்.

சாதாரண மனநிலையில் இருந்தால் புஷ்பாவதி அவன் கேள்விக்கு சரியான பதில் கொடுத்திருப்பாள், அல்லது பதிலுக்கு பதில் அவன்மீது சாய்ந்து செயல்பட்டு இருப்பாள். ஆனால் திகிலுற்ற நிலையில் அவள் மனம் அத்தகைய விளையாட்டு எதற்கும் இடங்கொடுக்காததால் ''நேரிடையாகப் பேசுங்கள். நான் கேட்ட கேள்விக்கு திட்டமான பதில் வரட்டும். உங்களுக்கும் என் தந்தைக்கும் விரோதம் வரக் காரணம் என்ன?'' என்று வினவிய அவள் குரலில் சற்று கடுமையும் இருந்தது.

அப்பொழுதும் உடனடியாக பதில் சொல்லவில்லை தீப்சந்த். தனது கச்சையில் இருந்த உச்சிப்பூவை எடுத்து ஆராய்ந்தான் ஒருமுறை. ''அப்பா! இதன் மகிமை பெரிது. நாம் சந்தித்த சில விநாடிகளுக்குள்ளாகவே நம்மைப் பிரித்துவிடும் போலிருக்கிறது.'' என்று சொன்னான் துயரம் தோய்ந்த குரலில். ''அந்தக் கதையை சொல்



கிறேன் கேள். பிறகு நாம் மணக்கமுடியுமா என்பதை நீயே முடிவு செய்'' என்ற தீப்சந்த் ''முதலில் ஒரு கேள்விக்கு பதில் சொல். நாகராமக்ரா இங்கிருந்து 16 மைல் இருக்கிறது. அங்கிருந்து நீ எதற்காக தனித்து மோகினிவனம் வந்தாய்?'' என்று வினவினான்.

புஷ்பாவதி சிறிதும் சிந்திக்காமலே பதில் சொன்னாள் ''சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்'' என்று.

''பரவாயில்லை சொல்'' என்றான் தீப்சந்த்.

''மகாராணாவைப் பார்க்க வந்தேன்'' என்றாள் புஷ்பாவதி தலைகுனிந்து

இதைக் கேட்டதும் தீப்சந்துக்கு தூக்கிவாரிப் போட்டது. ''என்ன! மகாராணாவைப் பார்க்க வந்தாயா?'' என்று வியப்புடன் வினவினான்.

''ஆம்.''

''உனது தந்தையே அனுப்பினாரா?''

''ஆம்.''

''மகாராணா இப்பொழுது குழந்தையில்லை.''

''தெரியும் எனக்கு.''

''வாலிபத்தை எட்டிவிட்டார்.''

''ஆமாம்.''

''அவரிடம் நீ வருவதாகத் தெரிந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?''

''மற்றவர்கள் நினைப்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.''

இதைக் கேட்டதும் தீப்சந்தின் உள்ளம் பெரிய எரிமலையாகிக் கொண்டிருந்தது. இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் ''மகாராணாவை உனக்கு முன்பே தெரியுமா?'' என்று வினவினான்.

புஷ்பாவதி அவன் கேள்விகளின் போக்கை, மனத்தின் நிலையை, சொற்களில் ஒலித்த சந்தேகத்தை, கவனிக்கவே செய்தாள். "ஆண்களுக்கு எடுத்ததெற்கெல்லாம் சந்தேகந்தான்" என்று உள்ளூர சொல்லிக் கொண்டாள். அப்படி அவன் சந்தேகப்பட்டது உள்ளூர மகிழ்ச்சியையே அளித்தது. சந்தேகம் காதலில் முளைக்கும் முள்செடி என்பதை உணர்ந்ததால் உள்ளூர இன்பமடைந்த புஷ்பாவதி "தெரியும்" என்று கூறினாள்.

சந்தேகத்தின் உச்சகட்டத்தை அடைந்த தீப்சந்த் "எப்படித் தெரியும்? எங்கு சந்தித்திருக்கிறாய்?" என்று வினவினான் சீற்றத்தை குரலில் அள்ளித்தெளித்து.

புஷ்பாவதி அவன் சந்தேகத்தை மேலும் கிளற இஷ்டப்பட்டு "நகராமக்ராவிலேயே சந்தித்திருக்கிறேன்" என்றாள்.

"ஓகோ! அங்கேயே சந்தித்திருக்கிறாயா?" என்று இகழ்ச்சியுடன் வினவினான் தீப்சந்த்.

www.cleanindians.com

"அங்குதான்" என்று திட்டமாகச் சொன்னாள்.

"அங்கு சிங்கம் அடிக்கடி வருமே" என்று தீப்சந்த் அதிக இகழ்ச்சியுடன் கேட்டான்.

"அங்கு புலிகள்தான் அதிகம். நாகராமக்ரா என்றால் புலிமலை அல்லவா?"

"புலி இருக்கிற மலைக்காட்டுக்கு சிங்கம் வரக்கூடாது என்ற விதி இருக்கிறதா?"

"சிங்கமா! என்ன உளறுகிறீர்கள்?"

"பீமசிம்மம், அதுதான் பீம்சிங், அடிக்கடி வருகிறது அல்லவா?"

அவன் கொண்டு செல்லும் பாணியை உணர்ந்த புஷ்பாவதிக்கு மெள்ள திகில் உண்டாயிற்று. "நான் அதிக சாமர்த்தியத்தை காட்டிவிட்டேனோ இந்த விளையாட்டில்?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.



ஆகவே சற்று நிதானப்பட்டு எச்சரிக்கையுடன் பேச முற்பட்டாள். "தீப்சந்த்! கண்டபடி பேசாதீர்கள். நாகராமக்ராவில் மகாராணா வேட்டைக்காக விடுதி ஒன்றை அமைத்திருக்கிறார். அங்கு எப்படி வராமல் இருப்பார்?" என்று வினவினாள்.

"அந்த விடுதியில் நடப்பது புலிவேட்டையல்ல என்று கேள்வி. கேள்வியென்ன எனக்கே தெரியும். அங்கு ஒரு அழகிய ஆடு வருகிறது. அதை சிங்கம் வேட்டையாடினாலும் அது சாவதில்லை. அந்த வேட்டையில் ஆடும் ஒத்துழைக்கிறது..." பேச்சை முடிக்கவில்லை தீப்சந்த். அரைகுறைப் பேச்சே அனர்த்தத்தை விளைவிப்பதாயிருந்தது. அத்துடன் நிற்கவில்லை தீப்சந்த் "நீயும் அங்கு தான் ராணாவை சந்திப்பாயோ?" என்று ஒரு கணையையும் தொடுத்தான்.

"இந்தக் கேள்விக்கு நானே உங்களைக் கொன்றுவிடுவேன்" என்றாள் புஷ்பாவதி. சீற்றத்தால் காலையும் தரையில் உதைத்தாள்.

"தகப்பன் எப்படி, அப்படி மகள்" என்று சொன்னான் தீப்சந்த்

"என்ன உளறுகிறீர்கள்?" அத்துமீறிய சினத்துடன் எழுந்தது புஷ்பாவதியின் கேள்வி.

என்ன காரணத்தாலோ திடீரென நிதானத்துக்கு வந்துவிட்டான் தீப்சந்த். "உளரவில்லை புஷ்பாவதி! நீ என்ன காரணத்திற்காக என்னைக் கொல்வதாகச் சொல்லியிருக்கிறாயோ அதே காரணத்திற்காகத் தான் உன் தந்தையும் என்னை கொல்ல சபதம் செய்திருக்கிறார். சென்ற ஆண்டு நான் புலிமலைக்கு வந்திருந்தேன். இரவு நேரம். தூரத்தில் இருந்து விளக்கொளி பார்த்து வேட்டை விடுதிக்குச் சென்றேன். அங்கு ஒரு சாளரத்தில் விளக்கு வெளிச்சத்தில் இந்த மகாராணா நின்றிருந்தார். அவரை நோக்கி தலைமுக்காடிட்ட ஒரு பெண் வந்தாள். மகாராணா

அவள் முக்காட்டை நீக்கினார். அதற்குள்ளிருந்த முகம் மிக அழகாயிருந்தது. அடுத்த விநாடி அவளை இறுகத் தழுவினார் மகாராணா. நான் அதிர்ச்சியுற்று நின்றேன். திடீரென என் கழுத்தில் ஒரு கை விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். உன் தந்தை நின்றிருந்தார். "யார் நீ?" என்று வினவினார்.

நான் பெயரைச் சொன்னேன்.

"நீ இன்று பார்த்தது யாரும் அறியாத ரகசியம். இது வெளியே வந்தால் மேவார் சிதைந்துவிடும். ஆகையால் என்னுடன் வா" என்றார் உன் தந்தை.

"எதற்கு?" என்றேன்.

"இங்கு அனுமதி பெறாமல் வருவதற்கு சிறை தண்டனை உண்டு. முதலில் வா. சிறையில் பேசிக்கொள்வோம்" என்றார்.

www.cleanindians.com

நான் செல்ல மறுத்தேன். அவர் கத்தியை ஓங்கினார். நான் அதைப் பிடுங்கி தூர எறிந்தேன். அவர் கையை முறுக்கி கீழே தள்ளினேன்.

"அடுத்த முறை இங்கு வா! உன்னைக் கொன்று போடுகிறேன். என் வாளின் மேல் ஆணை" என்றார்.

"நான் அங்கு நிற்கவில்லை. விரைந்து சென்று விட்டேன். அந்தப் பெண்ணும் நல்ல அழகி. ஆனால் ராணா வண்டு என்று கேள்வி. மலருக்கு மலர் தாவும் பழக்கம் உண்டாம். நீயோ அவரை சந்தித்திருப்பதாகச் சொல்கிறாய், நாகராமக்ராவில். உன் தந்தை இப்பொழுது மகாராணாவிடம் உன்னையே அனுப்புகிறார். காரணம் எனக்குத் தெரியவில்லை" என்று பழய கதையை முடித்து புதிய கதைக்கும் வித்திட்டான் தீப்சந்த்.

புஷ்பாவதியின் மனம் எரிமலையாயிற்று. "உங்கள் மட்ட புத்தியைக் காட்டாதீர்கள். நான் வந்த



காரணத்தை சலூம்பிராவிடம் கேளுங்கள். மகா வீரனான அவர் ஏன் என்னை தூக்கிச் செல்ல முயன்றார் என்று விசாரியுங்கள்" என்றாள்.

தீப்சந்தின் பொறுமை எல்லை மீறியதால் அவன் நிதானத்தை இழந்து "சலூம்பிராவைக் கேட்பானேன்? என்னால் ஊகிக்க முடியாதா என்ன?" என்று வினவினான்.

அடுத்த விநாடி அவனே திகைக்கும் நிகழ்ச்சி ஏற்பட்டது.

புஷ்பாவதி தனது வலது கையை தூக்கி பளீரென அறைந்துவிட்டாள் தீப்சந்தின் கன்னத்தில். நிசப்தமான அந்த சூழ்நிலையில் அவளது அறையின் ஒலி நந்தவனம் எங்கும் ஊடுருவிச் சென்றது. அந்த அறையைவிட பயங்கர நிகழ்ச்சியொன்று அடுத்து தொடர்ந்தது மின்னல் வேகத்தில்.

## 14. நில மோகினி!

புஷ்பாவதி தன் கன்னத்தில் திடீரென அறைந்துவிட்டதால் மிதமிஞ்சிய சினத்துக்குள்ளான தீப்சந்த் தனது சுய நிலையை, எதையும் சிந்திக்கும் தன்மையை, அடியோடு இழந்தான். முறை தவறி நடக்கவும் முற்பட்டு, அவளை திடீரென தனது கைகளில் தூக்கிக் கொண்டு அவள் இதழ்களைக் கடித்து ரவிக்கையின் பட்டுக் கயிறுகளை அறுத்தெறிந்தான். மார்பை மூடிய கயிறுகள் அறுபட்டதால் சேலையை நீக்கி தெரிந்த ஒரு பக்கத்து மார்பின் எழுச்சியை வெறியுடன் நோக்கினான். பிறகு அவளை தரையில் கிடத்தி பக்கத்தில் மண்டியிட்டும் உட்கார்ந்து குரூரமான பார்வையொன்றை அவள் மீது செலுத்தினான்.

இத்தனைக்கும் அவள் எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல், திமிருமல், அவனிடம் இருந்து விடுபட எந்த முயற்சியையும் செய்யாமல் செயலற்று தரையில் கிடந்தாள். அவள் கண்களில் அதுவரை இருந்த காமம் அகன்று வெறுப்பு பெரிதும் நிலவியதை கண்ட தீப்சந்த், சரேலென தனது துர்ச்செயலை நிறுத்திக் கொண்டு "என்ன விழிக்கிறுய்? ஏன் செயலற்று கிடக்கிறுய்? உன்னைக் காத்துக் கொள்ள உனக்கு திராணியில்லை?" என்று வினவிஞன்.

அவள் மேலும் வெறுப்புமிகுந்த பார்வையை அவன் மீது செலுத்தி "காத்துக் கொள்ள திராணியிருக்கிறது. ஆனல், அவசியம் இல்லை" என்று சொன்னுள் வெறுப்பு குரலிலும் துலங்க.

தீப்சந்துக்கு எதும் விளங்கவில்லை. புஷ்பாவதி தன்னைக் காத்துக்கொள்ளும் சக்தியுள்ளவள் என்பதை அவள் சந்தாவதர்களிடம் இருந்து திமிறிய போதும், சண்டையிட்ட போதும் மோகினிவனத்தில் அவனே பார்த்திருந்தான். அப்பேர்ப்பட்ட பெண் இப்பொழுது எதற்காக இப்படி செயலற்றிருக்கிறுள்? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் அந்த வாலிப வீரன் வெளிப்படையாகவும் வினவிஞன் "ஏன் அவசியம் இல்லை?" என்று.

அவள் மல்லாந்து கிடந்தபடியே கேட்டாள் "நீங்கள் ராஜபுத்திரர் தானே?" என்று.

தீப்சந்தின் சினம் மேலும் அதிகரிக்கவே "ஏன்? அதிலும் சந்தேகமா?" என்று வினவிஞன்.

"இந்த இரவின் ஆரம்பம் வரை சந்தேகம் இல்லை..."

"இப்பொழுது?"

"சிறிது சந்தேகந்தான்."

"ஏன்?"

"உங்கள் செயல் ஒரு ராஜபுத்திரன் செயலாக இல்லை. ஒரு பெண்ணை பலவந்தமாக ஆடையைக் கிழித்து அவள்

www.cleanindians.com



மானத்தை திருட முயற்சி செய்பவன் எப்படி ராஜபுத்திரஞக இருக்க முடியும்?" அவள் மிகுந்த வெறுப்புடன் கேட்டாள்.

அவன் அதற்கு பதில் சொல்ல இயலாமல் மண்டியிட்ட வண்ணமே உட்கார்ந்திருந்தான். பிறகு கிழிந்த ரவிக்கையையும் கலைந்த மேலாடையையும் சீர்செய்து அவள் அழகுகளை மறைக்கவும் முயன்றுன்.

அவன் செயல்களைக் கண்ட புஷ்பாவதி லேசாக நகைத்தாள். "வீரரே! உங்களை ராஜபுதனத்தில் மகாபுத்திசாலி என்று எல்லோரும் பேசிக்கொள்கிறுர்கள். அந்த புத்தி எங்கே போய்விட்டது இப்பொழுது?" என்று நகைப்பின் ஊடே கேட்டாள்.

தீப்சந்த் மவுனமே சாதித்தான். பொறுமையின் காரணமாக தான் செய்யத் துவங்கிய அக்கிரமம் அவனுக்கு பெரும் அவமானத்தை அளிக்கவே அவன் பேசும் சக்தியை அறவே இழந்தான்.

புஷ்பாவதி பேசத் தொடங்கிஞள். "உங்கள் செய்கையை நான் தடுக்காததற்குக் காரணம் தெரியுமா?" என்று வினவிஞள்.

"தெரியவில்லை" தீனமான குரலில் பேசிஞன் தீப்சந்த்.

"வீரரே! ராஜபுத்திரப் பெண்மணிகள் ஆயுளில் யாராவது ஒரு புருஷனிடந்தான் மனதைப் பறிகொடுப்பார்கள். அப்படியிருக்க என்னைத் தொட உங்களை அனுமதித்த பிறகு, உங்களை நாடி நான் அந்தப்புரத்தில் இருந்து இங்கு ஓடிவந்த பிறகு, இந்த மரக்கூட்டத்தின் மறைவில் தங்கிய பிறகு, இன்னொரு புருஷனை நான் மனதில் நினைக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? அது மட்டும் அல்ல; உங்கள் காதலையும் அதன் வேகத்தையுங் கூட சற்று முன்பு நீங்கள் என்னை உணரவைத்து விட்டீர்கள். அந்த காதல் உங்கள் கண்களை மறைத்துவிட்டது

சிந்தனையை மழுங்க வைத்துவிட்டது. இல்லாவிட்டால் ராணுவுக்கும் எனக்கும் முடிச்சுப் போட்டு விபரீத நிலையை ஏற்படுத்துவீர்களா? உங்கள் பொறுமையே உங்கள் சினத்துக்கும் செய்கைக்கும் காரணம் என்பதால் உங்களை அறைந்ததோடு விட்டேன். இல்லாவிட்டால் நான் முதலில் சொன்னபடி உங்களைக் கொலையே செய்திருப்பேன்'' என்று விளக்கமாகப் பேசிய புஷ்பாவதி தனது கையொன்றை உயர்த்தி தான் அறைந்த அவன் கன்னத்தை மெதுவாகத் தடவினாள்.

தீப்சந்த் பிரமை பிடித்து உட்கார்ந்த வண்ணமே இருந்தான். அவன் சிந்தனை மெதுவாக சரியான வழியில் செயல்படவும் தொடங்கிற்று. புஷ்பாவதியை ராணுவுக்கு முன்பே தெரிந்திருந்தால் தான் அவளை தூக்கி வந்து அவர் பள்ளியறைத் தரையில் போட்டதுமே ராணு திகைப்படைந்திருப்பாரே. ராஜமாதாவுக்குக்கூட அவள் இன்னாரென்பது தெரிந்திருக்க வேண்டுமே. இருவரும் அவளை இன்னாரென்று புரியாமல் தன்னைத் தானே விசாரித்தார்கள் என்று கோர்வையாக நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான். அப்பொழுதுதான் தனது காரணமற்ற சீற்றம் அவனுக்குப் புரிந்தது. ஆகவே, அவள் மார்பை நன்றாகவே மூடியதன்றி, அறுத்த பட்டுக் கயிறுகளைக் கொண்டு, ரவிக்கையை மீண்டும் பிணைத்தான்.

அவன் பிணைத்த போது, அவள் தன் கையொன்றால் அவன் கையை பற்றி ''வேண்டாம். அவை பிரிந்தபடியே இருக்கட்டும்'' என்றாள்.

அவன் கண்கள் வெட்கத்துடன் அவளுடைய கண்களை சந்தித்தன. வெட்கப்படவேண்டிய அவள் கண்கள் அவனுடைய கண்களை தைரியத்துடனே சந்தித்தன. ''நீங்கள் தவறு ஏதும் செய்யவில்லை. உங்களை துன்புறுத்திக் கொள்ளாதீர்கள்'' என்று கூறி, அவன் இரு கன்னங்களையும் தனது கைகளால் பிடித்தாள் புஷ்பாவதி.

www.cleanindians.com



புஷ்பாவதியின் பட்டுக் கைகள் தனது கன்னங்களைத் தடவியதால் அவள் ரவிக்கை பட்டுக் கயிறுகளை தான் அறுத்தது சரியா என்று உள்ளூர கேட்டுக் கொண்ட தீப்சந்த், அவள் உதட்டில் லேசாக ரத்தம் துளிர்ப்பதைக் கண்டு ''புஷ்பாவதி! நான் ஒரு முரடன், மடையன் என்று கூறினான் அவள் உதட்டில் தனது பல்பட்ட இடத்தை லேசாக விரலால் துடைத்தான். பிறகு முறை அதுவல்ல என்பதைப் புரிந்துகொண்டு, மண்டியிட்ட நிலையில் சற்றே குனிந்து, அவள் இதழ்களை சுவைத்து துளிர்த்த ரத்தத்தை தான் ஏற்றுக்கொண்டான்.

அந்த ரத்த வைத்தியம் அவளுக்கு பேரின்பமாக இருந்தது. அவன் இதழ்களில் அழுத்திய அவள் இதழ்கள் அங்கேயே புரண்டுகொண்டும் திரும்பத் திரும்ப சுவைத்துக் கொண்டும் இருந்தன.

புஷ்பாவதி உணர்ச்சி மிகுதியாலும் மகிழ்ச்சி வெள்ளத்தாலும் மெதுவாக தனது நாக்கை அவனுடைய இதழ்களுக்குள் செலுத்தி அவன் நாக்கைத் தொடச் செய்தாள். சொர்க்கம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்று தீர்மானித்த தீப்சந்த், அவள் இதழ்த்தேனை பருகிக் கொண்டு மலரில் அமர்ந்து தேனை உறிஞ்சி மீளாத வண்டின் நிலையில் இருந்தான்.

இருவரும் சுயநிலை தவறிய நேரம். பிரிந்த அவளது பட்டுக் கயிறுகளை தீப்சந்த் தன் கையால் நீக்கினான். இதழ்களில் இருந்து மீண்டும் அவள் மார்பை நோக்கினான். பிறகு பெருமூச்சொன்று விட்டு, அவள் மார்பு மீது முகத்தைப் பொருத்தி அவன் நீண்ட நேரம் செயலற்று கிடந்தான். அந்த இன்பத்திலும் கூட அவனது உயரிய குணங்கள் மேம்பட்டு நின்றதால் மெள்ள எழுந்த தீப்சந்த், அவள் அழகிடங்களை மீண்டும் மறைத்தான் சேலை கொண்டு. பிறகு சொன்னான். ''எழுந்திரு புஷ்பாவதி'' என்று.

அவன் பேச்சில் அதிகாரம் இருந்ததைக் கவனித்த புஷ்பாவதி, அவன் தன்னிடம் சொந்தம் கொண்டாடுகிறான், தன்னை அவன் தனது சொத்தாக மதிக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டதால், முகத்தில் மகிழ்ச்சி சாயைப் படர விட்டுக்கொண்டாள். எழுந்திருக்காமல் நிலத்தில் படுத்தபடி கிடந்தாள். அவளை கூர்ந்து நோக்கிய தீப்சந்த் பிரமை பிடித்து நின்றான்.

நிலமோகினி என தரையில் கிடந்தாள் புஷ்பாவதி. அவள் கால்களை லேசாக மடித்திருந்ததால் அவள் பக்க அழகுகள் தங்கள் பரிமாணத்தைக் காட்டின. அவள் செவ்விய உதடுகளில் புன்னகை படர்ந்திருந்தது. முகமலர் மிகவும் மென்மையடைந்து, அந்த ஆடவனை வெற்றி கொண்டதால் ஏற்பட்ட பெருமையை மிகவும் பெரிதுபடுத்திக் காட்டியது. அவள் லேசாக ஒருக்களித்ததால் அவள் ஒருபுற மார்பு கட்டாந்தரையில் அழுந்திக் கிடந்தது. அந்த மலர் உடல் கட்டாந்தரையின் சிறு கற்களால் என்ன அவதிப்படுமோ என்று நினைத்த தீப்சந்த் குனிந்து மெள்ள அவளை இருகைகளாலும் தூக்கி நிறுத்தி அவள் சேலையை சரிசெய்து குழல்களையும் கையால் சரிப்படுத்தினான்.

அவனது செய்கையைக் கண்ட அவள் மெதுவாக நகைத்து ''நான் செய்யவேண்டிய வேலையை எல்லாம் நீங்களே செய்கிறீர்களே'' என்றாள்.

''அவள் நகைப்பு பேச்சு, இரண்டிலுமே மதுரம் இருந்ததைக் கவனித்த தீப்சந்த் ''தவறு புஷ்பாவ்தி. இது நான் செய்ய வேண்டியதுதான். குற்றம் புரிந்தவன் தானே அதைத் தவிர்க்க வேண்டும்'' என்று கூறினான்.

''அது குற்றமா?'' என்று கேட்டாள் புஷ்பாவதி அவனை ஏறிட்டு நோக்கி.

''உன்னை அலங்கோலப் படுத்தியது குற்றமல்லவா?''

''இல்லை.''

www.cleanindians.com



''ஏன் இல்லை?''

''உங்கள் சொத்தை நீங்கள் எதைச் செய்தால் யார் கேட்க முடியும்?''

''எதைச் செய்தாலுமா?''

''ஆம்.''

''முறைகேடாக...?''

''நீங்கள் சம்பந்தப்பட்டவரை எதுவும் முறைகேடு அல்ல.''

''அது?''

''அதுவுந்தான்.''

இதற்குமேல் அவள் பேசவில்லை. அவன் மீது லேசாகச் சாய்ந்து ''நேரமாகிறது. நான் வருகிறேன்'' என்றாள்.

''நான்?'' என்று அவன் வினவினான்.

''நீங்கள் சிறிது நேரம் கழித்து வாருங்கள்'' என்றாள் அவள்.

''ஏன்?''

''நாம் இருவரும் ஒன்றாகச் சென்றால் சந்தேகப்படுவார்கள்.''

''அதனால் நமக்கென்ன?''

''உங்களுக்கு எதுவுமில்லை. நான் பெண். மகாராணி ஏதாவது சொல்வார்கள்.''

இப்படிக் கூறிய அவள் வேகமாக அந்த இடத்தை விட்டு நடந்தாள் அந்தப்புரத்தை நோக்கி.

தீப்சந்த் நின்ற இடத்திலேயே நின்று தீர்க்க சிந்தனையில் ஆழ்ந்தான். மறுநாள் இரவு அவன் சனூம்பிராவை சோம்ஜி இல்லத்தில் சந்திக்க வேண்டியிருந்ததையும் நினைத்தான். சற்று முன்பு ஏற்பட்ட நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தான். பிறகு வீரன் வாழ்க்கை நிலையில்லா வாழ்க்கை என்று நினைத்து பெருமூச்செறிந்து அந்தப்புரத்தை நோக்கி மெதுவாக நடக்கலானான்.

அவனுக்கு முன்பே அந்தப்புரப் படிகளில் ஏறிச் சென்றுவிட்ட புஷ்பாவதி மாடிப்படியின் கதவை ஓசைப் படாமல் மெதுவாகத் திறந்து கொண்டு தனது அறையை நோக்கி அடிமேலடி வைத்து நடந்தாள். அவள் அறைக்குள் நுழைந்து மெதுவாக கதவை சாத்த முயன்றாள், முடியவில்லை. வாயிற்படியில் ராஜமாதா புன்முறுவல் முகத்தில் தவழ நின்றிருந்தாள். அறைக்குள் நுழைந்த சித்தினி சித்தம் கலங்கி முகம் குபீரென குங்குமமாகச் சிவக்க பதறும் நிலைக்கு வந்தாள்.

## 15. மயக்கும் கயிறுகள்!

மெள்ள மெள்ள தனது மலர்ப்பாதங்களை எடுத்து வைத்து சிறிதும் சத்தம் செய்யாமல் கள்ளத்தனமாக அந்தப்புரப் படிகளில் ஏறி தனது அறைக்கு வந்து அதன் கதவை சாத்த முயன்ற அந்தக் காரிகை, கதவை சாத்த முடியாததால் அதன் காரணத்தை அறிய சிறிது தலை நிமிர்ந்து நோக்கியதும், வாயிற்படியில கதவின்மீது ஒரு கையையும் இடைமீது ஒரு கையையும் வைத்துக்கொண்டு உதடுகளில் புன்முறுவலுடன் ராஜமாதா நிற்பதைக் கண்டு வெலவெலத்துப் போனாள். "இந்த நேரத்தில் எங்கு போனாய்? எங்கிருந்து வருகிறாய்?" என்று ராஜமாதா கேட்ட கேள்விகளும் அவளைப் பெரிதும் திகிலுறச் செய்தன. மெள்ள திகிலை உள்ளடக்கி "எங்கும் போகவில்லை மகாராணி, நந்தவனப் பக்கம் சிறிதுநேரம் உலாவப் போயிருந்தேன்" என்று பாதி உண்மையைச் சொன்னாள் புஷ்பாவதி.

ராஜமாதாவின் இதழ்களில் புன்முறுவல் அதிகமாக விரிந்தது. "உலாவும் நேரமா இது புஷ்பாவதி? உறங்கும்

www.cleanindians.com



நேரம் அல்லவா?" என்று வினவினாள், புன்முறுவலை சற்றே அதிகமாக உதடுகளில் விரியச் செய்து.

அந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் "உறக்கம் வரவில்லை மகாராணி" என்று கூறினாள் புஷ்பாவதி

அதைக் கேட்டு வாசற்படியில் இருந்து இறங்கி உள்ளே நுழைந்துவிட்ட ராஜமாதா ராம்பியாரி தேவி "ஆமாம் வராது வராது" என்று கூறிய வண்ணம் புஷ்பாவதியின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு அவளை அவள் பஞ்சணைக்கு அழைத்துப் போய் அதில் உட்கார வைத்து தான் மட்டும் எதிரே நின்றுகொண்டாள். உடனடியாக அவள் கேள்விகள் ஏதும் கேட்காமல் சிந்தனையில் இறங்கினாள் நீண்ட நேரம். பிறகு தனது அழகிய உதடுகளை அசைத்து "நிப்சந்த் என்ன சொன்னான் உன்னிடம்?" என்று வினவினாள்.

"நிப்சந்தா மகாராணி அவர்...எங்கே...என்னிடம்..." என்று பேச முடியாமல் தவித்தாள் புஷ்பாவதி.

மகாராணி நின்ற வண்ணமே அவளைக் கூர்ந்து நோக்கி "பெண்ணே! என்னை ஏமாற்ற நினைக்காதே. தவிர இந்த அரண்மனையில் சாளரங்களுக்குக் குறையில்லை" என்று கூறினாள்.

"என்ன சொல்கிறீர்கள் மகாராணி?" என்று திகைப்புடனும் குழப்பத்துடனும் கேட்டாள் புஷ்பாவதி

"இந்த அரண்மனையில் உன் அறையில் மாத்திரந்தான் சாளரம் இருப்பதாக நினைக்காதே. சாளரங்கள் ஆயிரம் உண்டு இங்கே. நீ இங்கிருந்து பார்ப்பதை நான் என் அறைச் சாளரத்தில் இருந்தும் பார்க்க முடியும். இன்றிரவில் உறக்கம் வராதது உனக்கு மட்டுமல்ல. எனக்கும் உறக்கம் வரவில்லை புஷ்பாவதி. இன்று மட்டுமென்ன, பாதி நாள் எனக்கு உறக்கம் கிடையாது உன் உறக்கத்தை

காதல் அழித்தது. என் உறக்கத்தை அரசியல் அழித்தது. இரண்டுமே தொல்லைபிடித்தவை. இரண்டிலும் ஆசை, சிக்கல்கள், தந்திரங்கள், ஏமாற்றும் வித்தைகள் அனைத்தும் உண்டு'' என்று சொன்ன மகாராணியின் சுந்தர வதனத்தில் துன்பத்தின் ரேகை மெள்ள படர்ந்தது.

புஷ்பாவதி பதில் சொல்லவில்லை பதில் சொல்ல ஏதுமில்லை என்ற காரணத்தால், நந்தவனத்தில் நடந்த அனைத்தையும் மகாராணி கவனிக்க முடியாது என்றாலும், ஊகிக்கும் திறன் அவளுக்கு உண்டு என்பதை உணர்ந்த புஷ்பாவதி ''மகாராணி! ஏன் நிற்கிறீர்கள்? இப்படி உட்காருங்கள்'' என்று பஞ்சணையில் தனது பக்கத்தில் இடம்விட்டு நகர்ந்து உட்கார்ந்தாள்.

ஆனால் அந்த அழைப்பை ஏற்காத மகாராணி ''வேண்டாம் புஷ்பாவதி. நான் உட்கார வரவில்லை. மரியாதை எதுவும் எனக்குத் தேவையில்லை. வந்திருப்பவள் மகாராணியுமல்ல'' என்று கூறினாள் உணர்ச்சி குரலில் நன்றாகத் தெரிய.

''நீங்கள் மகாராணியல்லவா?'' வியப்புடன் வினவினாள் புஷ்பாவதி.

''மகாராணியாக வரவில்லை மகனைக் காக்க முயலும் தாயாக வந்திருக்கிறேன். அதற்கு நீதான் உதவ வேண்டும்'' என்று கூறினாள் ராஜமாதா.

ஏதும் புரியாமல் திகைத்த புஷ்பாவதி ''நானா மகாராணி? நானா உதவ வேண்டும்? நான் மேவாரின், சாதாரண குடிமகள். உத்தரவிடுங்கள் மகாராணி'' என்று கூறினாள். அவள் குரல் பெரிதும் தழதழத்துக் கிடந்தது.

மகாராணி நின்ற இடத்திலேயே சிறிது அசைந்தாள் உணர்ச்சி மிகுதியால். பிறகு தன்னை ஓரளவு நிதானப் படுத்திக்கொண்டு ''தீப்சந்தை மகாராணாவின் மெய்க் காவலனாக ஆக்க வேண்டும். முடிந்தால் மகாராணாவின்

www.cleanindians.com



படைப் பிரிவு ஒன்றுக்கும் தலைவனாக்க வேண்டும். அல்லது குறைந்த பட்சம் சலூம்பிராவின் பக்கம் சேராமல் செய்ய வேண்டும்'' என்று சொன்னாள் மகாராணி.

அவளிடம் அதுவரை இருந்த அதிகாரப் பார்வை இல்லை. சொற்களிலும் அதிகாரம் ஒலிக்கவில்லை. அதற்கு பதில் பணிவும் பலவீனமும் சோகமும் கலந்து ஒலித்தது.

மகாராணியை பரிதாபம் நிறைந்த விழிகளால் நோக்கினாள் புஷ்பாவதி. அப்பொழுது மகாராணி இருக்க வேண்டிய நிலைக்கு பதிலாக மகனைக் காக்க வேண்டிய தாயின் நிலையில் ராம்பியாரி தேவி இருப்பதை உணர்ந்த புஷ்பாவதி தானும் கட்டிலைவிட்டு எழுந்து ''மகாராணி! தங்கள் தாய்ப்பாசம் எனக்குப் புரிகிறது. அவரிடம் எனக்கு எத்தனை செல்வாக்கு இருக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு ஏதாவது சக்தி இருக்குமானால் அது மகாராணாவின் சார்பாகக் கண்டிப்பாக செலுத் தப்படும். தவிர அவரும் கடமை உணர்ச்சி உள்ளவர். அப்பேர்ப்பட்டவர் ராஜசேவையை மறுக்கமாட்டார். இதைத் திட்டமாக நம்புகிறேன்'' என்று கூறினாள்.

மகாராணி புஷ்பாவதியின் இரு கைகளையும் இறுகப் பிடித்துக் கொண்டாள்.'' மகளே! தீப்சந்தை நமது பக்கம் திருப்புவது அத்தனை கஷ்டமல்ல. பிடிவாதக்காரன்தான் இருப்பினும் ஆண்பிள்ளை. உன் அழகில் ஏற்கனவே மயங்கி இருப்பவன். உன் அழகில் யார்தான் மயங்கமாட்டார்கள்? உன் மயக்கும் வசீகரக் கயிறுகளால் அவனைப் பிணைப்பது அத்தனை கஷ்டமல்ல. மேவாருக்காக இதை நீ அவசியம் செய்ய வேண்டும்'' என்று மகாராணி புஷ்பாவதியை பாராட்டவும் பாராட்டினாள், கெஞ்சவும் கெஞ்சினாள்.

புஷ்பாவதி மகாராணியை நோக்கி தலைகுனிந்து வணங்கினாள். ''மகாராணி! நீங்கள் நினைப்பது போல் அவரை வளைப்பது அத்தனை எளிதல்ல. என் சாகசங்கள், சரசங்கள் அவரைத் திருப்ப முடியுமென்று நான் நினைக்க

வில்லை. ஆனால் அத்தனையும் உபயோகப்படுத்திப் பார்க்கிறேன்'' என்று சொன்னாள் புஷ்பாவதி.

மகாராணி தனது வசீகரக் கண்களை அவள் கண்களுடன் இணையவிட்டாள். ''புஷ்பாவதி! அவன் ஏற்கனவே உன் மையலில் சிக்கிவிட்டான் என்பது எனக்குத் தெரியும். மையலில் அவன் வெறி அளவு மீறி இருப்பதும் எனக்குத் தெரியும். அதற்கு இதோ இருக்கிறதே அடையாளம்'' என்று கூறிக் கொண்டே தனது வலது கை ஆள்காட்டி விரலை புஷ்பாவதியின் இதழ்க்காயத்தில் வைத்தாள். ''உனக்கு முத்திரை பொதித்த ஆடவனை நீ கையில் சுற்றலாம் புஷ்பாவதி. அதுவும் மேவார் அரசு நிலைக்க நீ அதைச் செய்வது தவறும் ஆகாது'' என்றும் சொன்னாள். நகைக்கவும் செய்தாள் லேசாக.

புஷ்பாவதி தலையை தாழ்த்திக் கொண்டாள். மிக மெதுவாகப் பேசத் துவங்கினாள். ''மகாராணி! நீங்களும் பெண். உங்கள் அழகுக்கு உங்களுக்கும் இது மாதிரி எத்தனையோ முத்திரைகளை பழய மகாராணா வைத்திருப்பார். சில முத்திரைகள் வெளிப்படையாக இருக்கலாம். ஆனால் கண்ணுக்கு புலப்படாத இடங்களும் உண்டல்லவா?'' என்றாள் குரல் தழுதழுக்க. மேலும் பேசினாள் ''இந்த முத்திரைகள் எந்த ஆடவனுடைய வெறியிலும் ஏற்படலாம். ஆனால் பின்னால் அவர் நாம் சொன்னபடி கேட்பாரா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தங்கள் அனுபவத்தில் இது கண்டிப்பாக தெரிந்திருக்க வேண்டும். ஆனால் மகாராணி! தீப்சந்த் வெறியரல்ல, காமுகரல்ல, மகா வீரர். அவரிடம் நான் கண்டிப்பாய் கேட்கிறேன். அவரை மன்னர் பக்கம் திருப்புவதும் அத்தனை கஷ்டமாக இருக்காது என்று நினைக்கிறேன்'' என்று சொன்னாள்.

மகாராணி புஷ்பாவதியின் கைகளை அப்பொழுதும் விட்டாளில்லை அவளை நெருங்கி அவள் கன்னத்தில் முத்தமிட்டு ''மகளே! மேவாருக்கு உன் கடமையைச்

www.cleanindians.com



செய். வந்தால் அவனை விடாதே. நான் போகி என்று கூறிவிட்டு மகாராணி சென்றுவிட்டாள்.

புஷ்பாவதி மகாராணி சென்றதும் வாயிற்படியை உற்று நோக்கிக்கொண்டே நீண்ட நேரம் நின்றாள். ''என்ன இருந்தாலும் தாய். இல்லாவிட்டால் அவன் அந்தஸ்த்துக்கு மிகவும் கீழே உள்ள என்னைக் கொஞ்சுவாளா?'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அதைத் தவிர தனக்கு தீப்சந்தை ஈர்க்கும் சக்தி இருப்பதாகச் சொன்னாளே அது எப்படி சரியாகும்? அவர் காதலுக்கு நான் விலை பேசுவதோ அவரை மகாராணாவின் பக்கம் இழுக்க முயல்வதோ எப்படி நியாயமாகும்?'' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள்.

இத்தகைய சிந்தனைகளில் ஈடுபட்டு மலைத்துப் பல விநாடிகள் நின்றுவிட்ட புஷ்பாவதி மெள்ள பின்னுக்கு நகர்ந்து பஞ்சணையில் தொப்பென விழுந்தாள். கண்களையும் மூடினாள். மகாராணி தனது வசீகர சக்தியைப் பற்றி பேசியதை நினைந்து பேரானந்தமும் கொண்டாள். ''அவர் ஒருவேளை இங்கு வந்தால் அவரை வரவேற்கட்டுமா? அல்லது கைகேயி போல் சோகமாகப் படுத்து வரம் கேட்கட்டுமா?'' என்று எண்ணிப் பார்த்தாள். ''சேசே அது பலிக்காது. இவரென்ன வயோதிக தசரதனா? நல்ல கட்டிளங்காளை. இது தனது வேலையல்ல என்று மிரட்டி ஒதுக்கிவிட்டால் என்ன செய்வது?'' என்று சிந்தித்தாள்.

''எப்படி விலகுவார் பார்ப்போம் இப்படிக் கட்டினால்?'' என்று தனது கைகளை அகல விரித்து உயரத் தூக்கி மெள்ள வளைத்தாள்.

அவள் வளைத்த கைகளுக்குள் ஒரு கழுத்து சிக்கியது. தலையொன்றும் மார்பு மீது படுத்தது. படுத்த தலை உலுக்கியது. நகைத்த உதடுகள் மார்பு மீது அழுந்திக் கிடந்தன. புஷ்பாவதி திடுக்கிட்டு கண்விழித்து எழுந்திருக்க முயன்

98
600039



றான். தீப்சந்தின் தலை அவளை எழுந்திருக்க முடியாமல் அழுத்தியது.

''என்ன அநியாயம் இது? எழுந்திருங்கள்'' என்று அதட்டினாள் அவள்.

அவன் எழுந்திருக்க மறுத்தான். ''நீதானே கைகளைத் தூக்கி விரித்து என்னை வரவேற்றாய்? இப்பொழுது எழுந்திருக்க சொல்வதின் அர்த்தம் என்ன?'' என்று அவள் மார்புக்கு செய்தியும் சொன்னான் ரகசியமாக.

''நம்மை இப்படி யாராவது பார்த்தால் என் மானம் போய்விடும்'' என்றாள் கண்டிப்பான குரலில் புஷ்பாவதி.

''யாரும் வரமாட்டார்கள். ஆகையால் பார்க்க மாட்டார்கள். தவிர புதிதாக என்ன மானம் போகும்?'' நந்தவனத்தில் மரங்களின் மறைவில் நடந்ததைவிட புதிதாக இப்பொழுது என்ன நடந்து விட்டது?'' என்று வினவினான் தீப்சந்த்.

''கதவு திறந்து இருக்கிறது. யாரும் எந்நேரமும் வரலாம்'' முணுமுணுத்தாள் புஷ்பாவதி.

''கதவை சாத்திவிட்டேன். யாரும் நாம் அறியாமல் உள்ளே நுழைய முடியாது?'' தீப்சந்த் இதைச் சொல்லி நகைத்தான்.

''இது அரண்மனை. நந்தவனத்தின் மரக் கூட்டத்தின் மறைவிடமில்லை. அங்கிருந்த ரகசியம் இங்கு கிடையாது'' என்றாள் புஷ்பாவதி சங்கடத்துடன்.

தீப்சந்த் மேலும் நகைத்தான். ''அங்கும் ரகசியமில்லை. நீ வருவதை மகாராணி பார்த்திருக்கிறாள்'' என்று கூறினான் நகைப்பின் ஊடே. ''புஷ்பாவதி! நந்தவனத்தை நோக்கி திறந்திருந்தது உன் சாளரம் மட்டுமல்ல, இன்னொரு சாளரமும் திறந்திருந்தது. அதில் மகாராணியின் தலை தெரிந்தது. ஆனால் உன் கவர்ச்சி அதற்கு

884 | 291969



இல்லாததால் உன்னை மட்டும் நான் கவனித்தேன். ஆகையால் நம் சந்திப்பு ரகசியமானதல்ல. மகாராணி அறியாததுமல்ல'' என்றான் தீப்சந்த்.

அதைக் கேட்ட புஷ்பாவதி பெரும் பிரமிப்பும் அச்சமும் அடைந்தாள். மகாராணி பார்க்கிறாள் என்று தெரிந்தும் அதைத் தன்னிடம் சொல்லாமல் தன்னை எப்படியெல்லாம் தீப்சந்த் அணைத்தான், இதழ்களை கவ்வினான், மார்புக் கயிறுகளை அறுத்தான் என்றெல்லாம் நினைத்து பெரிதும் மலைத்தாள். என்ன திமிர் இருந்தால் இவர் சகலத்தையும் என்னிடம் மறைத்திருப்பார் என்று உள்ளுக்குள் சீறினாள்.

அப்பொழுது தீப்சந்த் அவளை வாரி அணைத்தான். தனது மடியில் கிடத்தி அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைத்தான். பிறகு முகத்தை மார்புக்கருகில் கொண்டுபோய் ''உன் இதயத்துக்கு ஒரு செய்தி சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

அவள் உணர்ச்சிகளில் சிக்கித் தவித்தாள். ''சொல்லுங்கள்'' என்றாள்.

அவன் சொன்னான் இரு மார்புகளுக்கும் நடுவில் முகத்தை வைத்து புஷ்ப இதயமே கேள்! உன் இன்பக் கயிறுகள் என்னைக் கட்டிவிட்டன. இனி எதை வேண்டுமானாலும் கேள்'' என்று சொன்னான்.

அவள் இன்பப் பெருமூச்சுவிட்டாள். ''கேட்கட்டுமா?'' என்று வினவினாள்.

''கேள்'' என்றான் தீப்சந்த்.

அவள் உடனடியாகக் கேட்கவில்லை. சற்றே தயங்கினாள். ''தயங்காதே. கேள் புஷ்பாவதி. உன் அடிமை நான். நீ எதைச் சொன்னாலும் கேட்கிறேன்'' என்றான். அத்துடன் இன்னொன்றும் சொன்னான்.

அதைக் கேட்ட புஷ்பாவதி துடித்தாள். ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று சீறியும் எழுந்தாள்.

அவன் நகைத்தான் பெரிதாக.

அவனைப் பிடித்து முரட்டுத்தனமாகத் தள்ளினாள் புஷ்பாவதி. அவள் உடல் நடுங்கியது அவனை மீண்டும் கட்டிப்பிடித்த தீப்சந்த் ''தவறாக எதுவும் சொல்லவில்லை. புஷ்பாவதி. மகாராணாவிடம் நான் அடிமைப்பட நீ கேட்க முயன்றாய். அதற்கு நான் முன்னதாக ஒப்புக்கொண்டேன்'' என்றான்.

''மகாராணி உன்னிடம் சொல்லவில்லை, உன் அழகுக்கு நான் கண்டிப்பாக அடிமைப்படுவேன் என்று? அது நியாயந்தானே'' என்றும் கூறினாள்.

புஷ்பாவதியின் சிந்தனை பலவிதமாக சிதறிக்கொண்டிருந்தது. மகாராணி தன்னிடம் பேசியதை அவன் எத்தனை தூரம் கேட்டிருப்பான். என்ற குழப்பம் அவள் புத்தியைக் குழப்பியது? அந்த குழப்பத்தை நிவர்த்திக்க நடந்த விஷயங்களை விவரிக்கலானான் தீப்சந்த்.

www.cleanindians.com

## 16. வாலிபத் துடிப்பு !

புஷ்பாவதியின் மார்புகளுக்கு இடையில் படுத்துக் கிடந்த தீப்சந்த், மகாராணாவிடம் தான் அடிமைப்பட தயார் என்று கூறியதும், தனக்கும் மகாராணிக்கும் நடந்த உரையாடலை அவன் கேட்டுவிட்டான் என்பதை புஷ்பாவதி உணர்ந்துகொண்டாள். ஆனால், எத்தனை தூரம் கேட்டிருப்பான் என்பதை அறியாததால் சிந்தனையில் இறங்கலே செய்தாள்.

அவளது சிந்தனையைக் குழப்ப இஷ்டமில்லாத தீப்சந்த், நடந்ததை தானே விவரிக்க முற்பட்டு ''புஷ்பாவதி! தீப்சந்தின் கண்கள் எப்பொழுதும் ஏமாந்



தது இல்லை. சிந்தனையும் ஊகிக்கும் சக்தியை இழந்ததில்லை'' என்று கூறினான்.

''உன் சாளரம் திறந்தபோது மகாராணியின் சாளரமும் திறந்து அவள் முகமும் தோன்றிய போதே உன்னுடைய ஒவ்வொரு அசைவையும் மகாராணி கவனிக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டேன். நீ என்னை சந்திக்க நந்தவனத்தில் வந்தபோதும் அவள் கண்கள் உன்னைத் தொடர்ந்து வந்தன. அதனால்தான் அவள் கண்களிலிருந்து உன்னை மறைக்க மரக்கூட்டத்தின் மறைவுக்கு அழைத்துச் சென்றேன். நீ அரண்மனைக்குள் மீண்டும் புகுந்த பின்பும் மகாராணியின் கண் உன்மீது இருக்கும் என்பதை ஊகிக்க பிரமாதமான சிந்தனைத் திறன் எதுவும் தேவையில்லை. அதுவும் அன்றி, நீ அந்தப்புரத்தை நோக்கி நடந்ததுமே மகாராணியின் சாளரம் மூடப்பட்டதைக் கவனித்த நான் மகாராணி உன்னை எதிர்த்துக் காத்திருப்பார் என்பதைப் புரிந்துகொண்டு உன்னை மெதுவாகத் தொடர்ந்தேன். உனது அறைக்கு முன்னிருந்த இடைவழியை அடைந்ததுமே மகாராணியும் நீயும் பேசிக்கொண்டிருந்தது காதில் விழுந்ததால், சிறிதுநேரம் அங்கேயே நின்றேன். உங்கள் உரையாடல் மிக இன்பமாயிருந்தது எனக்கு. உன் உதட்டுக் காயத்தைப்பற்றி மகாராணி கேட்டதும் நீ மகாராணிக்கு பதிலிறுத்ததும் என் மனதை அப்பொழுதே மயக்கிவிட்டன. அதுவும் கண்ணுக்குப் புலப்படாத இடங்களில் முத்திரை பொறிப்பதைப்பற்றி நீ குறிப்பிட்டாயே, அதைக் கேட்டதும் என் முட்டாள்தனத்தைப் புரிந்துகொண்டேன்'' என்றும் தீப்சந்த் சொன்னான்.

இதைக்கேட்ட புஷ்பாவதியின் இதயம் படக் படக் சென்று அடித்துக்கொண்டது. ''இதையெல்லாம் ஒட்டுக் கேட்க, கேட்டு என்னிடம் சொல்ல வெட்கமாயில்லை உங்களுக்கு?'' என்று கேட்டாள் சங்கடத்துடன்.

புஷ்பாவதியின் மார்புமீது படுத்துக்கிடந்த அந்த வாலிபன் காதில் அவள் மார்பு படபடத்த ஒலி டக்டக் கென்று வேகமாகக் கேட்கவே, அவன் எழுந்து உட்கார்ந் தான் பஞ்சணையில். "உன் மார்பு ஏன் இப்படி அடித்துக் கொள்கிறது?" என்று கேட்டு அவள் மார்புமீது கையை யும் வைத்தான்.

அவன் கையின் ஸ்பரிசம் அவளுக்கு சிறிது சாந்தியை அளிக்கவே புஷ்பாவதி சொன்னாள் "அச்சத்தினால்" என்று.

"என்ன அச்சம்?" வைத்த கையை எடுக்காமலே கேட்டான் திப்சந்த்.

"உங்களை நான் வசப்படுத்துவதாக மகாராணியிடம் சொன்னதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்..." என்று ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக சொன்னாள் புஷ்பாவதி.

"அது தவறுதான்."

"எது?"

"ஏற்கனவே வசப்பட்டுவிட்டவனை வசப்படுத்தப் போவதாகச் சொன்னது."

"இந்த பசப்பு வார்த்தைகளில் நான் ஏமாற மாட்டேன்.

"பசப்பு வார்த்தையாயிருந்தாலும் கசப்பு வார்த்தை யல்லவே?"

"அல்ல" என்று புஷ்பாவதி அவனை மயக்கும் விழி களால் நோக்கி உதடுகளில் மந்தகாசத்தையும் விரித்துக் கொண்டாள்.

இரண்டையுமே கண்டான் திப்சந்த். மெள்ள குனிந்து அவள் இதழ்களை தனது இதழ்களால் மெதுவாகத் தொட்டு மீண்டான். "கசப்பில்லை புஷ்பாவதி! மதுரமா யிருக்கிறது" என்றும் சொன்னான்.

"இரையாதீர்கள். யாராவது கேட்கப் போகிறார் கள்" என்றாள் புஷ்பாவதி.

www.chanindians.com



"யார் கேட்கப் போகிறார்கள்?" என்று விசாரித்தான் திப்சந்த்.

"அந்த கதவுக்கு அப்புறம் மகாராணி நின்றிருந் தால்?" என்றொரு கேள்வியை வீசினாள் புஷ்பாவதி.

"கதவு மூடித்தானே இருக்கிறது?" என்றான் திப்சந்த்.

"மகாராணிக்கு பாம்புச்செவி" என்று சுட்டிக்காட்டி னாள் புஷ்பாவதி.

"ஆமாம்" என்று ஒப்புக்கொண்ட திப்சந்த் "புஷ்பா வதி! விடிய இன்னும் ஒரு ஜாமந்தானே இருக்கிறது. உறங்கு?" என்று கூறி அவள் மார்பில் துலங்கிய தனது ஜெபமாலையை கூர்ந்து நோக்கினான். அதன் நவரத்தினங் கள், அவள் மார்பில் புரண்டாலும், அவள் மார்பின் அழகு அதற்கு வரவில்லையென்று அவன் தீர்மானித்தான். "அதனால்தான் மாலை நேராகத் தொங்காமல் அவள் மார் பின் எழுச்சிகளிலும் பள்ளங்களிலும் வளைந்து மறைந்து ஓடுகிறது" என்று தன்னுள் சொல்லிக் கொண்டான். மாலையை சரிப்படுத்தும் சாக்கில் அவள் மார்பையும் தொட்டான்.

"இந்த கெட்டிக்காரத்தனமெல்லாம் வேண்டாம். மாலை சரியாகத்தான் இருக்கிறது" என்ற அவள் திரும்பி குப்புறப்படுத்தாள்.

அவள் முதுகை தடவிக்கொடுத்த திப்சந்த் "தூங்கு புஷ்பாவதி! தூங்கு" என்றான். பிறகு எழுந்து கட்டிலல் கிடந்த அவள் உடலைப் பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு சொன்னான் "புஷ்பாவதி! இன்றிரவு முதல் நான் உன் அடிமை. நாளை முதல் உனக்கும் மகாராணாவுக்கும் அடிமை. ஆனால் மகாராணாவுக்கு அடிமையாயிருப்பதில் சுகம் எதுவும் இல்லை. இரு அடிமைத்தனத்துக்கும் உள்ள வித்தியாசம் அதுதான்" என்று கூறிவிட்டு அறைக் கதவை திறந்து ஒருக்களித்தான். வாயிற்படியில் தலையை வைத்து நீண்டு படுத்துவிட்டான். படுத்தவன் உடனடி யாக உறங்கிவிட்டான்.

ஆனால் பஞ்சணையில் படுத்திருந்த புஷ்பாவதிக்கு மட்டும் உறக்கம் வரவில்லை புரண்டு இரண்டு மூன்று தடவை படுத்தாள். பிறகு தலையைத் திருப்பி தரையில் உறங்கிக் கொண்டிருந்த தீப்சந்தை கவனித்தாள்.

உறக்கத்திலும் அவன் முகம் அழகாயிருந்தது. உதடுகளில் புன்னகை அப்பொழுதும் அரும்பிக்கிடந்தது. அவன் மூச்சு நிதானமாக வந்துகொண்டிருந்ததைக் கண்ட புஷ்பாவதி "எந்த அபாயமும் கலைக்கமுடியாத இரும்பு மனம் படைத்தவன் தீப்சந்த் என்பதை உணர்ந்து கொண்டாள். அப்படிப்பட்ட இரும்பு இதயத்தையும் தன்னால் வளைக்க முடிந்ததை எண்ணி பெருமையும் கொண்டாள். அந்த பெருமிதம் முகத்தில் நிலவ, மெதுவாக உறக்கமும் கொண்டாள்.

மகாராணி காலையில் அந்த அறைக்கு வந்தபோதும் புஷ்பாவதி உறங்கிக் கொண்டிருப்பதையும் அவள் முகத்தில் பெருமிதம் விரிந்துகிடந்ததையும் கண்டு தனது எண்ணம் நிறைவேறி விட்டதைப் புரிந்துகொண்டாள். அதனால் ஏற்பட்ட உவகையுடன் கட்டிலில் உட்கார்ந்து "புஷ்பாவதி! என் கண்ணே! எழுந்திரு" என்று அசைத்தாள் அவள் பூவுடலை.

www.cleanindians.com

புஷ்பாவதி அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருந்து "மகாராணி! நானே வருவதாக இருந்தேன் உங்களை சந்திக்க" என்றாள்.

"யார் வந்தாலென்ன புஷ்பாவதி! காரியத்தை சாதித்துவிட்டாய்" என்றாள் மகாராணி.

புஷ்பாவதி பிரமிப்புடன் மகாராணியை நோக்கி "உங்களுக்கு எப்படித் தெரியும்? அவர் சொன்னாரா?" என்று வினவினாள்.

"அவர் சொல்வானேன். உன் முகத்தைப் பார்த்தேன். புரிந்துகொண்டேன்" என்ற மகாராணி "மகளே! நீ மேவாருக்கு பெரும் சேவை செய்திருக்கிறாய். மேவார்



மீண்டும் பழய நிலைக்கு வந்தால் உன்னை மறக்காது" என்றும் கூறினாள் அவள் சொற்களில் நன்றி ஒலித்தது.

"மகாராணி! சிறிதைப் பெரிதாக்குகிறீர்கள். நான் ஒரு பெண்..." என்று மேலும் ஏதோ சொல்லப் போனவளை மகாராணி தடுத்து" ராஜபுத்திர பெண்களால்தான் எந்த நாடும் பிழைக்கிறது. அல்லது அழிகிறது. ராஜபுதனம் இன்று தலை நிமிர்ந்து நிற்பது பல போர்களில் தோற்ற ஆண்களால் அல்ல, பெண்களின் தியாகத்தால் தான். அலாவுதீனிலிருந்து ஒவ்வொருவர் படையெடுப்பிலும் ஜோஹர் (தீக்குளிப்பு) செய்துகொண்ட மகாபதிவிரதைகளின் தியாகம் இந்த மண்ணை இன்னும் காத்து வருகிறது. பெண்ணில்லையேல் இந்த ராஜபுதனத்தின் மானம் என்றோ அழிந்திருக்கும்" என்று வீராவேசத்துடன் பேசிய மகாராணி உன் மணாளன் வந்தால் எனது அறைக்கு அனுப்பு" என்று கூறிவிட்டு வெளியே செல்ல முயன்றாள்.

"அவர் இன்னும் என் மணாளனாக..." என்று புஷ்பாவதி தடுமாறிப் பேசினாள்.

"ஆனமாதிரிதான். இன்னும் ஆவதற்கு என்ன இருக்கிறது?" என்று லேசாகப் புன்முறுவல் செய்துவிட்டு, அந்த அறையைவிட்டு அகன்றாள் மகாராணி.

மகாராணி சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் நீராடி தனது உடையையும் அணிந்து கச்சையில் வாளையும் தரித்துக்கொண்டு அந்த அறையில் தீப்சந்த் தோன்றினான். அப்பொழுதும் அவள் நீராடாமல் கட்டிலில் உட்கார்ந்து கால்களை ஆட்டிக்கொண்டிருந்ததைக் கவனித்த தீப்சந்த் "எசமானிக்கு இன்னும் பொழுது விடியவில்லை போலிருக்கிறது?" என்று வினவினான்

"எப்படி விடியும், இரவு முழுவதும் தூங்காமல் இருந்தால்?" என்று அவள் வினவினாள்.

"யார் தூங்காதிருக்கச் சொன்னது?"

''நீங்கள் தான்.''

''நான் தூங்க வேண்டாமென்று சொன்னேன்?''

''நீங்கள் கொடுத்த தொல்லையில் யார் தூங்க முடியும்?''

''தொல்லையா? என்ன தொல்லை?''

இதைக்கேட்ட அவள் புன்முறுவல் கொண்டாள். ''நல்ல கேள்வி?'' என்றும் சொல்லிவிட்டு ''நீங்கள் மகாராணியைப் பார்த்துவிட்டு வாருங்கள். நானும் நீராடி சித்தமாகிறேன்'' என்று கூற, மகாராணியின் அறையை நாடிச் சென்றான் தீப்சந்த்

அந்த அறை சாளரத்தை ஒட்டிப் போடப்பட்டிருந்த மஞ்சத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த மகாராணியின் முன்பு மண்டியிட்ட தீப்சந்த், மகாராணியைப் பேசவிடவில்லை ''மகாராணி! உங்கள் உபதேசம் பலித்துவிட்டது'' என்று தீப்சந்தே பேச்சைத் தொடங்கினான்.

www.clearindians.com

மகாராணிக்கு அவன் சொன்னது புரிந்தாலும் புரியாதது போலவே நடித்து, ''எந்த உபதேசம் தீப்சந்த்?'' என்று வினவினாள்.

புஷ்பாவதிக்குச் செய்த உபதேசம்'' என்றான் தீப்சந்த்.

''மகாராணி புன்முறுவல் கொண்டாள். ''உபதேசத்தின் விளைவு''? என்று வினவினாள்.

''நான் மகாராணாவின் அடிமை'' என்று சொன்னான்.

மகாராணியின் கண்களில் நன்றி ஒளி பளிச்சிட்டது. ''மேவார் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறது'' என்றாள்.

''எனக்கு அல்ல புஷ்பாவதிக்கு' என்று மகாராணியைத் திருத்திய தீப்சந்த் ''மகாராணி! இனி மகாராணாவைப் பற்றிய கவலையை விடுங்கள். அதை நான் ஏற்றுக் கொண்டுவிட்டேன்'' என்றான்.

மகாராணி திகைத்தாள். மேவார் இன்றிருக்கும் நிலையில் பெரும் படைகளே மகாராணாவைக் காப்பாற்ற முடி



யாதிருக்க இந்த சிறுவன் என்ன செய்வான்? வாலிபத்தின் துடிப்பு இவனைப் பேசச் செய்கிறது'' என்று உள்ளூர சொல்லிக்கொண்டாள்.

ஆனால், அன்று இரவின் நிகழ்ச்சிகள் மகாராணியை அசரவைத்தன. தீப்சந்தின் பேச்சு வெட்டிப்பேச்சல்ல; வாலிபத் துடிப்பும் வெற்றுத் துடிப்பல்ல என்பதை மகாராணி புரிந்துகொண்டாள்.

## 17. சோம்ஜியின் காரணம்!

மகாராணாவைப் பற்றிய கவலையை தான் ஏற்றுக் கொண்டுவிட்டதாக தீப்சந்த சொன்னதும், அது வாலிபத் துடிப்பின் விளைவே தவிர வேறில்லை என்று மகாராணி முதலில் தீர்மானித்தாள். அவன் அந்த முடிவுக்கு வந்ததே புஷ்பாவதியிடம் அவன் கொண்டிருந்த காதல் வெறியின் விளைவுதான் என்பதிலும் மகாராணிக்கு சந்தேகமில்லாது இருந்தது. அவள் அவன் பேச்சை அப்படியே நம்பாவிட்டாலும், மகாராணாவுக்கு சலூம்பிராவையே சந்தித்துப் போராடும் திறனுள்ள ஒரு மெய்க்காவலன் கிடைத்துவிட்டானே என்பதில் மட்டும் திருப்தியடைந்தாள். இதனால் தன் மகனின் உயிருக்கு அபாயமில்லாவிட்டாலும் ராஜபுதனத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் பிளவினால் விளையக்கூடிய ஆபத்தை எப்படி சமாளிப்பது என்ற கவலையால் மனம் நொந்தாள் மகாராணி.

அதற்கும் தீப்சந்தின் கரம் பெருமளவுக்கு உபயோகப் பட முடியும் என்பதை மகாராணி அன்று அடியோடு உணரவில்லை. தவிர மகாராணாவின் மெய்க்காவலனை தீப்சந்த் அன்று நடுப்பகல் வரை அரண்மனையில் தலை காட்டாதது ராஜாமாதாவுக்கு ஓரளவு சந்தேகத்தையும்

விளைவித்தது. எங்கோ திரிந்துவிட்டு நடுப்பகலில் அவன் அரண்மனைக்கு வந்தபோதும் ராஜாமாதா கேட்ட கேள்விகளுக்கு அவன் பொறுப்புடன் பதில் சொல்லாததால் அவள் பெரும் ஏமாற்றத்தையே அடைந்தாள்.

நடுப்பகலில் அரண்மனைக்குள் நுழைந்து மகாராணவின் அந்தரங்க அறையை நாடிச்சென்ற தீப்சந்தை நடுவழியில் தடுத்த மகாராணி "தீப்சந்த்! இத்தனை நேரம் எங்கு சென்றிருந்தாய்?" என்று வினவினாள்.

தீப்சந்த் மகாராணியை ஏறெடுத்து நோக்கினான் சிரிக்கும் கண்களால். "உதயபூரை சுற்றிப் பார்க்கப் போயிருந்தேன்" என்றான் நகைப்பொலி தொனித்த குரலில்.

மகாராணியின் விழிகள் ஏளனத்தைக் கொட்டின. "இதற்கு முன்பு நீ உதயபூரைப் பார்த்ததில்லையா?" என்று மகாராணி கேட்டாள் இகழ்ச்சி ததும்பிய குரலில்,

"பார்த்திருக்கிறேன் ஒரு முறை" என்றான் தீப்சந்த்.

"இப்பொழுது மறுபடியும் பார்ப்பானேன்?" ராஜமாதா எரிச்சலுடன் கேட்டாள்.

தீப்சந்த் சிறிதும் சிந்திக்காமலே சொன்னான் "அப்பொழுது பார்த்த கண்கள் வேறு" என்று.

"இப்பொழுது புதுக் கண்களா?" ராஜமாதாவின் எரிச்சல் அதிகமாக ஒலித்தது குரலில்.

"கண்கள் புதிதல்ல, பார்வைதான் வேறு."

"அப்பொழுது என்ன பார்வை, இப்பொழுது என்ன பார்வை?"

"அப்பொழுது தலைநகரை வேடிக்கை பார்க்க வந்த வாலிபன் பார்வை. இப்பொழுது மகாராணவின் மெய்க்காவலன் பார்வை"



ராஜமாதாவின் கண்களில் சிறிது சிந்தனை படர்ந்தது. தீப்சந்த் சொல்வதில் ஏதோ பொருள் இருப்பதைப் புரிந்து கொண்டதால் "இந்த புதுப்பார்வையிலிருந்து என்ன தெரிகிறது?" என்று வினவினாள்.

"சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?" என்று வினவினான் தீப்சந்த்.

"கோபத்துக்கு என்ன இருக்கிறது? அஞ்சாமல் சொல்" என்றாள் ராஜமாதா.

மிகுந்த துணிவுடன் சொன்னான் தீப்சந்த் "மகாராணி! இந்த தலைநகரம் மகாராணவைப் போலிருக்கிறது. போருக்கோ ராஜதானியின் தற்காப்புக்கோ லாயக்கற்றது. உல்லாசத்துக்கு நல்லது" என்று. இதைச் சொன்னதோடு நிற்கவில்லை அவன். "மகாராணி! பழய தலைநகரம் சித்தூரின் வலு இதற்கு இல்லை. அதற்குள்ள இயற்கைப் பாதுகாப்பும் இதற்குக் கிடையாது. படகில் உல்லாசப்பயணம் செய்ய உதயசாகர ஏரி இருக்கிறது. மோகினி வனம் போன்ற இயற்கை நந்தவனங்கள் இருக்கின்றன சரசத்துக்கு. ஆனால் பெரும்படைகள் தாக்கினால் எதிர்த்து நிற்க இதன் அரண்கள் போதாது. என்னிடம் பதினாயிரம் வீரர்கள் இருந்தால் இந்த தலைநகரை இரண்டு நாட்களில் நான் கைப்பற்றி விடுவேன்" என்றும் விளக்கினான்.

அவன் சொன்னது முற்றும் உண்மை என்பது மகாராணிக்குத் தெரிந்திருந்தாலும் அரை நாளுக்குள் அவன் எப்படி தலைநகரின் பலவீனத்தை உணர்ந்தான் என்று விளங்காததாலும் "தீப்சந்த்! மாதக்கணக்கில் வீரர்களால் எடைபோட முடியாத இந்த மாநகரை நடுப்பகலுக்குள் நீ எடைபோட்டு விட்டாயா?" என்று வினவினாள்.

"இங்கிருந்துதான் ராணாபிரதாப் இருபத்தி ஐந்து ஆண்டு மொகலாய சாம்ராஜ்ஜியத்தை ஆட்டி வைத்தார்" என்று அவள் பேச்சை முடிக்குமுன்பே

www.cleanindians.com

"மகாராணா பிரதாப்பை வைத்து மற்றவர்களை எடை போடாதீர்கள் மகாராணி. அவர் ஒரு தெய்வப் பிறவி. எல்லோரும் பிரதாபசிம்மனாகிவிட முடியாது. அவருக்குப் பின் இந்த மேவார் ராஜ்ஜியம் என்னவாயிற்று? அவர் புதல்வர் அமரசிம்மன் அரியணை ஏறி சுகவாழ்வில் இறங்கினார். சலவைக்கல் மாளிகை கட்டினார். ஆங்கிலேயர்களிடம் இருந்து பெரிய கண்ணாடியை தமது ஆலோசனை மண்டபத்தில் பொருத்தினார். அப்படியே காலம் கழித்திருப்பார். ஆனால் அப்பொழுது அந்த ஆஸ்தானத்தில் ஒரு சலூம்பிரா இருந்தார். அந்தக் கண்ணாடி மீது கீழே இருந்த அலங்கார வெண்கலக்கட்டியை எடுத்து எறிந்து கண்ணாடியை உடைத்து அமரசிம்மனை அரியணையிலிருந்து தரதரவென்று இழுத்துக் கொண்டு போருக்குச் சென்றார். இல்லையேல் அப்பொழுதே மேவார் போயிருக்கும். இது மேவாரின் சரித்திரம் மகாராணி. சாதாரண வீரர்களின் தியாகத்தோடு மகாராணாவின் தியாகமும் சேர்ந்ததால் அப்பொழுது மேவார் பிழைத்தது. இப்பொழுது மகாராணாவும் சுகவாசி, சலூம்பிராவும் தமது பலத்தை மகாராணாவை எதிர்ப்பதில் செலுத்துகிறார். உதயபூர் அனாதையாகிவிட்டது. அதன் கோட்டை கொத்தளங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது" என்று வேகமாகப் பேசினான் தீப்சந்த்.

அவன் வேகத்தையும் வீரச்சொற்களையும் கேட்ட மகாராணி மிதமிஞ்சிய வியப்பினால் திகைத்து நின்றாள். பிறகு மெதுவாகக் கேட்டாள் "இப்பொழுதுள்ள பீம்சிங் சலூம்பிரவை நமது வழிக்கு, மன்னரை பாதுகாக்கும் பாதைக்கு திருப்பமுடியுமா?" என்று.

தீப்சந்த் சிறிது சிந்தித்தான். சிறிது நடந்தான் அப்படியும் இப்படியும் மகாராணி முன்பாக. பிறகு ஒரு முடிவுக்கு வந்து இன்றிரவு எப்படியும் சலூம்பிராவை சந்திக்கப் போகிறேன்" என்றான் மெதுவாக.

"இன்றிரவா?" என்று வினவினாள் மகாராணி.



"ஆம் மகாராணி. வந்து முடிவைச் சொல்கிறேன்" என்று கூறினான்.

"எதைப்பற்றி?" என்று மகாராணி கேட்டாள்.

"நாட்டைக் காப்பது பற்றி" என்றான் தீப்சந்த்.

அதற்கு மேல் ஏதும் பேசமறுத்த தீப்சந்த் மகாராணாவை நாடிச் சென்றான். மகாராணியும் அவனைத் தொடர்ந்தாள்.

மகாராணாவின் அறைக்கு முன்பு நின்று தனது வரவை அறிவிக்கும்படி அங்கிருந்த காவலனிடம் கூறியபோது "நீ போகலாம் உள்ளே. மெய்க்காவலருக்கு அனுமதி தேவையில்லை" என்று சொன்ன மகாராணி தீப்சந்துடன் தானும் உள்ளே நுழைந்தாள்.

மகாராணாவின் பள்ளியறை முதல்நாளை விட நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பெண்கள் வீணை வாசித்துக் கொண்டிருந்தார்கள். மகாராணா தலையை அசைத்து இசையை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

மகாராணி உள்ளே நுழைந்ததும் சங்கீதம் சட்டென்று நின்றது. இரு பெண்களும் வீணைகளை வைத்து விட்டு எழுந்தார்கள். மகாராணியின் ஒரு பார்வை அவர்களை வெளியே ஓட்டிவிட்டது. ராஜமாதா மகனை வெறுப்புடன் நோக்கினாள். மகாராணாவும் வெறுப்பை முகத்தில் காட்டத் தவறவில்லை. "எங்கு வந்தீர்கள்?" என்று மகாராணியையும் தீப்சந்தையும் நோக்கி பொதுவாகக் கேட்டார் மகாராணா. அவர் குரலில் கோபம் பெரிதும் ஒலித்தது.

"நான் உன்னைப் பார்க்க வரவில்லை. தீப்சந்த் வந்தான். நானும் உடன் வந்தேன்."

"என்ன விசேஷம்?" என்று வினவினார் மகாராணா.

"தீப்சந்த் உன் மெய்க்காவலனாக இருக்க ஒப்புக் கொண்டுவிட்டான்" என்று ராஜமாதா தெரிவித்தாள்.

"நாமும் ஒப்புக் கொண்டுவிட்டோம். நீ உணவு அருந்திவிட்டு வா" என்றார் மகாராணா தீப்சந்தை நோக்கி.

மகாராணாவை கோபமாக நோக்கிய மகாராணி "என் விருப்பத்துக்கு இணங்கி இந்த வேலையை வீராணா தீப்சந்த் ஒப்புக் கொண்டான். உனக்காக அல்ல" என்றாள்.

"எனக்காக அல்ல?"

"அல்ல."

"அப்பொழுது தீப்சந்த் உனக்கு மெயக்காவலனா? எனக்கா?"

"உனக்குத்தான்" என்று அழுத்திச் சொன்னாள் மகாராணி.

அப்பொழுது தீப்சந்த் சொன்னான் "மகாராணா! நான் உங்கள் மெய்க்காவலன் மட்டுமல்ல..." என்று.

www.cleanindians.com

"வேறென்ன?" என்று மகாராணா கேட்டார்.

"உங்கள் படைப்பிரிவு ஒன்றுக்கும் தலைவன்."

இதைக்கேட்ட மகாராணா மகாராணி இருவருமே திகைத்தார்கள்.

"ஏது இங்கே படைப் பிரிவு, நீ தலைமை வகிக்க?" என்று மகாராணி கேட்டாள்.

"இன்னும் சில தினங்களில் வரும். நாளைக்கே செய்தி அனுப்புகிறேன்" என்றான் தீப்சந்த்.

எதற்கு இப்பொழுது இன்னொரு படைப்பிரிவு. சந்தாவதர்கள் சக்தாவதர்கள் படைபபிரிவுகள் போதாவா இங்கு மோதிக் கொள்ள?' இதை மகாராணி கேட்டாள்.

"அந்த மோதலை என் படை தடுக்கும் என்ற தீப்சந்த் "மகாராணி! எபபொழுது நான் மகாராணாவை பாது காக்க ஒபபுக் கொண்டேனோ அப்பொழுதே எனது படைப் பிரிவை அழைப்பதென்று முடிவு செய்துவிட்டேன்"



என்று கூறிவிட்டு "மகாராணி! நான் மகாராணாவை மீண்டும் சந்திக்கிறேன்" என்றும் சொல்லிவிட்டு புஷ்பாவதியின் அறைக்குச் சென்றான்.

அங்கு புஷ்பாவதி நீராடி குழல் முடித்து மலர் சூடி மஞ்சத்தில் அமர்ந்திருந்தாள்.

அவளை விழுங்கி விடுபவன்போல் பார்த்த தீப்சந்த் "புஷ்பாவதி! நாகராமக்ராவில் இருந்து எதற்காக மன்னனைப் பார்க்க வந்தாய்?" என்று கேட்டான்.

புஷ்பாவதி சிறிது சிந்தித்தாள். "சளும்பிராவையே கேளுங்கள். அவருக்கே தெரியும்" என்று முன்பு சொன்னதை மீண்டும் சொன்னாள்.

"புஷ்பாவதி?" இழுத்தான் தீப்சந்த்.

"என்ன?" என்று கேட்டாள் புஷ்பாவதி.

"உச்சிப்பூவைப் பற்றி உன்னைக் கேட்கச் சொன்னார் சளும்பிரா. நீ வந்த காரணத்தை அவரைக் கேட்கும்படி நீ சொல்கிறாய். உங்களுக்குள்ளேயே பல மர்மங்கள் இருக்கின்றனவே" என்றான் தீப்சந்த்.

புஷ்பாவதி சிறிது சிந்தித்தாள். பிறகு சொன்னாள் "இந்த ஆபரணத்தை மகாராணாவிடம் கொடுத்து உன் நாட்டுப் போரை தவிர்க்கச் சொன்னார் தந்தை" என்று.

தீப்சந்த் தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு கச்சையிலிருந்த அந்த ஆபரணத்தை எடுத்து நோக்கினான். அதை அவள் தலையில் வைத்து அழகு பார்த்தான். அது வைக்கவேண்டிய இடத்தில் அடிபட்ட காயம் அப்பொழுதும் ஆறவில்லை "இந்த ஆபரணம் இவள் மண்டையை உடைத்ததோடு நிற்கட்டும். நாட்டு மண்டையை உடைக்காதிருக்கட்டும்" என்று உள்ளூர சொல்லிக்கொண்டான்.

பிறகு அவளிடம் விடைபெற்று இரவு வருவதாக சொல்லிப்போனான்.

அன்றிரவு உதயபூர் அரண்மனையில் இருந்து நாலாவது மாளிகையில் இருந்த அமைச்சர் சோம்ஜியின் அறைக்குச் சென்றான். அங்கு அவனை சந்திக்க சோம்ஜி சித்தமாக உட்கார்ந்திருந்தார்.

சில நிமிடங்களுக்கெல்லாம் சலூம்பிராவும் வந்து சேர்ந்தார். அவ்விருவரையும் இருக்கைகளில் உட்கார வைத்த சோம்ஜி ஒருமுறை திரும்பி தமக்குப் பின்னால் இருந்த அறையை நோக்கினார்.

அறையின் கதவைத் திறந்து அறைக்குள்ளிருந்து ஒரு வாலிபன் வெளியே வந்தான். அவன் அலட்சிய நடை நடந்து வந்தான். நீண்ட வாளின் மீது கையையும் வைத்திருந்தான். சலும்பிரா அவனை மிக சூடாகப் பார்த்தார்.

அந்த வாலிபன் வரவால் சலூம்பிராவுக்கு ஏற்பட்ட சினத்தை சோம்ஜி கவனித்தார். "நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் நண்பர்களாகக் கட்டிக்கொள்ளுங்கள்" என்றார் சோம்ஜி.

"ஏன்?" என்று கூச்சலிட்டார் சலூம்பிரா.

திடுக்கிடும் காரணத்தைச் சொன்னார் சோம்ஜி.

அதைக் கேட்டதும் எதற்கும் அஞ்சாத சலூம்பிராவே ஒரு விநாடி அச்சத்தின் வசப்பட்டார். "வரட்டும் அவர்களை ஒழித்துவிடுகிறேன்" என்று பயங்கரமாகக் கூச்சலிடவும் செய்தார்.

## 18. இணைந்த வாட்கள்!

சோம்ஜி என்று அழைக்கப்பட்ட சோம்சந்த் காந்தியின் மந்திர ஆலோசனை அறையில் படாடோபம் ஏதுமில்லாது இருந்தாலும் அதில் ஒரு கவுரவமும் கண்ணியமும்

www.cleanindians.com



இருக்கவே செய்தது. அந்த அறையின் பின் வடக்குச் சுவரின் மத்தியில் போடப்பட்டிருந்த பெரிய மஞ்சத்தின் மீதிருந்த நீள இருக்கையின்மீது சோம்ஜி சாய்ந்து கொண்டு, கையில் இருந்த பத்திரங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், தீப்சந்த் உள்ளே நுழைந்து அவருக்கு எதிரில் தலைவணங்கி நின்றான்.

பக்கத்தில் இருந்த ஒரு மஞ்சத்தில் அவனை உட்காரச் சொல்லி சைகை காட்டினார் சோமஜி. பிறகு ஏதும் பேசாமல் கையிலிருந்த கடிதங்களை உற்றுப் படித்துக்கொண்டிருந்தார். வெளியிலிருந்து பீம்சிங் சலூம்பிராவின் பலத்த குரல் கேட்ட பிறகுதான் அவர் காகிதங்களை பக்கத்தில் மடித்து வைத்து விட்டு, தமது விழிகளை அவர்மீது நாட்டினார்.

தீப்சந்துக்கு சைகை காட்டியதுபோல் அவருக்கு சைகை காட்டாமல் "சலூம்பிரா! வரவேண்டும். உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். இப்படி உட்காருங்கள்" என்று முகமன் கூறி எதிரேயிருந்த பெரிய மஞ்சம் ஒன்றை சுட்டிக்காட்டினார். அவர் அமர்ந்த பிறகு தான் தமக்குப் பின்னால் இருந்த அறையை திரும்பி நோக்கினார்.

அவர் நோக்குவதற்கும் அறைக்கதவு திறப்பதற்கும் நேரம் சரியாயிருக்கவே, சோம்ஜி ஏதோ முன்னேற்பாட்டுடன் இருக்கிறார் என்பதை தீப்சந்த் புரிந்துகொண்டான். அடுத்து அந்த அறையிலிருந்து வெளியே வந்த வாலிபனைக் கண்டதும் ஏதோ அனர்த்தம் நிகழப்போகிறது என்பதைப் புரிந்துகொண்ட தீப்சந்த் எதற்கும் சித்தமாயிருந்தான்.

அறையிலிருந்து வெளியேறிய வாலிபன் மிக அழகாக இருந்தான். அவன் முகத்தில் வீரக்களை எழுதி ஒட்டியிருந்தது. அவன் நடை சிங்கத்தின் நடையாயிருந்தது. தனது வாளின்மீது கையை வைத்துக்கொண்டு ராஜ நடை

நடந்து வந்த அந்த வாலிபன் ஏதோ சண்டைக்கு வருபவன் போலிருந்தானேயொழிய சமாதானத்துக்காக வருபவனைப் போல் தெரியாததால் அவன் யாராயிருக்கக்கூடும் என்று தீப்சந்த் சிந்தித்த போது, சோம்ஜி சொன்னார் "நீங்கள் இருவரும் நண்பர்களாகக் கட்டிக்கொள்ளுங்கள்" என்று.

அதைக்கேட்ட சலூம்பிரா தீவிழி விழித்தார். சோம்ஜியை நோக்கி "சோம்ஜி! இவனை இங்கு வரவழைக்க உமக்கு மிகுந்த துணிவு இருக்கவேண்டும். இவனைத் தழுவும்படி சொல்வதால் உமக்கு சித்தப்பிரமையும் ஏற்பட்டிருக்க வேண்டும்" என்று கூறவும் செய்தார் தீயினும் சுட்ட சொற்களால்.

அந்த வாலிபன் ஏதும் பேசவில்லை. "சோம்ஜி! நாங்கள் இருவரும் சற்று வெளியே போய் பேசிவிட்டு வருகிறோம்" என்றான் அலட்சியமாக.

"இங்கேயே பேசலாமே" என்றார் சோம்ஜி அடுத்து வர இருந்த விபரீதத்தைத் தடுக்க.

"இங்கு வாட்கள் பேசமுடியாது. ஆகையால் வெளியில் பேசுகிறோம். இருவரில் ஒருவர் உள்ளே வருவோம்" என்றான் அந்த வாலிபன் சர்வசாதாரணமாக.

"இளங்கன்று பயமறியாது" என்றார் சலூம்பிரா.

"கிழமாடு நடக்காது" என்றான் அந்த வாலிபன்.

விவகாரம் முற்றுவதைக் கண்ட சோம்ஜி, சலூம்பிராவை நோக்கி "இவன் யார் தெரியுமா உங்களுக்கு?" என்றார்.

"பெயர் தெரியாது. சக்தாவதர்களின் கும்பலைச் சேர்ந்தவன் என்பது தெரிகிறது" என்றார் சலூம்பிரா.

வந்த வாலிபன் தனது பெயரைச் சொல்லவில்லை. சோம்ஜியே சொன்னார் "இவன் பெயர் ராஜபுதனத்தில் பிரசித்தமானது. சங்கிரமசிம்மன். சக்தாவதர்களின் உபதலைவன்" என்று.

www.cleanindians.com



பெயரைக் கேட்டதும் சலூம்பிராவின் முகத்தில் என்னும் கொள்ளும் வெடித்தது. "கொலைகாரன்" என்று பயங்கரமான குரலில் பேசினார் சலூம்பிரா. சட்டென்று மஞ்சத்தில் இருந்து எழுந்து, தமது வாளின் பிடிமீது கையையும் வைத்தார்.

"சலூம்பிரா!" என்று அவரை அலட்சியமாக அழைத்தான் சங்கிரமசிம்மன். பிற்காலத்தில் ராஜபுதனப் போர்களின் பெரும்பங்கை வகிக்க இருந்தவனும், கோட்டைகளைக் கைப்பற்றுவதில் அசகாயசூரன் என்றும் பெயர் பெற்றிருந்தவனுமான சங்கிரமசிம்மனை அலட்சியமாக நோக்கிய சலூம்பிரா "என்ன?" என்று வினவினார் கடுமை நிரம்பிய குரலில்.

சங்கிரமசிம்மனின் கண்கள் சலூம்பிராவை வெறுப்புடன் நோக்கின. "நேருக்கு நேர் போர் செய்து எதிரியைக் கொல்பவன் கொலைகாரன் என்பது உமது புது அகராதியில் இருக்கலாம். ராஜபுதன அகராதியில் அப்படியில்லை" என்ற சங்கிரமசிம்மன் "சலூம்பிரா! அப்படியானால் குழந்தைகளை வெளியில் இழுத்துப்போட்டு கொலை செய்பவனுக்கு நீங்கள் என்ன பெயர் கொடுப்பீர்கள்?" என்று கேட்டான். "உங்கள் நண்பன் சலீம்சிங்கை நான் தர்மயுத்தத்தில் ஈட்டியால் குத்திக்கொன்றேன். ஆனால் உங்கள் வலதுகை போலிருக்கும் கோராபூர் அர்ஜுன்சிங் நானில்லாத சமயத்தில் என் வயதான தந்தையைக் கொன்றான். என் குழந்தைகளை வெளியே இழுத்து வெட்டினான். இதைக் கேட்டதும் நான் விரைந்தேன் எனது கோட்டைக்கு. எனது வரவைக் கேட்டு ஓடிவிட்டான். உங்கள் கூட்டம் வயதானவர்கள், குழந்தைகளுடன்தான் போராட முடியும். அதிகமாகப் போனால் நமது கையாலாகாத மன்னரை சுரண்ட முடியும். வேறென்ன முடியும்?" என்று வினவினான். "சலூம்பிரா! நீராவது வீரர்களோடு போராட பழகிக்கொள்ளும். வாரும் வெளியே" என்று வெறுப்பு நிரம்பிய குரலில் அழைத்தான்.

சலூம்பிரா அவன் அழைப்புக்கு இணங்கி வெளியே செல்லவில்லை. கல்லாய் சமைந்து நின்று விட்டார் பல விநாடிகள். "என்ன! அர்ஜுன்சிங் குழந்தைகளைக் கொன்றானா?" என்று வியப்பும் அதிர்ச்சியும் நிரம்பிய குரலில் வினவினார்.

சங்கிரமசிம்மன் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "உங்களுக்கு அந்த படுகொலையைப் பற்றி எதுவுமே தெரியாதா?" என்று வினவினான்.

தெரியாது என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தார் சலூம்பிரா. அதுவரை மவுனமாயிருந்த சோம்ஜி "வீரர்களே! நீங்கள் சண்டையிட உங்களை இங்கு நான் அழைக்கவில்லை" என்று கண்டிக்கும் குரலில் சொன்னார்.

"வேறு எதற்கு அழைத்தீர்கள்?" என்று சலூம்பிரா கேட்டார் சினம் துளிர்த்த குரலில்.

"ஆம். எதற்கு வரவழைத்தீர்கள்?" என்று சங்கிரமசிம்மனும் வினவினான்.

"உங்கள் சண்டையை விட முக்கியமான சண்டை இருக்கிறது" என்றார் சோம்ஜி.

"அப்படி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" மூர்க்கத்தனமாகப் பேசினான் சங்கிரமசிம்மன்.

அதுவரையில் இந்த சொற்போரை ஏதும் பேசாமல் கவனித்துக் கொண்டிருந்த தீப்சந்த் "எதற்கும் மந்திரியவர்கள் சொல்வதைக் கேட்போமே" என்று மெதுவாகப் பேசினான்.

அதுவரை சங்கிரமசிம்மனுடன் சொற்போர் புரிந்து கொண்டிருந்த சலூம்பிரா அப்பொழுதுதான் தீப்சந்தை நோக்கினார். அவருக்கு சங்கிரமசிம்மனிடம் இருந்த கோபத்தை தீப்சந்தின் மீது காட்டி "மந்திரி பிரமாதமாக என்ன சொல்லிவிடப் போகிறார்?" என்று கேட்டார்.

www.cleanindians.com



"கேட்டால்தானே தெரியும் பிரமாதமா இல்லையா என்பது" என்று சுட்டிக்காட்டினான் தீப்சந்த்.

"தீப்சந்த்! உனக்கு இதில் என்ன சம்பந்தம்? மந்திரியின் விவகாரங்களிலும் அரசியலிலும் தலையிட உனக்கென்ன உரிமை?" என்று சலூம்பிரா வினவினார்.

தீப்சந்த் புன்முறுவல் கொண்டான். முகத்தில் சிறிது சிந்தனையையும் காட்டினான். "மன்னருக்கு அரசியலில் உள்ள உரிமை எனக்கும் உண்டு" என்றான் மெதுவாக.

இதைக் கேட்டதும் சலூம்பிரா, சங்கிரமசிம்மன், சோம்ஜி மூவருமே தீப்சந்தை நோக்கினார்கள் ஏதும் புரியாமல். அவர்கள் குழப்பத்தைக் கண்ட தீப்சந்த் "இன்றுதான் ஒப்புக்கொண்டேன் மகாராணாவின் மெய்க்காவலனாகவும் படைத்தலைவனாகவும் இருக்க" என்று கூறினான்.

சோம்ஜி திகைத்தார். "என்ன! மகாராணாவின் படைத்தலைவனா!" என்று வினவினார் திகைப்பின் ஊடே.

"படைத்தலைவனாயிருக்க எனக்கு தகுதியில்லையா?" என்று கேட்டான் தீப்சந்த்.

"இங்கு சந்தாவதர்கள் படை, சக்தாவதர்கள் படை இரண்டுதான் இருக்கின்றன. அவற்றுக்குத் தலைவர்களும் இருக்கிறார்கள்" என்று சோம்ஜி விளக்கினார்.

"அவற்றால் மன்னருக்கு உபயோகம் ஏதுமில்லை" என்றான் தீப்சந்த்.

"வேறு ஏது படை?" சலூம்பிரா கேட்டார்.

"என் சொந்தப்படை, பத்தாயிரம் வீரர்களைக் கொண்டது. இன்னும் சில நாட்களில் இங்கு வந்து சேரும்" என்று தீப்சந்த் பதில் சொன்னான்.

"வந்து என்ன செய்யும்?" என்று சங்கிரமசிம்மன் கேட்டான் கோபத்துடன்.

"உங்கள் இருவர் படைகளும் கைகலக்காமல் தடுக்கும்" என்று உறுதியுடன் சொன்னான் தீப்சந்த்.

அப்பொழுது இடைமறித்த சோம்ஜி "தீப்சந்த்! சக்தாவதர்களையும் சந்தாவதர்களையும் ஒன்றுபடுத்தத்தான் இங்கு அவர்களை வரவழைத்தேன். ஆகையால் உன் படைக்கு தேவையிருக்காது" என்றார்.

"நாங்கள் ஒன்றுபடுவது முடியாத காரியம்" என்றார் சலூம்பிரா.

"இந்த ஒரு விஷயத்தில் எங்களுக்குள் கருத்து ஒற்றுமையிருக்கிறது" என்றான் சங்கிரமசிம்மன்.

அதுவரை சாய்ந்திருந்த சோம்ஜி எழுந்திருந்தார். "ராஜபுதனத்தை பெரும் தீமை எதிர்கொண்டிருக்கிறது. நீங்கள் ஒன்றுபட்டால் ராஜபுதனம் பிழைக்கும். இல்லையேல் நீங்களும் அழிவீர்கள், அதுவும் அழியும்" என்றார். அவர் குரலில் உணர்ச்சி அதிகமாயிருந்தது. அவர் மேலும் சொன்னார் "இந்த ராஜபுதனம் இதுவரை சந்தாவதர்களாலும் சக்தாவதர்களாலுமே காப்பாற்றப்பட்டு வந்தது. இனியும் அதைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு" என்று.

சலூம்பிரா கேட்டார் "சோம்ஜி! சுற்றிவளைக்க வேண்டாம். சொல்வதை திட்டமாகச் சொல்லும்" என்றார்.

"திட்டமாகவே சொல்கிறேன். கேளுங்கள். மகாராஷ்டிரர் ராஜபுதனத்தின் மீது படையெடுத்துவிட்டார்கள். ஏற்கனவே சில இடங்கள் பிடிபட்டுவிட்டன" என்றார் சோம்ஜி.

அதுவரை இருந்த விரோதங்கள் மறைந்ததால் சலூம்பிரா பயங்கரமாக கூறினார் "அவர்களை கூண்டோடு ஒழித்துக்கட்டி விடுகிறேன்" என்று. வாளையும் உருவினார் வேகமாக. அதே சமயத்தில் உருவப்பட்ட சங்கிரமசிம்மன்

www.cleanindians.com



வாளும் சலூம்பிராவின் வாளுடன் இணைந்தது. அந்த சமயத்தில் மகாராஷ்டிரர் படையெடுக்கிறார்கள் என்ற செய்தி அளித்த வேகத்தில் சுயபூசல்கள் மறைந்தன. வாட்கள் இணைந்தன ஒற்றுமைக்கு அறிகுறியாக.

சங்கிரமசிம்மன் தலை வணங்கினான் சலூம்பிராவுக்கு.

சலூம்பிராவும் வாளை தாழ்த்தி சங்கிரமசிம்மனை அணுகி அவனைத் தழுவிக்கொண்டார்.

சோம்ஜியின் கண்களில் ஆனந்த நீர் துளிர்த்தது. "மேவார் பிழைத்தது" என்று சொற்கள் அவர் உதடுகளில் உற்பத்தியாகி இதயத்தைத் தொட்டன.

## 19. மூன்று சந்தேகங்கள்!

சந்தாவதர்களின் தலைவரான பீம்சிங் சலூம்பிராவும் சக்தாவதர்களின் உபதலைவனான சங்கிரமசிம்மனும் தழுவிக் கொண்டதால் மேவார் ராஜ்யம் பிழைத்ததென நம்பி மந்திரி சோம்ஜி ஆனந்தக் கண்ணீர் உகுத்த போதும், அந்த இரு குலத்தாரின் ஒற்றுமை பயனளிக்கும் என தீப்சந்த் நம்பவில்லை.

மகாராஷ்டிரர்கள் படையெடுத்து விட்டார்கள் என்றதைக் கேட்டதால் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் இணைந்த வாட்கள், அந்த உணர்ச்சி தீர்ந்து சுயநலம் தலை காட்டியதும் ஒன்றையொன்று மோதிக்கொள்ளும் என்று திட்டமாக நம்பினாலும், அதை அவன் அந்த சந்தர்ப்பத்தில் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அந்த ஒற்றுமை நாடகத்தில் தானும் பங்கு கொண்டவன் போலவே நடித்தான். சோம்ஜியின் தூய கடமை உள்ளத்தின் விளைவாக அவர் கண்களில் உதிர்ந்த நீரைப்

பார்த்து "ராஜபுதனத்தில் இப்படியும் ஒரிருவர் இருப்பதால்தான் ராஜபுதனம் உயிரோடு இருக்கிறது" என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

அவன் மனதில் ஏதோ எண்ணங்கள் ஓடுவதையும், மகிழ்ச்சியில் அவன் உண்மையில் பங்கு கொள்ளாததையும் மிகவும் கூர்மையான தமது புத்தியால் ஊகித்துவிட்ட சோம்ஜி "தீப்சந்த்! இந்த ஒற்றுமை நாட்டுக்கு ஏற்பட கூடிய நன்மையின் தன்மை, அளவு, நீண்டகால திடம் இவை உனக்குப் புரியவில்லையா?" என்று வினவினார்.

தீப்சந்த் சிறிதும் தாமதிக்காமல் உடனடியாக பதில் சொன்னான் "ஏன் புரியவில்லை? நன்றாகப் புரிகிறது" என்று. அவன் அதைச் சொன்ன முறையும் இதழ்களில் இளநகை கூட்டியவிதமும் சோம்ஜிக்கு சந்தேகமாக இருந்ததால் "உனக்கு ஏதாவது சந்தேகமிருந்தால் அவர்களையே கேட்கலாம்" என்று சொன்னார்.

தீப்சந்த் மிகுந்த அச்சத்தை முகத்தில் காட்டினான். "மேவார் ராணாக்களுக்கு பெரும் தொண்டு செய்து நாட்டுக்காக உயிரைத் தியாகம் செய்த வீரர்கள் குலத்தின் இரு பிரிவுகள் சந்தாவதர்களும் சக்தாவதர்களும். அவர்களைக் கேட்க எனக்கு தகுதி என்ன இருக்கிறது? இப்பொழுது தங்கள் முன்பு தழுவிக்கொண்ட இருதரப்பு தலைவர்களும் இத்தனை நாள் ஏன் தழுவிக் கொள்ளவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. ஒரு குலத்தில் இரு கிளைகள் இத்தனை நாள் ஏன் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன என்பதும் என் அறிவுக்கு அப்பார்ப்பட்டதாக இருக்கிறது. ஆனால் இந்த நட்பு பழய விரோதங்களை மறக்க அடிக்குமா என்பதும் சந்தேகமாயிருக்கிறது" என்று தீப்சந்த் தனது சந்தேகங்களை மெதுவாக அவிழ்த்தான்.

இதைக் கேட்டதும் சோம்ஜி மிகுந்த சங்கடத்துக்குள்ளானார். "எதிலும் சந்தேகம் கொள்வது அனர்த்தத்தைதான் விளைவிக்கும். சலூம்பிராவும் சங்கிரமசிம்மனும் மகா வீரர்கள். செய்த முடிவுக்காக உயிரையும் விடுவார்கள்" என்று அந்த இரு வீரர்களின் பெருமையை எடுத்துச் சொன்னார்.

www.cleanindians.com



தீப்சந்தின் கண்கள் மட்டும் லேசாகச் சிரித்தன. "இப்பொழுது அவர்கள் செய்திருக்கும் முடிவு அவர்கள் உயிரைப் பறிக்குமா?" என்று வினவினான்.

"ஏன் பறிக்க வேண்டும்?" என்று சோம்ஜியும் கேட்டார்.

"மகாராஷ்டிரர் படையெடுப்பைத் தடுக்க போராட வேண்டும். மகாராஷ்டிரர்களும் அல்ப சொல்பமானவர்கள் அல்ல. அவுரங்கசீப்பையே எதிர்த்து சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கியவர்கள். நாம் சாம்ராஜ்ஜியத்தை இழந்தவர்கள். அவர்கள் படைபலம் பெரிது. அதைவிட போர்த் தந்திரமும் புத்திபலமும் பெரியவை. நாம் போராடப் போவது பெரும்படைகளோடு மட்டும் அல்ல. மகாராஷ்டிரர்களின் தந்திரத்துடனும் போராட வேண்டும். பூனாவில் இருக்கும் பேஷ்வா பெரிய குள்ளநரி. நம் மீது படையெடுக்கக் கூடியவர் அருகிலுள்ள மகதாஜி சிந்தியா புத்திபலம் படைபலம் இரண்டும் உடையவர். அங்கு பணபலம் கிடையாது. அதை சுரண்ட ராஜபுதனத்தின் மீது படையெடுக்கிறார்கள்" என்ற தீபசந்த் "பெரும் ஆபத்தில் மேவார் சிக்கியிருக்கிறது. இதிலிருந்து மீள சந்தாவதர்கள் சக்தாவதர்கள் பலம் மட்டும் போதாது" என்று சொன்னான்.

அதுவரை ஏதும் பேசாமலிருந்த பீம்சிங் சலூம்பிராவின் முகத்தில் சினம் ஏறியது. "வேறு யார் பலம் வேண்டும்? உன் பலமா! உன் உதவியா?" என்று சினத்துடன் கேலியையும் கலந்து கொண்டு வினவினார்.

தீப்சந்த் அவரை ஏறெடுத்து நோக்கினான். "நமது மந்திரியின் திட்டம் உருவாகுமுன்பே எனது படைகள்

இங்கு வர உத்தரவு அனுப்பிவிட்டேன். எப்படியும் என் உதவி உங்களுக்கு இருக்கிறது. ஆனால் சக்தாவதர்களும் சந்தாவதர்களும மட்டும் ராஜபுதனமல்ல. கோட்டா சமஸ்தானாதிபதி சலீம்சிங்கின் ஒத்துழைப்பு வேண்டும். அவர் படையும் இணையவேண்டும்'' என்று சொன்னான் தீப்சந்த் துணிவுடன்.

''பூ! இவ்வளவுதானா?'' என்று அலட்சியமாகக் கேட்டு ஒரு நிதானத்துக்கு வந்துவிட்ட சலூம்பிரா 'ஜலீம்சிங் எனது நண்பன். அவனை வரவழைப்பதில் கஷ்டமில்லை'' என்று கூறினார்.

அதுவரை மவுனமாயிருந்த சங்கிரமசிம்மன் ''இன்னும் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?'' என்று வினவினான் தீப்சந்தை நோக்கி இகழ்ச்சி நிரம்பிய குரலில்.

''வேறு என்ன இருக்கிறது? முடிந்துவிட்டது. கோட்டாவும் மேவாரும் ஒன்றுபட்டால் ராஜபுதனம் ஒன்று பட்டது போல்தான்'' என்று சோம்ஜி மகிழ்ச்சியுடன் சொன்னார்.

ஆனால் தீப்சந்த் அத்துடன் விஷயத்தை முடிக்கவில்லை. ''இன்னும் ஒரே ஒரு சந்தேகம்'' என்றான் மெதுவாக.

''என்ன அது?'' என்று குழப்பத்துடன் கேட்டார் சோம்ஜி.

''சிறுவன்! அவனைப்பற்றி கவலைப்படாதீர்கள்'' என்ற சலூம்பிரா, தீப்சந்தின் அருகில் வந்து முதுகில் ஆதரவாகத் தட்டிக்கொடுத்து ''தம்பீ! உனக்கு உலக அனுபவம் போதாது. சும்மா இரு'' என்றார்.

தீப்சந்த் முதுகில் அவர் கொடுத்த தட்டல் என்ற அறையை அவன் லட்சியம் செய்யவில்லை ''சலூம்பிரா! நீங்கள் என்னை மட்டும் சகோதரனாக நினைக்கக்கூடாது. எல்லோரையும் நினைக்கவேண்டும்'' என்றான்.



''அப்படியே ஆகட்டும்'' என்றார் சலூம்பிரா ''தம்பீ! இன்னும் என்ன வேண்டும்?'' என்று குதூகலத்துடன் மேலும் வினவினார்.

''தம்பியை சதா கேள்வி கேட்காதீர்கள். அவன் ஏதாவது புதுப் பகைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பான்'' என்றான் சங்கிரமசிம்மன்.

தீப்சந்த் முகத்தில் இகழ்ச்சி கலந்த மகிழ்ச்சியைக் காட்டினான். ''இவ்வளவு பேர்கள் எனக்கு அண்ணன்மார்கள் ஆனது மிகவும் சந்தோஷம். ஆனால் இந்த சகோதர முறை நீடிக்க வேண்டுமானால நாம மனதை விட்டுப் பேச வேண்டும்'' என்றான் இகழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

அதுவரை குனிர்ந்திருந்த சலூம்பிரா ''நாங்கள் என்ன உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகிறோம்?'' என்று சீறினார்.

''இவனை அதிகமாகப் பேசவிட்டதே பிசகு'' என்றான் சங்கிரமசிமமன்.

''நானாகப் பேசவரவில்லை நீங்கள் கருத்தைக் கேட்டதால் சொன்னேன். இன்னும ஒரு சந்தேகமும் இருக்கிறது'' என்று அதிர் வெடியை வீசினான் தீப்சந்த்.

விவாதம் நீடிக்க நீடிக்க சோம்ஜியின் முகத்தில் கவலை படர்ந்தது. ''இவன் சந்தேகத்தை நான் தீர்க்கிறேன். நீங்கள் செல்லுங்கள். மேவாரின் பாதுகாப்பை பலப்படுத்துங்கள். மகாராஷ்டிரர் படை முன்னேறு முன்பு அவற்றைத் தடைசெய்ய முயலுங்கள்'' என்று அவர்களை வெளியே அனுப்ப முயன்றார்.

''அவன் சந்தேகங்களை என் முன்பாகவே பேசட்டும்'' என்றார் சலூம்பிரா.

''அதுதான் சரி'' என்றான் சங்கிரமசிம்மன்.

தீப்சந்த் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கொண்டான். ''சலூம்பிரா நீங்கள் மகாவீரர். என்னைப்

www.cleanindians.com

போன்ற சிறு வீரர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவர்...'' என்று வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

''அதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினார் சலூம்பிரா.

''சொன்னால் கோபிக்கமாட்டீர்களே?'' திப்சந்த் கேட்டான் மிகவும் சாந்தமான குரலில்.

நீ என்ன கேட்டாலும் உன்மீது எனக்குக் கோபம் வராது'' என்றார் சலூம்பிரா தாராளத்துடன்.

திப்சந்த் உடனடியாக ஏதும் பேசவில்லை. அந்த மந்திராலோசனை சபையைச் சுற்றி கண்களை ஓடவிட்டான். சோம்ஜியையும் சலூம்பிரா இருவர் மீதும் மாறி மாறி கண்களை நிலைக்கவிட்டான். பிறகு சொன்னான் ''எனக்கு இன்னும் மூன்று சந்தேகங்கள் இருக்கின்றன'' என்று.

www.cleanindians.com

''இன்னும் மூன்று சந்தேகங்களா? கெட்டது குடி'' என்றான் சங்கிரமசிம்மன்.

''ராணாவின் குடிகெட்டு ரொம்ப நாளாகிறது. அது கிடக்கட்டும். எனது சந்தேகங்களுக்கு பதில் சொல்லுங்கள். மேவாருக்கு தலைநகரம் ஒன்றா இரண்டா? இது முதல் சந்தேகம்'' என்றான் திப்சந்த்.

சோம்ஜி அதிர்ச்சியடைந்து உட்கார்ந்துவிட்டார்.

மேவாரின் ஆதி தலைநகரான சித்தூர், பீம்சிங் சலூம்பிராவின் ஆதிக்கத்தில் இருக்கிறது. என்பதையும், அந்தத் தலைநகரில் அவர் இன்னொரு மன்னராக ஆட்சி புரிகிறார் என்பதும் உலகத்துக்கே தெரிந்திருந்ததால் அவர் அதைப்பற்றி எண்ணவும் மறுத்தார். எண்ண மறுத்தவர் எப்படிப் பேசுவார்? திகிலடைந்து உட்கார்ந்து விட்டார்.

அவர் மவுனத்தைக் கண்ட திப்சந்த் அவர் அச்சத்தை உணர்ந்து கொண்டான். ஆகையால் அவனே பேசினான்.



''மேவாரில் உலகம் காணாத விந்தை நடக்கிறது. இரண்டு தலைநகர்கள். சித்தூர் ஒன்று, உதயபூர் ஒன்று. இப்படி தன்நகரே இரண்டாயிருக்கும்போது ஒரு ராஜ்ஜியம் என்று இதை சொல்ல முடியாது. ஆகவே இங்கு ஒற்றுமை மேல்பூச்சுதான்...'' என்றான்.

இதனால் அங்கிருந்த யார் முகத்திலும் ஈயாடவில்லை. சலூமபிரா உறுமினார். சங்கிரமசிம்மன் ஏதோ சொல்ல முயன்று வாயை அடக்கிக் கொண்டான்.

இரண்டாவது சந்தேகத்தை வீசினான் திப்சந்த்.

''மந்திரி! மகாராஷ்டிரர்களுடன் போரிட இருக்கும் படைகளுக்கு சம்பளம் கொடுக்க உம்மிடம் பணமிருக்கிறதா?'' என்று கேட்டான் திப்சந்த்.

இதற்கு பதில் சொல்ல மந்திரியால் முடியவில்லை. சித்தூர் பகுதியிலுள்ள வரிகளை சலூம்பிராவே வசூலித்து தமது படைகளுக்கு சம்பளம் கொடுக்கிறார் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஆகவே எரிச்சலுடன் கேட்டார் ''அடுத்த சந்தேகத்தையும் கேட்டுத்தொலை'' என்று.

மூன்றாவது கேள்வியை வீசினான் திப்சந்த். ''உங்களிடம் பீரங்கிகள் எவ்வளவு இருக்கின்றன?'' என்று கேட்டான்.

மந்திரி மூர்ச்சை போடாத நிலை. அப்படியே திண்டில் சாய்ந்துகொண்டு கண்களை மூடினார். பூனை கண்ணை மூடினால் உலகம் இருண்டுவிடுமா? சலூம்பிரா அப்பொழுது இடியென முழங்கினார். ''சோம்ஜி! கவலைப்படாதீர்கள். படைகளுக்கு ஆயுதம் அளிப்பதும் நடத்துவதும் எங்களுக்குப் புதிதல்ல. அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்'' என்றார்.

சங்கிரமசிம்மன் தலையை ஆட்டினான் ஒப்புதலுக்கு அறிகுறியாக.

தீப்சந்த் நின்றபடியே பேசினான். "மந்திரி! இத்தனை தலைமுறைகள் நாம் போரிட்டது ஒரு முறை. இப்பொழுது நாம் நமக்குள் போரிடப் போவதில்லை. மொகலாயருடனும் போராடப் போவதில்லை. மகாராஷ்டிரர்களிடம் போராடப் போகிறோம். அவர்களிடம் மட்டுமல்ல அவர்களிடம் உள்ள பலமான இன்னொரு படையுடன் மோதப் போகிறோம். அது ஒரு இரும்புப் படை" என்றான்.

"இரும்புப்படையா!" வாயை பிளந்தார் சோம்ஜி.

"ஆம். வெள்ளைக்காரர்கள் படை. உங்களுக்கு எதிரே இரும்புச் சுவர் போல் நகர்ந்து வரும்" என்றான் தீப்சந்த்.

"அதை சமாளிக்க..." இழுத்தார் சோம்ஜி.

"தீப்சந்த் இருக்கிறான்" என்றான் தீப்சந்த்.

www.cleanindians.com

## 20. ரகசிய ராணி

**பா**ரதத்தில் போர் முறைகள் மாறிவிட்டதையும் புது முறைப் போர்கள் தலையெடுத்து விட்டதையும், அந்த வகையில் போராடினாலொழிய மகாராஷ்டிரர்களின் படையெடுப்பை சமாளிப்பது கஷ்டமென்று தீப்சந்த் கூறியதை, அந்த மந்திர ஆலோசனையில் சம்பந்தப்பட்ட யாருமே ரசிக்கவில்லை. மகாராஷ்டிரர்களுடன் இருக்கும் வெள்ளையர் படையின் பயங்கர சக்தியைப்பற்றி அவன் எடுத்துரைத்தபோது, போர் அனுபவம் இல்லாத தீப்சந்த் தங்களை பயமுறுத்துவதாகவே சலூம்பிராவும் சங்கிரமசிம்மனும் நினைத்தார்கள். அந்த வெள்ளையர் படையை சமாளிக்க தான் இருப்பதாக தீப்சந்த் சொன்னதும், அவன் துணிவையும் திமிரையும் எண்ணி மற்ற இரு மகா வீரர்களும் வியப்பே அடைந்தார்கள்.



அந்த வியப்பின் விளைவாக சலூம்பிரா சொன்னார் "இளங்கன்று பயமறியாது. துள்ளி விளையாடுகிறது. அதை ரசிப்போம். அதைப்பற்றி யாரும் பெரிதாக நினைக்க வேண்டாம்" என்று.

சங்கிரமசிம்மன் அப்படி தீப்சந்தை மன்னித்து விடுவதாகத் தெரியவில்லை. "இளங்கன்றாக இருந்தாலும் துள்ளி விளையாடும் நிலம் உண்டு. கண்ட இடத்தில் விளையாடினால் அதை பிடித்துக் கட்டி அடக்க வேண்டியது அவசியம்" என்றான் சற்றே சினத்தைக் காட்டி.

சங்கிரமசிம்மன் பேச்சைக் கேட்ட தீப்சந்த் புன்முறுவல் செய்தான். "இளங்கன்றை எப்படி அடக்குவதாக உத்தேசம்?" என்று வினவினான் புன்முறுவலின் ஊடே.

"காலம் வரட்டும் சொல்கிறேன்" என்று சற்று ஆணவத்துடன் பேசினான் சங்கிரமசிம்மன்.

"போர் நாட்டுக்கு வந்துவிட்டது. இன்னும் என்ன காலம் வரவேண்டும்?" என்று கேட்டான் தீப்சந்த்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால் தனது வாளின் மீது கையை வைத்தான் சங்கிரமசிம்மன். அப்பொழுது தலையிட்ட சலூம்பிரா, "சங்கிரசிம்மா! வாளைக் கொண்டு இந்த வாலிபனை அடக்க முடியாது. பெரிய வாள் வீரன். இவனிடம் வீண்சண்டை வைத்துக் கொள்ளாதே" என்று சொன்னார்.

சங்கிரமசிம்மன் முகத்தில் ஆச்சரிய ரேகை பெரிதாகப் படர்ந்தது. "சலூம்பிரா! தாங்களா இப்படிப் பேசுவது?" என்று கேட்டான்.

"இது விஷயத்தில் என்னைவிட காரணத்துடன் பேசுபவர் இருக்க முடியாது" இதை திட்டமாகச் சொன்னார் சலூம்பிரா. அதைச் சொல்லி கட்டுப் போட்டிருந்த தனது வாட்கரத்தையும் நோக்கினார்.

சங்கிரமசிம்மன் ஏதும் புரியாமல் விழித்தான். ''இந்த சிறுவன்...'' என்று ஏதோ இழுத்தான்.

''வாட்போரில் என்னை வென்றான்'' என்று வாசகத்தை முடித்தார் சலூம்பிரா.

அதை நம்பமுடியாததால் ''நேர் போரிலா?'' என்று சங்கிரமசிம்மன் கேட்டான்.

''ஆமாம். நேரான தர்மமான போரில்'' என்றார் சலூம்பிரா.

அவர் சொற்களைக் கேட்ட சங்கிரமசிம்மன் மட்டுமின்றி சோம்ஜியும் வியப்பின் எல்லையை எய்தினாலும், சோம்ஜி மட்டும் ''சலும்பிரா! இது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது'' என்று சொன்னார்.

''பெருந்தன்மையை அல்ல சோம்ஜி, உண்மையைக் காட்டுகிறது. என் ஆயுளில் நான் சந்தித்த மிகப்பெரிய வாள் வீரர்களில் தீப்சந்தும் ஒருவன். இதில் சந்தேகம் வேண்டாம்'' என்றார்.

www.cleanindians.com

''அந்த வீரத்தை நானும் சிறிது பார்க்கிறேனே'' என்ற சங்கிரமசிம்மன் மறுபடியும் வாளின்மீது கையை வைத்தான்.

தீப்சந்தின் கண்களில் ஏளனச் சிரிப்பு உதிர்ந்தது. ''நமது வீரத்தைக் காட்டி நம்மை நாமே கொன்று கொள்வதைவிட எதிரிகளை கொல்வதில் நமது சாமர்த்தியத்தை உபயோகிப்பது நல்லதல்லவா?'' என்று சொன்னான் தீப்சந்த்.

இந்த இடத்தில் உரையாடலில் மந்திரி புகுந்து ''தீப்சந்த் சொல்வதில் நியாயமிருக்கிறது.'' என்றார்.

''என்ன நியாயம்? தற்பெருமை நியாயமாகுமா?'' என்று சங்கிரமசிம்மன் கேட்டான்.

''வயது அப்படிப் பேசச் செய்கிறது. அதை மன்னித்துவிடு'' என்றார் சோம்ஜி.



சங்கிரமசிம்மன் மன்னிக்கும் மனநிலையில் இல்லை. கோபமாக தீப்சந்த், சோம்ஜி இருவரையும் பார்த்துவிட்டு ''மந்திரி! என் படை போருக்கு என்றும் சித்தமாயிருக்கும். சலூம்பிரா என்றைக்கு மகாராஷ்டிரர் படைகளை நோக்கி நகருகிறாரோ அன்று என் படையும் நகரும்'' என்று கூறிவிட்டு சலூம்பிராவுக்கும் மந்திரிக்கும் தலைவணங்கி வெளியேற முயன்றான்.

அப்பொழுது தீப்சந்த் ஒரு கேள்வியை வீசினான், ''படைகள் சித்தமாயிருக்கலாம். தலைமை வகித்து நடத்தும் பொது சேனாதிபதி யார்?'' என்று.

வெளியேறத் தொடங்கிய சங்கிரமசிம்மன் திரும்பினான் வேகமாக. ''அவரவர் படைகளுக்கு அவரவர் தலைவர்'' இது கூடத் தெரியாதா உனக்கு?'' என்று வினவினான் ஆத்திரத்துடன்.

''அப்படி தலைக்குத்தலை தலைவர்களாக இருந்து தான் ராஜபுதனம் அழிந்திருக்கிறது. ஏற்கனவே நிகழ்ந்துள்ள சரித்திரம் நமக்கு படிப்பினையை கொடுக்கவில்லையென்றால் இனிமேலும் நாம் உருப்படுவது சந்தேகம்'' என்ற தீப்சந்த் ''மந்திரி! ராஜபுதனப் படைகளை நடத்த ஒரு பொதுத் தலைவன் தேவை. தலைக்குத்தலை நாட்டாண்மையால் மறுபடியும் தோல்வியே ஏற்படும் ராஜபுதனம் சாம்ராஜ்யத்தை இழந்து நிற்கிறது. மகாராஷ்டிரர் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி வருகிறார்கள். அவர்களை எதிர்க்க ஒரே தலைவனின் கீழ் இயங்கும் திறமையான படை தேவை. அந்த தலைவன் யார் என்பதை முடிவு செய்யுங்கள். அவரிடம் பணிசெய்ய நான் சித்தமாயிருக்கிறேன்'' என்றும் கூறினான்.

இதை தீப்சந்த் பேசியதும் சலூம்பிரா, சங்கிரமசிம்மன் இருவருமே சோம்ஜி என்னும் சோம்சந்த் காந்தியை நோக்கினார்கள். சோம்ஜியின் பார்வை மெதுவாக சலூம்பிரா மீது நிலைத்தது. ''இங்கு வயதிலும்

போர் அனுபலத்திலும் சஜூம்பிரா பெரியவர்...'' என்று பேசத் தொடங்கினார்.

சங்கிரமசிம்மன் விழி விழித்தான் ''மந்திரி! இதில் வயதல்ல முக்கியம். சந்தாவதர்களுக்கு சக்தாவதர்கள் குறைந்தவர்களல்ல'' என்று சுட்டிக்காட்டினான்.

ஏற்கனவே மேவார் அரசை இரண்டாகப் பிளந்திருக்கும் சந்தாவதர்—சக்தாவதர் போட்டி மீண்டும் தலையெடுப்பதை நினைத்து சோம்ஜி கலங்கினார். இருப்பினும் தைரியத்துடன் சொன்னார் ''சங்கிரமசிம்மா! உன் வீரத்தையோ சக்தாவதர்களின் வீரத்தையோ நான் சந்தேகிக்கவில்லை. வெளியார் படையெடுத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் பதவியை நினைத்து நாம் பிளவுபட்டால் மேவார் போய்விடும். இந்த போர் முடியும்வரை சஜூம்பிரா சேனாதிபதியாக இருக்கட்டும்'' என்றார் மிகவும் தீனமான குரலில்.

சங்கிரமசிம்மன் பதில் சொல்லவில்லை

தீப்சந்த் மட்டும் பதில் சொன்னான் ''எனக்கு சம்மதம்'' என்று.

சங்கிரமசிம்மன் வேண்டா வெறுப்பாக தலையை அசைத்துவிட்டு வெளியேறினான். ஆனால் அன்றைய முடிவு எத்தனை விபரீதங்களை மேவாரில் விளைவிக்கப் போகிறது என்பதை மந்திரி சோம்ஜி அன்று உணரவில்லை. அந்த முடிவு அவரது உயிருக்கே உலைவைக்கும் என்பதையும் அவர் அறியவில்லை. நாட்டு நன்மையை முதன்மையாக வைத்து அன்று அவர் அந்த முடிவைச் செய்தார்.

அவர் முடிவு சந்தாவதர்கள் சக்தாவதர்களின் விரோதத்தை முறியடிக்கவில்லை. முடிவைக் கேட்டதும் சங்கிரமசிம்மன் வெளியேறினான் போருக்கு ஒப்புதல் தந்து. சஜூம்பிரா வெற்றிப் புன்னகை செய்தார். ''மந்திரி! கவலை வேண்டாம் மகாராஷ்டிரர்களை நானே வெற்றிகொள்கிறேன். சங்கிரமசிம்மன் இல்லாவிட்டால்

www.cleanindians.com



கோட்டா சமஸ்தானாதிபதி ஜலீம்சிங் இருக்கிறான் நமக்கு உதவ. அவன் பெரும்படையும் இருக்கிறது. தவிர தீப்சந்த் இருக்கிறான்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

அவ்விருவரும் சென்றதும் தீப்சந்தை உற்று நோக்கிய மந்திரி சோம்ஜி ''தீப்சந்த்! இந்த முடிவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினார்.

தீப்சந்த் தனது முகத்தில் வருத்தத்தை படரவிட்டுக் கொண்டான். ''நமது நாடு கட்சி விரோதங்களால் அழிந்தது. நாட்டுப்பற்றில்லாமல் தங்கள் நலனை மட்டும் உத்தேசிக்கும் கட்சிகள் இருக்கும் வரை இந்த நாடு உருப்படுவது கஷ்டம். ஆனால் பொது விரோதி வரும் போதாவது இவர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்களா பார்ப்போம்'' என்று கூறினான். அவன் குரலில் தொனித்த சோகம் முகத்திலும் தெரிந்தது.

சோம்ஜி சோக பிம்பமாகத் தெரிந்தார். ''நல்லதோ பொல்லாததோ எனக்கு சரியென்று தெரிந்த முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்று கூறிய அவர் சொற்களிலும் சோகம் பெரிதாக ஒலித்தது. ''எதற்கும் இங்கு நடந்ததை ராஜமாதாவிடம் தெரிவித்துவிடு'' என்றும் சொன்னார்.

''உத்தரவு மகாமந்திரி. அப்படியே செய்கிறேன். நாளை நான் ஊருக்கு கிளம்புமுன்பு உங்களை சந்திக்கிறேன்'' என்று கூறி கிளம்ப முற்பட்டவனை சோம்ஜி தடுத்து ''ஊருக்கா!'' என்று வியப்புடன் கேட்டார்.

''ஆம்.''

''உனது வீரர்கள் பத்தாயிரம் பேர் உதயபூருக்கு வரப்போவதாகச் சொன்னாயே?''

''ஆம் சொன்னேன்.''

''அவர்கள் வரும்போது நீ இருக்க வேண்டாமா?''

''அதற்குள் வந்து விடுவேன்.''

''அதற்குள் மண்டலக் கோட்டைக்குச் சென்று திரும்பி விடுவாயா?''

''அங்கு போகப் போவதில்லை. நேராக நாகராமக்ரா வுக்கு சென்று திரும்பிவிடுவேன்.''

இதைக் கேட்ட சோம்ஜி ''அங்கு எதற்கு?'' என்று கேட்டார்.

''புஷ்பாவதியை கொண்டுபோய் விடவேண்டும். இரண்டாவதாக அங்குள்ள ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டும்'' என்றான் திப்சந்த்.

சோம்ஜி சிந்தனை வசப்பட்டார். ''புஷ்பாவதியை நீ கொண்டுபோய் விடவேண்டிய அவசியம் தெரிகிறது. வந்தபோதே அவளை சந்தாவதர்கள் மறித்து தூக்கிச் செல்ல முயன்றார்கள். ஆனால் இன்னொரு பெண் யார்?'' என்று கேட்டார் தீவிர சிந்தனைக்குப் பிறகு.

www.cleanindians.com

திப்சந்த் அவருக்கு மட்டும் கேட்கும்படி பேசினான். அவர் காதுக்கருகில் குனிந்து ''ரகசிய ராணி'' என்று சொன்னான் ரகசியமாக.

''மந்திரி பிரமித்தார். ''என்ன! ரகசிய ராணியா!'' என்றும் கேட்டார்.

''மகாராணாவுக்கு அங்கு ஒரு ராணி இருக்கிறாள். அதை ரகசியமாக வைத்திருக்கிறார் மகாராணா'' என்றான் திப்சந்த்.

இந்த புது செய்தியைக் கேட்டு திடுக்கிட்டார் மந்திரி. ''மகாராணா இருக்கும் லட்சணத்துக்கு ரகசிய ராணி வேறா? இங்குள்ள ராணிகளை நிர்வகிக்கவே பணம் இல்லை'' என்று எரிந்து விழவும் செய்தார். ''அந்த ராணியின் பெயர் என்ன?'' என்று கேட்டார்

''தெரியாது.''

''தெரியாதா? அப்படியானால் ராணி இருப்பது மட்டும் எப்படித் தெரியும்?''



''பார்த்தேன்.''

''என்ன பார்த்தாய்?''

''மகாராணா ராணியை கட்டித் தழுவுவதை.''

''சீ...சீ...! அதைப் பார்க்கலாமா?''

''வேண்டுமென்று பார்க்கவில்லை தற்செயலாகப் பார்த்தேன்.''

அதற்கு மேல் சோம்ஜி ஏதும் பேசவில்லை. ''சரி அவள் யார் என்பதையும் குலத்தையும் பெயரையும் விசாரித்து வா'' என்று மட்டும் சொன்னார்.

அங்கிருந்து கிளம்பிய திப்சந்த் தனது புரவியில் ஏறி அரண்மனைக்கு வந்தான். பழயபடி புரவியை புரவிக் கொட்டடியில் கட்டிவிட்டு அந்தப்புர நந்தவனத்தில் புகுந்தான். முந்தைய நாளைப்போல் அன்றும் வெண்மதி தன் கிரணங்களை வீசியிருந்தான் நந்தவனத்தின் மீது. அன்றும் திப்சந்த் கண்களை உயர்த்தினான் சாளரங்களை நோக்கி. சாளரங்களில் யார் முகமும் தெரியவில்லை. சாளரங்கள் எல்லாம் மூடியபடி இருந்தன. அதனால் ஏமாற்றப் பெருமூச்சுவிட்டு அந்தப்புரத்தை நோக்கி நடக்க முற்பட்டவன் பக்கத்திலிருந்த கொடி வீட்டில் யாரோ இருவர் பேசும் ஒலிகேட்டு சட்டென நின்றான். பேசிய இருவரில் ஒருவர் மகாராணா. இன்னொரு குரல் புஷ்பாவதியின் குரல்

''மகாராணா! இது உங்களுக்குத் தகுதியல்ல. போய் விடுங்கள்'' என்றாள் புஷ்பாவதி.

ஆனால் மகாராணா அவளுக்கு செவி சாய்க்கவில்லை.

## 21. கொடி வீட்டு நிகழ்ச்சிகள்!

இரவு முற்றிவிட்ட அந்த நேரத்தில், எங்கும் வெண் ணிலவு பரந்து நந்தவனத்தை அழகுபடுத்திய இரண்டா

வது ஜாமத்தின் இடையில், நேரம் ஏறிவிட்டதால் அந்தப்புர சாளரங்கள் அனைத்தும் அடைபட்டிருந்த சமயத்தில், முதல் நாளைப் போல அன்று புஷ்பாவதியின் முகம் சாளரத்தின் மூலம் வெளியே தெரியாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தில், நந்தவனத்திலிருந்து அந்தப்புரக் கட்டிடத்தை நோக்கி நடக்க முற்பட்டான் தீப்சந்த். அந்நேரம் நந்தவனக் கொடி வீட்டுக்குள் இருவர் உரையாடும் சத்தம் கேட்கவே சட்டென்று நின்றுவிட்ட தீப்சந்த், அந்த உரையாடலின் ஒரு பகுதி காதில் விழவே அதிர்ச்சியின் எல்லையை எய்தினான்.

''மகாராணா! இது உங்களுக்குத் தகுதியல்ல'' என்ற புஷ்பாவதியின் சொற்கள் காதில் விழுந்ததும் அதிர்ச்சி நீங்கி சினத்தின் எல்லையை எய்தினான்.

இருப்பினும் உடனடியாக கொடி வீட்டுக்குள் நுழையாமல் மேலும் என்ன நடக்கிறது என்பதை அறிய மெதுவாக நடந்து கொடி வீட்டின் வாயிலில் கொடி அடர்த்தியாக இருந்த இடத்தில் சாய்ந்து நின்று லேசாகக் கொடியை சிறிது விலக்கி உள்ளே நடப்பதை கவனிக்கலானான்.

www.cleanindians.com

உள்ளே மகாராணா புஷ்பாவதியிடம் இருந்து சற்று தள்ளியே நின்றிருந்தார். ஆனால் அவர் கணகளில் காமம் கொட்டி வழிந்து கொண்டிருநதது. எதிரே நின்றிருந்த புஷ்பாவதிய்ன் கண்கள் நெருப்பை கககிக் கொண்டிருந்தன.

மகாராணாவின் நடத்தை தகுதியற்றது என்று புஷ்பாவதி சொன்னதற்கு மகாராணா காமப் புன்முறுவல் செய்தார். ''புஷ்பாவதி! நீதானே என்னை நந்தவனத்தில் சந்திக்கச் சொன்னாய்? அபபடி அழைத்துவிட்டு இப்பொழுது இடக்கு செய்வது சரியா?'' என்று கேட்ட மகாராணா தமது உதடுகளை உள்ளே மடித்து சப்பிக் கொண்டார்.



புஷ்பாவதியின் கண்களில் அக்கினி அதிகமாகப் படிந்தது. மகாராணா! உங்களை நந்தவனத்துக்கு வரச் சொன்னேனே தவிர, இந்தக் கொடி வீட்டில் பதுங்கி இருக்கச் சொல்லவில்லை. நான் சொல்லக்கூடியதை பகிரங்கமாக அரண்மனையில் சொல்ல முடியாததால் இங்கு சந்திக்கச் சொன்னேன். கொடி வீட்டில் பதுங்கி என்னை அழைத்தீர்கள். உங்கள் பதவியை முன்னிட்டும் உங்கள் வம்சத்தை நினைத்தும் நீங்கள் இழிச் செயல்களில் ஈடுபட மாட்டீர்கள் என்று நம்பி நான் இங்கு வந்தேன்...'' என்று உணர்ச்சிப் பெருக்கால் வாசகத்தை முடிக்காமல் விட்டாள் புஷ்பாவதி.

அவள் மூச்சு பெருமூச்சாக வந்தது. முகம் கோபத்தால் சிவந்து கிடந்தது.

மகாராணா லேசாகப் புன்முறுவல் செய்தார். ''புஷ்பாவதி! என்ன இழிச்செயலை நான் செய்துவிட்டேன். உன் அழகைப் பாராட்டினேன். அதில் என்ன தவறு இருக்கிறது? இதோ இந்த கொடி வீடு மல்லிகைச் செடியால் மறைக்கப்பட்டிருக்கிறது இதன் மலர் அழகு என்று சொன்னால் தவறா?'' என்று மகாராணா கேட்டார்.

''மல்லிகைக்கு வாயில்லை மகாராணா! நீங்கள் அதைத் தொட்டாலும் பறித்தாலும் காலில் போட்டு நசுக்கினாலும் அது பேசாது, அலறாது. ஆனால், பெண்களுக்குப் பேச வரும். அவசியமானால் தொடும் கையை முறிக்கவும் தெரியும். தவிர மனிதன் பண்பாடு, முறை, என்பவை இருக்கின்றன. இன்னொருவனுக்கு சொந்தமான பெண்ணை நீங்கள் வர்ணிப்பதும் தவறு, அவளைப் பற்றி தவறாக நினைப்பது முறைகேடு'' என்று திட்டமாகச் சொன்ன புஷ்பாவதி வெளியே போக முயன்றாள்.

மகாராணா வழியில் குறுக்கே நின்று அவளைத் தடுத்தார். ''புஷ்பாவதி! நீ என்னைப் பார்க்க வந்ததாகத் தானே சொன்னாய்?'' என்று கேட்டார் குரலை சிறிது மாற்றிக்கொண்டு.

''ஆம், மகாராணா!''

''உன் தந்தை என்னைப் பார்க்கத்தானே அனுப்பினார்.''

''ஆம், மகாராணா!''

''ஏன் என்னைவிட்டு அந்த தீப்சந்திடம் போனாய்?''

''மகாராணா!'' புஷ்பாவதியின் குரல் தடித்து வந்தது.

''என்ன புஷ்பாவதி?'' மகாராணா கொஞ்சினார்.

''மகாராணா! யோசித்துப் பேசுங்கள். தீப்சந்த் போன்ற ஒரு மகாவீரனைப்பற்றி பேசக்கூட உங்களுக்குத் தகுதியில்லை. என் தந்தை உங்களிடம் அனுப்பியது கொடி வீட்டில் சரசமாட அல்ல. உங்களிடம் சேதி சொல்ல'' என்றாள் புஷ்பாவதி.

''என்ன சேதி?''

''உங்கள் ரகசிய ராணியைப் பற்றி.''

''ரகசிய ராணியா!'' அதிர்ச்சி தெரிந்தது மகாராணாவின் குரலில்.

''ஆம், நாகராமச்ராவில் உங்களால் வேட்டையாடப் பட்டவள். பிறகு வழியில்லாமல் உங்களை மணந்து கொண்டவள். உங்களுக்கொரு மகளையும் பெற்றுக் கொடுத்தவள். அந்த மகளின் உச்சிப்பூ இதோ இருக்கிறது'' என்று கூறி மடியில் இருந்து உச்சிப்பூவை எடுத்து மகாராணாவின் மீது எறிந்தாள் புஷ்பாவதி

''இந்த உச்சிப்பூ ராஜபுதனத்தை இரண்டு படுத்தும், முடிவில் அழிந்துவிடும். இதை அணிவது யாராயிருந்தாலும் அவனும் அழிந்துவிடுவான். இப்படி சோதிடர்கள் கூறினார்களாம். இதை உங்கள் பூஜா தெய்வத்துக்கு சாத்தினால் மேவார் பிழைக்குமாம் அதைச் செய்ய விழா எடுக்கச் சொன்னார்களாம் சோதிடர்கள்'' என்றும் சொன்னாள் புஷ்பாவதி.

புஷ்பாவதி எறிந்த அந்த உச்சிப்பூவை வெகு லாவகமாகக் கையில் பிடித்துக் கொண்ட மகாராணா அதை

www.cleanindians.com



உற்றுப் பார்த்தார். ''இவ்வளவு அழகான ஆபரணத்தால் என்ன ஆபத்து நேரிட்டுவிடும்? கேவலம் ஒரு ஆபரணம் நாட்டை அழிக்குமா? இந்த சோதிட உளறல்களுக்கு மகாராணா மயங்கமாட்டான்'' என்று கூறினார், உச்சிப் பூவை உற்றுப்பார்த்துக் கொண்டே. பிறகு ''இதை அந்த ரகசிய ராணியிடமே கொடுத்து அவள் மகளின் தலையில் சூட்டச் சொல்'' என்று அதை புஷ்பாவதியின் கையில் திணிக்க எண்ணி ''புஷ்பாவதி! உன் மலர்க் கையைக் காட்டு இதை வாங்கிக்கொள்'' என்று உட்புறமாக ஒரு அடி எடுத்து வைக்க முற்பட்டார்.

''மகாராணா! நெருங்க வேண்டாம். அப்படியே நில்லுங்கள். இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தாலும் உங்களைக் கொன்று விடுவேன்'' என்று சீறிய புஷ்பாவதி தனது இடையில் மறைத்து வைத்திருந்த சின்னஞ்சிறிய குறுவாளை எடுத்துக் கொண்டாள். ''மகாராணா! இந்த கத்தியைப் பாருங்கள். எத்தனை அழகாயிருக்கிறது? உங்கள் இதயத்துடன் இது இணைய ஆசைப்படுகிறது'' என்றும் கூறினாள்.

மகாராணா அவள் கோப விழிகளையும் துடிக்கும் உதடுகளையும், அவள் கையில் பளபளத்த மெல்லிய குறுவாளையும் கண்டு திகிலடைந்தார். அதன் விளைவாக இரண்டடி பின்னால் நகர்ந்தார். பின்னால் நகர்ந்து நகர்ந்து கொடி வீட்டு வாயிலுக்கு வந்ததும் சற்றே நிமிர்ந்த அவர் திகிலின் எல்லையை எய்தினார். தன் உடல் யார் மீதோ சாய்வதையும் கையொன்று எழுந்து தமது கழுத்தைத் தடவி வளைப்பதையும் உணர்ந்து திரும்ப முயன்றார். பிடித்த கை இரும்புக் கையாயிருந்தபடியால் அவரால் திரும்ப முடியவில்லை. ''யாரது மகாராணாவைத் தொடும் துணிச்சல் உள்ளவன்?'' என்று சீறி திமிற முயன்றார்.

மகாராணாவின் ஆட்டம் எதுவும் பலிக்கவில்லை. அவர் கழுத்தைச் சுற்றிய கை மேலும் இறுகியது. மகாராணா

வுக்கு மூச்சு விடுவது சிரமமாயிருந்ததால் ''உம்...உம்...'' என்று வேதனையுடன் முனகினார்.

கொடி வீட்டுக்குள் இருந்த புஷ்பாவதியின் கண்கள் கொடி வீட்டு வாயிலை பிரமிப்புடனும் அச்சத்துடனும் நோக்கின

தீப்சந்தின் இடது கை மகாராணாவின் கழுத்தை இறுக்கி பின்னால் அவரை இழுத்துக் கொண்டிருந்தது. ''விடுங்கள் அவரை. செத்துவிடுவார் போலிருக்கிறது'' என்று அச்சத்துடன் சொற்களை உதிர்த்தாள் புஷ்பாவதி.

அதனால் நஷ்டம் ஏதுமில்லை. மேவாருக்கு வீரனான மன்னன் கிடைப்பான்'' என்று சொன்ன தீப்சந்த் அவர் கழுத்தை மேலும் இறுக்கினான்.

''வேண்டாம் விட்டு விடுங்கள். அடுத்த மகாராணா யாரும் கிடையாது இங்கே. இதுவரை இவருக்கு மூன்றும் பெண்கள். ஆண் வாரிசு யாரும் இல்லை'' என்றாள் புஷ்பாவதி.

''இவருக்கு பெண்களை அதிகமாகப் பிடிக்கும். ஆகையால் பெண்கள் பிறந்திருக்கின்றனர். இவரைவிட அந்த பெண்களில் ஒருத்தியை ஆளச் செய்வது நல்லது'' என்ற தீப்சந்த் மகாராணாவை தனது பிடியிலிருந்து விடுவித்து ''மகாராணா! உங்களை நான் உயிருடன் விடுவது பிசகு. ஆனால் உங்கள் மெய்க்காவலனாக, உங்கள் பண்பாடற்ற தண்ட உடலையும் உயிரையும் பாதுகாக்க மகாராணியிடம் ஒப்புக் கொண்டதால் உங்களை விடுகிறேன். செல்லுங்கள்'' என்று கூற மகாராணா வெகு வேகமாக அந்தப்புரத்தை நோக்கி நடையைக் கட்டினார்.

அவர் போவதைப் பார்த்துக் கொண்டே நின்ற தீப்சந்த், கொடி வீட்டிற்குள் நின்ற புஷ்பாவதியை நோக்கினான்.

புஷ்பாவதி உணர்ச்சி மிகுதியால் தள்ளாடி நின்றாள். தீப்சந்த் உள்ளே சென்று அவள் அழகிய உடலை அணைத்

www.cleanindians.com



தான். அச்சத்தால் வேகமாக அடித்துக் கொண்ட அவள் இதயத்தின் மீது கையை வைத்து ''பயப்பட ஏதுமில்லை. வா நாம் உன் அறைக்குச் செல்வோம்'' என்று கூறி அவளை அணைத்தவண்ணம் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றான் தீப்சந்த். அறையை அடைந்ததும் ''புஷ்பாவதி! நாம் இப்பொழுதே புறப்படுகிறோம். தயாராக இரு'' என்றான்.

''எங்கே?'' என்று புஷ்பாவதி கேட்டாள்.

''நாகராமக்ராவுக்கு'' என்றான் தீப்சந்த்.

''என் தந்தையின் இருப்பிடத்திற்கா!'' புஷ்பாவதியின் குரலில் சிறிது அச்சம் தொனித்தது.

''ஆம்.''

''அங்கு எதற்கு?''

''ரகசிய ராணியை சந்திக்க.''

''எதற்கு?''

''காரணம் இருக்கிறது.''

''இங்கு மகாராஜாவை காப்பாது யார்?''

''இந்த நடத்தைகெட்ட மகாராஜாவை காப்பாற்ற அவசியம் இல்லை'' என்ற தீப்சந்த் ''உம...கிளம்பு'' என்று புஷ்பாவதியை துரிதப்படுத்தினான்.

புஷ்பாவதியின் முகத்தில் திடீரென குழப்பம் தெரிந்தது. அவள் பார்வையைத் தொடர்ந்து வாயிலை நோக்கினான் தீப்சந்த்.

அறைவாயிலில் ராஜமாதா ராம்பியாரி நின்றிருந்தாள். அவள் முகம் சோக பிம்பமாகக் காட்சி அளித்தது.

## 22. மன்னனும் மாதாவும்!

அறை வாயிலில் அதிர்ச்சியும் சோகமும் கலந்த முகத்துடன் ராஜமாதா ராம்பியாரி நிற்பதைக் கண்டதும்

தீப்சந்த் அச்சப்படவும் இல்லை; அவள் நிலை கண்டு அனுதாபப்படவும் இல்லை. இப்படியொரு கையாலாகாத காமப் பித்தனை மகாராணா பீம்சிங்கைப் பெற்றதற்கு மகாராணி எவ்வளவு சோகப்பட்டாலும் தவறில்லை என்றே நினைத்தான் வீரனான தீப்சந்த்.

அவன் உள்ளத்தில் ஏற்பட்ட வெறுப்பு முகத்திலும் தெரிந்ததைக் கவனித்த ராஜமாதா ஏதோ பேச முயன்று தனது இதழ்களைத் திறந்தும் சொல் ஏதும் வெளிவராததால் இதழ்களை இருமுறை திறந்து மூடவே செய்தாள்.

நடுவயதை அடைந்திருந்துங்கூட ராஜமாதாவின் உதடுகள் அழகுடனும உறுதியுடனும் இருப்பதைக் கண்ட தீப்சந்த் அவளை தனது நீ கக்கும் விழிகளால் ஏறெடுத்து நோக்கினான். "ராஜமாதா! தங்கள் கட்டளை ஏதாவது இருக்குமானால் சொல்லுங்கள். அதை நிறைவேற்றி விட்டுச் செல்கிறேன்" என்று கடுமை நிறைந்த குரலில் பேசினான்.

www.cleanindians.com

ராஜமாதா அதற்கு பதிலும் சொல்லவில்லை, அறை வாயிலை விட்டு நகரவும் இல்லை. அறைக்குள் புறப்பட சித்தம் செய்து கொண்டிருந்த புஷ்பாவதியை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

புஷ்பாவதி, மகாராணி வந்ததைக் கவனித்தும் கவனிக்காதது போலவே நடந்துகொண்டாள். "புறப்பட நான் தயார்" என்று ஒரு வார்த்தையை மட்டும் தீப்சந்தை நோக்கிக் கூறினாள்.

அதுவரை பேசாமலே நின்றிருந்த மகாராணி "எங்கு புறப்படுகிறாய் புஷ்பாவதி?" என்று மெதுவாக வினவினாள்.

புஷ்பாவதி அறையில் இருந்த கட்டில் அருகில் நின்றபடியே மகாராணியை திரும்பிப் பார்த்தாள். "எங்கு என் மானத்துக்கு பங்கம் வராதோ அந்த இடத்துக்கு" என்றும் சொன்னாள்.



இந்த உரையாடலுக்குள் மனதை உறுதிப்படுத்திக் கொண்ட ராஜமாதா கேட்டாள் "அது எந்த இடம் புஷ்பாவதி?" என்று.

"என் தந்தை இருக்கும் இடம்" என்றாள் புஷ்பாவதி.

"அங்குதானே என் மகனின் ஆசை நாயகி இருக்கிறாள்?" என்று கேட்டாள் மகாராணி.

"அவளை ரகசிய ராணி என்று அழைக்கிறோம்" என்று புஷ்பாவதி சொன்னாள்.

"நீங்கள் எப்படி அழைத்தாலும் அவள் மகாராணாவின் ஆசைநாயகிதானே?" இதை வெகு தந்திரமாகக் கேட்டாள் ராஜமாதா.

"அப்படியே வைத்துக்கொள்ளுங்கள், அதைப்பற்றி எனக்கென்ன?" என்றாள் புஷ்பாவதி.

"புஷ்பாவதி! நீ வயது வந்த பெண். திருட்டுத்தனமாக ஒரு பெண்ணுடன் சரசமாட அடிக்கடி மகாராணா நாகராமக்ராவுக்கு வருகிறார். அதற்கு உன் தந்தை இடங்கொடுப்பது மானமுள்ள நடத்தையா? அந்த இடம்தான் மானத்தைக் காக்கும் புண்ணிய பூமியா? அந்த இடத்தை விட இந்த அரண்மனை எந்த விதத்தில் குறைந்தது?" என்று கேட்ட மகாராணி "புஷ்பாவதி! என் மகனுக்கு நான் பரிந்து பேசுவதாக நினைக்காதே. அவன் நடத்தையும் கோழைத்தனமும் தினமும் என் உயிரை சிறிது சிறிதாகக் கரைத்துக் கொண்டு வருகின்றன. இப்பொழுது நான் பிழைத்திருப்பது மகனுக்காக அல்ல. மேவார் ராஜ்ஜியத்துக்காக. உன்னைவிட, என்னைவிட, மகாராணாவைவிட மேவார் பெரியது. அதைத்தான் தினமும் நான் எண்ணி எண்ணி இறந்து கொண்டிருக்கிறேன். என் மகன் நடத்தைக்கு பரிந்து நான் வரவில்லை. மேவாரையும் சூரிய குலத்து மன்னனை மகாராணாவையும் காப்பாற்ற தீப்சந்தை கேட்டுக்கொள்ளவே நான் வந்தேன்." என்று சொல்லி கண்களில் நீர் ததும்ப நின்றாள்.

அப்பொழுது பேசினான் தீப்சந்த் தனது மவுனத்தைக் கலைத்துக் கொண்டு "மகாராணி! தர்மங்களை பேச்சு சாதுரியத்தினால், உங்கள் உள்ள உணர்ச்சிகளால், மாற்ற முடியாது. உண்மையான எந்த ராஜபுத்திரனும் ராஜபுத்திரியும் மானமிழந்து வாழ இஷ்டப்பட மாட்டார்கள். இது உங்களுக்குத் தெரியாததல்ல. நாகராமக்ராவில் நடக்கும் மகாராணாவின் சாகசத்துக்கு புஷ்பாவதியோ அவள் தந்தையோ காரணமல்ல. மன்னர் இருக்கும் இந்த அரண்மனையைவிட இவள் தந்தையிருக்கும் நாகராமக்ராதான் புஷ்பாவதி இருக்கவேண்டிய இடம். இவள் தந்தை எந்த அநீதியையும் அனுமதிக்காதவர். என்னையே கொன்று விடுவதாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே புஷ்பாவதியை அங்கு அழைத்துப் போகிறேன்" என்று சொன்னான் தீப்சந்த்.

"தீப்சந்த்...!" மகாராணியின் உதடுகள் துடித்தன. அந்த ஒரு சொல்லும் தெளிவாக வரவில்லை அவள் வாயிலிருந்து.

"மகாராணி!"

"மகாராணாவை இந்த ஒருமுறை மன்னிக்கக் கூடாதா?"

"மன்னிப்பு சில காரியங்களுக்குத்தான் உண்டு மகாராணி."

"மேவார் என்ன ஆவது தீப்சந்த்?"

"மேவாரை நானா காப்பாற்றப் போகிறேன்? பொம்மையா கோபுரத்தைத் தாங்குவது? மகாராணி! பெரிய அரசுகளை அழித்திருப்பது ஆள்பவர்களின் நடத்தை கெட்டதால்தான்."

தீப்சந்தின் இந்தப் பேச்சில் மகாராணி கலங்கவில்லை. "தீப்சந்த்! மேவார் பெற்றெடுத்த செல்வம் நீ. அந்த அன்னை பூமியைக் காப்பது உனது கடமை அல்லவா?" என்று கேட்டாள்.

www.cleanindians.com



சற்று சிந்தித்த தீப்சந்த் "மகாராணி! எந்த மனிதனுக்கும் மனைவி, மாதா, இருவரையும் காக்கும் பொறுப்பு இருக்கிறது. அதற்காகத் திரும்பி வருவேன். ஆனால், புஷ்பாவதியை இங்கு இருத்தி வைக்க முடியாது. அவளை அவள் வீட்டில் விட்டு திரும்புகிறேன். எனது பீரங்கிகள் இங்கு வருமுன்பு நான் இங்கு வருகிறேன். என் உயிர் இருக்கும் வரை மகாராணாவைக் காப்பாற்றுகிறேன்" என்ற தீப்சந்த் தனது கச்சையை இறுகக் கட்டிக் கொண்டான். "புறப்படு புஷ்பாவதி" என்றும் சொன்னான்.

புஷ்பாவதி தனது சேலைத் தலைப்பை எடுத்து முக்காடிட்டுக் கொண்டு கிளம்பினாள். போகும் போது மகாராணியிடம் ஏதும் சொல்லாமலே புறப்பட்டாள். "புஷ்பாவதி!" என்ற மகாராணியின் அழைப்பு அவளை தடை செய்தது. திரும்பி நோக்கினாள் புஷ்பாவதி. "புஷ்பாவதி! தீப்சந்தின் கரம் உன்னைக் காக்கும் வரை உனக்குக் குறைவு எதுவும் இருக்காது. மகாராணாவைப் பற்றி மனம் நோகாதே நீ சபித்தால் மகாராணா அழிந்து விடுவான் உனக்கும் தீங்கு எதுவும் ஏற்படவில்லை. சமயத்தில் தீப்சந்த் வந்து விட்டான்" துக்கத்தால் மனம் கலங்கப் பேசினாள் ராஜமாதா.

மகாராணியை புஷ்பாவதி சீற்றம் மிகுந்த கண்களால் நோக்கினாள். "மகாராணி! ஏழைக்கும் மானம் உண்டு" என்று கூறிவிட்டு வாயிற்படியைத் தாண்ட முயன்றாள்.

மகாராணி வழிவிட்டு நின்றாள்.

தீப்சந்த் மகாராணிக்கு தலைவணங்கிவிட்டு புஷ்பாவதி பின்தொடர வெளியே வந்தான்.

அவர்கள் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற மகாராணி அங்கிருந்து மகாராணாவின் அறையை நோக்கி நடந்தாள்.

அன்று என்ன காரணத்தாலோ மகாராணாவின் அந்தரங்க அறை திறந்து கிடந்தது. அவருடைய முதல் ராணியும் அங்கு இல்லாததால் படுக்கையில் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார் மகாராணா.

''பீம்!'' மகாராணியின் உஷ்ணமான குரலைக் கேட்டு தலை நிமிர்ந்தார் மகாராணா. ''அம்மா! நீங்களா!''

''அந்த பாவத்தைச் செய்தவள்தான்.'' மகாராணியின் சொற்கள் வேகமாக உதிர்ந்தன.

''பாவமா! என்ன பாவம் செய்தீர்கள்?'' மகாராணா கேட்டார் பணிவுடன்.

''உன்னைப் பெற்ற பாவம்'' மகாராணியின் குரலில் வெறுப்பு இருந்தது. ''உன்னை நீயே அழித்துக்கொள்கிறாய்'' என்று தொடர்ந்து சொன்னாள்.

மகாராணாவுக்கு மற்றதில் அதிக புத்தியில்லா விட்டாலும் மகாராணியை அவர் நொடி நேரத்தில் புரிந்து கொண்டார். நந்தவனத்தில் நடந்தது அவள் காதில் விழுந்திருக்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டதால் ''அம்மா! நீங்கள் சொல்வது புரியவில்லை'' என்றார்.

''புரிந்து கொள்''

''எதை?''

''இன்னொருவன் மனைவி மீது ஆசைப்படுவது அனர்த்தம் என்பதை.''

''அப்படியொன்றும் நான்...''

''நந்தவனத்திற்கு ஏன் போனாய்?''

''அழைத்ததால் போனேன்...''

''யார் அழைத்தார்கள்.''

''நாகராமக்ராவில் இருந்து வந்தாளே, அந்தப் பெண்.''

''எதற்கு?''

''ஏதோ செய்தி சொல்ல.''

www.cleanindians.com



மகாராணா வெகு தந்திரமாக நடந்ததை திருத்திச் சொல்லியும் மகாராணி ஏமாறவில்லை

''என்ன செய்தி?'' என்று கேட்டாள். ''யாரிடமிருந்து செய்தி வந்தது உன் ஆசை நாயகியிடம் இருந்தா?'' என்று சீறவும் செய்தாள்.

மகாராணா திகைத்தார் சில விநாடிகள். ''மகாராணி!'' என்று தாயை அழைத்தார்.

மகாராணி முகத்தில் இகழ்ச்சியைக் காட்டினாள். ''நான் மகாராணி, நீ மகாராணா, இதுதான் சரி'' என்று வெறுப்புடன் சொன்ன மகாராணி ''தீப்சந்த் போய்விட்டான்'' என்றும் சொன்னாள்.

''எங்கு?'' என்று மகாராணா கேட்டார் அதிர்ச்சி மிகுந்த குரலில்.

''உன் ஆசைநாயகி இருக்கும் இடத்திற்கு'' என்றாள் மகாராணி.

தூக்கிப்போட்டது மகாராணாவுக்கு. ''அவள் இருக்குமிடத்திற்கு இவன் ஏன் போகிறான்'' என்று கேட்டார்.

''அவள் அழைத்திருப்பாள்'' என்ற மகாராணி ''மகாராணா! உன்னை புஷ்பாவதி அழைக்கலாம், உன் ஆசை நாயகி உன் மெய்க்காவலனை அழைக்கக் கூடாதா?'' என்று சீறி விட்டு அந்த அறையை விட்டு அகன்றாள்.

மகாராணா ஏதும் சொல்ல வழியில்லாமல் பிரமை பிடித்து நின்றார். அவர் மனதில் ஏதேதோ எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன. தீப்சந்த் போய்விட்டால் சஹாம் பிராவின் கை ஓங்கும் என்ற நினைப்பால் சற்று மனம் தளர்ந்தார். அப்பொழுது அங்கு தோன்றிய காவலன் ஒருவன் வந்து ''மகாராணாவை மந்திரி பார்க்க விரும்புகிறார்'' என்று தெரிவித்தான்.

''இந்த நடுநிசியிலா!'' என்று கேட்டார் மகாராணா.

காவலன் பதில் சொல்வதற்குள் மகாமந்திரி சேம்ஜி வெகு வேகமாக மகாராணாவின் அறைக்குள் நுழைந்தார்.

மந்திரியின் அவசரத்தையும் முகத்தில் இருந்த கலக்கத்தையும் கண்ட மகாராணா "மந்திரி! என்னைப் பார்க்க வேளை நேரம் கிடையாதா?" என்று கேட்டார்.

"வேளை பார்க்கும் சமயமல்ல இது" என்றார் மந்திரி.

"என்ன அப்படி முக்கியமான செய்தி"

மந்திரியின் குரல் லேசாக நடுங்கியது. பேரதிர்ச்சி தரும் செய்தியைச் சொன்னார் மகாமந்திரி சோம்சந்த் காந்தி. "எனக்கு உடனடியாக தீப்சந்தைப் பார்க்க வேண்டும்" என்றார். "அவன் இருக்கும் அறை எது? தானே போய் பார்க்கிறேன்" என்று குரலில் அவசரம் மிதமிஞ்சி ஒலிக்க வினவினார்.

## 23. எதிர்பாராத தடை!

பிரதான மந்திரி சோம்சந்த் காந்தியின் அவசரத்தையும் அவர் குரலில் இருந்த அச்சத்தையும் கவனித்த மேவார் மகாராணா பூசிங் ஏதோ அனர்த்தம் தொடர இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டாலும், அனர்த்தம் எதுவாயிருந்தாலும் அதை சமாளிக்கும் திராணி தனக்கில்லை என்பதை உணர்ந்திருந்ததால் மேலுக்கு துணிவைக் காட்டி "தீப்சந்தைக் காண என்ன அத்தனை அவசரம்?" என்று பிகுவை விடாமல் வினவினார்.

"அவசரமில்லாமலா இங்கு வருவேன், இந்த நேரத்தில்?" என்று சோம்ஜி பதில் கேள்வி விடுத்து "காலம் கடத்தாதீர்கள் மகாராணா. சீக்கிரம் அவன் இருக்கும் இடத்தைச் சொல்லுங்கள்" என்றும் பரிதாபம் நிறைந்த குரலில் கெஞ்சினார்.

மகாராணாவும் தமது அவசரம் அச்சம் இரண்டையுமே மறந்து இளக்காரம் ஒலித்த குரலில் சொன்னார் "அந்த அதிர்ஷ்டந்தான் மேவாருக்கு இல்லையே" என்று.

884|2191969


"எந்த அதிர்ஷ்டம்?" மகாராணா கேட்டார் ஏதும் புரியாமல்.

"மகாராணாவே பிரச்சினைகளைத் தீர்க்கும் அதிர்ஷ்டம்" என்றார் சோம்ஜி.

மந்திரி தன்னைப்பற்றி இகழ்ச்சியாகப் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொண்ட மகாராணா "சோம்ஜி! நீர் சொல்வது எனக்குப் புரிகிறது. மன்னனைப்பற்றி இகழ உமக்கு என்ன துணிச்சல் நான் இஷ்டப்பட்டால்..." வார்த்தையை முடிக்காவிட்டாலும் அதில் பூர்ணமான எச்சரிக்கை இருந்தது.

இந்த மிரட்டலுக்கு சோம்ஜி மசியவில்லை "எது வேண்டுமானாலும் செய்யலாம்" என்றார் மகாராணாவின் வார்த்தையைத் தொடர்ந்து.

"உம்மை சிறை செய்துவிட முடியும்."

"அதைவிட சௌகரியம் எனக்கு வேறு எதுவுமில்லை. தயவுசெய்து சிறை செய்யுங்கள்."

"என்னய்யா உளறுகிறீர்?"

"உளறவில்லை. இந்த பணியில் இருக்கும் பிடுங்கலை விட சிறை அமைதியானது. பேசாமல் என்னை சிறை செய்துவிடுங்கள்."

"உமக்கு வேறுவித அமைதியும் என்னால் கொடுக்க முடியும்..."

"விளக்குங்கள் மகாராணா."

"உம்மைக் கொலை செய்யவும் என்னால் உத்தரவிட முடியும்."

இதைக்கேட்ட மந்திரி லேசாக நகைத்தார்.

"என்ன சிரிக்கிறீர்?" சீற்றத்துடன் கேட்டார் மகாராணா

சோம்ஜி சில விநாடிகள் மகாராணாவை ஏறெடுத்து நோக்கினார் "மகாராணா! என்னைக் கொல்ல எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம். தங்களை பாதுகாப்பதால் வரி

சென்னை மாவட்ட
கிளை நூலகம்
சிவ்யாச நகர்

களை வசூல் செய்வதால், என்னைக் கொல்ல ஆரம்பிரா முதற்கொண்டு பலர் சித்தமாயிருக்கிறார்கள். எந்த நிமிடத்திலும் என் உயிர் போகலாம். தங்களிடம் மந்திரியாயிருப்பவன் கதி இது. இத்தனையும் மீறி நான் ஏன் தங்களிடம் மந்திரியாயிருக்கிறேன் என்பது எனக்குப் புரியவில்லை'' என்ற சோம்ஜி ''மகாராஜா! தீபசந்த் இருக்குமிடத்தை சொல்லுங்கள். அல்லது அவனை வரவழையுங்கள்'' என்று அவசரப்படுத்தினார்.

மகாராஜாவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஆகவே ''எதற்கும் மகாராணியை கலந்து பேசுவோம்'' என்றார்.

''அதற்கெல்லாம் அவகாசமில்லை. மகாராணி இதில் செய்யக் கூடியது எதுவுமில்லை' என்று சற்று இரைந்து பேசினார் சோம்ஜி.

அதைக் கேட்டுக்கொண்டே மைந்தன் அறைக்கு வந்த ராஜமாதா ராம்பியாரி ''சோம்ஜி! இந்த அகாலத்தில் இங்கு எதற்காக வந்தீர்?'' என்று கேட்டாள்.

www.cleanindians.com

''தீப்சந்தைப் பார்க்க வந்தேன் மகாராணி'' என்றார் சோம்ஜி.

''எதற்கு?''

''சிந்தியாவிடம் இருந்து செய்தி வந்திருக்கிறது.''

''மகாராஷ்டிரா தளபதியிடம் இருந்தா?''

''ஆம்.''

''என்ன செய்தி சோம்ஜி?''

''மகாராஷ்டிர தளபதி பாக்கி பணம் கேட்கிறார்.''

இதைக் கேட்ட ராஜமாதா மட்டுமின்றி மகாராஜாவும் அதிர்ச்சியடைந்தார்கள். ''நம்மிடம் ஏது பணம்?'' என்று ராஜமாதா கேட்டாள்.

''இல்லாவிட்டால் பழைய ஒப்பந்தப்படி கோட்டைகளைக் கேட்கிறார்கள்'' என்று சோம்ஜி அறிவித்தார். அத்துடன் நிற்காமல் பழைய ஒப்பந்தத்தையும் நினைவுபடுத்தினார். ''மகாராஷ்டிரர் நம்மீது படையெடுக்காதிருக்க அறுபத்தி மூன்றரை இலட்சம்ரூபாய்கள் மகாத்ஜி சிந்தியாவுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டோம். முழுப் பணமும் கொடுக்க முடியாததால் பாதியைக் கொடுத்து ஜாவத் முதலிய ஐந்து பர்கானாக்களை (மாகாணங்களை) அடமானம் வைத்து அவர்களை வரி வசூலித்துக் கொள்ள சொன்னோம். வசூலிப்பதில் நாமும் உதவுவதாகச் சொன்னோம்'' என்றார்.



மகாத்ஜி சிந்தியாவைப்பற்றி கேட்டதும் குலைநடுங்கினார் மகாராஜா. இருப்பினும் தனது கம்பீரத்தை விடாமல் ''அது பழைய கதை'' என்றார்.

''ஆனால் புதிய உருவம் எடுத்திருக்கிறது. சிந்தியா ஒன்று பாக்கியைக் கேட்கிறார். இல்லாவிட்டால் ஊர்களைக் கேட்கிறார்'' என்ற சோம்ஜி ராஜமாதாவை நோக்கினார்.

ராஜமாதாவின் முகத்தில் கவலை அதிகரித்தது. அந்த கவலை கிளறிய கோபத்தால் மகனை சுட்டு விடுவதுபோல் பார்த்தாள். ''இதற்கு என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டாள்.

அதுவரை வீம்பைக் காட்டிய மகாராஜா திடீரென பணிவைக் காட்டினார். பணிவை மட்டும் காட்டவில்லை. ''சோம்ஜி! தமிழ் படித்திருக்கிறீரா?'' என்று கேட்டார்.

''எதற்கு?''

''அதில் ஒரு பழமொழி இருக்கிறது.''

''என்னவோ?''

''மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல். இதை என்னிடம் வேலைக்கு இருந்த தமிழக வீரன் ஒருவன் அடிக்கடி சொல்லுவான்.''

''அதற்கு என்ன இப்பொழுது?''

''பொருள் வரும் வழியை சொல்லுபவர்தான் சரியான மந்திரி.''

''நான் வேலையை விட்டுவிடுகிறேன். பொருளை வர
வழைக்கும் மந்திரி யாரையாவது பார்த்துக் கொள்ளுங்
கள். சிறையிடுவதாகச் சொன்னீர்களே. அதையாவது
செய்யுங்கள்'' என்றார் சோம்ஜி சினத்துடன்.

ராஜமாதா உரையாடலில் புகுந்தாள். ''என்ன!
உம்மைச் சிறை செய்வதாகச் சொன்னானா?'' என்று கேட்
டாள்.

''ஆம். கொலைகூட செய்வதாகச் சொன்னார்'' என்றார்
சோம்ஜி.

ராஜமாதா மைந்தனை சினம் கக்கிய விழிகளால்
நோக்கினாள். ''பீம்! நீ யாரையும் சிறை செய்ய அவகா
சம் இருக்காது. உன்னை எதிரிகள் சிறை செய்வார்கள்
நீ இப்படியே காலங்கழித்தால்'' என்று மைந்தனைப்
பார்த்து சீறிய மகாராணி ''சோம்ஜி! இப்பொழுது
உடனடியாக நாம் செய்யவேண்டியது என்ன?'' என்று
கேட்டாள்.

''தூது அனுப்ப வேண்டும் சிந்தியாவுக்கு'' என்றார்
சோம்ஜி

''என்ன தூது?''

''முதலில் பணம் கொடுக்க அவகாசம் கேட்கிறேன்.
அதுவும் இல்லாவிட்டால் அடகு வைத்திருக்கும் இடங்களை
சில காலத்திற்கு அவர்கள் வசம் விடவேண்டும்.''

''சரி அப்படியே அனுப்பும் தூது'' என்றாள் மகா
ராணி.

''அதற்கு சரியான தூதன் வேண்டும்'' என்றார்
சோம்ஜி.

''யாரை வேண்டுமானாலும் அனுப்புங்கள்'' என்றாள்
மகாராணி.

''தீப்சந்தை அனுப்புவதுதான் சரி. அவனைத் தேடித்
தான் இங்கு வந்தேன்'' என்றார் சோம்ஜி.

மகாராணியின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது ''சற்று
முன்புதான் தீப்சந்த் சென்றான்'' என்றாள்.

www.cleanindians.com



இம்முறை சோம்ஜியின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது
''என்ன! சென்றுவிட்டானா? எங்கு?'' என்று துரிதமாகக்
கேட்டார்.

''புலிமலைக்கு (நாகராமக்ராவுக்கு) புஷ்பாவதியைக்
கொண்டு விட'' என்றாள் மகாராணி சற்று தயக்கத்
துடன்.

''மகாராணாவின் மெய்க்காவலனாகி இன்னும் இரண்டு
நாள் ஆகவில்லை. அதற்குள் எப்படி அனுமதி இல்லாமல்
கிளம்பலாம்?'' என்று சோம்ஜி சட்டம் பேசினார்.

''அந்த பெண்ணை இங்கு எப்படி தனியாக வைத்
திருக்க முடியும்?'' என்றாள் ராஜமாதா.

''இங்கென்ன தனி? அரண்மனையில் ராஜபோகம்.
இதைவிட நாகராமக்ரா எந்தவிதத்தில் உயர்வு?'' என்று
சீறினார் மந்திரி.

அதற்குமேல் அவர் அங்கு நிற்கவில்லை. ''மகாராணி!
எப்படியாவது நமது வீரர்களை அனுப்பி அவனை வரவழைக்
கிறேன். அவனிடம் சிந்தியாவுக்கு நல்ல மதிப்பு. அவன்
போவதுதான் நமக்கு லாபம்'' என்று கூறிக்கொண்டு
தடதடவென படிகளில் இறங்கி அந்தப்புரத்தைவிட்டு
நடந்தார் படுவேகமாக.

மாதாவும் மைந்தனும் ஒருவரையொருவர் நோக்கிக்
கொண்டனர். முடிவில் மகாராணாவின் தலைதான்
குனிந்தது ''உன் நடத்தையின் பலனைப்பார். உன்னைக்
காக்கும் ஒரே வீரனையும் ஓட்டிவிட்டாய்?'' என்று ராஜ
மாதா சீறினாள்.

மகாராணா பதில் பேசாமல் இடித்த புளிபோல் உட்
கார்ந்திருந்தார். இந்த தர்க்கம் அரண்மனையில் நடந்து
கொண்டிருக்கையில் இரண்டு புரவிகளில் பயணம் செய்த
தீப்சந்தும் புஷ்பாவதியும் மோகினிவனத்தை அடைந்து
கொண்டிருந்தார்கள்.

அந்த இடத்துக்கு வந்ததும் "புஷ்பாவதி! இந்த இடத்தில்தான் நீ மயக்கமடைந்து கிடந்தாய்" என்று அவள் கிடந்த இடத்தை சுட்டிக் காட்டினான் தீப்சந்த்.

புஷ்பாவதி அவனை சற்றே திரும்பிப் பார்த்து "இங்கு மட்டுமென்ன அரண்மனையிலும்தான் மயங்கிக்கிடந்தேன்" என்று சொல்லி புன்முறுவல் செய்தாள்.

"இந்த மயக்கம் வேறு அந்த மயக்கம் வேறு" என்று சுட்டிக்காட்டினான் தீப்சந்த்.

"எப்படி?" என்று அவள் கேட்டாள் வெட்கத்துடன்.

"இங்கு நீ மாத்திரம் மயங்கிக்கிடந்தாய். அந்தப் புரத்தில் உன்னுடன் நானும் மயங்கினேன்" என்றான் தீப்சந்த் உற்சாகத்துடன்.

"இங்கு காயத்தினால் மூர்ச்சை அடைந்திருந்தேன்" என்றாள் புஷ்பாவதி.

"அங்கு?"

"காயத்துக்கு ஒருவர் மிருத்துவம் பார்த்தார்."

"அதனால்?"

"காய்ச்சல் கண்டது."

"காய்ச்சலா!"

"ஆம்!"

"மிகவும் சூடோ?"

"மிக மிக சூடு. ஆனால் அது அவர் செய்த மருத்துவத்தில் விளைந்தது.

"மருத்துவத்தால் காய்ச்சல் குறையுமா வளருமா."

"மருத்துவத்தைப் பொறுத்தது" என்றாள் புஷ்பாவதி நகைத்தாள்.

அவனும் நகைத்தான். பிறகு புரவியில் இருந்து இறக்கிவிட்டான். அக்கம் பக்கத்தில் இடித்துக் கொண்டும் சிரித்துக் கொண்டும் நடந்து சென்ற அந்த இருவரையும்

www.cleanindians.com



காற்று வேகத்தில் வந்த நான்கு புரவிகள் சுற்றிக்கொண்டன. அவர்கள் மீது அலட்சியமான பார்வையைச் செலுத்திய தீப்சந்த் தனது வாளின் மீது கையை வைத்தான்.

அந்த நான்கு புரவி வீரர்களுக்கு தலைவனாக வந்தவன் புரவியில் இருந்து குதித்து தலை வணங்கினான் தீப்சந்த்துக்கு. "தாங்கள் உடனடியாக அரண்மனைக்கு திரும்ப உத்தரவு" என்று கூறினான்.

"யார் உத்தரவு?" தீப்சந்தின் கேள்வியில் வெறுப்பு இருந்தது.

"மந்திரியின் உத்தரவு" என்றான் காவலன்.

"இரண்டு நாளில் வருகிறேன் என்று சொல்" என்றான் தீப்சந்த்.

"தலைபோகிற காரியமாம். இதை அரசகட்டளையாக பாவிக்கச் சொன்னார் மந்திரி."

"நாளைக்குள் வந்து விடுகிறேன்" என்றான் தீப்சந்த்.

"அதற்கும் அவகாசம் இல்லையாம்" என்றான் காவலன்.

"நான் வேலையை விட்டு விட்டதாகச் சொல்" என்ற தீப்சந்த் மீண்டும் நடக்க முற்பட்டான்.

அப்பொழுது ஏற்பட்டது அவன் முற்றும் எதிர் பாராத தடை.

அதைக்கண்டு வெலவெலத்துப் போனான் தீப்சந்த்.

புஷ்பாவதியின் மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

## 24. அதிர்ச்சி மேல் அதிர்ச்சி!

முற்றும் எதிர்பாராத விதமாக மோகினிவனத்தில் தோன்றி அந்த திடீர் தடையை ஏற்படுத்தியவர் புஷ்பா

வதியின் தந்தையும் நாகராமக்ராவின் தலைவருமான பல்வந்த் சிங்.

தன்னந்தனியாக பெரிய புரவியில் ராட்சசன் போன்ற தோற்றத்துடன் வேளையில்லா வேளையில் அங்கு காட்சி யளித்த பல்வந்த்சிங் தமது மகளையும் அவள் பக்கத்தில் நெருங்கி நின்றுகொண்டிருந்த தீப்சந்தையும் கொலைப் பார்வையாகப் பார்த்தார். அவர்களை சூழ்ந்து நின்ற மேவார் படை வீரர்கள் மீதும் தமது ராட்சதக் கண்களால் நோட்டம் விட்டார் சில விநாடிகள். பிறகு புலி உறுமுவதைப் போன்ற கரகரத்த குரலில் மகளை நோக்கி "புஷ்பாவதி! இங்கு என்ன நடக்கிறது? உன்னையும் இந்த வேவுகாரனையும் ஏன் படை வீரர்கள் சுற்றி நிற்கிறார்கள்?" என்று வினவினார்.

"இவர் வேவுகாரர் இல்லை" என்று வீரர்கள் தலைவன் திருத்தினான் பல்வந்த் சிங்கை.

www.cleanindians.com

தந்தையைக் கண்டதும் ஏதோ குற்றம் செய்து விட்டவள் போன்ற மன நிலையை அடைந்து, இதயம் திக் திக் கென தொடர்ந்து அடிக்க நின்றுகொண்டிருந்த புஷ்பாவதி "இவர்கள் பிரதான மந்திரியின் வீரர்கள். எங்களை திருப்ப அழைத்துச்செல்ல வந்திருக்கிறார்கள்" என்று நடுங்கும் குரலில் சொன்னாள்.

"உங்களை சிறை செய்ய வந்திருக்கிறார்களா?" என்று இரும்புக் குரலில் வினவினார் பல்வந்த் சிங்.

"இல்லை. சிறை செய்ய வரவில்லை. என்று மந்திரியின் வீரர்களின் தலைவன் பதில் சொன்னான்.

நாகராமக்ராவின் தலைவர் இடியென நகைத்தான். "திரும்பி அழைத்துச் செல்ல இத்தனை வீரர்கள் எதற்கு?" என்று வினவினார் பல்வந்த சிங்.

வீரர்கள் தலைவன் மிக சாதுரியமாக பதில் சொன்னான். "இவர்களாக வராவிட்டால் வலுக்கட்டாயமாக அழைத்துச்செல்ல" என்றான் அவன்.



பல்வந்த் சிங் இகழ்ச்சி புன்முறுவல் செய்தார். "சிறை என்ற சொல்லை உபயோகிக்க தைரியம் இல்லை அதற்கு பதில் வலுக்கட்டாயம் என்று சொல்கிறாய். புரிந்து கொண்டேன்" என்றார் இகழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

அத்துடன் அந்த வீரனை விசாரிப்பதை விட்டு தமது மகளை நோக்கி "புஷ்பாவதி! ஒரு ராஜபுத்திரி இருளில் தனியாக இன்னொருவனுடன் பயணம் செய்வதைப்பற்றி ஏதாவது சிந்தித்தாயா?" என்று வினவினார்.

புஷ்பாவதி மெள்ள துணிவை வரவழைத்துக் கொண்டு "இவர் இல்லாவிட்டால் இத்தனை நேரம் நான் உயிருடன் இருக்க மாட்டேன்" என்று பதில் சொன்னாள்.

பல்வந்த் சிங்குக்கு வெறியூட்ட வேண்டுமானால் புஷ்பாவதியின் பதிலே போதும். ஆனால் அதை நன்றாக விளக்கினான் வீரர்கள் தலைவன். "இவர் மகாராணாவின் மெய்க் காவலர். இவர்தான் தங்கள் மகளைக் காப்பாற்றி அரண்மனைக்கு கொண்டு வந்தார்" என்று சொன்னான்.

பல்வந்த் சிங் அத்தனை முரட்டுத்தனத்திலும் தானும் அறியாத ஏதோ விபரீதங்கள் உதயபூரில் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டார். "யார் இவளை என்ன செய்தார்கள்? யாரிடமிருந்து காப்பாற்றினார்?" என்று விசாரித்தார்.

"சலூம்பிராவின் வீரர்கள் இவளை தூக்கிச்செல்ல முயன்றார்கள். இவர்கள் தலையிலும் வாள் காயம்பட்டது. அந்த சமயத்தில் மகராணாவின் மெய்க்காவலர் தோன்றி தங்கள் மகளை விடுவித்து அரண்மனைக்கு தூக்கிச் சென்றார். அங்கு தங்கள் மகளுக்கு அரண்மனை மருத்துவரே மருத்துவம் பார்த்தார்" என்று விவரங்களைச் சொல்லியும் புஷ்பாவதியின் தந்தைக்கு திருப்தி ஏற்படாததால் சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினார். பிறகு கேட்டார் "இவர்கள் இருவரையும் அழைத்து வர உத்தரவா அல்லது

இவரை மட்டும் அழைத்து வர உத்தரவா?'' என்று விசாரித்தார்.

''இருவரையும் அழைத்து வரத்தான் உத்தரவு'' என்றான் வீரன்.

''அப்படியானால் நானும் வருகிறேன்'' என்றார் பல்வந்த்சிங்.

''தங்களை அழைத்துவர உத்தரவில்லை'' என்று வீரன் திட்டமாகச் சொன்னான்.

''மந்திரி அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் நான் வருவேன்'' என்ற பல்வந்த்சிங் புரவியில் ஏறினார்.

புஷ்பாவதியும் புரவியில் ஏறினாள் தந்தையைத் தொடர. தீப்சந்த் மட்டும் புரவி மீது ஏறாமல் இடித்த புளிபோல் நின்றான். ''நீங்களும் புரவியில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்றான் வீரர்கள் தலைவன்.

''நான் வரமுடியாது என்று மந்திரிக்கு தெரிவித்து விடு. நான் மன்னர் மெய்க்காவலன் பதிவியை துறந்து விட்டதாகச் சொல்லிவிடு. நான் நேராக எனது கோட்டைக்குச் செல்லுவதாகவும் கூறிவிடு'' என்று கூறிவிட்டு தனது புரவியில் தாவி ஏறி வெகு வேகமாகப் புரவியில் பறந்துவிட்டான்.

அவனைத் தொடர யாரும் முயலவில்லை. அதுவரை வீராப்பு பேசிய பல்வந்த்சிங் கூட திக்பிரமை பிடித்து புரவியில் உட்கார்ந்திருந்தார். ''என்ன துணிவு இவனுக்கு?'' என்று உள்ளூர வியந்தும் கொண்டார்.

அவரோ மற்ற வீரர்களோ வேறு ஏதும் செய்ய இயலாததால், தீப்சந்த் தவிர மற்றவர்கள் மீண்டும் உதயபூரை நோக்கித் திரும்பினார்கள்.

அந்த கூட்டம் உதயபூரை அடைந்தபோது கிட்டத்தட்ட விடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததால் சந்திரன் தனது கலைகளை சிறிது குறைத்துக்கொண்டு

www.cleanindians.com



மந்தமான நிலவை எங்கும் வீசிக்கொண்டிருந்தான். அப்படி மங்கிவிட்ட நிலவு மேவார் நாட்டின் நிலையையே மங்கச் செய்வது போல் இருப்பதாகத் தோன்றியது புஷ்பாவதிக்கு. புரவியில் ஏறியதில் இருந்து தந்தையை திரும்பிப் பார்க்காமலே ஏதேதோ சிந்தனைகள் மனத்தை அழுத்த மிகுந்த துன்பத்துடன் பயணம் செய்தாள். தீப்சந்த் தன்னை விட்டுச் சென்றது நியாயமற்றது என்று எண்ணினாள் புஷ்பாவதி. ஆனால் தீப்சந்த் போன்ற ஒரு வீரனை சிறை செய்ய முயன்றது எத்தனை முட்டாள்தனம் என்றும் நினைத்தாள்.

தீப்சந்தின் பீரங்கிகளின் உதவி இல்லாமல் மேவாரை மகாராஷ்டிரர்களிடமிருந்து காப்பதோ, மகாராணாவை சலூம்பிராவின் மூர்க்கத்தனத்திலிருந்து மீட்பதோ முடியாத காரியம் என்று புஷ்பாவதிக்கு சந்தேகமறத் தெரிந்ததால் அவன் எங்குதான் போயிருப்பான் என்று எண்ணிப் பார்த்தாள். அவன் மண்டலக் கோட்டைக்குப் போயிருப்பான் என்று அவள் நம்பவில்லை. தனது பீரங்கிப் படையை உதயபூருக்கு வரச்சொல்லி விட்டு, தீப்சந்த் மண்டலக் கோட்டைக்குப் போவதாயிருந்தால் உதயபூரை மகாராஷ்டிரர்களிடம் இருந்து எப்படிக் காப்பாற்ற முடியும் என்ற சிந்தனையில் இறங்கியபடியே புரவியை நடத்தினாள்

அவள் தீர்க்க சிந்தனையையும் சிந்தனையால் ஏற்பட்ட மௌனத்தையும் பல்வந்த் சிங் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். இத்தனைக்கும் காரணம் தீப்சந்த்தான் என்று முடிவு கட்டிய பல்வந்த் சிங், அவனுக்கு எப்படியும் புத்தி கற்பிப்பது என்று முடிவு செய்தார். மகாராணாவின் ரகசிய ராணி தன்னிடம் இருப்பதால் மகாராணாவை சரிப்படுத்துவது அப்படியொன்றும் கஷ்டமான காரியமில்லை என்றும் தீர்மானித்தார். ஆனால் அவர் தீர்மானம் பலிக்காது என்பதை உதயபூர் அரண்மனையை அடைந்ததும் உணர்ந்து கொண்டார்.

அவர்கள் உதயபூர் அரண்மனையை அடைந்தபோது பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. அரண்மனைக்குள் வர புஷ்பாவதி மறுத்தாள். "நீங்கள் வேண்டுமானால் அரண்மனைக்குள் செல்லுங்கள். நான் மந்திரியின் இல்லத்துக்குச் செல்கிறேன்" என்று கூறினாள்.

பல்வந்த் சிங் சினத்தின் சொருபமாகக் காட்சியளித்தார். "அரண்மனை உனக்கு கசக்கிறதா?" என்று வினவினார் மிகுந்த கோபத்துடன்.

"ஆம்" என்றாள் புஷ்பாவதி உறுதியுடன்.

"நீ யாருடன் பேசுகிறாய் என்பதைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறாயா?" என்று வினவினார் பல்வந்த் சிங் சினத்துடன்.

"விவரம் புரியாத வீண் பிடிவாதத் தந்தையுடன் பேசுகிறேன் என்பதை அறிந்துதான் பேசுகிறேன்" என்று புஷ்பாவதி புரவியை மந்திரியின் இல்லத்தை நோக்கி செலுத்தினாள் வேகமாக.

www.cleanindians.com

மந்திரியின் வீரர்கள் அவளைத் தொடர்ந்தார்கள்.

அவர்கள் போவதைப் பார்த்துக்கொண்டு பிரமித்து நின்றுவிட்ட பல்வந்த் சிங் "மன்னரிடம் பேசிவிட்டு உன்னைப் பார்க்கிறேன். உன் கொட்டத்தை அடக்குகிறேன்" என்று கறுவிவிட்டு அரண்மனைக்குள் சென்று தனது புரவியை கொட்டடியில் கட்டிவிட்டு, விருந்தினர்கள் வந்தால் தங்கும் அறைகளை நாடிச் சென்றார்.

அரண்மனையின் கோடிப் பகுதியில் இருந்த ஒரு அறையை அங்கிருந்த காவலன் ஒழித்துவிட அதில் தனது அங்கியைக் கழற்றிவிட்டு, காலை கடன்களை முடித்துக் கொண்டு, நீராடி சிற்றுண்டியருந்தி மகாராணாவைப் பார்க்க புறப்பட்டார்.

மகாராணா அன்று விடியற்காலையிலேயே எழுந்து தமது ஆஸ்தான அறையில் உட்கார்ந்து சக்தாவதர்கள்



தலைவருள் ஒருவனான சங்கிரமசிம்மனுடன் பேசிக்கொண்டிருந்தார்.

சங்கிரமசிம்மன் மகாராணாவின் முன்பு கம்பீரமாக நின்றிருந்தான். "மகாராணா! மந்திரியின் சொல் கேட்டு நான் சலூம்பிராவுடன் சேர்ந்து போரிடுவதாக ஒப்புக் கொண்டேன். சலூம்பிரா இப்பொழுது தனியாகப் பிரிந்து சித்தூருக்குப் போக முற்படுகிறார். அவர் சித்தூருக்குச் சென்றால், அவர் படையும் அங்கிருந்தால், அவர்தான் சித்தூருக்கு மகாராணா. இந்த முயற்சியை நீங்கள் உடனடியாகத் தடுக்க வேண்டும்" என்றார்.

"எப்படித் தடுப்பது? யார் தடுப்பது?" என்று மகாராணா வினவினார்.

"தீப்சந்த் தடுக்க முடியும். அவனுக்கு உத்தரவிடுங்கள். சித்தூரை சலூம்பிரா நாடாமல் அவனால் செய்ய முடியும்" என்றான் சங்கிரமசிம்மன்.

மகாராணா பெரும் சங்கடத்தால் மலைத்தார். ஆகவே மெதுவாகச் சொன்னார் "தீப்சந்த் நாகராமக்ராவுக்குப் போயிருக்கிறான்" என்று.

"அங்கு எதற்கு?" சங்கிரமசிம்மன் கேட்டான்.

"அவன் காதலியைக் கொண்டுவிட" என்றார் மகாராணா.

"யார் அவன் காதலி?" சங்கிரமசிம்மன் விசாரித்தான் விவரம் தெரியாததால்.

"புஷ்பாவதி என்று பெயர்..." என்று மகாராணா வார்த்தைகளை முடிக்கு முன்பே "யார் சொன்னது அப்படி?" என்று கர்ஜித்துக்கொண்டு உள்ளே நுழைந்தார் பல்வந்த் சிங்.

பல்வந்த் சிங்கைக் கண்டதும் மகாராணா பிரமிப்படைந்தார். "நீங்களா? இங்கு எதற்கு வந்தீர்கள்?" என்று வினவினார்.

''பெண்ணை அழைத்துப்போக வந்தேன்'' என்றார் பல்வந்த் சிங்.

''அவள்...'' என்று துவங்கினார் மகாராணா.

''வர மறுக்கிறாள்'' என்றார் பல்வந்த் சிங்.

''தங்களுடனா!'' வியப்பைக் காட்டினார் மகாராணா குரலில்.

''ஆம்.''

''தீப்சந்துடன் போய் விட்டாளா?''

''இல்லை.''

''வேறு எங்கே இருக்கிறாள்.''

''மந்திரி வீட்டில்.''

''ஏன்?''

''காரணம் தெரியவில்லை.''

அந்த சமயத்தில் ''காரணத்தை நான் சொல்கிறேன்'' என்று கூறிக்கொண்டே ராஜமாதா ராம்பியாரி உள்ளே வந்தாள்.

அதே சமயத்தில் உள்ளே வந்த மந்திரி சோம்சந்த் காந்தி ''மகாராணா! நான் என் பதவியை விட விருப்பப் படுகிறேன்'' என்றார்.

''ஏன்?''

''இனி மேவாரைக் காக்க எனக்கு சக்தியில்லை'' என்றார் மந்திரி.

மகாராணா அதிர்ச்சியின் உச்சகட்டத்தை அடைந்த போது இன்னொரு பேரதிர்ச்சியும் அவருக்கு நேர்ந்தது. அதன் விளைவாக கை கால் ஆடாமல் உட்கார்ந்து விட்டார் மகாராணா.

www.cleanindians.com

## 25. புஷ்பாவதிக்கு ஓலை!

சங்கிரமசிம்மன், ராஜமாதா, மந்திரி சோம்ஜி மூவரும் ஒரே சமயத்தில் தனது ஆஸ்தான அறையில் தோன்றியதாலும், அவர்கள் விளக்கமாகப் பேசினால் தமது குற்றம் அம்பலத்துக்கு வந்து விடுமாதலாலும், அப்படி வந்தால் மூர்க்கனான பல்வந்த் சிங்கின் போக்கு எப்படி மாறுமோ என்ற அச்சத்தாலும் மகாராணா தமக்கு ஏன் இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை என்று தம்மைத்தாமே கேட்டுக்கொண்டார். மற்ற மூவர் பேசிய பிறகும், மகாராணா மௌனமே வாழ்க்கையில் சிறந்தது என்று எண்ணி அந்த விரதத்தை மேற்கொண்டார்.

என்ன செய்வது என்று அறியாத பல்வந்த்சிங் மகாராணாவை நோக்கி ''மகாராணா! என் மகள் என்னுடன் வர மறுக்கிறாள். அரண்மனைக்கும் வர மறுக்கிறாள். பிடிவாதமாக மந்திரியின் இல்லத்துக்குச் சென்றுவிட்டாள். அதற்கெல்லாம் எனக்குக் காரணம் தெரிய வேண்டும்'' என்றார் தமது கரகரத்த குரலில்.

''தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன?'' என்று தீர்மானித்த மகாராணா ''பல்வந்த்சிங்! உமது மகளின் மனதில் இருப்பது யாருக்குத் தெரியும்? அதை அவளையே கேட்டு விடுவது தானே?'' என்று கேள்வியொன்றை வீசினார்.

மகாராணாவின் பேச்சினால் ஏமாறாத பல்வந்த்சிங், தமது மீசை துடிக்க மகாராணியைத் திரும்பி நோக்கி ''மகாராணி! என் மகள் இங்கு வர மறுக்கும் காரணத்தை நீங்கள் சொல்வதாகச் சொன்னீர்களே! அதை இப்பொழுது சொல்லலாமா?'' என்று வினவினார்.

மிகக் கூர்மையான புத்தியுள்ள ராஜமாதா பேச்சின் தோரணையை அடியோடு மாற்றி ''பல்வந்த்சிங்! நீரும் ராஜபுத்திரர்தானே?'' என்று கேட்டாள்.

"அதில் சந்தேகமா?" என்று சூடாகக் கேட்டார் பல்வந்த்சிங்.

"மேவாரின் நன்மையில், மகாராணாவின் நன்மையில், உமக்கும் சிரத்தையிருக்கிறது அல்லவா?" என்று ராஜமாதா மேலும் கேட்டாள்.

"இது மகாராணாவுக்கே தெரியும். நான் சொல்லத் தேவை இல்லை" பல்வந்த் சிங் இதை திட்டமாகச் சொன்னார்.

"ஆகவே உமது மகளைப் பற்றி பிறகு பேசுவோம். முதலில் மேவார் நிலையைப் பற்றி யோசிப்போம்" என்ற ராஜமாதா ராம்பியாரி, பல்வந்த் சிங் மீது நிலைக்கவிட்ட கண்களை மந்திரி சோம்ஜி மீது திருப்பினாள்.

"சோம்ஜி! மேவார் தனது சங்கடங்களைத் தீர்க்க உம்மைத்தான் நம்பியிருக்கிறது. அப்படியிருக்க நீர் எதற்காக பதவியை துறக்க ஆசைப்படுகிறீர்" என்று கேட்டாள்.

சோம்ஜி மகாராணியை மட்டுமின்றி அந்த அறையில் இருந்த மற்றவர்களையும் ஒருமுறை நோக்கினார். பிறகு மகாராணியை மட்டும் நோக்கி தமது கண்களை நிலைக்க விட்டு "மகாராணி! சேர இஷ்டமில்லாத சக்திகளை இப்பொழுதுதான் ஒன்று சேர்த்தேன். இந்த சங்கிரமசிம்மனும் சலூம்பிரா தலைவரும் மகாராஷ்டிரர்களை மேவார் மண்ணிலிருந்து விரட்ட ஒன்று சேருவதாக வாளின் மேல் ஆணையிட்டார்கள். கோட்டா சமஸ்தானாதிபதி சலீம்சிங்குக்கும் செய்தி அனுப்பியிருக்கிறேன் நம்முடன் சேர. தீப்சந்தின் பத்தாயிரம் வீரர்கள் கொண்ட பீரங்கிப் படையும் இரண்டு நாட்களில் இங்கு வருவதாயிருந்தது. இத்தகைய பெரும் பணியை சிருஷ்டித்த என் திட்டம் இப்பொழுது அடியோடு குலைந்துவிட்டது. சலூம்பிரா பீம்சிங், சித்தூருக்குப் புறப்பட்டுவிட்டார். தீப்சந்த் நாகராமக்ராவுக்கு போய்விட்டதாக இவர்கள் சொல்கிறார்

www.cleanindians.com



கள். நான் நம்பவில்லை. அவன் எங்கு போயிருக்கிறானென்று எனக்குத் தெரியாது. அந்த நமது படைகளின் சேர்க்கைக்கு அவன்தான் அச்சு. அவனும் போய்விட்டான். ராஜ்ய வண்டி கலகலத்து விட்டது. இனி நான் பதவிக்கும் பெருக்கும்தான் மந்திரியாயிருக்க வேண்டும்" என்று சோகத்துடன் பேசிய மந்திரி பெருமூச்செறிந்தார்.

மகாராணா பதிலேதும் பேசவில்லை. மகாராணியே பேசினாள். "சோம்ஜி! சலூம்பிராவையும் தீப்சந்தையும் நான் அழைத்து வருகிறேன்" என்று.

"மகாராணி! தாங்களா!" என்று வியப்பு ஒலிக்கும் குரலில் கேட்டார் மந்திரி.

ராஜமாதா சிறிதும் சிந்திக்காமல் சொன்னாள். "நான் தான் சோம்ஜி! இப்பொழுது நான் ராஜமாதா அல்ல; மேவாரின் நன்மைக்காக சலூம்பிராவை நாடிச் செல்லும் ஒரு குடிமகள்" என்று கூறினாள்.

அப்பொழுது சங்கிரமசிம்மன் இடை புகுந்து பேசினான். "மகாராணி! சக்தாவதர்கள் இருக்க ஜெய்பூரும் கோட்டாவும் தங்கள் பக்கமிருக்க, தாங்கள் சலூம்பிராவிடம் கெஞ்சவேண்டாம். மகாராஷ்டிரர்களை நாங்கள் சந்திக்கிறோம். தீப்சந்தை அழைத்து வர புஷ்பாவதியை அனுப்புவோம்" என்று கூறினான் சங்கிரமசிம்மன்.

அதுவரையில் பேசாதிருந்த பல்வந்த்சிங் "சங்கிரமசிம்மா! என் மகளையா தீப்சந்திடம் அனுப்ப போகிறாய்?" என்று இடிபோல் சொற்களை கொட்டினார்.

"அனுப்பினால் என்ன?" என்று சங்கிரமசிம்மன் கேட்டான்.

"பெண்களின் உதவியால்தான் மேவார் பிழைக்க வேண்டுமா? என் பெண்ணை அனுப்புவதாகச் சொன்னால் உன்னை இங்கேயே வெட்டிப்போடுவேன்" என்று கர்ஜித்தார் பல்வந்த்சிங்.

சங்கிரமசிம்மன் நிதானத்தை அறவே இழந்தான். "நீங்கள் மட்டும் என்ன வாழ்ந்துவிட்டீர்கள்? மகாராணாவுக்காக ஒரு பெண்ணை வைத்து மகாராணாவை அங்கு அடிக்கடி வரவழைத்து உறவாட விடுகிறீர்" என்று சீறினான் சங்கிரமசிம்மன்.

பல்வந்த் சிங்கின் முகம் ரத்தமெனச் சிவந்தது. உதடுகள் துடித்தன. "மகாராணா! இதைக் கேட்டுக் கொண்டு ஏன் வாளாவிருக்கிறீர்கள்? என்னிடம் நீங்கள் அடைக்கலம் வைத்திருப்பவள் யார் என்பதை சொல்லி விடுங்கள்" என்று படபடத்துப் பேசினார்.

மகாராணா சிறிது நேரம் மவுனம் சாதித்துவிட்டு "என் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேச யாருக்கும் உரிமையில்லை. இங்கு நீங்கள் கவனிக்க வேண்டியது மேவாரின் அரசியல் நிலை" என்று சற்று திடமாகவே பேசினார்.

பல்வந்த் சிங் அடியுண்ட வேங்கை போல் திணறினார் சில விநாடிகள். "அப்படியானால் நான் வருகிறேன் மகாராணா! தங்கள் ராணியை இங்கு அனுப்பிவிடுகிறேன். உங்கள் சொந்த விஷயம் உங்கள் அந்தப்புரத்திலேயே இருப்பதுதான் நல்லது" என்று கூறி திரும்ப முயன்றார்.

மகாராணாவின் வேதனை நிறைந்த குரல் அவரைத் தடுத்தது. "பல்வந்த் சிங்! அவளை சாதாரணமாக அழைத்து வர முடியாது. அழைத்து வரும் முறையில் அழைத்து வரவேண்டும். அந்த ராஜ்ய சிக்கல் முதலில் தீரவேண்டும்."

மகன் ஒரு வேட்டைக்காரர் தலைவனிடம் கெஞ்சுவதைப் பார்த்த மகாராணி வெகுண்டாள். "மகனே! நீ யாரையும் எதற்கும் கெஞ்சவேண்டாம். அந்த ரகசிய ராணியை நானே அழைத்து வருகிறேன். முதலில் உன்னை நாலு பேர் முன்னிலையில் விரட்டும் அந்த பல்வந்த் சிங்கை வெளியே அனுப்பு. அரசனிடம் மரியாதையற்ற அவனிடம் ஏன் அஞ்சுகிறாய்? சலும்பிராவிடம் அஞ்சுகிறாய், போதாக்குறைக்கு தீப்சந்தையும் எதிரியாக்கிக் கொண்டு அவனுக்கும் அஞ்சுகிறாய். அப்படி அஞ்சி அஞ்சி எத்தனை நாள் காலம் கழிக்கப் போகிறாய்?" என்று பெண் புலி போல் சீறினாள்.

www.cleanindians.com



மந்திரி சோம்ஜி மெள்ள தலையிட்டு "மகாராணி! இந்த சோம்ஜி உயிருடன் இருக்கும் வரையில் மகாராணா யாரையும் கெஞ்ச வேண்டாம். மகாராணா தமது திருமணத்தை பகிரங்கமாக நடத்த சலும்பிராவிடம் தமது வரிப்பணத்தை கேட்டார். சலும்பிரா கையை விரித்துவிட்டு தமது மகள் திருமணத்தை அமர்க்களமாக நடத்தினார். அதற்கு ஒரு இலட்சம் பவுன் செலவழித்தார். அதற்கெல்லாம் சீக்கிரம் விடிமோட்சம் ஏற்படும். என்னை நம்புங்கள்" என்றார் மந்திரி சோம்ஜி.

"அடுத்து நாம் செய்யவேண்டியது என்ன?" என்று கேட்டாள் மகாராணி.

"இன்னும் பத்தே நாட்களில் பதில் சொல்கிறேன்" என்ற மந்திரி சோம்ஜி மகாராணாவை நோக்கி "மாகராணா! நீங்கள் வறுமையில் மணந்த அந்த ரகசிய ராணியும் குழந்தையும் இங்கு வரட்டும். மகாராணா நெறி தவறாதவர் என்ற நிலை பிரகடனமாகட்டும். சலும்பிராவைக் கெஞ்சவேண்டாம். மகாராணா பிரதாப்பும் ராஜசிம்மனும் வளர்ந்த இந்த மேவாரின் மகாராணா யார் தயவிலும் இருக்கவேண்டாம். பல்வந்த் சிங்! உமது மகளை அழைத்துப் போவது உமது சொந்த விஷயம். என் மாளிகைக்கு அவள் போவதை நான் பார்த்தேன். அங்கு போய் அவளை அழைத்துப் போகலாம். இங்கு இனிமேல் அடி எடுத்து வைத்தீர், உம்மை சிறை செய்ய நான் தயங்க மாட்டேன்" என்று கண்டிப்புடன் பேசினார்.

பிறகு சங்கிரமசிம்மனை நோக்கி "செய்தியொன்று தருகிறேன் கோட்டாவுக்குச் சென்று வா. வா என்னுடன்" என்று கூறி மகாராணாவின் ஆஸ்தான அறையில் இருந்து வெளியேற முயன்றார்.

மகாராணி அவரை தடுத்து "மந்திரி! போரைத் தவிர வேறு வழியில்லையா?" என்று கேட்டாள்.

சோப்ஜி திரும்பி மகாராணியை நோக்கினார். "இருக்கிறது" என்றார்.

"என்ன வழி"

"சரணாகதி."

"மந்திரி!"

"மகாராணி! உண்மையைச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். மேவார் இன்னும் செத்துவிடவில்லை. எல்லா வீரர்களும் சுயநலக்காரர்களா? மேவாரின் வீரத்தை வெகு சீக்கிரம் காண்பீர்கள்" என்று கூறிச் சென்றார்.

அங்கிருந்து நேராக மாளிகைக்கு வந்ததும் அங்கு ஒரு வீரன் காத்து கொண்டிருந்தான் மந்திரியின் வரவை நாடி. மந்திரி வந்ததும் தலை வணங்கிய அவன் "இந்த ஓலை தங்களுக்குத்தானே?" என்று கேட்டு அவர் கையில் ஓலையைத் திணித்தான்.

www.cleanindians.com

ஓலையைக் கண்ட மந்திரி பிரமித்தார். பிறகு வீரனை இருக்கச் சொல்லிவிட்டு "புஷ்பாவதி" என்று அழைத்தார்.

புஷ்பாவதி வந்ததும் ஓலையை அவள் கையில் கொடுத்தார்.

புஷ்பாவதி ஓலையைப் பிரித்துப் படித்துவிட்டு மந்திரியிடம் கொடுத்தாள். மந்திரியின் முகத்தில் பெருமை விரிந்தது. "மேவார் விடுதலைப் போரை தீப்சந்தே தொடங்கிவிட்டான்" என்று கூறி "நீ சீக்கிரம் புறப்படு" என்றும் சொன்னார்.

"எங்கு?" புஷ்பாவதி கேட்டாள்.

"தீப்சந்த் இருக்கும் இடத்திற்கு" என்றார் மந்திரி.

"அவர் எங்கிருக்கிறார்?" என்று கேட்டாள்.

"அது ரகசியம்" என்ற மந்திரி மகா உற்சாகத்தில் இருந்தார். அந்த இரவிலேயே ஓலையைக் கொண்டு வந்த



வீரனுடன் புஷ்பாவதியை அனுப்பிவைத்தார். தீப்சந்துக்கு ஒரு ஓலையும் கொடுத்தார்.

புஷ்பாவதி உடனடியாக கிளம்பி விட்டதால் அவள் தந்தை மந்திரி இல்லத்துக்கு வந்த போது, அவள் அங்கு இல்லை.

"எங்கே என் மகள்?" என்று சீறினார் பல்வந்த் சிங்.

"எனக்குத் தெரியாது. வேண்டுமானால் இந்த மாளிகையில் நீரே தேடிப்பாரும்" என்று இகழ்ச்சியுடன் பேசினார் மந்திரி.

பல்வந்த் சிங் ஏதோ பதில் சொல்ல முற்பட்டார். அந்த சமயத்தில் அங்கு வந்த சங்கிரமசிம்மனை நோக்கிய மந்திரி "இந்த பெரியவரை இரண்டு நாட்களுக்கு ஏதாவது ஒரு அறையில் பூட்டி வை" என்றார்.

சங்கிரமசிம்மன் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. "வாருங்கள் பல்வந்த் சிங்! உமது அறையைக் காட்டுகிறேன்" என்று கூறிக்கொண்டு அவரை நெருங்கினான் சங்கிரமசிம்மன்.

## 26. ராணியின் பிரவேசம்!

மந்திரி சோம்ஜியின் உத்தரவுப்படி பல்வந்த் சிங்கை ஒரு அறையில் வைத்து பூட்டிவிடத் தீர்மானித்த சங்கிரமசிம்மன் அவரை நெருங்க முற்பட்டதும் பல்வந்த் சிங் சட்டென்று பின்புறம் நகர்ந்து தமது கச்சையில் இருந்த குறுவாளை எடுத்துக்கொண்டார். "ஒரு அடி முன்னே வைத்தாலும் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று சங்கிரமசிம்மனை எச்சரிக்கவும் செய்தார் குறுவாளைக்

காட்டி. பதிலுக்கு சங்கிரமசிம்மன் புன்முறுவல் செய்த வண்ணம் அவர் குறுவாளை நோக்கியே நடந்தான்.

சினத்தால் நிதானத்தை இழந்துவிட்ட பல்லவந்த் சிங் சங்கிரமசிம்மனை தீர்த்துவிட குறுவாளை மேலே ஓங்கினார்.

அவர் குறுவாளை ஓங்கிய அந்த சமயத்தில், வெகு துரிதமாக தனது உடலை அவர் உடல்மேல் மோதவிட்ட சங்கிரமசிம்மன் தனது இடது கையால் குறுவாளேந்திய வலது கையைப் பிடித்தான்.

ஏதோ இரும்பு வளையம் ஒன்று தமது கையைப் பிடித்து மணிக்கட்டு எலும்புகளை முறிப்பது போன்ற பிரமை ஏற்படவே, அவர் கைவிரல்கள் விரிந்து குறுவாளைக் கீழே போட்டன. அந்த குறுவாள் தரையில் விழுந்து எழுப்பிய ஒலி மந்திரி மாளிகை முழுவதும் பெரிதாகக் கேட்கவே, மந்திரி பிரமித்து நின்றார். ராட்சதன் போன்ற உருவத்தைப் படைத்த பல்லவந்த் சிங்கை சங்கிரமசிம்மனின் மெல்லிய கை எப்படி நொறுக்கிவிட்டது என்று நினைத்தும் விடை காணாததால் "வீரன் கையென்றால் இப்படி ஒல்லியாகத்தான் இருக்கவேண்டும் போலிருக்கிறது?" என்று தமக்குள சொல்லிக்கொண்டார். அத்துடன் தமது கையையும் பார்த்துக்கொண்ட மந்திரி "எனது கையும் ஒல்லிதான். ஆனால் அவன் கையிலிருக்கும் வலு இதில் இல்லையே?" என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

அந்த சமயத்தில் ஏற்பட்ட அடுத்த நிகழ்ச்சி அவர் சிந்தனையை உடைத்தது சங்கிரமசிம்மன் சர்வசாதாரணமாக அவரது வலது கையுடன் தனது வலது கையை கோர்த்துக்கொண்டு, கீழே கிடந்த அவரது குறுவாளை அந்த கூடத்தின் கோடிக்கு தனது காலால் உதைத்துத் தள்ளிவிட்டு "வாருங்கள் பல்லவந்த் சிங்" என்று அவரை அழைத்துச் சென்றான். அவரும் என்ன காரணத்தினாலோ மேற்கொண்டு எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல் நெடுங்கால நண்பன் போல் சங்கிரமசிம்மனுடன் நடந்து சென்றார்.

www.cleanindians.com



அந்த கூடத்தின் ஒரு கோடியை அடைந்ததும் அங்குள்ள ஒரு அறையைக் காட்டி "பல்லவந்த் சிங்! இன்றிரவு நீங்கள் இந்த அறையில் தங்கலாம்" என்று சொல்லிவிட்டு திரும்ப முயன்றான்.

அவனை பல்லவந்த் சிங்கின் குரல் தடுத்தது. "அறையைப் பூட்டவில்லையா?" என்று கேட்டார்.

சங்கிரமசிம்மன் அவரைத் திரும்பி நோக்கி "அவசியமில்லை" என்று சொன்னான்.

"மந்திரி பூட்டச் சொன்னாரே?"

"அதனால் பாதகம் இல்லை."

"நான் தப்பிவிட்டால்?"

"தப்ப முடியாது."

"ஏன் முடியாது?"

"எதிர் அறையில்தான் நான் தங்குகிறேன்."

"நீர் தூங்கிவிட்டால்?"

"தூங்கமாட்டேன்."

இதைக் கேட்டதும் பல்லவந்த் சிங்கின் சுபாலமான கோபம் தலைதூக்கியது. "நீ என்ன மனிதன் இல்லையா?" என்று சீறினார்.

"மனிதனாயிருந்தால் தூங்கித்தான் ஆகவேண்டுமா?" என்று வினவினான் சங்கிரமசிம்மன்.

"ஆம்" திட்டமாகச் சொன்னார் பல்லவந்த் சிங்.

"அப்படியானால் நான் மனிதவர்க்கத்துக்கு விலக்கு" என்று சொன்ன சங்கிரமசிம்மன் அதற்குமேல் அவரிடம் பேச்சுக் கொடுக்காமல் எதிர் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

கதவை அவன் மூடியதும் திருட்டுப் பார்வையாக அப்படியும் இப்படியும் பார்த்தார் பல்லவந்த் சிங். எங்கும் யாருமில்லாது போகவே தமது வாயிற்படியிலிருந்து ஒரு

காலை எடுத்து வெளியே வைத்தார். அப்பொழுது யாரோ நகைத்த சத்தம் கேட்கவே எதிர் அறையை நோக்கினார். வாயில் திறந்துதான் இருந்தது. சங்கிரம சிம்மனை அங்கு காணோம். சிறிது பக்கவாட்டில் நோக்கினார். அறையின் இடதுபுற சாளரத்தில் சங்கிரம சிம்மன் முகம் தெரிந்தது. அதில் இகழ்ச்சி கலந்த நகைப்புக்குறி தெரிந்தது. அடுத்து வேகத்துடன் கதவைச் சாத்திக்கொண்ட பல்வந்த் சிங், அந்த அறைக்குள்ளிருந்த கட்டிலில் தடாலென விழுந்தார். அறை சிறையின் அறையாகத் தெரியவில்லை. பெரிய விருந்தினர்களை தங்க வைக்கும் அறைபோல் சகல வசதிகளுடன் காணப்பட்டது. மனதில் பல வேதனைகள் வலம் வந்தாலும் அவற்றை மறந்து உறங்க முயன்ற பல்வந்த் சிங்குக்கு உறக்கம் அடியோடு வராததால் புரண்டு புரண்டு படுத்தார். பிறகு அயர்ந்து தூங்கிவிட்டார்.

எத்தனைநேரம் தூங்கியிருப்பாரென்று அவருக்கே தெரியாது. அவர் விழித்தபோது அவர் பழய அறையில் இல்லை. நாகராமக்ராவில் தமது வேட்டைக்கார விடுதியிலிருந்தார். அதுவும் தமது பஞ்சணையில் படுத்திருப்பதை உணர்ந்தார். கண்களை அகல விரித்து தாம் சுய உணர்வோடுதான் இருக்கிறோமோ என்று அறிய முயன்றார். ''இல்லை சுத்த கனவு'' என்று மறுபடியும் கண்களை மூட முயன்றார். அவர் எதிரில் ராஜமாதா ராம்பியாரி உட்கார்ந்திருந்தாள். ராஜமாதா அங்கு வரக் காரணமில்லை. ஆகையால் தாம் காணுவது கனவுதான் என்று முடிவு செய்துகொண்டு பஞ்சணையில் குப்புறப்படுத்துக் கொண்டார்.

''பல்வந்த்சிங்! எழுந்திரும். தூங்கியது போதும்'' என்ற ராஜமாதாவின் அதிகாரக் குரல் அவரை மீண்டும் விழிக்க வைத்தது. அலறிப்புடைத்துக்கொண்டு எழுந்த பல்வந்த் சிங் ''மகாராணி! தாங்களா! தாங்கள் இங்கு வரலாமா?'' என்று வினவினார்.

www.cleanindians.com



''வந்தாலென்ன?'' என்றாள் மகாராணி

''தாங்கள்...?'' இழுத்தார் பல்வந்த்சிங்

''எனது மகன் வரலாம். நான் வரக்கூடாதா?''

''மகாராணு...''

''எதற்கு வந்தார் என்பது எனக்குத் தெரியும்.''

''ஆம், ஆம். எல்லோருக்குமே தெரியும் அந்த ரகசியம்.''

''பல்வந்த்சிங்!''

''மகாராணி!''

''எல்லோருக்கும் தெரிந்தது ரகசியமாகுமா?''

''ஆகாது.''

''பின் ஏன் மூளையின்றிப் பேசுகிறீர்?'' மகாராணியின் குரலில் கடுமை இருந்தது.

பல்வந்த்சிங்கிடம் கோபம் தலைதூக்கினாலும் மகாராணியின் எதிரில் அது செலாவணியாகாது என்பதைப் புரிந்துகொண்டதால் அவர் பதிலேதும் சொல்லவில்லை.

மகாராணியே மேலும் பேசினாள். ''உம்மை மயக்க மருந்து கொடுத்து இங்கு கொண்டு வந்தேன். நீர் ஒன்றரை நாள் தூங்கியிருக்கிறீர். அதாவது மயக்கத்திலிருந்தீர். இன்று நான் புறப்படுகிறேன். என்னுடன் எனது மருமகளும் வருகிறாள்...'' என்று விஷயத்தை ஆரம்பித்தாள்.

வியப்புடன் விழித்தார் பல்வந்த் சிங். ''மகாராணி!'' என்று ஏதோ சொல்ல முயன்றார்.

''தடுத்துப் பயனில்லை. மகாராணாவை நீர் அச்சுறுத்தியபோதே இந்த ரகசியத்தை உடைத்துவிடத் தீர்மானித்தேன். ரகசிய ராணி இனி மகாராணாவின் உலகம் தெரிந்த ராணியாக அவர் அரண்மனையிலேயே இருப்பாள். என் பேத்தி கிருஷ்ணாவும்...'' என்று மகாராணி பேச்சை முடிக்குமுன் ''குழந்தையின் பெயரும் தங்களுக்குத் தெரி

யுமா'' என்று பிரமிப்பு முகத்தில் நிலவ, சொற்களில் பிரதிபலிக்க, கேட்டார் பல்வந்த்சிங்.

''எனக்குத் தெரியாமல் மேவாரில் ஏதும் நடந்துவிடும் என நினைக்கவேண்டாம். எனது மகனின் பலவீனம் அவனை பலர் கையில் சிக்கவைத்து விட்டது. அந்த சிக்கல்கள் அனைத்தையும் நான் அவிழ்க்க முடிவுசெய்து விட்டேன். முதலில் ரகசிய ராணியை வைத்து மகாராணாவை அச்சுறுத்தியது இன்றுடன் நின்றுவிடும். அடுத்து இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு பாடம் கற்பிக்கிறேன் வெகுவிரைவில். வாயிலில் ராணிகள் செல்லும் பல்லக்கு இருக்கிறது. அதில் ஏற்றுங்கள் எனது மருமகளையும் குழந்தையையும்'' என்று உத்தரவிட்டு எழுந்தாள் மகாராணி.

அங்கிருந்து அப்பொழுதே புறப்பட்டு மகாராணி தனது மருமகளுடனும் பேத்தி கிருஷ்ணாவுடனும் பல்லக்கில் இரவு நெடுநேரம் கழித்து வந்து சேர்ந்தார்கள், உதயபூர் அரண்மனைக்கு. அங்கு ரகசிய ராணிக்கும் மன்னன் சிறுமிக்கும் தோழிகள் மங்கல ஆரத்தி எடுத்தார்கள்.

ராணி உள்ளே நுழைந்ததும் அவளது அந்தப்புர அறைக்கு ராணி அழைத்துச் செல்லப்பட்டாள். அவள் அறையை அடையுமுன்பு மகாராணா அவளை வழியிலேயே சந்தித்து தமது குழந்தையையும் கையில் எடுத்து உச்சி முகர்ந்தார். அப்பொழுது குழந்தையின் தலையிலிருந்த உச்சிப்பூ அவர் உதடுகளில் படவே மகாராணா குழந்தையின் தலையை விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார்.

உச்சிப்பூவின் மாணிக்கக் கற்களும் விளக்கு வெளிச்சத்தில் பளபளத்து செவ்விய காந்தியை மன்னன் முகத்திலும் வீசின.

அதைப் பார்த்த மகாராணா ''இந்த உச்சிப்பூவை எதற்காகக் கொணர்ந்தாய்?'' என்று வினவினார் தமது ராணியை நோக்கி.

www.cleanindians.com



''ஏன்? அதனாலென்ன?'' என்று ராணி கேட்டாள்.

''இது மேவாரைப் பிளந்துவிடும். குழந்தைக்கும் தீமை தரும் என்று சொல்கிறார்கள்'' என்றார் மகாராணா.

''ஒரு சிறு உச்சிப்பூ எப்படி பெரிய மேவாரைப் பிளக்கும்?'' என்று ராணி கேட்டாள்.

''சோதிடர்கள் சொன்னார்கள்'' என்றார் மகாராணா.

''சோதிடத்தை நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று ராணி வினவினாள்.

''நம்புகிறேன். மனிதன் எதையாவது நம்பவேண்டுமல்லவா?'' என்ற மகாராணா தமது பள்ளியறைக்குச் சென்றார்.

அடுத்த சில நாழிகைகளுக்கு எல்லாம் மகாராணாவின் பள்ளியறைக்குள் நுழைந்த ரகசிய ராணி மெதுவாகக் கதவை சாத்திவிட்டு கணவனை நெருங்கினாள். அவள் சுந்தரவனத்தையும் கருவண்டு கண்களையும் கண்ட மகாராணா அவள் சிற்றிடையைப் பிடித்து தன்னை நோக்கி இழுத்தார். அடுத்த விநாடி ராஜ்ஜியத்தை மறந்தார், நெருக்கடி நிலையை மறந்தார். தனது ராணியின் உடலை தன் உடலுடன் சேர்த்து நெருக்கிக்கொண்டிருந்தார். மகாராணா சொன்னார் ''உன் அழகு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது'' என்று. சொல்லி தன் கைகளில் இறுக்கியிருந்த அவள் உடலை பஞ்சணையில் கிடத்தினார். விகசித்த புஷ்பம்போல் கிடந்தாள் ராணி வண்டுபோல் அவள் மீது புரண்டார் மகாராணா. வேட்கை மிகுந்த நிலையில் அவள் கேட்டாள் ''என்ன இத்தனை வெறி உங்களுக்கு?'' என்று.

''பிரிவு வேட்கையைத் தருகிறது, வேட்கை வெறியைத் தருகிறது'' என்றார் மகாராணா.

வெறியை காட்டவும் துவங்கினார். அந்த வெறிதான் எத்தனை இன்பமாக இருந்தது ராணிக்கு. அவள் பெரு

மூச்சும் அர்த்தமில்லாமல் அவளிடமிருந்து வந்த ஒலிகளும் அவள் அடைந்த சொர்க்கபோகத்துக்கு அத்தாட்சிகளாயிருந்தன.

மகாராணா போகத்தில் உலகை மறந்தார். அதே சமயத்தில் மேவாரின் இன்னொரு பகுதியில் விளைந்து கொண்டிருந்த விபரீதத்தை அவர் உணரவில்லை.

## 27. அழகுக் கைதி!

எந்த ஒரு நாட்டு மன்னன் கேவலம் காமுகனாக இருக்கிறானே, எந்த மன்னன் ஆட்சி மண்டபத்தை அலட்சியம் செய்து அந்தப்புர ஆட்சியிலேயே மூழ்கிக் கிடக்கிறானே, அவனால் நாடு நாசப்படுகிறது என்ற பழைய கொள்கைக்கு உதாரணமாக விளங்கினான் ராணா பீம்சிங்.

www.cleanindians.com

ராஜபுதனத்தில் மிகப் பழைய அனால்வாரா அரசர்களின் வழிவந்தவளும் சாலரா இன அழகியுமான ரகசிய ராணி பகிரங்க ராணியாகி தனது மூன்று வயது மகனுடன் உதயபூர் அரண்மனைக்கு வந்த நாளாக மகாராணா அந்தப்புரத்திலேயே ஆட்சி செலுத்திக் கொண்டார். பஞ்சணையைவிட்டு அவரைக் கிளப்புவதே பிரும்பப் பிரயத்தனமாக இருந்ததால், மேவாரில் ஏற்பட்டிருக்கும் பயங்கர நெருக்கடியை எப்படி சமாளிப்பது என்று ஏங்கிய பிரதான மந்திரி சோம்ஜி, மகாராணியிடம் இதைப்பற்றி முறையிட்டார். ''மகாராணி! நான் மகாராஜாவை பார்ப்பது கூட துர்பலமாகி விட்டதால் அரசாங்க அலுவல்களுக்கு அவரது ஆணையைப் பெறுவதும் முடியாதிருக்கிறதே?'' என்று கேட்டார்.

ராஜமாதா சிறிது நேரம் சிந்தித்தாள். ''சோம்ஜி! அவனை இப்பொழுது திருப்ப முடியுமென்ற நம்பிக்கை



எனக்கு இல்லை. மகாராணாவுக்குப் பதிலாக நீரே முடிவு எடுத்துவிடும்'' என்றாள் ராஜமாதா சிறிது சிந்தனைக்குப் பிறகு.

''இது எனக்கு பல எதிரிகளைக் கிளப்பிவிடும்'' என்று சுட்டிக்காட்டினார் சோம்ஜி.

''அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கும் யாருக்கும் இந்த நிலைதான் ஏற்படும். ஆனால் நாட்டுக்கு நல்லது செய்வதில் ஆபத்துகள் இருக்கத்தான் செய்யும். அதை நாம் பொருட்படுத்தலாகாது'' என்றாள் மகாராணி.

''என் உயிர் போனால்?''

''அரச சேவையில் போகும். சரித்திரத்தில் நிரந்தரமான இடத்தைப் பெறுவீர்.''

''எனக்கு சரித்திரத்தில் நிரந்தரமான இடம் வேண்டாமென்று என் பதவியை விட்டுவிட்டால்?''

''அப்பொழுதும் சரித்திரத்தில் நிரந்தரமான இடம் கிடைக்கும். நெருக்கடி சமயத்தில் ஓடிவிட்டு கோழை என்று வரலாற்றில் இடம் பெறுவீர்'' இதைச் சொன்ன ராஜமாதா புன்முறுவல் செய்தாள்.

அந்த புன்முறுவலை கவனித்த சோம்ஜி ''அரசைப் புறக்கணித்த ராணாவுக்கு மட்டும் அந்த பெயர் கிடைக்காதோ?'' என்று கேட்டார்.

''அந்தப் பெயர் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. புதிதாக ஏற்படாது'' என்றாள் ராஜமாதா. ''சோம்ஜி! உமக்கு முன்னால் இருந்த மந்திரி இந்த ராஜ்ஜியத்தைக் காப்பாற்றினார், தமது சொத்தையெல்லாம் விற்று. அவர் இறந்தபோது அவரது ஈமக்கிரியைகளுக்குக் கூட பணமில்லாமல் பொதுமக்களிடம் பணம் வசூலித்தார்கள். ஆனால் அவர் பெயர் சரித்திரத்தில் நிலைத்துவிட்டது. சாவு எல்லோருக்கும் வருகிறது சோம்ஜி. சாவு எப்படி வருகிறது என்பதுதான் நினைக்கத் தகுந்தது'' என்ற ராஜ

மாதா "சோம்ஜி! மேவார் உம்மைத்தான் நம்பியிருக்கிறது" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

சோம்ஜி நின்ற இடத்திலேயே சிலையென நின்றார் பல விநாடிகள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து தமது மாளிகைக்குத் திரும்பி பல ஓலைகளை எழுதினார். ஜெய்பூர், கோட்டா சமஸ்தானங்களை மேவாருடன் இணைந்து, ராஜஸ்தானத்துக்குள் புகுந்துவிட்ட மகாராஷ்டிரர்களை வெளியேற்ற அவர்கள் முனைய வேண்டுமென்றும், இல்லாவிட்டால் மேவாரைப் போலவே அவர்கள் ராஜ்ஜியங்களும் அழியும் என்றும் ஓலைகளில் குறிப்பிட்டார். அந்த ஓலைகள் அந்தந்த ராஜ்ஜியங்களுக்குப் போய்ச் சேரும் முன்பாகவே ஒரு தனிச் செய்தி வந்தது அவருக்கு.

அவசர ஓலை ஒன்றைத் தாங்கி வந்த ஒரு வீரன் சோம்ஜியை சந்தித்தான்.

ஓலையை வாங்கிப் படித்த சோம்ஜியின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. மகாராஷ்டிரர்கள் முற்றுகையைப் பிளந்து திப்சந்த் ஜாவுத் கோட்டையைக் கைப்பற்றி விட்டான் என்ற செய்திதான் அது.

அந்த செய்தி தீயைப்போல் ராஜபுதனம் முழுவதும் பரவவே கோட்டா சமஸ்தானத்தின் ஜலீம்சிங்கும் ஜெய்பூர் சமஸ்தானப் படைகளும் போரில் இறங்கிவிட்ட செய்தியும் சோம்ஜிக்குக் கிடைத்தது. ஏற்கெனவே மகாராஷ்டிரர்களிடம் சிக்கியிருந்த நீம்பாஹீரா, லால்ஸாந்த், ராம்புரா முதலிய கோட்டைகள் அனைத்தும் மீட்கப்பட்ட செய்தி மேவாரின் அந்தஸ்தை பழய நிலைக்குக் கொண்டு சென்றது.

ராஜஸ்தான் மீண்டும் துளிர்த்துவிட்ட செய்தி மகாராஷ்டிரத்திலும் பரவியதால் மாதாஜி சிந்தியாவின் வலுவைப்பற்றி மகாராஷ்டிரத்தில் சந்தேகம் பலமாக ஏற்படவே அவர் பெரிதும் கலங்கினார். கடைசியாக அவருக்

www.cleanindians.com



குக் கிடைத்த செய்தி ஜாவுத் கோட்டையின் வீழ்ச்சிதான் "அதைக் காத்து வந்த சேவாஜி நானாராவ் அத்தனை சாதாரணமானவரல்லவே? அவர் எப்படி தோல்வியடைந்தார்?" என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார் சிந்தியா.

இப்படி அவர் சிந்தனையிலிருக்கையில் "நானாராவ் வந்திருக்கிறார்" என்று வீரன் ஒருவன் அறிவித்தான்.

"வரச்சொல்" என்றார் சிந்தியா.

நானாராவ் உள்ளே வந்தார். அவர் உடலில் காயம் எதுவுமில்லாததைக் கவனித்த சிந்தியா "நானா! நீர் போர்க்களத்திலிருந்து தானே வருகிறீர்?" என்று விசாரித்தார்.

அந்த விசாரணையிலிருந்த இகழ்ச்சியைப் புரிந்து கொண்ட நானாராவ் "போர் என்பது புஷ்கரத்தின் நீராட்டமல்ல" என்று நானாவும் தமது இகழ்ச்சியைக் காட்டினார்.

அப்பொழுது புஷ்கரத்தில் புனித நீராட தாம் வந்திருந்ததை மறைமுகமாக நானா உணர்த்துகிறார் என்பதைப் புரிந்து கொண்ட மாதாஜி சிந்தியா "ஆம், புஷ்கரத்தில் நீராட வந்தேன். ஆனால், ஆடிய நீர் என் உடலிலிருந்து உலர்ந்து மறைந்துவிட்டது. போர்க்களத்தில் இருந்து வரும் உமது உடலின் இரத்தமும் காயங்களும் எப்படி உலர்ந்தன? ஒருவேளை உமது உடலில் இரத்தத்துக்கு பதில் நீர் ஓடுகிறதா?" என்று வினவினார்.

நானாராவ் தலை குனிந்து நின்றார். "சிந்தியா! நான் யாரோடு போரிட்டேனோ அவன் சாதாரண மனிதனல்ல. மகாவீரன், மகாதந்திரசாலி. அவன் வந்தது பத்தாயிரம் வீரர்களுடன் சுமார் நூறு பீரங்கிகளைக் கொண்டுவந்தான். சில வாணவெடிகளையும் கொண்டு வந்தான். நானும் கோட்டை பீரங்கிகளை இயக்கி, அவை குண்டுகளை வீசு முன்பே, அந்த வாலிப வீரனின் குண்டுகள் தமது பீரங்கி

களை கோட்டைச் சுவர்களிடமிருந்து வீழ்த்தின. அவன் விடுத்த வாணவெடிகள் கோட்டைக்குள் பல இடங்களில் விழுந்து பல இல்லங்களையும் போர்க் கூடாரங்களையும் கொளுத்திவிட்டன.

நான் எனது புரவிப் படையை வெளியே அனுப்பினேன். அவன் புரவிப்படை பக்கங்களில் நகர்ந்து எனது புரவிப்படை உள்ளே புகுந்தாலும் மறுபடியும் அவன் புரவிப்படைகள் சேர்ந்து எனது புரவிப் படையை நெருங்கி அழித்துவிட்டன. மேலும் சேதம் ஏற்படும் முன்பு சரணடைவதாக செய்தி அனுப்பினேன். அவன் ஒப்புக்கொண்டான். கோட்டையைவிட்டு நான் படைகளுடன் வெளியேறிய போது அவன் படைகளால் எந்தவித தடையும் இல்லை. பெரிய புரவியொன்றில் அமர்ந்திருந்த அவன் எனக்கு தலை வணங்கினான், மகாவீரன், நாணயமுள்ளவன், அழகாகவும் இருக்கிறான்'' இப்படிச் சொல்லி முடித்தார் நானாராவ்.

www.cleanindians.com

மகாவீரனான நானாராவ், பல போர்களில் வெற்றி வாகை சூடியிருக்கும் நானாராவ், இப்படி ஒருவனைப் புகழ வேண்டுமென்றால் அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்று சிந்தியா தீர்மானித்தார். எதிரியின் அழகைப் பற்றி நானாராவ் பாராட்டியதும் சிந்தியா அத்தனை கஷ்டத்திலும் புன்னகை செய்தார். ''எதிரி மிகவும் அழகனோ?'' என்று விசாரித்தார்.

''ஆம்.''

''வயதானவனா?''

''இல்லை வாலிபன்.''

''பெயர்?''

''தீப்சந்த்.''

''பெயரும் அழகாகத்தான் இருக்கிறது.''

''ஆம்'' என்றார் சிந்தியா.



சிந்தியா லேசாக நகைத்தார். ''அப்படியானால் உமது பெண்ணை அவனுக்குக் கொடுக்கலாமே?'' என்றார் நகைப்பின் ஊடே.

நானாராவ் அந்த சிரிப்புக்கு மசியவில்லை. தாமும் புன்முறுவல் செய்து ''முடியாது'' என்றார்.

''ஏன்? என்ன ஆட்சேபணை?'' என்று சிந்தியா கேட்டார்.

''அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள்'' என்ற ஒரு அதிர்வேட்டை தூக்கிப் போட்டார் நானாராவ்.

சிந்தியா நகைத்தார் பெரிதாக. ''அவளை நீர் பார்த்திருக்கிறீரா?'' என்று வினவினார்.

''பார்த்திருக்கிறேன்.''

''ரொம்ப அழகோ?''

''இணையில்லா அழகு'' என்று சொன்ன நானாராவ் சிந்தியா முற்றும் எதிர்பாராத இரண்டாவது வெடி குண்டை எடுத்து வீசினார் ''தாங்கள் வேண்டுமானாலும் பார்க்கலாம்'' என்று.

சிந்தியாவின் முகத்தில் அதிர்ச்சி பெரிதும் விரிந்தது. ''என்ன உளறுகிறீர்?'' என்று கேட்டார்.

''உளறவில்லை. இப்பொழுது வெளியே நிற்கிறாள். உத்தரவிட்டால் உள்ளே அழைக்கிறேன்'' என்றார் நானாராவ்.

அந்த உத்தரவுக்கு அவசியமில்லாது போயிற்று. வீரர்கள் உடையில் தலைக்குழல் விரிந்து கிடக்க உள்ளே நுழைந்தாள் புஷ்பாவதி. ''இங்கு யார் சிந்தியா என்பது?'' என்று சீற்றத்துடன் வினவவும் செய்தாள்.

சிந்தியா அவள் அழகைக் கண்டு பேரதிர்ச்சியடைந்தார். அவள் கண்களில் இருந்து பறந்த சினத்தின் பொறிகளே அவள் அழகை, கண்களின் அழகை பன்மடங்கு

அதிகப்படுத்தியது. சினத்தால் துடித்த செவ்விய அதரங்கள் பனி வீழ்ந்த செம்பருத்தி போல் காட்சியளித்தன. ஆண் உடையிலும் அவள் மிக அழகாயிருந்தாள் விரிந்த அவள் குழல்களில் சில அவள் தோள்களில் தொங்கியது கூட ஒரு புதுமையை சிருஷ்டித்தன.

அவளை நீண்ட நேரம் உற்று நோக்கிய சிந்தியா நானுராவைப் பார்த்து "ஒரு பெண்ணைத்தான் உம்மால் பிடிக்க முடிந்தது?" என்று கேட்டார்.

"இவள் பெண்ணல்ல ராட்சசி. என் வீரர்களில் நான்கு பேரைக் கொன்ற பிறகே பிடிபட்டாள்" என்றார் நானுராவ்.

சிந்தியா தனது பணியாட்களை அழைத்து "இவளை அழைத்துப் போய் என் மனைவியிடம் விடுங்கள்" என்று கூறி "பெண்ணே! கவலைப்படாதே. என் மனைவி உன்னை எங்கள் பெண்போல் நடத்துவாள்" என்றும் கூறினார்.

www.cleanindians.com

இரு காவலரிடையே புஷ்பாவதி உள்ளே சென்றாள். "இப்பொழுது ஒரு யோசனை தோன்றுகிறது" என்றார் சிந்தியா.

"என்ன யோசனை?"

"நீர் மீண்டும் தூது போக வேண்டும்."

"எங்கு?"

"நானே சொல்கிறேன்" என்று அத்துடன் பேட்டி முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக ஆசனத்தில் இருந்து எழுந்து உள்ளே சென்றார்.

மறுநாள் அவர் அளித்த உத்தரவைக் கேட்டதும் நானுராவுக்கு பிராணனே போய்விட்டது. "நீங்களே என்னைக் கொன்றுவிடலாமே" என்றார் நானுராவ்.

## 28. புஷ்கரம்

இரு காவலிரிடையே ஆணுடையில் தனது அந்தப்புரத்துக்கு அழைத்து வரப்பட்ட புஷ்பாவதியை நோக்கிய மாதாஜி சிந்தியாவின் மனைவி அந்தப் பெண்ணின் அழகைக் கண்டு பிரமித்துப் போய் "வா...அம்மா உள்ளே" என்று அவளை அணைத்து உள்ளே அழைத்துப் போனாள் ஏதோ பேசப்போன புஷ்பாவதியைத் தடுத்த சிந்தியாவின் மனைவி "பெண்ணே! நீ நீண்ட தூரம் பயணம் செய்திருக்கிறாய். முதலில் அந்த அறைக்குள் சென்று மாற்றுடை அணிந்து வா, பிறகு பேசுவோம்" என்று ஒரு அறையை சுட்டிக் காட்டினார்.

அந்த அறைக்குள் சென்ற புஷ்பாவதி அங்கு கயிற்றுக் கொடிகளில் தொங்கிய பல சேலைகளில் ஒன்றை எடுத்து தனது கால் சராய்களைக் களைந்து விட்டு சேலையை உடுத்தி தலையையும் முடித்துக் கொண்டாள். அவள் பெண்ணுடை அணிந்து வெளியே வந்தபோது அவள் அழகைக் கண்டு பிரமித்துப்போன சிந்தியாவின் மனைவி "பெண்ணே! உன் பெயரென்ன?" என்று வினவினாள்.

"புஷ்பாவதி" என்று புஷ்பாவதி உண்மையே சொன்னாள், பொய்யோ உண்மையோ எதைச் சொன்னாலும் விளைவு ஒன்றுதான் என்ற காரணத்தால்.

நடுத்தர வயதை அடைந்திருந்த மாதாஜி சிந்தியாவின் மனைவிக்கு பெண் குழந்தைகள் இல்லாததாலும் புஷ்பாவதியின் நீண்ட கருத்த கேசத்தைக் கண்டு வியப்படைந்ததாலும், புஷ்பாவதியை அருகில் அழைத்து உட்கார வைத்து அவள் நெடுங்குழலை சிக்கெடுத்து வாரமுற்பட்டாள். "அப்பா! எத்தனை நீளம்! எத்தனை அடர்த்தி!" என்று வியந்துகொண்டே புஷ்பாவதியின் குழலை வாரி பின்னிய சிந்தியாவின் மனைவி புஷ்பாவதியை திரும்பச்சொல்லி முன்னுச்சியை வகிடு எடுத்த போது முகத்தின் அழகையும் பார்த்து பிரமித்தாள். அகலமான

வதனமும், அச்சமற்ற அழகிய விழிகளும் சிந்தியாவின் மனைவியின் மனதை அப்படியே ஈர்த்ததால் அவள் உள்ளூர வினவிக் கொண்டாள் ''இவளை எதற்காக நானாரால் சிறை பிடித்து வந்தார்?'' என்று.

சிந்தியாவின் மனைவியின் மனதில் ஓடிக்கொண்டிருந்த சந்தேகங்களைப் புரிந்துகொண்ட புஷ்பாவதி தனது அழகிய அதரங்களில் புன்முறுவலை படரவிட்டுக்கொண்டு ''அம்மா! நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது'' என்றாள் மெதுவாக.

''என்னடி புரிகிறது உனக்கு?'' என்று சொந்தத் துடன் வினவினாள் சிந்தியாவின் மனைவி.

''என்னை ஏன் நானாரால் பிடித்து வந்தார் என்று சிந்திக்கிறீர்கள்'' என்று கூறி லேசாக நகைத்தாள் புஷ்பாவதி.

''பெண்ணே! அப்படி என்ன குற்றம் செய்தாய் நீ''

''நான் ஜாவுத் கோட்டைக்குள் நுழைய முயன்றேன்'' என்று கூறி கண்களை வெட்கத்தால் தாழ்த்திக் கொண்டாள்.

''யாரைப் பார்க்க?''

''அங்குள்ள ராஜபுத்திர தளபதியை பார்க்க.''

''யாரோ தீப்சந்த் என்று சொல்கிறார்களே அவரையா?''

''ஆம்.''

''அவரை எதற்காக நீ பார்க்க வேண்டும்.''

''அவர்...அவர்...'' என்று தடுமாறினாள் புஷ்பாவதி.

''புரிகிறது, புரிகிறது, நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்'' என்று கூறி புன்முறுவல் காட்டிய சிந்தியாவின் மனைவி ''ஆமாம்! தளபதியென்றால் வயதாயிருக்க வேண்டுமே. குறைந்தபட்சம் நடுத்தர வயதாவது



இருக்க வேண்டுமே. போயும் போயும் வயதானவரை ஏன் உன் தந்தை பிடித்தார் உனக்குக் கணவனாக. ஈடு, வயது, இரண்டுமே சரியாயிருக்காதே'' என்று கேட்டாள் சிந்தியாவின் மனைவி சற்றே துயரம் துளிர்த்த குரலில்.

அதற்குள் அவள் புஷ்பாவதியின் முன்னுச்சியை வாரி கன்னங்களைத் தடவி கைகளால் சொடுக்கெடுத்து திருஷ்டி கழித்தவுடன் புஷ்பாவதி அவளை மெதுவாக ''அம்மா!'' என்றழைத்தாள்.

''என்னம்மா?'' என்று கேட்டாள்.

''நீங்கள் நினைப்பது போல் அவர் ஒன்றும் வயதானவரல்ல...'' புஷ்பாவதி குழைந்தாள்.

''என்ன வயதிருக்கும்?'' என்று கேட்டாள் சிந்தியாவின் மனைவி.

''இருபத்தி நான்குக்கு மேல் இருக்காது.''

''அவ்வளவு சின்ன பிள்ளையா?''

''ஆமாம், அம்மா.''

''அதற்குள் பெரிய தளபதியாகிவிட்டானே?''

''அவர்...''

''சொல்லடி கண்ணே.''

''மகாவீரர். பீம்சிங் சலூம்பிராவையே தோற்கடித்தவர்.''

புஷ்பாவதியின் குரலில் இருந்த கனிவையும் ஆர்வத்தையும் கவனித்த சிந்தியாவின் மனைவி புஷ்பாவதியை அப்படியே வாரி அணைத்துக்கொண்டாள். அப்பொழுது சொன்னாள் புஷ்பாவதி ''அம்மா எனக்குத் தாயில்லை, நீங்கள்தான் தாய். இந்த அரவணைப்பை இதுவரை யாரும் எனக்குத் தரவில்லை'' என்று.

''எனக்கும் உன்னைப்போல் ஒரு பெண் வேண்டும். உன் கணவன் வரும் வரையில் என்னுடனேயே இருந்து

www.dceanindians.com

விடு'' என்ற சிந்தியாவின் மனைவி ''இன்று இந்த மாளிகையிலேயே நீராடி விடு. நாளை முதல் உன்னை புஷ்கரம் ஏரிக்கு அழைத்துப் போகிறேன். அந்த புண்ணிய தீர்த்தத்தில் நீராடினால் உன் கஷ்டங்கள் எல்லாம் போகும். உன் கணவனும் உன்னை நாடி வருவான்'' என்று கூறினாள்.

புஷ்பாவதியின் கண்களில் இன்பச் சாயை விரிந்தது. ''அம்மா?'' என்று மெதுவாக அழைத்தாள்.

''என்ன புஷ்பாவதி?'' சிந்தியாவின் மனைவியின் வளைந்த புருவங்கள் சிறிது மேலே ஏறி அதிகமாக வளைந்தன.

''நீங்கள் சொன்னீர்களே.''

''என்ன சொன்னேன்?''

''அவரைப் பற்றி.''

''தீப்சந்தைப் பற்றியா?''

''ஆம்.''

''அவருக்கென்ன?''

''அவருக்கும் எனக்கும் திருமணமாகவில்லை.''

''ஏன்?''

''நிச்சயமானவுடன் இந்த போர் மூண்டுவிட்டது.''

''இந்தப் போர் நீடிக்காது புஷ்பாவதி. சீக்கிரம் முடிந்துவிடும். நீ உன் கணவனை அடையலாம் உன் திருமணத்தை நானே நடத்திவைக்கிறேன்.''

இந்த ஆதரவான சொற்களைக் கேட்டதும் புஷ்பாவதியின் கண்களில் நீர் சுரந்தது. ''அம்மா! இனி நீங்கள் தான் எனக்குத் தாய். தாயில்லாத குறையை நீங்கள் தீர்த்துவிட்டீர்கள்'' என்றாள், கண்களையும் துடைத்துக்கொண்டாள்.

''பைத்தியமே! அழுவதற்கு என்ன நேர்ந்துவிட்டது? உன்னை ஓடவிட்ட அந்த மாப்பிள்ளை வரட்டும் அவனை

www.cleanindians.com



என்ன செய்கிறேன் பார்'' என்று ஆறுதல் சொன்ன சிந்தியாவின் மனைவி ''புஷ்பாவதி! இங்குள்ள புஷ்கரம் என்ற ஏரி மகா புனிதமானது. இன்றிலிருந்து ஏழாவது நாள் அதன் புண்ணிய நீராட்ட தினம் வருகிறது. அதில் நீராடு. உன் துன்பங்கள் எல்லாம் தீரும்'' என்று சொல்லி ''சரி, நீராடிவிட்டு வா'' என்று நீராட்ட அறையையும் காட்டினாள்.

அன்று முதல் சிந்தியாவின் மனைவி புஷ்பாவதியை பிரதிதினம் புஷ்கரம் ஏரிக்கு அழைத்துச் சென்றாள். அழகான சூழ்நிலையில் அலைகள் மோதும் நீரால் நிரம்பிய அந்த ஏரியைக் கண்டு பிரமித்த புஷ்பாவதி சிந்தியாவின் மனைவியுடன் நீராடினாள். ஒவ்வொரு நாளும் அவள் திரும்பியதும் அவள் கூந்தலை உலர்த்தச்சொல்லி சீர் செய்து மகிழ்ந்தாள் சிந்தியாவின் மனைவி.

இரண்டு நாளுக்குள் சிந்தியாவின் மனைவியின் காரணமாக அவள் பெண் பெறக்கூடிய அந்தஸ்து அனைத்தையும் புஷ்பாவதி பெற்றாள். காவலர் அவளுக்குத் தலைவணங்கி வணக்கம் செலுத்தினர். சிந்தியாவுக்கும் அவள் மீது அன்பு ஏற்பட்டதால் அவளுடனேயே உணவருந்தவும் முற்பட்டு, மெதுவாக அவள் கதையை மனைவி மூலம் தெரிந்து கொண்டார். அதனால் அவர் மனதிலும் துன்பம் துளிர்த்தது. ஜாவுத் கோட்டையைக் கைப்பற்ற வலுவான படையொன்றை மீண்டும் அனுப்பியிருந்தார் சிந்தியா. அது தவிர கோல்கார் சமஸ்தான ராஜமாதாவான அகல்யாபாயையும் ராஜபுத்திரர்களை தாக்க வேண்டிக் கொண்டிருந்தார். இப்படி இணைந்த பெரும் படைகள் மேவார் கோட்டைகளைத் தாக்கினால் அவை மீண்டும் தமது வசமாகிவிடும் என்பதில் சிந்தியாவுக்கு சந்தேகம் சிறிதுமில்லை. அப்படி ஏற்படும் வலுவான போரில் இந்த பெண்ணின் காதலனும் சிக்கி அவனுக்கு ஆபத்து ஏற்பட்டால் என்ன செய்வதென்று கலங்கிய சிந்தியா ''போரில் நமது கடமை இருக்கிறது. இருந்தா

லும் இவனைக் காப்பாற்றப் பார்க்கிறேன்'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டார். அதை முன்னிட்டு ஜாவுத் கோட்டையின் தளபதிக்கு தீங்கு ஏற்படாமல் உயிரோடு பிடித்து வரவும் செய்தி அனுப்பினார்.

நாட்கள் ஆறு சென்றன. புஷ்கரத்தில் நீராடும் புண்ணிய தினமும் நெருங்கிக் கொண்டிருந்தது. ஏராளமான பயணிகள் புஷ்கரத்துக்கு வந்துகொண்டிருந்தார்கள். புண்ணிய தினத்தை உத்தேசித்து யாரும் தடை செய்யப்படவில்லை. சந்நியாசிகள், போர் வீரர், வணிகர் இப்படி பலதரப்பட்ட மக்களும் அந்த நகரத்தில் குழுமினர். சிந்தியாவின் மாளிகை மாடியிலிருந்து ஊருக்குள் வந்து கொண்டிருந்த மக்கள் சமுத்திரத்தைப் பார்த்து வியந்து கொண்டிருந்தாள் புஷ்பாவதி. இருப்பினும் தீப்சந்த் எப்படியிருக்கிறானோ என்ற எண்ணமே அவள் மனதில் மேலோங்கி நின்றது. அன்றிரவு சிந்தியாவின் மனைவி மறுநாள் புஷ்கரத்தில் தாங்கள் நீராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தாள். ''புஷ்பாவதி! நாளையுடன் உனக்கு விடிமோட்சம் ஏற்படும்'' என்று கூறினாள். அது எப்படி சாத்தியம் என்று எண்ணிய புஷ்பாவதி உள்ளிருந்த சோகத்தின் விளைவாக பெருமூச் சொன்றையும் வெளியிட்டாள்.

அன்று இரவு முழுவதும் தீப்சந்தையே நினைத்துக் கொண்டிருந்த புஷ்பாவதி புஷ்கரத்தில் இருந்து தப்பும் வழியைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டிருந்தாள். அவனுடன் தான் மகாராணா அந்தப்புரத்திலும், நந்தவனத்து கொடி வீட்டிலும், மரங்களின் மறைவுகளிலும் அனுபவித்த இன்பங்களை நினைத்து நினைத்து ஏங்கினாள். இரவு நீங்கி பொழுது விடிந்த பின்பும் புஷ்பாவதி அதே யோசனையிலிருந்ததால் அவள் கண்கள் சிவந்திருந்ததைக் கண்ட சிந்தியாவின் மனைவி ''புஷ்பாவதி! உன் மனம் எனக்குப் புரிகிறது. ஆனால் இன்றுடன் உன் நிலையில் சீர்மை காணும். உன் துயர் துடைக்கப்படும்'' என்று கூறி



அவளையும் புஷ்கர ஏரிக்கு அழைத்துச்செல்ல ஏற்பாடுகளைச் செய்தாள்.

விடிந்ததும் தனது சிவிகையில் புஷ்பாவதியுடன் கிளம்பிய சிந்தியாவின் மனைவி மக்கள் சமுத்திரத்தின் காரணமாக மெள்ளவே ஏரியை அடையவேண்டியிருந்தது. மெள்ள சிவிகையில் இருந்து அருகில் கட்டப்பட்டிருந்த பிரத்தியேக கூடாரத்தில் தங்கி நீராடும் ஆடைகளை அணிந்துகொண்ட சிந்தியாவின் மனைவி, புஷ்பாவதியைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள். நன்றாகப் புடைத்து எழுந்து நின்ற புஷ்பாவதியின் கடின மார்பகத்தைக் கண்டு ஒரு நாள் தானும் அப்படியிருந்ததை நினைத்துக்கொண்டாள். பிறகு புஷ்பாவதியை ஆசையுடன் அணைத்துக் கொண்டு காவலர் புடைசூழ நீராடும் துறைக்குச் சென்றாள். நன்றாகக் காவலிடப்பட்டு சிந்தியாவின் மனைவியும் தோழிகளும் நீராட மூங்கில்கள் நடப்பட்டு தனி நீராடு துறையாக வளைக்கப்பட்ட இடத்துக்குள் சிந்தியாவின் மனைவியும் புஷ்பாவதியும் நீராட முற்பட்டாலும், நடப்பட்ட கால்களுக்கு வெளியே கும்பல் நெறிபட்டுக் கொண்டிருந்தது. எங்கும் கிருஷ்ணா, கோவிந்தா என்ற சப்தம் ஆகாயத்தை நிரப்பிக்கொண்டிருந்தது.

அந்த கோஷத்தைக் கேட்டு கிருஷ்ணனே அங்கு வந்துவிடுவான் போலிருக்கிறது என்ற தெய்வீக சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

புஷ்பாவதியின் கையைப் பிடித்துக்கொண்டு ஏரி நீரில் மூழ்குமுன்பு ''புஷ்பாவதி! உனக்குத் தேவையானதை பிரார்த்தித்துக் கொண்டு நீரில் மூழ்கு'' என்றாள் சிந்தியாவின் மனைவி.

தீப்சந்தை நினைத்துக் கொண்டே இரண்டு முறை நீரில் மூழ்கி மூன்றாவது முறை எழுந்தபோது ஏரியின் நீரில் அத்தனை கூட்டத்தையும் மீறி ஒரு வாலிபன் நீந்தி திளைந்து கொண்டிருந்தான். ஒரு முறை மூழ்கி எழுந்த

www.chennaiindians.com

போது அவன் முகம் நன்றாகவே தெரிந்ததால் திடுக்கிட்டாள் புஷ்பாவதி.

அவள் கண்டது தீப்சந்தின் முகம்! அவன் முகத்தைக் கண்டு திடுக்கிட்டதை கவனித்த சித்தியாவின் மனைவி புஷ்பாவதியை தவறாகப் புரிந்துகொண்டு "அவனைப்பற்றி பயப்படாதே. அவன் இன்றுதான் நம்மிடம் காவலனாக அமர்ந்திருக்கிறான். முகம் சற்று விகாரமானாலும் நல்லவன். அவனை உன் தந்தையே தேர்ந்தெடுத்து அந்தப்புரக் காவலனாக நியமித்திருக்கிறார். அவனுக்கு மூளை கொஞ்சம் சரியில்லை. வேறு குறை கிடையாது" என்றாள்.

புஷ்பாவதி நீராடி விட்டு சித்தியாவின் மனைவியுடன் தங்கள் கூடாரத்துக்குச் சென்று மாற்றுடையை அணிந்தாள். சிவிகையில் ஏறு முன்னமே அந்த புதிய அந்தப்புரக் காவலன் வந்து அவர்கள் இருவரையும் தலைவணங்கி சிவிகையைத் தூக்கவும் மற்றவர்களுக்கு கைகொடுத்தான். சிவிகைக்கு அவன் தோள் கொடுத்தது மிகவும் கஷ்டமாயிருந்ததால் புஷ்பாவதி கேட்டாள் "இந்த புது மனிதனால் சிவிகையைத் தூக்க முடியுமா?" என்று.

"நன்றாகச் சொன்னாய் புஷ்பாவதி! இவன் நம்மிருவரையுங்கூட தூக்குவான், நல்ல பலசாலி. வயதில் சிறியவனாயிருக்கிறானே என்று எண்ணாதே" என்றாள் சித்தியாவின் மனைவி.

## 29. புதுக் காவலன்!

சிவிகை தூக்க முற்பட்ட வாலிபன் முகம் பார்க்க அருவெறுப்பாக இருந்தாலும், அவன் நல்ல வலுவுள்ளவன் என்பதை சித்தியாவின் மனைவி சுட்டிக்காட்டியதும்

www.cleanindians.com



உள்ளூர உவகை கொண்டாலும், தன்னையும் சேர்த்து அவன் தூக்குகிறானே என்பதால் பெரிதும் வெட்கத்தையே அடைந்தாள் புஷ்பாவதி.

அந்த வாலிபன் மல்லாந்து துளைந்த போதே அவன் யார் என்பதை புரிந்துகொண்ட புஷ்பாவதிக்கு, தன்னையே ஏமாற்றும் அளவுக்கு அவன் எப்படி தனது முகத்தை விகாரப்படுத்திக் கொண்டான் என்பது பரம விசித்திரமாயிருந்தது. முகத்தில் நெடுக்கும் குறுக்குமிருந்த நாலைந்து வெட்டுக் காயங்களும், அதன் விளைவாகவோ என்னவோ பழுத்தும் சிவந்தும் கிடந்த சருமத் திட்டுக்களையும் கண்ட புஷ்பாவதி அவனை முதலில் சரியாகக் கவனிக்காவிட்டாலும், அவன் மார்பகத்தில் இருந்த நவரத்தின மணிமாலை பளபளத்ததையும், ஒருமுறை அவன் தன்னை நோக்கி ஒரு கண்ணை மூடித் திறந்து அயோக்கிய பார்வையை வீசியதையும் கண்ட புஷ்பாவதி அவன் தீப்சந்த் என்பதை சந்தேகமற புரிந்து கொண்டாள். என்னதான் வேடம் போட்டாலும் அவன் கண்கள் உண்மையை மறைக்க முடியவில்லை என்பதை உணர்ந்த புஷ்பாவதி "அப்பா! ஒரு கணம் நானே ஏமாந்துவிட்டேனே!" என்று தன்னைப்பற்றி கடிந்தும் கொண்டாள். "போயும் போயும் இவர் என்னைத் தூக்குகிறாரே, இது நியாயமா? என்றும் வினவிக்கொண்டாள்.

அதுவரை அந்த உள் கேள்விகளுக்கு மனம் பதில் சொல்லாவிட்டாலும் அப்பொழுது சொல்ல ஆரம்பித்து "உன்னை மோகினிவனத்திலிருந்து தோளில் சுமந்துதானே வந்தான் இந்த கள்வன்? பிறகு எத்தனை முறை கட்டித் தூக்கியிருப்பான்? அப்பொழுதெல்லாம் சும்மா இருந்த உனக்கு இப்பொழுது என்ன வந்துவிட்டது?" என்று கேட்டது.

"அதுவும் இதுவும் ஒன்றா?" என்று அவள் மனத்தை நோக்கி வினவினாள்.

"என்ன வித்தியாசம்" என்று கேட்டது மனம்.

''அங்கு அன்பில், ஆசையில் தூக்கினார்...'' என்று அவள் சொன்னாள்.

''அந்த இரண்டில் இப்பொழுது எது குறைந்து விட்டது?'' என்று கேட்டது மனம்.

''என்னைத் தூக்குவது இருக்கட்டும்...''

''ஓகோ உன் சுவீகாரத் தாயாரையும், அதாவது அவன் மாமியாரையும் தூக்குவது தவறு என்கிறாயா?'' என்று கேட்டது மனம். சிரிக்கவும் சிரித்தது.

''விளையாடாதே மனமே, எனக்குக் கோபம் வரும்'' என்றாள் புஷ்பாவதி.

மனத்தின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத தால் வெட்கத்தின் வசப்பட்டாள் புஷ்பாவதி.

அவன் சிறிதும் சிரமப்படாமல் மற்ற ஆட்களுடன் சிவிகையை அனாயாசமாகத் தாங்கி வந்தான். சிந்தியா இருந்த மாளிகையை அடைந்ததும் அந்தப்புரத்தை நோக்கி சிவிகையை தாங்கிச் சென்ற காவலர் சிவிகையை இறக்கியதும் அந்த வாலிபன் மட்டும் முகத்தை நிமிர்த் தவே இல்லை. குனிந்தபடியே நின்றான் பல விநாடிகள்.

''இனி நீ போகலாம்'' என்றாள் சிந்தியாவின் மனைவி.

அதற்கு அவன் பதில் சொல்லாமல் விரைப்பாய் நிற்கவே ''மறந்துவிட்டேன் மகளே! இவனுக்கு காது சிறிது மந்தம் என்று உன் தந்தை சொன்னார்'' என்ற சிந்தியாவின் மனைவி, அந்த புதுக் காவலனை நோக்கி நீ போகலாம் என்பதற்கு அறிகுறியாக கையை அசைக்கவே, அவன் சென்றான்.

புஷ்பாவதியும் அவள் புதுத்தாயும் உள்ளே சென்று மாற்றுடைகளை அணியத் துவங்கியதும் ''பெண்ணே! எனது பெரிய பெட்டியொன்றை கொண்டு வந்திருக் கிறேன். அதில் எனது திருமண நாளான்று அணிந்த சேலையை கொண்டு வந்திருக்கிறேன். இன்று நீ அதை அணிந்துகொள்'' என்றாள்.

www.cleanindians.com



''ஏனம்மா?'' புஷ்பாவதியின் குரல் குழைந்து கிடந்தது.

''அது அதிர்ஷ்டம் வாய்ந்தது. என்னை திருமணம் செய்துகொண்ட பிறகுதான் உன் தந்தைக்கு வெற்றிகளும் புகழும் வந்து குவிந்தன. அதை நீ உடுத்திக்கொள் இன்று. உன் காதலன் உன்னைத் தேடி வருவான்'' என்றாள் சிந்தியாவின் மனைவி.

புஷ்பாவதி வெட்க நகை கொட்டினாள். ''போங்க ளம்மா! அவர் ஜாவுத் கோட்டையில் இருக்கிறார். இங்கு எப்படி வரமுடியும்?'' என்றும் கேட்டாள்.

''பெண்ணே! விதியின் கை விசித்திரமானது. யாரை, யாரிடம், எப்படி சேர்க்கும் என்று சொல்ல முடியாது'' என்ற சிந்தியாவின் மனைவி வேறு ஒரு அறைக்குள் சென்று அங்கிருந்த பெரும் பெட்டியில் இருந்து ஒரு பட்டுச் சேலையை எடுத்து வந்து ''புஷ்பாவதி! இப்படி வா'' என்றழைத்து அந்த சேலையை விரித்து அவள் தோள் மீது போட்டு சற்று எட்ட நின்று அவளை அழகு பார்த்தாள். அடி கண்ணே! இந்த சேலையிலிருக்கும் பூவை புஷ்பம் போன்ற உன் முகம் அவமதிக்கிறது. உன் கண்களின் அரவிந்தம் இந்தப் பட்டுச் சேலையின் அற்புத நெசவிலும் காணவில்லையே'' என்றாள்.

புஷ்பாவதி பதில் சொல்லவில்லை தாயை அப்படியே அணைத்துக் கொண்டாள். தாயும் தனது திருமணப் பட்டுச் சேலையால் அவள் உள்ளழகுகளை மறைத்து உட் புறச் சேலையை அவிழ்த்துவிட்டாள். புஷ்பாவதி கால்கள் மூலம் உள்ளேயிருந்த சேலையை நெகிழவிட்டு சேலையை அணியலானாள். அதை அணிந்து அதற்கேற்ற பட்டு ரவிக் கையும் அணிந்து நெற்றியில் திலகமிட்டு தாயை வணங்க சிந்தியாவின் பூஜை அறைக்குள் சென்றாள். அங்கு சிந்தியா வும் இருந்ததைக் கண்டு இருவரையும் ஒன்றாக நிற்க வைத்து வணங்கினாள். தம்பதிகள் இருவரும் ஆசீர்வதித்த

பிறகு எழுந்த புஷ்பாவதியை நோக்கிய சிந்தியா "பெண்ணே! உனக்கு இங்கு குறைவு ஏதுமில்லையே?" என்று வினவினார் அன்புடன்.

நிலத்தைப் பார்த்த வண்ணம் பதில் சொன்னாள் புஷ்பாவதி "தாய் வீட்டில் என்ன குறையிருக்க முடியும்?" என்று.

சிந்தியா நகைத்தார். "ஒரு குறை இருக்க முடியும்" என்றும் சொன்னார் நகைப்பின் ஊடே.

"என்ன குறையோ?" சிந்தியாவின் மனைவி கேட்டாள்.

"கணவன் அருகில் இல்லாத குறை" என்ற சிந்தியா மீண்டும் நகைத்தார். "அந்த குறையைத் தீர்க்கத்தான் நீ உன் திருமணச் சேலையையே மகளுக்கு அளித்துவிட்டாயே?" என்றும் சொற்களைக் கூட்டினார் சிரிப்பின் ஊடே.

"அதனாலென்ன?" என்று சிந்தியாவின் மனைவி கேட்டாள்.

"இதை நீ கட்டிய பிறகுதானே நான் அகப்பட்டுக் கொண்டேன் உன்னிடம்?" என்று வினவினார் சிந்தியா.

"போதும் உங்கள் அசட்டுத்தனத்தைக் காட்டாதீர்கள்."

"என்னை அசடாக அடித்ததே நீதானே. அசடாக என்ன, பைத்தியமாகவே அடித்துவிட்டாயே. உலகம் நடுங்கும் சிந்தியா உன்னைக் கண்டு நடுங்குவதாக உலகம் சொல்கிறது."

இந்த உரையாடல் சற்று நெருக்கமாவதை உணர்ந்த புஷ்பாவதி அங்கு நிற்காமல் உள்ளே சென்று விட்டாள். அதைக் கண்ட சிந்தியா "உன்னைப் போலவே உன் பெண்ணும் புத்திசாலியாயிருக்கிறாள்" என்றார்.

"எப்படி?" வெட்கத்துடன் கேட்டாள் சிந்தியாவின் மனைவி.

"குறிப்பறிந்து நடக்கிறாள்."

www.cleanindians.com



"என்ன குறிப்பை அறிந்துவிட்டாள்?"

"என் மனதில் உள்ளதை."

"ஆமாம், நல்ல அழகு!"

"எது?"

"உங்கள் பேச்சும் நடத்தையும்."

"என்ன வந்துவிட்டது அவற்றுக்கு?"

மேற்கொண்டு பேசவில்லை சிந்தியா. பக்கத்திலிருந்த மனைவியின் தோள் மீது கையை வைத்தார். கையைப் பிடித்துத் தள்ளினாள் சிந்தியாவின் மனைவி. உங்களுக்குத்தான் வெட்கம் போய் விட்டது. எனக்கு போகவில்லை" என்றாள்.

"என்னிடம் கூடவா?" என்று சிந்தியா நகைத்தார். பிறகு குனிந்து அவள் காதில் ஏதோ சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு நகர்ந்தார்.

பிரமிப்பினால் நிலை கலங்கிப் போனாள் சிந்தியாவின் மனைவி. சிந்தியாவின் புத்தி கூர்மையைப் பற்றி உலகமே அறியும். ஆனால் இத்தனை ஊக சக்தி அவருக்கு இருக்குமென்று அவர் மனைவிகூட நினைக்கவில்லை. அதன் விளைவு என்ன ஆகுமோ என்று அவள் அச்சத்துடன் அசைவற்று நின்றுவிட்டாள் பல விநாடிகள். தான் அளித்த மங்கல உடையுடன் புஷ்பாவதி அருகில் வந்து அவள் மார்பில் சாய்ந்து "என்னம்மா! என்ன இப்படி நிற்கிறீர்கள்?" என்று வினவிய பிறகுதான் அவளுக்கு சுரணை வந்தது.

"ஒன்றுமில்லை" என்று கூறிய சிந்தியாவின் மனைவி "இத்தனை சீக்கிரம் இந்த உடை பயன் அளிக்கும் என்று எனக்குத் தெரியாது" என்றாள்.

"என்ன பயன் அம்மா?"

"நல்ல பயன்."

"அப்படியென்றால்?"

''உனக்கே புரியும் பொறுத்திரு'' என்ற சிந்தியாவின் மனைவி அதற்குமேல் எதும் பேச மறுத்தாள்.

அன்று முழுவதும் ஏதோ வேதனையிலேயே இருந்தாள் சிந்தியாவின் மனைவி. இரவு வந்ததும் புஷ்பாவதி திருமண உடையைக் களைய முயன்றதும் ''வேண்டாம். அதைக் கட்டிக்கொண்டே படுத்துக்கொள்'' என்றாள்.

''கசங்கிப் போகுமே அம்மா?'' என்று ஆட்சேபணை தெரிவித்தாள் புஷ்பாவதி.

''கசங்குவதற்கே பிறவி எடுத்திருக்கிறோம். சேலை கசங்கினாலென்ன?'' என்றாள் சிந்தியாவின் மனைவி.

அதற்குமேல் புஷ்பாவதி பேசவில்லை. அன்று சிந்தியாவின் மனைவி அவள் பள்ளியறைக்குச் சென்றதும் ஆடை அணியும் அறையிலேயே புஷ்பாவதி படுத்துக்கொண்டாள். அந்த அறைக்கு எதிரே இரவுக் காவலன் உலாவிக் கொண்டிருந்தான். நள்ளிரவு வந்ததும் இன்னொரு காவலன் அவனை மாற்றினான். அவனும் ''பாராக்'' கொடுத்துக் கொண்டு தாழ்வரை முன்பு நடந்தான்.

www.cleanindians.com

சற்றுநேரம் கழித்து அந்த காவலன் ஆகாயத்தைப் பார்த்தான். நட்சத்திரங்களைக் கணக்கெடுத்து நாழிகை பன்னிரண்டுக்கு மேல் ஓடிவிட்டதை உணர்ந்து கொண்டான். நகரமெங்கும் நிசப்தம் அடைந்துவிட்டதாக நினைத்து கண்களை ஒரு விநாடி மூடினான். பிறகு ஏதோ சிந்தனையின் மேல் நடக்கலானான். சிறிது நேரம் நடந்த பிறகு மெள்ள பூனை போல் நடந்து புஷ்பாவதி படுத்திருந்த அறையை நாடி கதவைத் தொட்டான். தொட்டதும் கதவு திறந்து கொண்டதால் உள்ளே சென்று அறையை சுற்று முற்றும் நோக்கினான் தரையில் திருமண உடையில் மோகினி போல் சுருண்டு கிடந்தாள் புஷ்பாவதி. மெதுவாக அவளை அடைந்து மண்டியிட்டு உட்கார்ந்து அவளைப் பார்த்தான். இருட்டை லேசாகக் கிழித்த சாளர நிலவு அவள் அழகை ஆயிரம் மடங்கு



அதிகப்படுத்தியது. மெள்ள அவள் மார்பு மீது ஒரு கையை வைத்தான். இன்னொரு கையால் அவள் வாயை மூடி ''சத்தம் செய்யாதே. நான்தான்'' என்று அவள் காதிலும் ஓதினான்.

அவள் பதில் சொல்லவில்லை. கண்களை விழிக்கவும் இல்லை. மார்பில் புதைந்த அவன் கையை அவள் கையொன்று பற்றியது. அப்பொழுதிருந்த நினைவு மறந்த நிலையில் அந்த அறைக் கதவு மெதுவாக சாத்தப்பட்டதையோ வெளியே தாழிடப்பட்டதையோ அந்த இருவருமே அறியவில்லை.

## 30. வரலாற்றை மாற்றும் வரிகள்!

நள்ளிரவில் தனது பணைத்த மார்பில் பட்ட கையை தனது இன்னொரு கையால் பிடித்த புஷ்பாவதி, அந்த ஆடவனின் கையை நன்றாக உள்ளுக்கு இழுத்துக்கொண்டாள். அந்த கையை தனது கையைக் கொண்டே இரு மார்புகளிலும் துளைய துணை செய்தாள்.

அந்த சமயத்தில் அவள் தன்னைப் புரிந்து கொண்டு விட்டாள் என்பதை உணர்ந்து கொண்ட தீப்சந்த், நன்றாக குனிந்து அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு போய் ''எப்படி அடையாளம் கண்டு கொண்டாய் என்னை?'' என்று வினவினான்.

''உங்கள் கண்களைக் கொண்டு'' என்ற புஷ்பாவதி லேசாக நகைத்தாள்.

''ஆம், ஆம், கண்களை என்னால் மாற்ற முடியவில்லை'' என்றான் தீப்சந்த்.

''எப்படி முடியும்? மற்ற இடங்களில் ஒட்டிய தோல்களை கண்களில் ஒட்ட முடியாது. நீங்கள் கன்னங்களில்

பூசியுள்ள களிம்புகளையும் கண்ணில் பூச முடியாது. கண்ணை மறைக்க எதைச் செய்தாலும் கண் கெட்டுவிடும். அப்புறம் சூரிய நமஸ்காரம் செய்ய முடியாது'' என்ற புஷ்பாவதி இளநகை கொண்டாள்.

பதிலுக்கு அவன் தனது இதழ்களை அவளது கன்னங்களில் புரட்டினான். பிறகு கேட்டான் ''சந்திர நமஸ்காரம் செய்யலாம் அல்லவா?'' என்று.

''என்ன? சந்திர நமஸ்காரமா?''

''ஆம்.''

''அப்படியொன்று உண்டா என்ன?''

''உண்டு.''

''கண் கெட்டால் சூரிய நமஸ்காரம் செய்ய முடியாதென்று சொன்னாய். சந்திர நமஸ்காரத்துக்கு என்ன இடைஞ்சல்?

''என்ன உளறுகிறீர்கள்?''

''உன் முக சந்திரனை நான் நமஸ்காரம் செய்வதை யார் தடுக்க முடியும்?''

இதைக் கேட்டதும் அவன் கழுத்தை தனது இடது கையால் வளைத்த புஷ்பாவதி ''சாமர்த்தியமாகப் பேசுகிறீர்கள்...'' என்றாள்.

''சொல்லில்தான் சாமர்த்தியம். செயலில் சாமர்த்தியம் இல்லை என்கிறாய்?'' என்று கேட்ட தீப்சந்த் அவளை தனது இருகைகளாலும் தூக்கி உட்கார வைத்தான். அவளை மேலும் சற்று தூக்க முயன்ற சமயத்தில் அவள் கேட்டாள் ''நீங்கள் இருக்கிற இடம் சிந்தியாவின் மாளிகை தெரியும் அல்லவா?'' என்று.

''அதனாலென்ன?'' என்று வினவினான் தீப்சந்த்.

''எந்த நிமிடத்திலும் நீங்கள் கைது செய்யப் படலாம்'' என்று சுட்டிக் காட்டினாள் புஷ்பாவதி.

www.cleanindians.com

884/2191969



''யாரும் என்னைக் கைது செய்ய முடியாது.''

''ஏன்?''

''என்னிடம் ஒரு கவசம் இருக்கிறது.''

''என்ன கவசம்?''

''நீ உடுத்தியிருக்கும் சேலை. அது இருக்கும் வரையில் என்னை யாரும் அணுக முடியாது.''

''ஏனாம்?''

''நீ இந்த வீட்டுப் பெண்ணாகி விட்டாய். உனக்கு சிந்தியாவின் மனைவி தனது திருமணச் சேலையைக் கொடுத்திருக்கிறார். இந்த சேலைக்கு கணவன் மனைவி சேரும் பாக்கியம் இருக்கிறதென்றும் இன்றிரவே உனது கணவன் வரலாமென்றும் சிந்தியாவும் அவர் மனைவியும் பேசியதை நானே கேட்டேன்'' என்ற தீப்சந்த் ''ஒன்று புரிந்து கொள். யாரும் சிந்தியாவின் கண்களை ஏமாற்ற முடியாது'' என்றும் கூறினான்.

''அப்படியானால் உங்கள் வேடம் புரிந்திருக்குமோ அவருக்கு?'' என்று புஷ்பாவதி கவலையுடன் கேட்டாள்.

''புரிந்திருக்கும் என்றுதான் நம்புகிறேன். அவர் பேசிய சொற்களிலும் ஒலியிலும் ஆயிரம் அர்த்தங்கள் அடங்கிக் கிடந்தன'' என்ற தீப்சந்த் ''புஷ்பாவதி! எனக்கு யாரிடமும் அச்சம் கிடையாது. மேவார் ராஜ்ஜியமோ சஹாம்பிராவோ என்னை அச்சுறுத்த முடியவில்லை. ஆனால் இந்த சிந்தியா பெரிய குள்ளநரி. மிக அறிவாளி. எதையும் ஊகிக்கும் திறனுள்ளவர் என்னை அடையாளம் கண்டு கொண்டுவிட்டாரோ என்ற பயம் எனக்கு இருக்கிறது'' என்று சொன்னான். ''இனி நாம் சீக்கிரம் கிளம்ப வேண்டும்'' என்று துரிதப்படுத்தவும் செய்தான்.

புஷ்பாவதி உட்கார்ந்த நிலையில் இருந்து எழுந்திருக்க முயன்றாள். ''இங்கிருந்து தப்பிச் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?'' என்றும் வினவினாள்.

''செய்திருக்கிறேன்'' என்ற அவனும் எழுந்திருந்து அவளை இறுகத் தழுவினான்.

''இருங்கள் இந்த சேலையை அவிழ்த்துவிட்டு வருகிறேன்'' என்ற புஷ்பாவதி மெள்ள சேலையின் இடை முடிச்சை அவிழ்க்க முற்பட்டாள்.

தீப்சந்த் பிரமை தட்டி அவளை தடுத்து ''சே, சே! இப்பொழுது எதுவும் முடியாது. அப்படியே வா. பின்னால் பார்த்துக்கொள்வோம்'' என்று கூறினான்.

அவன் தன்னை தவறாகப் புரிந்து கொண்டுவிட்டதை உணர்ந்த புஷ்பாவதி ''சே சே! உங்கள் கெட்ட புத்தி போகவில்லையே, இந்த சேலை சிந்தியாவின் மனைவியுடையது...'' என்றாள்.

''அது தெரியும் எனக்கு. ஏற்கனவே நானே சொல்லவில்லையா?'' என்றான் தீப்சந்த்.

''இதை அவிழ்த்து அவர்களிடம் கொடுக்க வேண்டும். வேறு சேலை அணிந்து வருகிறேன்'' என்றாள் புஷ்பாவதி.

''நீ வேறு சேலை அணிந்து வந்தால் நாம் இங்கிருந்து வெளியேற முடியாது'' என்றான் தீப்சந்த். ''உனக்கு புரியவில்லையா புஷ்பாவதி? இந்த சேலைதான் உனக்கு பாதுகாப்பு; எனக்கும் அதுதான் பாதுகாப்பு. இதை நீ அணிந்து வந்தால் சிந்தியாவின் மகள் என்று உன்னை யாரும் தடுக்கமாட்டார்கள். நான் உடன் வந்தால் செவிடனை சிந்தியா உனக்குக் காவலாளியாக அனுப்பியிருக்கிறார் என்று நினைப்பார்கள். ஆகையால் தடையிருக்காது'' என்று தீப்சந்த் விளக்கவே இருவரும் புறப்பட தயாரானார்கள்.

தீப்சந்த் மெதுவாக அடி மேலடி எடுத்து வைத்து கதவண்டை சென்று அதை திறக்க முயன்றவன் அதிர்ச்சியுற்றான். ''கதவு வெளிப்புறம் தாழிடப்பட்டிருக்கிறது?'' என்று குரலிலும் அதிர்ச்சி துலங்கப் பேசினான்.

www.cleanindians.com



மெதுவாக நடந்து கதவை அடைந்த புஷ்பாவதியும் அதை இழுத்துப் பார்த்தாள். அவனைத் திரும்பி நோக்கினாள். திகில் விளையாடிய கண்களுடன் ''வெளியே பூட்டியிருக்கிறது'' என்று சொன்னாள்.

தாங்கள் சிக்கிக் கொண்டதை உணர்ந்ததும் தீப்சந்த் சொன்னான் ''இனி ஏதும் செய்வதற்கில்லை. வா, படுத்துக் கொள்வோம்'' என்று சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில் அறையின் மற்றொரு மூலையில் விளக்கொளியொன்று சிறிதாகத் தெரிந்தது. அதைக் கண்டு அவர்கள் முன்னேறத் துவங்கியதும் அது நகர்ந்து சென்றது.

அதை யாரும் ஏந்தியதாகத் தெரியாததால், அதை தொடர்ந்து இருவரும் சென்றாலும் அந்த விந்தைக்குக் காரணம் இருவருக்கும் புரியவில்லை. அந்த விளக்கு நகர்ந்த வழியே இருவரும் நடக்கவே விளக்கு நேராகச் செல்லாமல் அரைச் சக்கிரமாக அசைந்ததையும் அது காட்டிய வழியில் படிகளும் இருப்பதைக் கண்டதும் அவ்வழியே இருவரும் இறங்கிச் சென்றனர். அவர்கள் பத்து படிகளில் இறங்கியதும் அந்த விளக்கு சட்டென்று அணைந்தது.

பிறகு இருட்டிலேயே இறங்கிச் சென்ற அந்த இருவரும் முடிவில் வீதிக்கு வந்தார்கள். வீதியை அவர்கள் அடைவதற்கும் பின்னால் ஒரு கதவு சாத்தப்படுவதற்கும் நேரம் சரியாயிருந்தது. அவர்கள் வெளியே வந்ததும் அங்கு இரண்டு புரவிகளைப் பிடித்துக்கொண்டு ஒரு வீரன் நின்று கொண்டிருந்தான்.

''இந்த புரவிகள்...'' என்று ஏதோ கேட்கத் துவங்கினான் தீப்சந்த்.

''உங்களுக்குத்தான்'' என்று கூறி தலை வணங்கிய வீரன், தீப்சந்திடம் ஒரு ஓலையையும் கொடுத்தான். ''இதை இந்த நகரைத் தாண்டிய பிறகு நீங்கள் பிரிக்கலாம்'' என்று கூறிவிட்டு நடந்துவிட்டான் அந்த வீரன்.

ஒரு புரவியில் புஷ்பாவதியை ஏற்றி உட்கார வைத்துவிட்டு, இன்னொரு புரவியில் தான் ஏறி சுற்று முற்றும் பார்த்த தீப்சந்த், தாங்கள் சிந்தியாவின் மாளிகையின் பின் புறத்திலிருப்பதைப் புரிந்துகொண்டான். காவல் எங்கும் கடுமையாக இருப்பதையும் புஷ்கரத்தின் பிரதான வாயிலில் இரு புரவி வீரர் காவல் புரிவதையும் கண்டதாலும் இதை எப்படித் தாண்டுவது என்று எண்ணியவண்ணம் தனது புரவியை நடத்தினான்.

புஷ்பாவதியின் புரவியும் அவன் புரவியுடன் இணைந்து சென்றது.

காவலர் யாரும் அவர்களைத் தடுக்கவில்லை. தங்களுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாதது போலவே நடந்து கொண்டனர். அப்படியே புரவிகளை நடத்தி, எந்த தங்கு தடையும் இல்லாமல் நகருக்கு வெளியே வந்த அந்த இருவரில் முதன் முதலில் தீப்சந்தே பேசினான். "இப்பொழுது மூன்றும் ஜாமம் முடியப் போகிறது. இன்னும் ஒரு ஜாமத்திற்குள் இந்த எல்லையைவிட்டு நாம் தாண்டி விடவேண்டும்" என்று கூறி புரவியையும் தட்டி விட்டான்.

இப்படி வேகமாக ஒரு ஜாமம் பயணம் செய்து புரவியை நிறுத்திய தீப்சந்த். அதிலிருந்து கீழே இறங்கி புஷ்பாவதியையும் இறக்கிவிட்டு, அங்கிருந்த பெரிய மரத்தடியில் உட்கார்ந்து தனக்கு அளிக்கப்பட்ட கடிதத்தை பிரித்துப் படித்தான். அவன் முகத்தில் மிதமிஞ்சிய வியப்பு கலந்த அதிர்ச்சி தெரிந்தது.

கடிதத்தில் இருந்தவை இரண்டே வரிகள்தான். ஆனால் வரலாற்றை மாற்றும் வரிகள் அவை.

## 31. டீ பாயின் வணக்கம்!

**புஷ்கரத்திலிருந்து** வேகமாக ஒரு ஜாமம் பயணம் செய்த பிறகு நன்றாக பொழுது புலர்ந்துவிட்ட சமயத்

www.cleanindians.com



தில் புரவியிலிருந்து தானும் இறங்கி புஷ்பாலதியையும் இறக்கிவிட்டு, ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சிந்தியாவின் மாளிகைக் காவலன் கொடுத்த கடிதத்தை மடியிலிருந்து எடுத்து பிரித்துப் படித்த தீப்சந்தின் முகத்தில் வியப்பு கலந்த அதிர்ச்சி தெரிந்ததென்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அந்த கடிதத்தை சிந்தியா தனது கைப்படவே எழுதியிருந்தார்.

"தீப்சந்த்! மாப்பிள்ளை! இம்முறை ஜாவுத் கோட்டையிலிருந்து தப்பமுடியாது. உங்களை டீ பாயின் சந்திப் பார்—சிந்தியா" என்ற வரிகள்தான் அந்த கடிதத்தில் இருந்தன என்றாலும் அவை கண்டிப்பாக ராஜஸ்தானத்தின் வரலாற்றை அடியோடு மாற்றும் என்பதை உணர்ந்ததால் தீப்சந்த் ஓரளவு அச்சத்தின் வசப்படவே செய்தான்.

"எதற்கும் துணிந்த தீப்சந்தையே திகைக்க வைக்கும் அந்த கடிதத்தில் என்னதான் இருக்கும்?" என்று நினைத்த புஷ்பாவதி அந்தக் கடிதத்தை எட்டிப் பார்த்தாள். அப்படி கழுத்து உடைய அவள் திரும்ப அவசியமில்லாதபடி தீப்சந்த் "இதை நீயே படி" என்று அவளிடம் ஓலையைக் கொடுத்தான்.

அதை கையில் வாங்கிக் கொண்டும் மரத்தடியில் அவனுடன் இணைந்து உட்கார்ந்து கொண்டும் கடிதத்தைப் படித்த புஷ்பாவதி "எனது தந்தை எத்தனை கொடியவர்" என்று சொல்லி. பெருமூச்சும் விட்டாள் உள்ளிருந்த துன்பத்தின் விளைவாக.

"யாரை சொல்கிறாய்? நாகராமக்ராலிலுள்ள தந்தையையா?" என்று வினவினான் தீப்சந்த்.

"அவரைப்பற்றி ஏதும் சொல்லத் தேவையில்லை. அவர் மனம் கருங்கல். இல்லை, இல்லை. அவரைப்பற்றிய நினைப்புகூட இல்லை எனக்கு. நான் எனது புதிய தந்தையைச் சொல்கிறேன்" என்ற புஷ்பாவதியின் சொற்களில் பாசம் ஒலித்தது.

"யார்? சிந்தியாவைச் சொல்கிறாயா?" என்று வினவினான் தீப்சந்த்.

"ஆம். எனது தாய் சீக்கிரம் இறந்துவிட்டாள். அவள் பாசத்தை நான் அனுபவிக்கவில்லை. ஆனால் சிந்தியா, எனது புதுத் தந்தை. அவர் பாசம் அளவற்றது. அதுவும் தாய் கங்காபாய், அவள் அன்புக்கு இணை ஏது?" என்று கூறினாள் வருத்தத்துடன்.

"இரண்டே நாட்களில் ஒரு தாயை கண்டுபிடித்து விட்டாய்?" என்று சற்று இகழ்ச்சியுடன் வினவினான் தீப்சந்த்.

"அன்புக்கு நிமிடங்கள் போதும். சிலருக்கு வருடங்கள் ஆனாலும் அன்பு வராது. சிலருக்கு அன்பை வளர்த்துக்கொள்ள விநாடிகள் போதும். அதுவும் பெண்களுக்கு தாயன்புக்கு இணை வேறு எதுவும் கிடையாது" இதை மிகுந்த திட்டத்துடன் சொன்னாள் புஷ்பாவதி.

"ஆம், உண்மை. இன்று பக்கவாட்டிலிருந்து விளக்கு காட்டியது உன் தாயின் கைதான். அந்த கையிலிருந்த வளையலில் இருந்து நான் கண்டு கொண்டேன். பக்கத்து சாளரத்திலிருந்து படிகளுக்கு விளக்கைக் காட்டியிருக்கிறாள். நம்மை தப்ப வைத்த அந்த தம்பதிகளுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்" என்ற தீப்சந்த் "இப்பொழுது எனக்குப் புரிகிறது. அவர்கள் ஏன் அறைக் கதவை பூட்டினார்கள் என்பது" என்று கூறினான்.

"ஏன்?"

"பொது வழியாக அனுப்பினால் காவலருக்குத் தெரியும். யாராவது ஒரு தளபதி நம்மை பார்த்தாலும் பார்க்கலாம். அப்படி பகிரங்கமாக அவர் நம்மை தப்பவிட்டால் பூனாவுக்கு செய்தி போகும். அங்கிருந்து பேஷ்வா காரணம் கேட்டாலும் கேட்பார். இந்த தொந்தரவுகளை விலக்கத் தான் சிந்தியா நம்மை மர்மமாக அனுப்பியிருக்கிறார். நம்மை வழியனுப்பி ஓலை கொடுத்தவன் அவருடைய

www.cleanindians.com



அந்தரங்க வீரர்களில் ஒருவனாயிருக்க வேண்டும்" என்று தனது ஊகத்தைத் தெரிவித்தான் தீப்சந்த்.

பிறகு இருவரும் ஏதும் பேசவில்லை. கடைசியாக தீப்சந்தே பேசினான். "புஷ்பாவதி! நம்மை சிந்தியா தப்ப வைத்தார். ஆனால் அதற்கு ஈடு செய்ய டீ பாயின் படைகளையும் நம்மீது ஏவியிருக்கிறார் ஆகையால் அவரை நாட்டுப்பற்று அற்றவரென்று யாரும் பழி சொல்ல முடியாது. டீ பாயின் நம்மை எதிர்க்க வருவதால் ஏதோ காரணமாகவே சிந்தியா நம்மை தப்பவிட்டார் என்று சிந்தியாவின் மேலதிகாரிகள் நினைப்பார்கள்" என்று கூறினான்.

டீ பாயின் பிரான் என்ற பிரெஞ்சு தளபதியின் போர்த் திறமையைப் பற்றி புஷ்பாவதி கேள்விப்பட்டிருந்ததால்—அந்த இரும்புப் படைக்கு முன்பு எந்த படையும் நிற்க முடியாதென்பதை உணர்ந்து கொண்டதால் கேட்டாள் "நீங்கள் மகாராணாவுக்கு உதவத்தான் வேண்டுமா?" என்று.

"என்ன கேள்வி இது புஷ்பாவதி? ஒரு ராஜபுத்திரப் பெண் கேட்கும் கேள்வியாக இல்லையே" என்ற தீப்சந்தின் குரலில் சிறிது கோபமும் ஒலித்தது.

"அந்த காமுக மகாராணா ஒரு மனிதனா?" என்று சீறினாள் புஷ்பாவதி.

"மனிதனே இல்லையே, ராஜபுதனத்துக்கு ஒரு கவுரவத்தையும் மானத்தையும் தேடிக் கொடுத்த ராணா பிரதாப், ராணா ராஜசிம்மன் வம்சத்தவன்..." என்றான் தீப்சந்த்.

"பழைய பெருமையைச் சொல்லியே ஒரு நாடு எத்தனை நாள் வாழமுடியும்?" என்று கேட்டாள் புஷ்பாவதி.

"அந்த பெருமையை நினைக்கும் வீரர்கள் இருக்கும் வரை" என்று தீப்சந்தும் சொன்னான்.

அந்த வீரர்களில் தீப்சந்த் ஒருவன் என்பதை நினைத்து உள்ளூர மகிழ்ச்சி கொண்டாலும் அதை வெளிக்குக் காட்டவில்லை புஷ்பாவதி. ஆனால் தலை போனாலும் தீப்சந்த் தனது தேசபக்தியை விடமாட்டான் என்பதைப் புரிந்து கொண்டதால் மௌனமே சாதித்தாள்.

புஷ்பாவதிக்கு மகாராணா மீதிருந்த வெறுப்புக்கு காரணம் புரிந்திருந்தாலும், அது நியாயம் என்பதை உணர்ந்திருந்தாலும், ராணாவைவிட மேவார் முக்கியமானது என்பதை திட்டமாக நினைத்த தீப்சந்த், மேற்கொண்டு பேச்சை வளர்க்க இஷ்டப்படாமல் மறுபடியும் பயணத்தைத் துவக்கினான். வழிநெடுக மகாராஷ்டிரப் படைகளின் நடமாட்டமும் மேவார் இருந்த நிலையில் ஆங்காங்கிருந்த ராஜபுத்திர உபதளபதிகள் எல்லாம் தங்கள் பிராந்தியங்களுக்கு தங்களையே தலைவர்களாக தாங்களே நியமித்துக் கொண்டு ஆங்காங்கு வரிகளை வாங்கிக் கொண்டு, அரசாங்க வரிப் பணத்தை விழுங்கிக் கொண்டிருந்ததால் எங்கும் வரட்சி நிரம்பிக் கிடந்தது. மக்கள் வறுமையும் சொல்லத் தரம் அல்லாததாய் இருந்தது. ஆகவே வழியில் திருட்டு ஆபத்து அதிகம் இருந்தாலும் தீப்சந்தைப் பார்த்ததும் திருடர்களும் ஒதுங்கிவிட்டதால் பயணத்தை அதிகத் தடங்கல் இல்லாமலேயே நடத்தி புஷ்பாவதியுடன் ஜாவுத் கோட்டையின் எல்லைக் காட்டுக்கு வந்து சேர்ந்தான் தீப்சந்த்.

அந்த மலைக்காடு மிக அடர்த்தியாயிருந்ததையும் அங்கிருந்து கோட்டையின் பகுதிகள் எதுவுமே தெரியாததையும் கண்ட புஷ்பாவதி "இங்கு எதற்கு வந்தோம்?" என்று வினவினாள்.

"ஜாவுத் கோட்டைக்கு நாம் நேராகச் செல்ல முடியாது. மகாராஷ்டிரர் படைகள் அதை முற்றுகையிட்டு நிற்கின்றன. இங்கிருந்து ரகசிய வழியாகத்தான் நாம் போகவேண்டும்" என்றான் தீப்சந்த்.

www.cleanindians.com



"எந்த இடத்திலும் ரகசிய வழிகள் இருப்பது விசித்திரமாக இருக்கிறது" என்று கூறி நகைத்தாள் புஷ்பாவதி.

"நம்நாட்டில் கட்டப்பட்டுள்ள எல்லா கோட்டைகளிலும் ரகசிய வழிகள் உண்டு. மன்னர்கள் தப்புவதற்காக இப்படி வழிகளை அமைத்திருக்கிறார்கள்" என்று விளக்கினான் தீப்சந்த்.

"அப்படியானால் நம் மன்னர்கள் எல்லாம் தப்புவதில் தான் மும்முரமாயிருந்தார்களேயொழிய போர் புரிவதில் இல்லை" என்று இகழ்ச்சியுடன் கேட்டாள் புஷ்பாவதி.

"புஷ்பாவதி! இந்த நாடு அனுபவித்திருக்கும் கேடுகளை நீ அறிந்தால் மன்னர்குலம் தப்புவதும் அவசியம் என்பதை உணர்ந்துகொள்வாய்" என்று கூறினான்.

"புரிகிறது, தப்புவதையே ஒரு கலையாகச் செய்திருக்கிறார்கள் நமது மன்னர்கள். அதை நாமும் பின்பற்றினால் என்ன?" என்று விசாரித்தாள்.

"பின்பற்றலாம், ஆனால் வரலாறு அவர்களை நிந்திப்பதுபோல் நம்மையும் நிந்திக்கும். சரி, சரி இரு இன்றிரவு மூண்டதும் நாம் கோட்டைக்குள் போவோம்" என்று கூறிய தீப்சந்த், மரங்களின் ஊடே சென்று மறைந்தான். சுமார் அரைநாழிகைக்குப் பிறகு திரும்பி அவளை அழைத்துக்கொண்டு ஒரு சிற்றருவி இருந்த இடம் சென்று அங்கிருந்த மரங்களிலிருந்து சில பழங்களை பறித்துக்கொடுத்து அவளை சாப்பிடச் சொல்லி தானும் சாப்பிட்டான். அருவியின் நீரை இருவரும் அருந்திய பிறகு புரவிகளுக்கும் தண்ணீர் காட்டி அவற்றை புல்வெளியில் மேயவிட்டான்.

இரவும் மெல்ல மூண்டது. தனது முகத்திலிருந்த மாறுவேடப் பட்டைகளைக் கிழித்தெறிந்துவிட்டு "புஷ்பாவதி! இரவு மூண்டுவிட்டது. நாம் கோட்டைக்குள் செல்வோம். என்னைப் பின்பற்றி வா, எதுவும் பேசாதே" என்றான்.

"இந்த எச்சரிக்கை எனக்குத் தேவையில்லை" என்றாள் புஷ்பாவதி.

"பெண்ணாயிற்றே என்று சொன்னேன்."

"அதனால் என்ன?"

"பெண்களால் பேசாதிருக்க முடியாதே."

இதைக் கேட்டதும் சீற்றமடைந்த புஷ்பாவதி வேகமாக புரவிகளிடம் சென்று அவற்றை இழுத்து வந்தாள்.

"புஷ்பாவதி!" என்று ஏதோ சொல்லத் துவங்கினான் தீப்சந்த்.

அவள் பதில் சொல்லவில்லை. "நான் கூறுவதை கவனமாகக் கேள்" என்றான் தீப்சந்த்.

அதற்கும் பதில் இல்லாது போகவே தீப்சந்த் மேலே நடக்க முற்பட்டான். புஷ்பாவதி மௌனமாகவே நடந்தாள். சிறிது தூரம் சென்றதும் கோட்டையின் விளக்குகள் ஒவ்வொன்று தெரியவே கோட்டையை அணுகிக் கொண்டிருப்பது புரிந்தது புஷ்பாவதிக்கு.

www.cleanindians.com

தீப்சந்த் ஏதும் பேசாமலே மரங்களின் மிக அடர்ந்த பகுதிக்கு வந்து ஒரு குறிப்பிட்ட மரத்தடியின் கீழிருந்த சருகுகளை அகற்றிவிட்டு அங்கிருந்த தரையை சிரமப்பட்டு நகர்த்தவே கீழே வழியொன்று தெரிந்தது. அந்த வழி நல்ல விசாலமாகவும் ஒரே சமயத்தில் நாலைந்து பேர் செல்லக்கூடிய அளவுக்கு இருந்ததைப் பார்த்த புஷ்பாவதி வியப்படைந்தாள். அவள் வியப்பை கவனிக்காமலும் ஏதும் கேட்காமலும் அவளையும் இரண்டு புரவிகளையும் முன் செல்லவிட்டு மேலிருந்த கதவு மீது சருகுகளை வாரிவிட்டு அதைத் திரும்பவும் மூடினான். அடுத்து புஷ்பாவதியைத் தொடர்ந்தான். வழி தாராளமாக இருந்ததன்றி ஆங்காங்கு தங்கும் இடங்களும் அறைகளும் கூட இருந்தன. அவற்றையெல்லாம் தாண்டி ஒரு பெரிய இரும்புக் கதவுக்கு அருகில் வந்ததும் அதை மும்முறை தட்



டியதும் மேலே இரும்புக் கதவு அகற்றப்பட்டது. அந்தக் கதவுக்கு அருகில் படிகள் இருப்பதைக் கண்ட புஷ்பாவதி வியப்படைந்தாள். அந்த படிகளின் உச்சியிலிருந்து மேலே ஏறிக் குதித்த தீப்சந்த் அவளையும் கைலாகு கொடுத்து மேலே தூக்கிவிட்டான்.

அந்தப் படிகளில் புரவிகள் ஒவ்வொன்றாக ஏறி வெளியே குதித்தன. அவற்றை இரண்டு வீரர்கள் பிடித்து அழைத்துச் சென்றார்கள். வந்த வழியை நோக்கியவள், அது பெரிய வீதிபோல் தெரிந்ததைக் கவனித்தாள். தாங்கள் ஏறிய இடம் அந்த கோட்டையின் ஆயுத சாலை என்பதையும் புரிந்துகொண்டாள். அங்கிருந்தே துப்பாக்கிகளைக்கொண்டு சுட பல சாளரங்களும் அந்த பெரிய ஆயுதச் சாலையில் இருந்தன.

அவள் ஆயுத சாலையை ஆராய்வதைக் கண்ட தீப்சந்த் "புஷ்பாவதி! இந்த ஆயுதங்களை பிறகு பார்க்கலாம். உனக்கு விவரமாக இதைப்பற்றி சொல்கிறேன். இதற்கும் ஒரு சரித்திரம் இருக்கிறது" என்று அவன் சொல்லிக் கொண்டே இருக்கையில் பெரிய பீரங்கி ஒன்று கோட்டைக்கு வெளியே சப்தித்தது. அதைத் தொடர்ந்து ஒரு குண்டு ஒன்றும் கோட்டைக்குள் வந்து விழுந்தது. அதைப் பார்க்க ஓடினான் தீப்சந்த். அவனுடன் புஷ்பாவதியும் ஓடினாள். கோட்டையின் நட்ட நடுவில் இரும்பு குண்டு ஒன்று கிடந்தது. அதன்மீது "டீ பாயின் வணங்குகிறான்" என்று வெட்டப்பட்டிருந்தது.

அத்தனை துரிதத்தில் டீ பாயின் அங்கு வருவார் என்று எதிர்பாராத தீப்சந்த், கோட்டைப் பாதுகாப்பில் மிக துரிதமாக இறங்கினான். "புஷ்பாவதி! நீ போ உள்ளே. யாரங்கே சுபேதார்! நமது பீரங்கிகள் திரும்பட்டும் எதிரிகளை நோக்கி" என்று உத்தரவிட்டவண்ணம் துரிதமாக ஓடினான் கோட்டை வாயிலை நோக்கி. அங்கு அவனை சந்திக்க டீ பாயின் சித்தமாக இருந்தான்.

# 32. ஜாவுத் கோட்டை!

ஜாவுத் கோட்டையின் நட்ட நடுவில் விழுந்த பீரங்கி குண்டையும் அதில் வெட்டப்பட்டிருந்த பெயரையும் பார்த்ததும் மாதாஜி சிந்தியா தன்னை விடுதலை செய்து அனுப்புவதற்கு முன்னதாகவே பிரெஞ்சுக்காரனான டி பாயினை தனது கோட்டையை வளைக்க அனுப்பிவிட்டதை உணர்ந்துகொண்டான். டி பாயின் கோட்டை முற்றுகையில் கலந்து கொண்டால் தான் வெளியே தப்பிச் செல்வது முடியாத காரியமென்று சிந்தியா தீர்மானித்திருக்க வேண்டும் என்பதையும் ஊகித்துக்கொண்டான். ஆகவே சிறிது புன்முறுவலும் செய்தான்.

அவன் பீரங்கி குண்டை பரிசோதித்துக்கொண்டிருந்த சமயத்தில் அங்கு வந்த புஷ்பாவதி ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று வினவினாள். அவள் குரலில் சிறிதளவும் கவலை இல்லை, வியப்பு மட்டும் இருந்தது, பீரங்கி குண்டை அவன் எதற்காகப் பார்க்கிறான் என்று நினைப்பால்.

www.cleanindians.com

''இதோ நீயே பார் டி பாயின் செய்தி அனுப்பியிருக்கிறான்'' என்று குண்டில் வெட்டப்பட்டிருந்த செய்தியை காட்டினான்.

செய்தியை உற்றுப் பார்த்த புஷ்பாவதி ''டி பாயின் நம்மை பரிகசிக்கிறான்'' என்றாள் சற்று சினத்துடன்.

''இல்லை புஷ்பாவதி. டி பாயின் மகாவீரன். எதிரியை பரிகசிக்கும் இழிவான செயலில் இறங்க மாட்டான். இந்த குண்டின் மூலம் நம்மை எச்சரிக்கை செய்கிறான். உடனடியாக நாம் சமாதானத்துக்கு வராவிடில் போர் துவங்கும் என்பதை அறிவிக்கிறான்'' என்று கூறிய தீப்சந்த் ''இதெல்லாம் அந்த குள்ளநரியின் வேலை'' என்றான்.

அவன் யாரைக் குறிப்பிடுகிறான் என்பதை உணர்ந்துகொண்டதால் சீற்றத்தின் வயப்பட்ட புஷ்பாவதி ''நீங்



கள் யாரைப்பற்றி இழிவாகப் பேசுகிறீர்கள் என்பது புரிகிறது'' என்றாள்.

''யாரைப்பற்றி?'' என்று கேட்ட தீப்சந்த் கோட்டையைச் சுற்றி நடக்கலானான்.

புஷ்பாவதியும் அவனைத் தொடர்ந்து நடந்துகொண்டே ''போயும் போயும் யாரைச் சொல்ல முடியும்? என் தந்தையைப் பற்றித்தான்'' என்று கூறிய அவள் குரலில் அதிக சினம் இருந்தது.

''எந்த தந்தை? நாகராமக்ரா தந்தையா?''

''அவர் என்னைப் பெற்றிருக்கலாம். ஆனால் அன்புத் தந்தையில்லை!''

''நம எதிரி சிந்தியாவா?''

''அவர் உங்கள் எதிரியாயிருக்கலாம். எனக்கு அன்புத் தந்தை.''

அப்பொழுது இன்னொரு குண்டு கோட்டைக்குள் சீறி வரவே ''உன் அன்புத் தந்தையிடம் இருந்து இரண்டாவது பரிசு வருகிறது'' என்று கூறி நகைத்த தீப்சந்த், தனது படைத்தலைவர்களில் ஒருவனை அழைத்து ''ஜய்சிங்! நமது பீரங்கிகள் எதிரியை நோக்கி திரும்பட்டும். அவர்கள் முழுமையாக குண்டுகளை வீசும் மட்டும் நீ பீரங்கிகளை இயக்காதே. எனது கட்டளைக்குக் காத்திரு'' என்று சொல்லி விட்டு ''புஷ்பாவதி! நீ வா உள்ளே செல்வோம்'' என்று அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். அறையின் அந்தரங்கத்தில் சொன்னான். ''பெனாய்ட் டி பாயின் பிரெஞ்சுக்காரன். பிறந்ததில் இருந்து அவன் பட்டுள்ள கஷ்டங்களும் சிறைவாச இம்சைகளும் சொற்களால் விவரிக்க முடியாது. போரில் அவனுக்கு இணையாக இந்த பாரதத்தில் யாரையும் சொல்ல முடியாது. நம்மை எதிர்க்க அவனை அனுப்பியதால் நம்மிடம் சிந்தியாவுக்கு பெருமதிப்பிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு அங்கிருந்த

இரும்புச் சட்டை ஒன்றை அணிந்து கொண்டான். இனி இந்த மாளிகையை விட்டு வெளியே வராதே'' என்று கூறிச் சென்றான்.

அவன் சென்றதும் சிந்தைலயப்பட்டு இடிந்து உட்கார்ந்து விட்டாள் புஷ்பாவதி. என்னதான் அவள் வீராங்கனையாயிருந்தாலும் தனது கணவனுக்கு ஒரு ஆபத்து என்றதும் அவள் கலங்கவே செய்தாள். வெளியே பீரங்கிகள் பலமாக சப்தித்துக் கொண்டிருந்தன. இத்தனைக்கும் அவள் இருந்த மாளிகை மீது ஒரு குண்டுகூட விழாததைக் கண்டு வியந்தாள். ஒருவேளை நான் இருக்குமிடத்தின் மீது குண்டு வீசவேண்டாம் என்று தந்தை ஏற்பாடு செய்திருப்பாரோ என்று உள்ளூர கேட்டுக் கொண்டு நகைக்கவும் செய்தாள். ''போரில் இங்குதான் குண்டு விழலாம். இங்கு விழக்கூடாதென்று நிர்ணயம் செய்ய முடியுமா என்ன?'' என்றும் தனக்குள் கேட்டுக்கொண்டாள். அத்துடன் சாளரத்தின் மூலம் வெளியே நடக்கும் போரை கவனிக்கலானாள். பெரிய புரவியில் அமர்ந்து கையில் வேல் ஒன்றை ஏந்திக் கொண்டு அந்த வேல் மூலமே அடையாளம் காட்டி தீப்சந்த் போரை நடத்துவதைக் கண்டாள்.

வெளியே தன்னால் பயிற்சியளிக்கப்பட்ட பீரங்கிப் படையுடன் நின்று கோட்டையைக் கவனித்து கொண்டிருந்த டீபாயின் உள்ளேயிருக்கும் கோட்டைத் தலைவன் அதிகமாக பீரங்கிகளை வீசாமல் ஏதோ நான்கைந்து பீரங்கிகளை மட்டும் இயக்கிக் கொண்டிருந்ததைக் கண்டு ''எதிரிக்கு வெளியே வந்து போர் செய்யும் நோக்கம் இல்லை. தற்காப்புப் போர் செய்கிறான். இப்படி போர் நடந்தால் ஒரு மாதம் முற்றுகையிட்டாலும் இந்த கோட்டையை பிடிக்க முடியாது'' என்று தீர்மானித்து போர்க்களத்தில் நின்றிருந்தவன் திடீரெனத் திரும்பி தனது கூடாரத்துக்குச் சென்று விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னால் புதிதாகச் சேர்க்கப்பட்ட

www.cleanindians.com



பெட்ரான், ரோகரன் என்ற பிரெஞ்சுக்காரர்களையும், சதர்லண்டு, ராபர்ட்ஸ் என்ற இரு ஆங்கிலேயர்களையும் அழைத்து மந்திராலோசனையில் இறங்கினான். முதன் முதலாக ''எதிரியின் போரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று தானே வினா விடுத்தான்.

எந்த மந்திராலோசனையிலும் முதலில் கேள்வி கேட்பது தளபதியின் பழக்கம் என்பதை அறிந்திருந்த உபதளபதிகள், சிறிதுநேரம் பதில் சொல்லவில்லை. டீபாயின் கண்கள் அவர்கள் மீது மாறி மாறி நிலைத்தன. அந்தக் கண்களின் பார்வையில் இருந்தே தளபதி கோபத்தில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட நால்வரில், பிரெஞ்சுக்காரனான பெட்ரான் ''எதிரி போருக்குத் தயாரில்லை என்று தெரிகிறது'' என்றான்.

அதற்கு தளபதி டீபாயின் பதில் சொல்லாமல், அடுத்தவனை நோக்கினான். ''எதிரி அதிக குண்டுகளை வீசவில்லை'' என்றான் ரோகரன் என்ற பிரெஞ்சுக்காரன்.

''அதனால்?'' டீபாயின் கேள்வி சட்டென்று வெளி வந்தது.

''நமது பலத்தைப் பார்த்து அவன் அச்சப்படுகிறான்'' என்றான் ரோகரன்.

டீபாயின் முகத்தில் வெறுப்பு தெரிந்தது. ''உள்ளேயிருப்பவன் யார் தெரியுமா?'' என்ற அவன் கேள்வியில் இகழ்ச்சி இருந்தது.

''தெரியாது?'' என்றான் ரோகரன்.

''தீப்சந்த் இருக்கிறான்'' என்றான் டீபாயின். ''தீப்சந்த் சாதாரணமானவன் அல்ல. மகாராஷ்ரர்கள் முன்பு இருந்த லால்சன் முதலிய எல்லா கோட்டைகளையும் திருப்பிப் பிடித்து விட்டார்கள். சளும்பிராவும் திரும்ப ஓடிவிட்டான் சித்தூருக்கு. இந்த ஒரு கோட்டை நம்மிடம் சரணடைய மறுக்கிறது. காரணம் தெரியுமா?'' என்று வினவினான் டீபாயின்.

"தீப்சந்தா?" வியப்புடன் வினவினான் பெட்ரான்.

"ஆம். அவன் நமது போர் முறைகளில் தேர்ச்சி பெற்றவன். இந்த கோட்டைக்குள் அவனது வீரர் பதினாயிரம் பேர் இருக்கிறார்கள். நூறு பீரங்கிகள் இருக்கின்றன. அவற்றை இயக்க தீப்சந்த் தனது வீரர்களை பழக்கி இருக்கிறான்." இதைச் சொன்ன டூ பாயின் தனது உபதளபதிகளை நோக்கினார்.

"அப்படியிருக்க தீப்சந்தின் நூறு பீரங்கிகள் ஏன் இயங்கவில்லை?" என்று வெள்ளைக்காரனான காப்டன் சதர்லண்டு வினவினான்.

அதற்கு டூ பாயின் பதில் சொல்லவில்லை.

காப்டன் ராபர்ட்ஸ் என்ற ஆங்கிலேயனே சொன்னான், "தற்காப்பு போரில் குண்டுகளை வீணாக அடிக்க எதிரி விரும்பவில்லை" என்று.

www.cleanindians.com

ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக டூ பாயின் தலையை அசைத்தான். "ஆகையால் நாமும் அவசியமான அளவுக்குத்தான் பீரங்கிகளை உபயோகிக்க வேண்டும். வெடி மருந்தையும் குண்டுகளையும் நாம் அதிகமாக செலவிடக் கூடாது. நாமும் தாமதிப்போம். முற்றுகையில் வெளியில் இருந்து உணவு தான்யங்கள் கோட்டைக்குள் செல்லமுடியாது. ஆகையால் நாம் எதிரியை பட்டினி போடுவோம். அவனே வெளியில் வரட்டும்" என்ற டூ பாயின் "இனிமேல் ஏதாவது நாலைந்து பீரங்கிகள் சற்று நேரத்துக்கொருமுறை நல்ல இலக்குகளை நோக்கி இயங்கட்டும். நான் உத்தரவிடும் வரையில் பெரும் போர் வேண்டாம். கோட்டைக்குள் நுழையவும் வேண்டாம்" என்று உத்தரவும் இட்டான்.

காப்டன் ராபர்ட்ஸ் கேட்டான் "ஜெனரல்! கோட்டைக்கு நடுவில் ஒரு பெரிய மாளிகை இருக்கிறதல்லவா?" என்று.

"இருந்தாலென்ன?" என்று கேட்டான் டூ பாயின்.



"அதன்மீது நமது பீரங்கிகளில் இரண்டைத் திருப்பினால் அதை படுதூளாக்கி விடலாம்" என்று யோசனை சொன்னான் ராபர்ட்ஸ்.

"அதற்கு எந்த சேதமும் கூடாது" தடையின்றி அதிகாரத்துடன் உதிர்ந்தது டூ பாயின் சொற்கள்.

"ஏன்?" பெட்ரான் கேட்டான்.

"அதில் நமது தலைவர் சிந்தியாவின் மகள் தங்கியிருக்கிறாள்."

"சிந்தியாவுக்கு மகள் ஏது?"

"வளர்ப்பு மகள். அவளுக்கு தீங்கு வரும் எந்த நடவடிக்கையிலும் நாம் ஈடுபட முடியாது" இதை மிகத் திட்டமாகச் சொன்னான் டூ பாயின். அதே சமயத்தில் வாணம்போல் பெரிய அஸ்திரம் ஒன்று சீறி வந்து டூ பாயின் கூடாரத்தின் மீது விழ, கூடாரம் பற்றிக்கொண்டது. அது வெடிப்பதற்குள் உபதளபதிகளுடன் வெளி வந்த டூ பாயின் முகத்தில் பிரமை தாண்டவமாடியது. "தீப்சந்திடம் பீரங்கிகள் மட்டுமல்ல ராக்கெட்டுகளும் இருக்கின்றன" என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே அந்த ராக்கெட்டு பயங்கரமாக வெடித்தது கூடாரத்துக்குள். கூடாரம் மட்டுமின்றி பக்கத்திலிருந்த மருந்துகளும் தீப்பிடித்து எரிந்தன பயங்கரமாக.

அந்த தீயை அணைக்க தனது சிப்பாய்களை ஏவிய டூ பாயின் கோட்டைக்குள் இருந்த பெரிய மாளிகையை நோக்கினான். அதன் தளத்திலிருந்து டூ பாயினை நோக்கி கையை ஆட்டிய தீப்சந்த், தலையும் வணங்கினான். அடுத்த விநாடி தளத்திலிருந்து மறைந்தும் விட்டான். அதுவரை தீப்சந்திடமும் புஷ்பாலதியிடமும் அனுதாபத்துடன் இருந்த டூ பாயின் "அந்த மாளிகையை தூளாக்குங்கள்" என்று தனது உபதளபதிகளுக்கு உத்தரவிட்டான்.

பெரிய பீரங்கிகள் இரண்டு மாளிகையை நோக்கி திருப்பப்பட்டன.

"தீப்சந்த்! எனது கருணையை பலவீனமாக நினைத்துக் கொண்டாய். இரு உனக்கு சரியான பாடம் கற்பிக்கிறேன்" என்று டீ பாயின் உள்ளூர கறுவிக்கொண்டான்.

## 33. முற்றுகையும் முடிவும்!

தீப்சந்த் ஏவிய ராக்கெட்டுகளால் தனது கூடாரமும் வெடிமருந்து கூடாரம் ஒன்றும் தீக்கிரையானதும் டீ பாயின் சினம் மிகுந்து அந்த கோட்டையின் உட்புற மாளிகையையும் இதர இல்லங்களையும் அழித்துவிடுவதென்ற தீர்மானத்துக்கு வந்ததால், மீதியிருந்த கூடாரங்களில் இருந்த வெடிமருந்துகளை சற்று எட்ட இருந்த அடர்ந்த தோப்புக்குள் மாற்ற உத்தரவிட்டான். பீரங்கிகளையும் அந்த தோப்பின் எல்லையில் நிறுத்தி, அவற்றையும் நேராக கோட்டையில் இருப்பவர்களின் கண்ணுக்குத் தெரியாமல் அடித்தான். தனக்கு உதவியாக வந்த மகாராஷ்டிரப் படைப் பிரிவுகள் இரண்டையும் கோட்டையின் பக்கவாட்டுகளில் பிரித்துப் பிரித்து பல கூட்டங்களாக நிறுத்தி எதிரி வெளியே வந்தால் வளைத்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்தான். அந்த பிரிவுகளுக்கு நடுவிலும் சில பீரங்கிகளை வைத்து அந்த பீரங்கிகளை புரவி வீரர்களுக்கிடையே மறைத்தான்.

"பீரங்கிகளை எதிரி கண்ணில் தெரியாதபடி நீங்கள் புரவிகளுடன் அவற்றை சூழ்ந்து நில்லுங்கள். குண்டு வீசும் சமயத்தில் மட்டும் சிறிது விலகி மீண்டும் அதை சூழ்ந்து கொள்ளுங்கள். இதனால் பீரங்கிகள் மீது குறி வைக்க எதிரியால் முடியாது. இந்த பீரங்கிகளைப் பாதுகாக்க தோப்பு மறைவிலிருந்து எனது பீரங்கிகள் குண்டுகளைப் பொழியும்" என்று மகாராஷ்டிரப் படைகளுக்கு உத்தரவிட்டான்.

www.cleanindians.com



இந்த ஏற்பாடுகளை அவன் செய்து முடித்ததும் காட்டு எல்லைக்குள் இருந்த பீரங்கிப் படைகளோடும் தனது உபதலைவர்களோடும் சேர்ந்து கொண்டான். பீரங்கிகளை அடுத்து அடுத்து நான்கு பகுதிகளாக நிற்கவைத்து பீரங்கிப் படையைப் பிரித்தான். "பெட்ரான்! நான் கையை அசைக்கும் போது நீ இரண்டு பீரங்கிகளை முன்னால் பத்தடி துரிதமாக இழுத்துச் சென்று இரண்டு வெடிகுண்டுகளை கோட்டையின் நடு மாளிகை மீது வீசிவிட்டுப் பின்னால் பீரங்கிகளை இழுத்து விடு. ரோகரன்! நீயும் அப்படியே செய். சதர்லண்டு! ராபர்ட்ஸ்! உங்கள் தலைமையில் பத்து பத்து பீரங்கிகள் இயங்கும். அவற்றைக்கொண்டு கோட்டை மீது வீசுங்கள். குறி எதுவும் வேண்டாம். கோட்டைக்குள் அவை விழட்டும்" என்று உத்தரவுகளையும் உபதளபதிகளுக்கு பிறப்பித்தான்.

இந்த உத்தரவுகளுக்குப் பிறகு "இன்று மாலை மட்டும் பீரங்கிகளை இயக்க வேண்டாம். இரவில் இயக்குங்கள்" என்று கூறி தனது பீரங்கிகள் மறைந்திருந்த தோப்புப் பகுதியைப் பார்வையிடச் சென்றான்.

பீரங்கிகளை மறைக்க தான் தேர்ந்தெடுத்த இடமும் பீரங்கிகளை அமைத்த இடங்களும் சரியானாலும் அவை எதிரி நிலையங்களைத் தாக்கும் தூரத்தில் இருக்கின்றனவா என்பதில் டீபாயினுக்கு சந்தேகமிருந்தது. ஆகவே முன்னால் பீரங்கிகளை இழுத்துச் சென்று பிறகு திருப்பி இழுத்து வரும்படி உத்தரவு பிறப்பித்திருந்தான். எதிரியிடம் ராக்கெட்டுகள் அதிகமிருந்தால் பீரங்கிகள் பயனளிக்குமா என்ற சந்தேகமும் டீபாயினுக்கு இருப்பினும், டீ பாயின் படைகள் ஐரோப்பிய ரெஜிமெண்டுகளின் கட்டுதிட்டங்களில் பழக்கப்பட்டிருந்ததால் மகாராஷ்டிர, ராஜபுதனப் படைகளைவிட அவை திட்டத்துடன் இயங்க முடியும் என்பதையும், தனது இரும்பு அரணை உடைத்து தப்ப ராஜபுத்திரர்களால் முடியாது என்றும் தீர்மானத்துடன் இருந்தான்.

அவன் யோசனைகளை தீப்சந்தும் உணர்ந்திருந்தான். தனது முதல் கணை வீச்சுக்குப் பிறகு மற்ற கூடாரங்கள் அகற்றப்பட்டு தோப்புக்குள் மறைக்கப்பட்டதையும் கவனித்தான். எதிரியும் தற்காப்புப்போரில் ஈடுபட்டால், அதிக நாள் முற்றுகையை தான் தாங்குவது கஷ்டமென்றும் புரிந்து கொண்டான். எதிரி தனது பீரங்கிகளை இழுத்து தோப்பில் மறைத்துவிட்டதைக் கண்டு, அவை இலக்கு மீது சுட முடியாது என்பதை உணர்ந்ததால் பீரங்கிகள் அவ்வப்பொழுது முன்னேறி சுடும் என்பதையும் உணர்ந்து கொண்டான். அப்படி அவை வெடிகுண்டு வீசினால் மாளிகை பாதிக்கப்படும் என்பதையும் அறிந்தான். இந்த யோசனைகளின் விளைவாக மாற்று ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்தான்.

நடு மாளிகையை காலி செய்துவிட உத்தரவிட்டான். புஷ்பாவதியை தனது உபதளபதியாக்கிக் கொண்டு தனது திட்டங்களை விளக்கி அவற்றை நிறைவேற்றும் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்தான். ''புஷ்பாவதி! நடு மாளிகையில் இருக்கும் ராக்கெட்டுகளையும் வெடி மருந்துகளையும் பக்கத்திலிருந்த சிறு கட்டிடங்களில் பிரித்து வைத்துவிடு. நடு மாளிகை எதிரி குண்டு வீச்சால் பற்றினாலும் மற்ற வெடி மருந்துக் கோணிகள் காப்பாற்றப்படும். கோட்டையைப் பாதுகாக்கவும் பீரங்கிகளை கோட்டைச் சுவரை அடுத்த மேடுகளில் ஏற்றி இங்குள்ள காட்டுத் தழைகளைக் கொண்டு மறைத்து விடு. எதிரி இரவில் குண்டு வீச்சு தொடங்கும் போது நாமும் துவங்குவோம்'' என்று உத்தரவிட்டான்.

பிறகு தனது பத்தாயிரம் வீரர்களையும் சின்னஞ்சிறு பிரிவுகளாகப் பிரித்து பீரங்கிகளிடமும் ராக்கெட்டுகளிடமும் நிற்கவைத்தான்.

புரவிப் படையைச் சேர்ந்த ஐயாயிரம் பேர்கள் வீடுகளின் இடையிடையே நிற்கவைக்கப்பட்டார்கள். ''நான்

www.cleanindians.com



சைகை செய்யும்போது ஒன்றாகக் கூடி எதிரி மீது ராக்கெட்டுகளை வீசுங்கள். மற்ற சமயங்களில் மறைவுக்குச் சென்றுவிடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அன்று முழுவதும் கோட்டையைச் சுற்றி வந்து தான் நின்று போரிட வேண்டிய பகுதிகளை ஆராய்ந்தான். பிறகு வீடுகளை பரிசோதனை செய்ததில், உணவுப் பொருள்கள் ஒரு மாதத்துக்கு தாங்கும் என்பதால் மகிழ்ச்சி அடைந்தான்.

டீ பாயின் பீரங்கிகள் அன்று பகல் முழுவதும் இயங்கவில்லை. அதைப் பற்றி புஷ்பாவதி கேட்டபோது ''இரவில் குண்டுகள் வீசப்படும். அநேகமாக மாளிகை இடிக்கப்படும். மாளிகைப் பக்கம் யாரும் போக வேண்டாம் என்று சொல்லிவிடு'' என்றான்.

அவன் எதிர்பார்த்தபடியே டீ பாயின் நடந்து கொண்டான். இரவு முற்றியபின் பீரங்கிகள் முன்னுக்கு நகர்ந்து வெடிகளை வீசின. நடு மாளிகையின் மீது அவை குறிவைக்கப்பட்டதால் மாளிகையின் மேல் பகுதி இடிந்து சிதறியது. இடிந்து விழுந்த பகுதிகளை துரிதமாக அப்புறப்படுத்தி சுவர் ஓரமாக நகர்த்த உத்தரவிட்டான் தீப்சந்த். பதிலுக்கு ராக்கெட்டுகளை அனுப்பட்டுமா என்று புஷ்பாவதி கேட்டபோது ''வேண்டாம். ராக்கெட்டுகளை நாம் வீணடிக்கக் கூடாது. நாம் இங்கிருந்து தப்பிச் செல்லும் சமயத்தில் அவை நிரம்ப வேண்டியிருக்கும்'' என்று பதில் சொன்னான். அவ்வப்பொழுது எதிரி பீரங்கிகளுக்கு பதில் சொல்ல பீரங்கிகள் இயங்கட்டும் என்று மட்டும் உத்தரவிட்டான்.

எதிரியின் ஒவ்வொரு பீரங்கி குண்டுக்கும் பதில் குண்டு வீசப்பட்டது. அந்த போரை தீப்சந்தே முன்னின்று நடத்தினான். எதிரி பீரங்கிகள் தோப்பை விட்டு வெளியே வந்ததும் கோட்டை மேட்டில் சித்தமாயிருந்த தீப்சந்தின் பீரங்கிகள் படுவேகத்துடன் இயங்கின. அந்த குண்டுகளி

டம் இருந்து தப்ப எதிரிகள் அவ்வப்பொழுது மறைவை நாட வேண்டியிருந்ததால் அவர்கள் நினைத்த வேகத்தில் பீரங்கிகள் குண்டு வீசவில்லை.

அன்றிரவின் முதல் பாதிக்கும் பிறகு, குண்டு வீச்சை டீ பாயின் நிறுத்தி விட்டான். ''நாம் குண்டுகளை விரயம் செய்ய வேண்டாம்'' என்று உத்தரவிட்டதால் இரவின் பிற்பகுதியில் குண்டு வீச்சு எதுவும் ஏற்படவில்லை.

அதன் காரணத்தைப் புரிந்துகொண்ட தீப்சந்தும் சற்று இளைப்பாறத் தீர்மானித்து தனக்கென திட்டம் செய்திருந்த ஒரு சிறு வீட்டுக்குள் சென்றான். அங்கு அவனுக்கு உணவை வைத்துக்கொண்டு சித்தமாக இருந்தாள் புஷ்பாவதி. உணவருந்திய பிறகு வீட்டுத் தரையில் படுத்த தீப்சந்தைப் பரிதாபத்துடன் நோக்கிய புஷ்பாவதி ''பஞ்சணையில் படுக்க வேண்டியவர் மண் தரையில் படுக்கிறார்'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டாள். அந்த எண்ணத்துடன் தானும் உணவருந்தி அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

தீப்சந்த் படுத்த மாத்திரத்தில் உறங்கிவிட்டான். புஷ்பாவதி அவனை எழுப்ப விருப்பம் இல்லாமல் பக்கத்தில் உட்கார்ந்தபடி அவன் கால்களைப் பிடித்துவிட்டாள். பிறகு அவன் காலடியிலேயே படுத்து உறங்கியும் விட்டாள். சுமார் சில நாழிகைகளே உறங்கிய தீப்சந்த் விழித்துக்கொண்டபோது, காலடியில் படுத்துக் கொண்டிருந்த புஷ்பாவதியை நோக்கினான். ''பாவம் மிகவும் அலுத்திருக்கிறாள்'' என்று அனுதாபத்துடன் கூறினான். பிறகு எழுந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் முதுகைத் தடவிக் கொடுத்தான். தலையை எடுத்து தன் மடி மீது வைத்துக் கொண்டான். அவள் மெதுவாக விழித்து தனது தலை தீப்சந்தின் மடியில் இருப்பதைக் கண்டு புன்சிரிப்புக் கொண்டாள். ''தூங்கு புஷ்பாவதி. விடிய ஒரு ஜாமம் இருக்கிறது'' என்றான்.

www.cleanindians.com



''விடிய நேரமிருந்தால் தூங்கத்தான் வேண்டுமா?'' என்று அவள் கேட்டாள்.

''எதிரி அனுமதிக்கும் வரையில் தூங்குவது தவறாகாது'' என்றான் தீப்சந்த்.

''இன்னும் எத்தனை நாள் இந்த முற்றுகை நீடிக்கும்?'' என்று வினவினாள் புஷ்பாவதி.

''ஒரு மாதம்.''

''அதற்குப்பின்?''

''நாம் வெளியேறுவோம்.''

''எப்படி?''

''நீ நேராகவே பார்க்கலாம்.'' இதை உறுதியுடன் சொன்னான் தீப்சந்த்.

உண்மையில் டீ பாயின் நாளாக ஆக தனது பொறுமையை இழந்தான். இருபது நாட்கள் சென்றதுமே மிக உக்கிரமாக கோட்டையை தாக்கலானான். ஒவ்வொரு தாக்குதலும் தோல்வியடைந்தது. கோட்டைக்குள் ஏறி குதித்து போரிடுவது என்று கடைசியாகத் தீர்மானித்தான். அதற்காக பெரும் ஏணிகளையும் சித்தப்படுத்தினான்.

இந்த ஏற்பாடுகளின் விளைவாக போர் சிறிது தடைப்பட்டிருந்ததைக் கவனித்த தீப்சந்தும் துணிகரமான முடிவொன்றை எடுத்தான்.

ராஜபுதனத்தையும் மகாராஷ்டிரத்தையும் வியக்க வைத்த முடிவு அது.

## 34. முற்றுகை இரண்டு!

ஜாவுத் கோட்டையை முற்றுகையிட்ட இருபத்திரண்டாவது நாள் அடியுண்ட வேங்கைபோல் டீ பாயின் தனது கூடாரத்தில் உலாவிக்கொண்டிருந்தான். உலாவிக்

கொண்டே தனது கையிலிருந்த கடிதத்தை மூன்றாவது முறையாகப் படித்த டூபாயின் ''நான் என்ன இங்கு தூங்க வந்திருக்கிறேனா?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு சீறினான் எதிரே நின்ற மகாராஷ்டிர வீரனை நோக்கி.

தூதன் பதிலேதும் சொன்னான் இல்லை. சிந்தியா ஏதோ கடுமையாக கடிதத்தில் எழுதியிருக்க வேண்டும் என்று தீர்மானித்ததால் ''ஜெனரல்! மகாப்பிரபு சிந்தியாவுக்கு பதில் கடிதம் தருகிறீர்களா? என்று பணிவுடன் வினவினான்.

''கடிதம் எதுவும் தேவையில்லை. நான் போர் வீரனே தவிர மந்திரவாதி அல்ல என்று மட்டும் சொன்னால் போதும்'' என்றான் டூபாயின் வெறுப்புத் தட்டிய குரலில்.

'ஜெனரல்! நான் வாயால் எதுவும் சொல்வதற்கில்லை. நீங்களே பதில் எழுதிக் கொடுத்து விட்டால் நல்லது'' என்று கூறினான் தூதன்.

www.cleanindians.com

பதிலுக்கு மிகுந்த கோபத்துடன் தூதனை நோக்கினான் டூபாயின். அந்த சமயத்தில் உள்ளே நுழைந்த சதர்லண்டிடம் கடிதத்தைக் கொடுத்து ''காப்டன்! இதற்கு நீ பதில் சொல்'' என்று கூறினான்.

சதர்லண்ட் டூபாயின் கொடுத்த கடிதத்தைப் படித்ததும் அவன் முகம் சிவந்தது. நாம் ''பயனற்றவர்கள் என்று குறிப்பிடுகிறார் சிந்தியா'' என்று சொல்லவும் செய்தான் சினத்துடன்.

''அப்படி நேரிடையாகச் சொல்லவில்லை'' என்றான் டூபாயின்.

''நேரிடையாகச் சொல்ல என்ன இருக்கிறது? ராஜபுத்திரர்களிடம் இருந்து மற்ற எல்லா கோட்டைகளையும் தமது படைகள் கைப்பற்றி விட்டபோது இந்த ஒரு



கோட்டை மாத்திரம் ஏன் இன்னும் நமது கையில் விழவில்லை என்பதற்கு காரணம் கேட்டிருக்கிறார். இது போதாதா?'' என்று வினவினான் சதர்லண்ட்.

''போதும் போதும்'' என்று முனகிய டூபாயின் ''சிந்தியா கேட்பதில் காரணமும் இருக்கிறது. மற்ற எல்லா கோட்டைகளும் விழுந்துவிட, இது ஏன் தாக்குப் பிடிக்கிறது என்று கேட்கிறார். ஆனால் இங்குள்ள நிலை அவருக்குத் தெரியாது. இங்கு கோட்டைக் காவலன் தீப்சந்த். ஐரோப்பிய போர் முறை அவனுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. நம்மிடம் பீரங்கிகள் மட்டும் இருக்கின்றன. அவனிடம் ராக்கெட்டுகளும் இருக்கின்றன. நவீன ஆயுத பலமும் நம்மைவிட அதிகம். நமது படைகளின் முறையில் கோட்டைப் படைகளுக்கும் பயிற்சி அளித்து சித்தம் செய்திருக்கிறான். தவிர, அவனுக்கு புஷ்பாவதி இருக்கிறாள். நம்மிடம் அப்படி யாரும் இல்லை'' என்றும் கூறினான்.

தீப்சந்தைப் பற்றியும் புஷ்பாவதியைப் பற்றியும் பேசியபோது மிகுந்த மரியாதையும் இருந்தது டூபாயின் பேச்சில்.

டூபாயின் பேச்சைக் கேட்ட தூதனும் காப்டன் சதர்லண்டும் பிரமித்துப் போனார்கள். புஷ்பாவதியைப் பற்றி தூதனுக்குத் தெரிந்திருந்தாலும் ''அவள் எப்படி முற்று கையை சமாளிக்க முடியும்?'' என்று எண்ணினான் தூதன்.

சதர்லண்டுக்கு அவளைப்பற்றி ஏதும் தெரியாததால் ஒரு ''பெண்ணைப் பற்றி சொல்கிறீர்கள்'' என்றான் தயக்கத்துடன்.

''ஆம.'' டூபாயின் குரலில் கனிவு இருந்தது.

''யார் அது?''

''தீப்சந்தின் மனைவியோ காதலியோ தெரியாது.''

"எப்படியிருந்தால் என்ன? போருக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?"

"அவள்தான் தீப்சந்துக்கு துணை."

"துணை என்றால்?"

"துணைவியாயிருக்கலாம்."

"நீங்கள் சொல்வது புரியவில்லை.

"தீப்சந்துக்கு அவள் உபதளபதி." இதை மெதுவாகச் சொன்னான் டூபாயின்.

"சதர்லண்ட், தூதன், இருவருமே பிரமித்துப் போனார்கள். "என்ன பெண் உபதளபதியா" என்று காப்டன் கேட்டான்.

"ஆம்" என்றான் டூபாயின்.

"எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று வினவினான் காப்டன்.

"இருமுறை அவள் கோட்டை தளத்தில் ஏறி வாளை வீசி பீரங்கிகளை இயக்க உத்தரவிட்டதை நானே பார்த்தேன்." டூபாயின் திட்டமாக இதைச் சொன்னான்.

"ஒரு பெண் உபதளபதியாகப் பணிசெய்யும் கோட்டையை நாம் பிடிக்காதிருப்பது அவமானம்" என்றான் சதர்லண்ட்.

டூபாயின் முகத்தில் அப்பொழுதுதான் சினம் மறைந்து இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "அந்த அவமானத்தை எப்படி தீர்த்துக்கொள்வதாக உத்தேசம்?" என்று கேட்டான் புன்முறுவலின் ஊடே. மேலும் சொன்னான் "வீரப் பெண்மணிகள் உலகத்தில் எங்கும் இருந்திருக்கிறார்கள். இங்கு ஹோல்கார் சமஸ்தானத்தில் அகல்யாபாய் இல்லையா? ராஜபுத்திரர்களை அவள் தோற்கடித்து விரட்ட வில்லையா? அதைப்பற்றி அவமானப்பட ஏதுமில்லை. முதலில் கோட்டையைப் பிடிக்கும் வழியைப் பார்ப்போம்" என்ற டூபாயின் சிந்தனையில் இறங்கினான். பிறகு எழுது கருவிகளை

www.cleanindians.com



கொண்டுவரச்சொல்லி ஒரு கடிதம் தீட்டி தூதன் கையில் கொடுத்து "சிந்தியாவுக்கு எனது வணக்கங்களைச் சொல்" என்று கூறினான்.

"கடிதத்துக்கு முத்திரை வைக்கவில்லையே?" என்று கேட்டான் சதர்லண்ட்.

"அவசியமில்லை."

"என்ன எழுதியிருக்கிறீர்கள்?"

"இன்னும் எட்டு நாளுக்குள் கோட்டையைப் பிடிப்பதாக எழுதியிருக்கிறேன்" என்ற டூபாயின் தூதனுக்குப் போக விடை கொடுத்தான்.

அன்று முழுவதும் டூபாயின் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அவ்வப்பொழுது இரண்டொரு பீரங்கிகள் மட்டும் கோட்டையை நோக்கி சீறிக்கொண்டிருந்தன. அவற்றையும் நிறுத்த உத்தரவிட்ட டூபாயின் அன்றிரவின் ஆரம்பத்தில் தனது உபதளபதிகளை அழைத்துப் பேசினான். "சதர்லண்ட்! ராபர்ட்ஸ்! பெட்ரான்! ரோகரன்! நாம் இங்கு முற்றுகை துவங்கியபோது தீப்சந்தும் புஷ்பாவதியும் கோட்டையில் இல்லை" என்று பேச்சை துவங்கினான்.

இதைக் கேட்ட உபதளபதிகள் பிரமித்தார்கள். "அப்படியா!" என்று பெட்ரான் கேட்டான்.

"அவர்கள் சிந்தியாவின் வீட்டில் இருந்தார்கள்..." இதை டூபாயின் மிக மெதுவாகச் சொன்னான்.

"இங்கு எப்படி வந்தார்கள்" ரோகரன் கேட்டான்.

"சிந்தியாவே அனுப்பியிருக்கவேண்டும். அது கிடக்கட்டும். நமது முற்றுகையிருக்கும் போது இவர்கள் நமது கண்ணில் மண்ணைத்தூவி எப்படி உள்ளே நுழைந்தார்கள்?" என்ற டூபாயின் "இந்த கோட்டைக்குள் செல்ல ஏதோ ரகசிய வழி இருக்கவேண்டும்" என்றும் கூறினான்.

இதைக்கேட்ட நான்கு உபதளபதிகளும் பிரமித்தார்கள். "அப்படியானால் அதைக் கண்டுபிடித்தால் என்ன?" என்று வினவினான் பெட்ரான்.

"அப்படி சுலபமாகக் கண்டுபிடிக்க முடியுமானால் அது ரகசிய வழியல்ல" என்றான் டீபாயின். "எந்த மகாராஜாவும் தப்பியோட சுரங்க வழிகளை வைத்திருப்பார்கள். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி என்ற நாடுகளின் சரித்திரங்களிலும் இந்த மாதிரி வழிகளைப்பற்றி கேள்விப் படுகிறோம். இந்த நாட்டில் அதற்கு அவசியமிருக்கிறது. ராஜபுதனம் சதா உட்பூசல்களுக்கும் வெளித்தாக்குதலுக்கும் இலக்காகி நாசப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கு சுரங்க வழிகள் இருப்பதில் தவறில்லை, நியாயமுங்கூட. ஆனால் தப்பமுயலும் ராஜபுத்திரர்கள் குறைவு. வாட்களுடன் வெளிவந்து வீரமரணம் அடைந்தவர்களே அதிகம்" என்றும் கூறினான்.

"அடுத்து நாம் செய்யவேண்டியது என்ன?" என்று வினவினான், சதர்லண்ட்.

"பீரங்கிகள் சித்தமாக இருக்கட்டும்" என்ற டீபாயின் அவர்களுக்குப் போக விடைகொடுத்தான்.

அன்று இரவு நன்றாக மூண்டதும் டீபாயின் தனது புரவியொன்றில் ஏறி கோட்டையைச் சுற்றி தன்னந் தனியாகப் பயணம் செய்தான். உடன் வர முயன்ற வீரர்களை வர வேண்டாம் என்று தடுத்து விட்டு கோட்டையின் புறக்காட்டில் சஞ்சரித்தான். இப்படி சவாரி செய்து கொண்டு சென்றவன் ஒரு மரத்தடிக்கு வந்தபோது புரவியின் காலில் ஏதோ உலோக ஒலி கேட்டதும் அங்கேயே புரவியை நிறுத்தி கீழே இறங்கினான். புரவியின் காலில் இருந்த தழைகளை நீக்கினான். அதன் அடியில் தெரிந்த பெரிய இரும்புப் பலகையைப் பார்த்து புன்முறுவல் கொண்டான். மெள்ள தன் கைகளால் அதை தூக்கி திமிர்த்தினான். கீழே நீண்ட வழி ஒன்று தெரிந்தது.

www.cleanindians.com



ஆனால் அந்த வழியின் முகப்பில் பெரிய கோணி மூட்டைகள் இருந்ததைக் கவனித்த டீபாயின் திருப்திக்கு அறிகுறியாக தலையை அசைத்துவிட்டு மறுபடியும் இரும்பு மூடியால் ரகசிய வழியை மூடிவிட்டு சருகுகளையும் அதன் மீது பழயபடி பரப்பிவிட்டு தனது கூடாரத்துக்குத் திரும்பினான்.

அதே இரவில் கோட்டைக்குள் இடிந்த நடு மாளிகையின் மொட்டைத் தளத்தில் நின்று கொண்டிருந்த தீப்சந்த் பக்கத்திலிருந்த புஷ்பாவதியை நோக்கி "அதோ யாரோ ஒருவன் புரவி மீது தன்னந்தனியாக போகிறான்" என்று அவன் போன இடத்தைச் சுட்டிக் காட்டினான்.

"ஆம். அவன் யார்?" என்று கேட்டாள் புஷ்பாவதி.

"டீபாயின்."

"என்ன!"

"ஆம். டீபாயின்தான். அவ்வளவு துணிவு வேறு யாருக்கும் இருக்காது."

"எதற்காக கோட்டையைச் சுற்றுகிறான்."

"ரகசிய வழியை கண்டுபிடிக்க."

"கண்டுபிடித்துவிட்டால் கோட்டை அவன் கைகளில் விழுந்து விடுமே?"

"விழாது.

"அந்த வழியாக அவன் வீரர்களை அனுப்ப மாட்டானா?"

"முடிந்தால் அனுப்புவான்."

"முடியாமலென்ன?"

"அந்த வழியை அடைத்துவிட்டேன்."

இதை சர்வசாதாரணமாகச் சொன்ன தீப்சந்த் "புஷ்பாவதி! வா, நாம் உறங்குவோம்" என்று மொட்டை மாடியைவிட்டு கீழே இறங்கி புஷ்பாவதியையும் கைகளை நீட்டி வாங்கி தூக்கி இறக்கிவிட்டான்.

நிலத்தில் கால் பதிந்ததும் "நமது வீரர்கள் கோட்டைக்குள் விழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்" என்றான் கோபத்துடன்.

"இருந்தாலென்ன?" என்று தீப்சந்த் கேட்டான்.

"நீங்கள் என்னை இறக்குவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்..." என்றாள் புஷ்பாவதி.

"பார்த்தாலென்ன?" என்று கேட்டான் தீப்சந்த்.

"உங்களுக்குத்தான் வெட்கமில்லை. எனக்கு இருக்கிறது" என்றாள் அவள்.

"அப்படியா?"

"ஆம்."

"அப்படியானால் வா."

"எங்கு?"

"நமது விடுதிக்கு."

"எதற்கு?"

"வா, சொல்கிறேன்" என்று கூறிய தீப்சந்த் தனக்கும் புஷ்பாவதிக்குமாக ஒதுக்கியிருந்த சிறு வீட்டுக்குள் சென்று வழக்கம்போல் தரையில் படுத்துக்கொண்டான்.

"இருங்கள் பாய் கொண்டு வருகிறேன்" என்றாள் புஷ்பாவதி.

"வேண்டாம் தரையே நன்றாகத்தான் இருக்கிறது" என்ற தீப்சந்த் அவளை இழுத்து தனது பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான். பிறகு அவள் அழகிய உடலை தன் மீது சாய்த்துக் கொண்டான். அவன் இரு கைகளும் அவள் பூவுடலை சுற்றிச் சென்றன, சுற்றி வளைத்தன, அழுத்தின.

அவள் மார்பின் எழுச்சிகள் அவன் அணைப்பினால் கெட்டிப்பட்டு விட்டாலும் அவன் மார்பு மீது அழுந்திக் கிடந்தன. அவன் கைகள் முதுகில் இருந்து இடைக்கும்

www.cleanindians.com



பிறகு அதற்கும் கீழும் இறங்கியது. அவள் உணர்ச்சிகள் ததும்பின. ஒரு கை அவள் சேலையை தளர்த்த முயன்றது

"உம்! எடுங்கள் கையை" என்றாள்.

அவன் கையை எடுக்காமலும் அலுவலின் செயலை நிறுத்தாமலும் கேட்டான் "நான் உன்னை இறக்கிய போது என்ன சொன்னாய்?" என்று.

"என்ன சொன்னேன்?" என்று அவள் முணுமுணுத்தாள்.

"எனக்கு வெட்கமில்லாவிட்டாலும் உனக்கு வெட்கமிருக்கிறது என்று சொல்லவில்லை?"

"சொன்னேன்."

"அந்த வெட்கத்தை உடைக்கப்போகிறேன், இப்பொழுது."

"முதலில் கோட்டை முற்றுகையிருக்கிறது. அதை உடையுங்கள்." இதைச் சொன்ன அவள் பெருமூச்சு விட்டாள்.

"நீயும் ஒரு கோட்டை தான் புஷ்பாவதி. வெட்கம் பெண்களின் கோட்டை. அதை உடைத்தால் அவர்கள் பாதுகாப்பை உடைத்தது போலத்தான். உன் கோட்டையை உடைப்பது போலவே டபாயின் முற்றுகையையும் உடைக்கிறேன்" என்றான். பிறகு அவன் பேசவில்லை. உணர்ச்சிகள் பேசின. தீப்சந்த் அன்று அவள் முற்றுகையையும் உடைத்தான், எட்டாவது நாள் கோட்டை முற்றுகையையும் உடைத்தான். இரண்டிலும் இரண்டு வித உணர்ச்சிகள் தாண்டவமாடின.

## 35. காதலும் கடமையும்!

ஜாவுத் கோட்டையின் சிறு வீட்டுக் கட்டாந்தரையில் காதலன் பிடியில் சிக்கிக்கிடந்த புஷ்பாவதியின்

உணர்ச்சிகள் பெரிதும் திரண்டெழுந்தது என்றாலும், அவள் சிறிது அச்சமே அடைந்தாள். தமது மனம், வாக்கு, காயம் மூன்றையும் அவள் தீப்சந்திடம் ஒப்படைத்திருந்தாலும் எதிலும் ஒரு முறை இருக்க வேண்டுமென்று அவள் நினைத்தாள். அவள் எண்ணத்தால் அவள் தீப்சந்தின் அசுரத் தழுவலில் இருந்து சிறிது விடுபட முயன்றாள். அதை முன்னிட்டு தனது பூவுடலை சிறிது அசைக்கவும் செய்தாள். அந்த அசைவின் விளைவாக அவள் எழில்கள் அந்த காமுகன் உடலில் உராய்ந்து அவன் வெறியை அதிகப்படுத்தினவே தவிர குறைக்காததால் அவன் கைகள் அவள் உடல் பூராவும் அலைந்தன. பிறகு அவளை தனது பக்கத்தில் இறக்கிவிட்டு அவள் காதுக்கு அருகில் தனது உதடுகளைக் கொண்டு சென்று ''பயமாக இருக்கிறதா புஷ்பாவதி?'' என்று வினவினான்.

''ஆம்'' என்று மெதுவாகச் சொன்னாள் புஷ்பாவதி.

அந்த பதிலைச் சொன்ன அவள் இதழ்களைச் சுவைத்து கழுத்திலும் உதடுகளை அழுத்திய தீப்சந்த் ''எதற்கு பயம் புஷ்பாவதி?'' என்று வினவினான்.

அவன் உதடுகள் கழுத்தில் ஆழப் புதைந்ததால் இன்பப் பெருமூச்சுவிட்ட புஷ்பாவதி ''எதற்கும் ஒரு முறை உண்டு அல்லவா?'' என்று கேட்டாள்.

''முறைகேடாக நாம் என்ன செய்கிறோம்'' என்று கேட்டான் அவன், அவள் பக்கத்தில் எழுந்து உட்கார்ந்து. அவன் கண்கள் அவள் கண்களைக் கவர்ந்து நின்றன.

அந்த கண்களை சந்திக்க முடியாமல் பக்கவாட்டில் பார்வையைச் செலுத்திய புஷ்பாவதி ''திருமணம் என்று ஒரு முறை உண்டு. பெரியவர்கள் செய்து வைப்பது...'' என்று முணுமுணுத்தாள்.

''உண்டு. பெரியவர்கள் உண்டு, மேளதாளங்கள் உண்டு, ஊர்வலம் உண்டு, வாணவேடிக்கை உண்டு, இங்கு

www.c[illegible]anindians.com



எதுவும் குறையவில்லை. ராஜபுத்திரர் வழக்கப்படி நான் இங்கு புரவியில்தான் வந்தேன். அனுப்பிவைத்தவரும் உனது தாய் தந்தையர்கள் தான். சிந்தியாவும் கங்கா பாயும் யார்? இங்கு வாணவேடிக்கை தினம் நடக்கிறது. டீ பாயின் குண்டு வீசுகிறான், போதாக்குறைக்கு அவன் வீரர்கள் நடைபோட ராணுவ பாண்டும் முழங்குகிறது. எந்த குறையும் இங்கில்லை. ஆனால்...'' வாசகத்தை முடிக்காமல் விட்டான் தீப்சந்த்.

''ஆனால்?'' என்று கேட்டாள் புஷ்பாவதி.

''பெண்களுக்கு ஏற்படும் ஆரம்ப மணவறை அச்சம் உனக்கும் இருக்கிறது. அதற்குக் காரணமும் இல்லை'' என்று விளக்கினான் தீப்சந்த் மேலும் சொன்னான் ''புஷ்பாவதி, நாம் ராஜபுத்திர வம்சம். க்ஷத்திரியர்களுக்கு காந்தர்வ மணம் சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது'' என்று.

அவள் தனது கண்களால் அவனை நன்றாகவே ஏறெடுத்துப் பார்த்தாள். சாஸ்திரம் வேறு படித்திருக்கிறீர்களா?'' என்று வினவினாள்.

அவன் அவளை அப்படியே அள்ளித் தூக்கினான். ''படித்திருக்கிறேன்'' என்று கூறி அவள் கன்னம் ஒன்றில் தனது இதழ்களைப் புதைத்து மீண்டான்.

''எந்த சாஸ்திரம்?'' என்று அவள் மெதுவாக வினவி தனது கைகளால் அவன் கழுத்தைச் சுற்றினாள்.

''இந்த சாஸ்திரந்தான்...''

''இது என்றால்...?''

''சொல்லத் தெரியாத சாஸ்திரம்.''

''ஓகோ!''

''என்ன ஓகோ?''

''அனுபவத்தில் வரும் சாஸ்திரம் போலிருக்கிறது?''

''ஆம்.''

''எனக்கு சொல்லிக் கொடுங்களேன்?''

''அதற்குத்தானே இவ்வளவும்'' என்று கூறினான் தீப்சந்த், அவளை அணைத்த வண்ணம். பிறகு இருவரும் பேசவில்லை. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நால்வகை கதவுகளும் திறந்தன.

அவள் பாதுகாப்பு முற்றும் உடைந்துகொண்டிருந்தது.

அந்த சமயத்தில் சீறிவந்த பெரும் குண்டு ஒன்று கோட்டைக்குள் விழுந்து பெரிதாக வெடிக்கவே புஷ்பாவதியின் அணைப்பைப் பிரித்துக் கொண்டு எழுந்தான் தீப்சந்த்.

''டீபாயின், மீண்டும் பீரங்கிகளை இயக்குகிறான்'' என்றாள் புஷ்பாவதி.

''சந்தர்ப்பம் தெரியாதவன்'' என்று அலுத்துக் கொண்டு எழுந்த தீப்சந்த், தனது ஆடைகளை சரிப்படுத்திக்கொண்டு ''புஷ்பாவதி! நீயும் வா'' என்றான்.

''நான் இப்படியே வர முடியாது'' என்றாள் அவள்.

''சரி நீ படுத்திரு. நான் போய் அவனுக்கு பாடம் கற்பித்துவிட்டு வருகிறேன்'' என்று கிளம்ப முற்பட்டவன், ''புஷ்பாவதி! டீபாயின் இங்கு குண்டு வீசுவதுபோல் பாசாங்கு செய்து நாம் இதை சமாளிக்கும் சமயத்தில் சுரங்க வழியாக தனது படையின் ஒரு சிறு பிரிவை அனுப்புவான். நீ அந்த ரகசிய வழியில் இரண்டு பீரங்கிகளை நகர்த்தச் சொல்லி யார் வந்தாலும் குண்டு வீசச் சொல். சில வீரர்களை துப்பாக்கியுடனும் நிறுத்தி வை. மகாராஷ்டிரர்களின் மாட்சுலாக் துப்பாக்கிகள் கோட்டையின் கோடி அறையில் இருக்கின்றன'' என்று உத்தரவிட்டு வெளியே விரைந்தான்.

கடமை என்று வந்ததும் காதலை உதறிவிட்டுச் செல்லும் அந்த கர்ம வீரனைப் பார்த்து பெருமையை தனது முகத்தில் விரியவிட்டுக்கொண்ட புஷ்பாவதி,

www.cleanindians.com



மெள்ள எழுந்து உட்கார்ந்து தனது அலங்கோல நிலையைக் கவனித்தாள். கவனித்ததால் வெட்கம் துலங்கிய புன்முறுவலை படரவிட்டாள் தனது இதழ்களில். ''இந்த லட்சணத்தில் சுரங்கப் பாதுகாப்புக்கு எனக்கு உத்தரவு வேறு போட்டுவிட்டுப் போகிறார்!'' என்று தீப்சந்தை பரிகாசமும் செய்தாள். ''அவர் நினைத்தபோது காதலி உத்தியோகம். நினைத்தபோது உபதளபதி உத்தியோகம்! நல்ல அழகு!'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு எழுந்து உடையை சரிப்படுத்திக் கொண்டு வெளியே நடந்தாள்.

உதயகாலம் நெருங்கிக் கொண்டிருந்தது. சுற்றுப்புறக் காடுகளில் உள்ள புள்ளினங்களின் அழகிய கூவல்களை எதிரியின் பீரங்கிகள் மறைத்து விபரீத சத்தங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தன. தொடர்ச்சியாக குண்டுகளை டீபாயின் வீசிக்கொண்டிருந்தது ஏதோ பெரிய திட்டத்தை முன்னிட்டுத்தான் என்று தீர்மானித்த தீப்சந்த், கோட்டை மதிலைச் சுற்றிலும் எரி அடுப்புகளை மூட்டச் சொல்லி, எண்ணெயைக் காய்ச்சி சிறு சிறு கங்காளங்களில் ஊற்றி அவற்றை சுவரின் உச்சிக்கு சற்றுக் கீழே இருக்கும்படி கட்டைகளைக் கட்டி நிறுத்திவைத்தான். ஒவ்வொரு கங்காளத்துக்கும் அருகே இரண்டு இரண்டு வீரர்கள் கங்காளத்தைத் தூக்கும் வாரைகளுடன் நின்றிருந்தார்கள்.

அன்று டீபாயின் எப்படியும் கோட்டையைத் தகர்த்து விடுவது என்ற தீர்மானத்துடன் ஏணிகளை மதில் மேல் சார்த்த உத்தரவிட்டான். அதில் ஏறுபவர்களை கொப்பரைகளின் சுடு எண்ணெயை முழுவதும் கொட்டி நரக வேதனையில் சாகும்படி விடவேண்டாம் என்று உத்தரவிட்டு ஏணிகள் மீது ஏற வருபவர்கள் மீது அகப்பைகளால் தீயெண்ணெயை வாரி கொஞ்சமாக வீசும்படியும் கட்டளையிட்டான் தீப்சந்த்.

டபாயின் முதலில் தனது வீரர்களை அனுப்பவில்லை மகாராஷ்டிர சிப்பாய்களை மட்டும் அனுப்பி ஏணிகளில் ஏறச் செய்தான். சுமார் ஐந்நூறு மகாராஷ்டிர சிப்பாய்கள் ஏணியில் ஏற முயன்று காய்ச்சின எண்ணெய் வீசப்பட்டதால் அலறி ஏணிகளை சாய்த்துக்கொண்டு கீழே விழுந்து ஓடலானார்கள். அவர்கள் ஓடுவதைப் பார்த்து சினந்த டபாயின், அந்த ஓட்டத்திற்குக் காரணம் என்னவென்று அறிய சதர்லண்டை அனுப்பினான்.

சதர்லண்ட் திரும்பி வந்து ''நாம் மதில்கள் மேல் ஏற முடியாது'' என்று அறிவித்தான்.

''ஏன்?'' சினத்துடன் வந்தது டபாயின் கேள்வி.

''கோட்டை மதிலுக்குப் பின்னிருந்து சுடு எண்ணெய் வீசப்படுகிறது. சிப்பாய்களின் முகங்களும் கை கால்களும் சில இடங்களில் கொப்பளித்திருக்கின்றன'' என்று சர்தலண்ட் அறிவித்தான்.

''அவர்களை திரும்ப ஏற கட்டளையிடு. இம்முறை அவர்களுக்கு நமது பீரங்கி வீச்சு திரையிடும்'' என்று டபாயின் கூறினான்.

''அப்படியும் அவர்கள் போகமாட்டார்கள்'' என்றான் சதர்லண்ட்.

''ஏன்?''

''கோட்டைச் சுவர்களுக்கு வெகு அருகில் தீப்சந்த் தனது வீரர்களை நிறுத்தியிருக்கிறான். கோட்டைக்குள் விழும் குண்டுகள் அவர்களை பாதிக்காது''

டபாயினுக்கும் அது புரிந்துதான் இருந்தது. ஆகவே பதிலேதும் சொல்லாமல் தலையை அசைத்தான். ஆனால் அன்று பகலில் தீப்சந்த் தனது பீரங்கிகளை நாலா பக்கத்தில் இருந்தும் இயக்கினான்.

இதனால் டபாயின் படைக்கு சிறிது சேதம் ஏற்பட்டாலும் அவன் தனது படையை சிறிது பின்னுக்கு வாங்கி



சுற்றுக் காட்டுப் பகுதியில் ஒரு பிரிவை அனுப்பினான். ''இந்த படைப் பிரிவு சுரங்க வழியாகப் போகட்டும்'' என்று உத்தரவிட்டான்.

அன்று இரவில் சுரங்க வழியாக கோட்டைக்குள் ரகசியமாக நுழைந்த படைப் பிரிவுக்கு சில யோசனைகளைக் கூறினான் டபாயின். ''சுரங்க வழியை சிறிது அடைத்திருப்பார்கள். அவற்றை நீக்கிவிட்டு உள்ளே நுழையுங்கள். நீங்கள் கோட்டைக்குள் வந்ததும் ஆகாயத்தில் துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்குள்ள ராஜபுத்திரர்களுடன் கைகலந்து போரிடுங்கள். அதே சமயத்தில் நான் இங்குள்ள படைகளுடன் கோட்டையைத் தாக்குகிறேன். இரண்டு படைப் பிரிவுகளுக்கு இடையில் எதிரியை நசுக்கிவிடுவோம்'' என்று தனது திட்டத்தை டபாயின் அறிவித்தான்.

இந்த திட்டத்திலும் டபாயின் ஏமாந்தான். சுரங்க வழியாக முன்னேற்றம் சாத்தியமில்லாது இருந்தது. மணல் மூட்டைகளை நீக்கி நீக்கி வேறு மணல் மூட்டைகள் சுவரைப் போல் காட்சியளித்தன. அவற்றுக்கு அடுத்தபடி இருந்தவை கனமற்ற மூட்டைகளாக இருந்ததால் முன்னேற முடியும் என்று நினைத்த சமயத்தில் திடீரென்று ஒரு குண்டு வெடித்தது. பல துப்பாக்கிகள் சுட்டன, அந்த மூட்டைகளை. அந்த மூட்டைகளில் இருந்து வாண மருந்துகள் தீப்பிடிக்கவே பெரும் தீ எதிரி படையை நோக்கி பறந்தது. அந்த சிறிய வழியில் அந்த தீ துரத்தியதால். ஊதப்பட்ட கன்னான் உலையைப் போல் சீறி சீறி வந்துகொண்டிருந்தது. திடீரென மேனிருந்து சுரங்கக் கட்டிடத்தின் கூரை இடிந்து விழுந்தது. சிறிது தாமதித்தாலும் தங்கள் அழிவு நிச்சயம் என்பதை உணர்ந்த மகாராஷ்டிரரும் வெள்ளையரும் பின்வாங்கினர்.

இந்தத் தோல்வியைக் கேட்ட டபாயின் சினமிகுதியால் ''தீப்சந்த்! இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள்

கோட்டையை தரைமட்டமாக்கி விடுகிறேன் பார்'' என்று கர்ஜித்தான்.

மறுநாள் முதல், எதிரியின் குண்டு வீச்சு அதிகப் பட்டது. நாலைந்து நாட்களாகத் தொடர்ந்து குண்டு வீசினான் டிபாயின். ஏழாவது நாள் தீப்சந்த் ஒரு முடிவுக்கு வந்தான். அதை புஷ்பாவதியிடமும் சொன்னான். ''இன்று இரவு மூன்றும் ஜாமத்தில் இந்தக் கோட்டையி லிருந்து நாம் வெளியேறுகிறோம். அதற்கு நமது படையை திட்டம் செய்'' என்று உத்தரவிட்டான்.

டிபாயின் முற்றும் எதிர்பாராத அதிசயம் அன்றிரவு மூன்றும் ஜாமத்தில் நிகழ்ந்தது. முற்றுகைக்கு அத்தகைய விபரீத முடிவு இருக்கும் என்று டிபாயின் கனவில் கூட எண்ணவில்லை.

## 36. பிளந்த முற்றுகை!

ஜாவுத் கோட்டையின் முற்றுகையை தான் ஒரு மாதகாலம் எதிர்த்து நின்ற பிறகும் உதயபூரில் இருந்து எந்தவித தூதோ துணைப்படையோ வராததால், மேலும் கோட்டைக்குள் உட்கார்ந்திருப்பது தற்கொலைக்கு ஒப் பாகும் என்ற முடிவுக்கு வந்த பின்பே கோட்டையை விட்டு வெளியேறி விடுவது என்ற தீர்மானத்துக்கு வந்தான் தீப்சந்த். இதைப்பற்றி அந்த இரவின் ஆரம் பத்தில் புஷ்பாவதியுடனும் மற்ற இரண்டு மூன்று படைப் பிரிவுகளின் உபதலைவர்களுடனும் பேசினான். டிபாயின் குண்டு வீச்சால் மாடி இடிந்த நடுமாளிகையின் தரையில் இருந்த பெரிய அறை ஒன்றில் இந்த மந்திராலோசனையை நடத்திய தீப்சந்த் ''உபதளபதி'' இங்கிருந்து வெளியேறு வதைத் தவிர வேறு வழியில்லை. மேவார் மன்னர்

www.cleanindians.com



களியாட்டத்தில் இருப்பதால் நம்மை கவனிக்க அவகாச மில்லை அவருக்கு. பிரதான மந்திரி சோம்ஜியிடம் இருந்தும் எந்தவித லிகிதத்தையும் காணோம். ஆகையால் உடனடியாக இங்கிருந்து வெளியேறுவதுதான் நல்லது. அதற்கு என்ன செய்யலாம்?'' என்று புஷ்பாவதியை நோக்கிக் கேட்டான்.

தீப்சந்த் ஏதாவதொரு திட்டம் இல்லாமல் இத்தகைய முடிவுக்கு வரமாட்டான் என்பதை உணர்ந்திருந்த புஷ்பாவதி ''முடிவு படைத்தலைவருடையது. அதை நிறைவேற்ற வேண்டியது உபதலைவர்கள்'' என்றாள் எதிலும் பட்டுக்கொள்ளாமல்.

தீப்சந்தே தங்களை யோசனை கேட்பதை பெருமை யாக நினைத்த ஒரு உபதலைவன் ''முதலில் இங்குள்ள மதில்களில் இருந்து பீரங்கிகளை இயக்குவோம். அவற்றின் பாதுகாப்பில் நமது படை வெளியேறலாம்'' என்று கூறினான்.

''அதுவரை டிபாயின் வாளாவிருப்பானா?'' என்று தீப்சந்த் கேட்டான்.

''இல்லாமல் என்ன செய்வான்?''என்று அந்த உபதலை வன் கேட்டான்.

''பதிலுக்கு குண்டு வீசமாட்டான். நாம் வெளியில் வரும் வரை காத்திருப்பான். வெளியில் நாம் தலை காட் டியதும் நம்மை தூள் செய்ய பீரங்கிகளை இயக்குவான். நிமிர்ந்து இப்பொழுது கோட்டையின் உட்புறத்தை நோக்கு. பீரங்கிகள் சற்று தாழ்ந்து கோட்டை வாசலை நோக்கிக் கொண்டிருக்கும். கோட்டை வாயிலைத் திறக்கும் வரையில் எதுவும் நடக்காது. நமது படையின் ஒரு பிரிவு வெளியே சென்றதும் நமது படையின் மீது பீரங்கி குண்டுகள் விழும். நாம் திரும்பி கோட்டைக் குள்ளும் வரமுடியாது. வெளியே தொடர்ந்து போகவும் முடியாது. நமது படை இரண்டாகத் துண்டிக்கப்படும்.

வெளியே சென்றுவிட்ட நமது படைக்கும் பின்னாலுள்ள கோட்டையிலுள்ள படைக்கும் இடையில் டூபாயின் தனது புரவிப்படையை ஏவுவான். அப்புறம் நமது படையில் பாதி அவனால் வளைக்கப்படும். மீதிப் பாதி கோட்டைக்குள் அகப்பட்டுக்கொள்ளும். வெளியே நம்மை அழித்த பிறகு கோட்டைக்குள் டூபாயின் நுழைந்து விடுவான்'' என்று டூபாயின் செய்யக் கூடியதை விவரித்துச் சொன்னான் தீப்சந்த்.

புஷ்பாவதி திகைத்தாள். ''போர் என்பதில் எத்தனை அழிவு இருக்கிறது!'' என்று மனம் புழுங்கினாள். ''எதற்காக மனிதர்களில் ஒரு வகுப்பு இன்னொரு வகுப்பை நாசம் செய்து வாழவேண்டும்?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

அவள் மனதில் ஓடிய எண்ணங்களை தீப்சந்த் புரிந்து கொண்டதால் ''உபதளபதி! போர் என்றால் நாசந்தான். சுயநலம் மனிதனிடம் மேம்பட்டு இருக்கும் வரை போர்களைத் தவிர்க்க முடியாது'' என்று கூறினான். அத்துடன் தனது திட்டத்தையும் விளக்கலானான்.

''புஷ்பாவதி! உபதலைவர்களே! இன்றிரவு முதல் ஜாமமுடிவில் நமது பந்தங்களோ வேறு விளக்குகளோ அதிகமாக எரிய வேண்டாம். நம்மிடமிருக்கும் நூறு பீரங்கிகளும் நான்காகப் பிரிக்கப்பட்டு கோட்டையின் பல பகுதிகளிலும் சித்தமாயிருக்கும். கதவு திறந்தவுடன் அந்த பீரங்கிகள் வண்டிகளில் ஏற்றப்பட்டு தயாராகட்டும் வெளியே போக. அப்படி முதல் இருபத்தி ஐந்து பீரங்கிகள் போனதும், மதில்களில் பின்புறமிருந்து ராக்கெட்டுகளை வீசுங்கள். பீரங்கி வீச்சைவிட, ராக்கெட்டு வீச்சு வேகமானது. எதிரியை கைகால் ஆடவிடாமல் செய்யும் வன்மை வாய்ந்தது. டூபாயினிடம் ராக்கெட்டுகள் இல்லையென்று நினைக்கிறேன். இருந்தால் இத்தனை நாள் வீசாதிருப்பானா? அவனிடம் இல்லாத கணை நம்மிடம்

www.cleanindians.com



இருக்கும்போது அதை உபயோகப்படுத்துவதுதான் நல்லது'' என்று சொல்லிக்கொண்டு போனான்.

தீப்சந்தை, புஷ்பாவதி ஒரு சந்தேகம் கேட்டாள். ''டூபாயினிடம் ராக்கெட்டுகள் இருந்து அதை அவன் உபயோகப்படுத்தாமல் இருந்து நாம் வெளியே செல்லும் போது வீசினால்?'' என்று கேட்டாள்.

புஷ்பாவதியை பெருமை துலங்கிய கண்களால் பார்த்தான் தீப்சந்த். ''உபதளபதி! நீங்கள் கேட்பதிலும் பொருளிருக்கிறது. ஆனால் நாம் ராக்கெட்டுகளை வீசி டூபாயின் கூடாரத்தை கொளுத்திய பிறகும் அவன் ராக்கெட்டு எதையும் வீசவில்லை. அவனிடம் ராக்கெட்டுகள் இருந்தால் இத்தனை நாள் இந்த முற்றுகையை நாம் சமாளித்திருக்கவும் முடியாது'' என்று கூறினான். மேலும் சொன்னான்: ''அப்படியே அவன் ராக்கெட்டுகளை கடைசி சமயத்துக்காக தேக்கி வைத்திருந்தாலும் நாம் வெளியே சென்ற பிறகு அவை பயனற்றதாகிவிடும். நாம் அவன் படையை பிளந்து செல்லும்போது இருபுறத்திலும் எதிரி படையிருக்கும் அவ்வளவு கிட்டத்தில் ராக்கெட்டுகளை வீசமுடியாது. நாம் வெளியே சென்றதும் நமது பீரங்கிகளும் மாட்ச்லாக் துப்பாக்கிகளும் சுடும்போது கிட்டத் தட்ட கைகலப்பது போன்ற நிலையே ஏற்படும். அப்பொழுது வாளும் துப்பாக்கியுந்தான் பயன்படும். பீரங்கி ஓரளவு பயன்படலாம். ஆனால் முழுவதும் பயன்படக் காரணமில்லை.''

இதைச் சொன்ன தீப்சந்த் ''முதல் இருபத்தி ஐந்து பீரங்கிகள் குண்டு வீசிக்கொண்டு முன்னேறுவதை அடுத்து நான் நமது புரவிப் படையின் ஒரு பகுதியுடன் அதன் பின்னால் செல்வேன். பீரங்கிகள் பிளந்த வழியில் எனது படை அம்புபோல் செல்லும். இப்பொழுது துப்பாக்கிகளும் வாட்களும் இயங்கும். எங்களை வளைக்க டூபாயின் முயல்வான். அப்பொழுது அடுத்த இருபத்தி ஐந்து பீரங்கிகள் வரும். அவை இருபுறங்களிலும் குண்டு

மழை பொழியும். அந்த சமயத்தில் நமது ராக்கெட்டுகள் கோட்டைக்குள் இருந்து சீறிவரும், எதிரி மீது. அதிலிருந்து தப்ப எதிரி கோட்டையின் இடது பக்கத்தில் போனால் வெளியே வரத் தயாராயிருக்கும் அடுத்த புரவிப் படைப்பிரிவு கோட்டையின் பின் கதவு வழியாக வெளியே வந்து அங்குள்ள படைகள் மீது பீரங்கிகளை இயக்கிக் கொண்டு இரு பிரிவுகளாக வரும்.

நான் இருபத்தி ஐந்து இருபத்தி ஐந்தாக பிரிக்கப்பட்ட இரு பீரங்கிப் படைகளுக்கிடையில் முன்னேறுகிறேன். பின்வாசலில் இருந்து வெளியே வரும் மற்றும் ஐம்பது பீரங்கிகள் இருபிரிவுகளாகப் பிரிந்து வலதுபுறமும் இடதுபுறமும் வரும் ராக்கெட்டுகளை வீசிக்கொண்டு. நல்லவேளையாக நான் முதலில் உதயபூருக்கு வரச்சொல்லியிருந்த பத்தாயிரம் வீரர்களில் பாதிப்பேரை உதயபூரில் இருந்து கிளம்பி வழியிலேயே சந்தித்து மண்டலக் கோட்டைக்கு அனுப்பிவிட்டேன். இங்கிருப்பது ஐயாயிரம் பேரும் நூறு பீரங்கிகளும்தான் நமது புரவிப்படை ராஜபுதனத்திலேயே சிறந்தது. ஆகவே நான் முன்புறமும் மற்ற இரண்டு பிரிவுகள் பின்புறமாகவும் வெளியேறி, பின்பக்கம் வரும் படை இரண்டாகப் பிரிந்து கோட்டையின் இரு பக்கத்திலும் வரும்போது டூபாயின் ஒரே சமயத்தில் முன்புறத்தில் தாக்கப்படுவான். மூன்றும் இருபக்கங்களிலும் பீரங்கிகளுடன் ராக்கெட்டுகளும் இயங்கும் போது அவன் அதை சமாளிப்பது மிகவும் கஷ்டம் தவிர அந்த படையில் முக்கால்வாசி மகாராஷ்டிரர்கள். அவர்களில் ஒரு சிறு பிரிவு புரவிப்படை இருக்கிறது. அதுதான் நம்மை எதிர்க்கும் வேகமும் சக்தியும் உள்ளது. அதை நான் கவனித்துக்கொள்ளுகிறேன்'' என்று விளக்கினான்.

அத்துடன் மந்திராலோசனை முடிந்தது.

அதற்குப் பிறகு, படைகளை தனது உத்தரவின்படி பிரிக்கும்படி கட்டளையிட்ட தீப்சந்த் ''புஷ்பாவதி! நீ

www.cleanindians.com



போய் உன் வேலையைக் கவனி. பின்பக்கமாக வரும் படையை நீ திறம்பட இயக்குவதில்தான் நமது வெற்றி இருக்கிறது'' என்று அவளுடன் தனது சிறு வீட்டுக்குச் சென்றான். உள்ளே சென்றதும் தனிமையில் அவளைக் கட்டித்தழுவி ''எச்சரிக்கையுடன் இரு புஷ்பாவதி. பீரங்கிகளுக்கு ராஜபுதனத்தில் குறைவில்லை. ஆனால், பீரங்கிகளே போரை வெற்றிகொள்ளாது. அதற்கு அறிவு வேலை செய்யவேண்டும்'' என்று கூறினான். பிறகு வெளியே சென்றான்.

முதல் இரண்டு ஜாமங்கள் கோட்டை வாயிலைப் பார்வையிடுவதில் செலவழித்தான். இரண்டாவது ஜாமம் ஆரம்பத்தில் விளக்குகளும் பந்தங்களும் அணைந்தன. எங்கும் அமைதி நிலவியது அரை ஜாமத்துக்கு. கதவுகள் திறக்கும் வரை அமைதியைக் கலைக்க வேண்டாமென திட்டமான உத்தரவிட்டிருந்தான் தீப்சந்த்.

இந்த அமைதியால்தான் டூபாயின் ஏமாந்தான். விளக்குகள் அணைந்ததும் அரை இருட்டு கோட்டைக்குள் ஆட்சி செய்ததை டூபாயின் தனது கூடார வாயிலில் இருந்து கவனித்தான். அதற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று சிந்தித்தான். சதர்லண்டையும் யோசனை கேட்டான். ''இடைவிடாத போர் ஒரு மாத காலமாக. சற்று ஓய்வெடுக்கலாம்'' என்றான் சதர்லண்டு.

அதை நம்பவில்லை டூபாயின். ''ஓய்வெடுப்பது என்பதோ அஜாக்ரதையோ தீப்சந்திடம் கிடையாது. எதற்கும் படைகள் எச்சரிக்கையாயிருக்கட்டும்'' என்று உத்தரவிட்டான்.

ஜெனரல் அனாவசியமாக அஞ்சுகிறார் என்று சதர்லண்டு நினைத்தான். ஆனால், அது எத்தனை தவறு என்பதை மூன்றாவது ஜாமம் துவங்கியதும் சதர்லண்டு புரிந்துகொண்டான்.

மூன்றாவது ஜாமத்தில் திடீரென கோட்டையின் உட்புறம் உயிர் பெற்றது. ராக்கெட்டுகள் பல வேகமாக டீபாயின் படைகள் மீது விழுந்தன. அதே சமயத்தில் முன்கதவு திறக்கப்பட்டு பீரங்கி வண்டிகள் குண்டுகளை வீசிக்கொண்டே வெளியே வந்தன. அவை முற்றுகைப் படையின் இடையே வெட்டிப் புகுந்ததும், புரவிப்படை வேகமாக வெளியே வந்தது தீப்சந்தின் தலைமையில். மாட்ச்லாக் துப்பாக்கிகள் கடுமையாகச் சுட்டன.

டீபாயின் வெகுசீக்கிரத்தில் தனது படைகளை இயக்கினாலும் எதிரியின் முன்னேற்றத்தை தடுக்க முடியவில்லை. பிறகு தனது இரு தளபதிகளை பக்கவாட்டுகளில் தாக்க உத்தரவிட்டான்.

அதே சமயத்தில் கோட்டையின் பின்புறம் இருந்து வந்த பீரங்கிகள் இருபுறமும் டீபாயின் படைகள் மீது குண்டுகளை வீசின. அவற்றைத் தொடர்ந்து புஷ்பாவதி புரவி மீது வந்தாள்.

www.cleanindians.com

இந்த சந்தர்ப்பத்தில் தான் செய்வது அதிகமில்லை என்று டீபாயின் நினைத்தான்.

வெள்ளைக்காரர் போர் முறையையே எதிரியும் பின்பற்றியதால், போர் சூடுபிடித்தாலும் எதிரி முப்புறமும் தன்னைச் சூழ்ந்து நெருங்கியதால், தனது படைகளுக்கு இடையே பாதை செய்து கொள்வதை அவனால் தடுக்க முடியவில்லை எதிரியின் ராக்கெட்டுகளும் பீரங்கிகளும் விளைவித்த நாசத்தால் எதிரிக்கு வழி விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தான் டீபாயின்.

சுமார் அரை ஜாமத்திற்கு பீரங்கிகளையும் ராக்கெட்டுகளையும் இயக்கி டீபாயின் படைகளை ஊடுருவிச் சென்றுவிட்டான் தீப்சந்த். அதற்குப் பிறகு தனது படையை மண்டலக் கோட்டையை நோக்கி வடதிசையில் திருப்பினான்.



டீபாயின் மட்டுமின்றி மகாராஷ்டிரப் படைகளும் ஏதும் செய்ய இயலாமல் தங்கள் சேதத்தை மதிப்பிட ஆரம்பித்தார்கள்.

## 37. சலூம்பிரா வந்தார்!

அரசன் காமுகனாகி காம அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தால் அந்த அரசாட்சி அழிந்து விடும் என்பதற்கு சரித்திரத்திலும் சான்றுகள் உண்டு. காவியத்திலும் அத்தாட்சிகள் உண்டு.

அரசையே கவனிக்காமல் மாதர்களின் மையலிலேயே மூழ்கிக் கிடந்தவனான அக்னிவர்ணன் என்ற அரசனோடு ரகுவம்சம் அழிந்து விட்டதென்பதை காளிதாசன் எழுதிய ரகுவம்ச மகா காவியத்தில் இருந்து அறிந்துகொள்கிறோம். ராணா பீம்சிங்கின் காமப் பித்தத்தால், அரசாட்சியில் அவன் காட்டிய அசிரத்தையால், மேவார் ராஜ்ஜியம் அழிந்தது என்பதை வரலாற்று ஆசிரியர்களில் இருந்து அறிகிறோம். மகாராஷ்டிரர்களாலும் மேவாரின் சுயநலப் பிரபுக்களாலும் மேவாரில் அராஜகம் நிறுவிய காலத்தில், சிறு பருவம் நீங்கி பருவமும் ஏறி முற்றிய சமயத்தில் வாலிப சரச விளையாட்டில் மூழ்கி மோகினிவனத்தில் ராணா பீம்சிங் உல்லாச வாழ்க்கையில் காலத்தைக் கழிப்பானா?

மகாராணாவின் உல்லாசம் மேவாரை நாசம் செய்து விடும் என்று நம்பிய அமைச்சர் சோம்சந்த் காந்தி மனம் கலங்கி திகைப்பில் இருந்தார். தீப்சந்தின் பெருமுயற்சி இருந்தும் அவனுக்கு தாம் ஏதும் உதவ முடியாத காரணத்தால் ஜாவுத் கோட்டை எதிரி வசமாகிவிட்டது

என்ற செய்தி அவருக்கு இணையிலா துன்பத்தை அளித்தாலும், வெள்ளைக்காரனை டிபாயின் திறமையான பீரங்கிப் படையையும் மகாராஷ்டிரர்களின் வாயு வேகப் புரவிப் படையையும் அவன் ஒருமாத காலம் எதிர்த்து நின்றதும், முற்றுகையிட்ட எதிரிகளை ஊடுருவி அவன் ஒருமாத காலம் எதிர்த்து நின்றதும், முற்றுகையிட்ட எதிரிகளை ஊடுருவி அவன் வெளியேறியதும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது சோம்ஜிக்கு. அப்பேர்ப்பட்ட மகாவீரன் மகாராணாவின் நடத்தையால் மனம் கசந்து தனது மண்டலக் கோட்டைக்கு போய்விட்டது மந்திரி மனதில் பெரும் கசப்பை அளித்தது. ஜாவுத் கோட்டை வீழ்ச்சியுடன் மகாராஷ்டிரர்கள் தாங்கள் ராஜஸ்தானத்தில் கோட்டைவிட்ட அத்தனை கோட்டைகளையும் திரும்பப் பிடித்துவிட்டதால், மேவாரின் முக்கிய இடங்களை அவர்கள் பிடித்துவிட்டார்கள் என்பதை நினைக்க, இடிந்த மனதுடன் தமது மாளிகை அறையில் உட்கார்ந்திருந்த சமயத்தில் ராஜமாதா ராம்பியாரி அங்கு வந்து சேர்ந்தாள்.

அவன் காலடி ஓசை கேட்டு திரும்பிய சோம்ஜி மகாராணாவை மகா கேவலமாக வளர்த்திருந்த அந்த தாயைக் கண்டு உள்ளே வெறுப்பு கொண்டாலும் மேலுக்கு மகிழ்ச்சியைக் காட்டி ''மகாராணி! தாங்கள் இங்கு வருவானேன்! சொல்லியனுப்பியிருந்தால் நான் வர மாட்டேனா?'' என்று மரியாதை சொற்களை உதிர்த்தார், தலையையும் தரையைத் தொட்டு விடுவது போல் வணங்கினார்.

மகாராணி அந்த வணக்கத்தை ஏற்றுக் கொண்டாளோ இல்லையோ தெரியாது. வந்த காரியத்தைப்பற்றி வீணாக வார்த்தைகளை வளர்த்தாமல் பேசினாள். ''சோம்ஜி! மேவார் இருக்கும் நிலை உமக்குத் தெரியுமா?'' என்று வினவினாள் அதிகாரக் குரலில்.

www.cleanindians.com



''மந்திரியின் வேலையே, உள்ள நிலையை உள்ளபடி உணர்வதுதான் என்று நினைக்கிறேன்'' என்றார் சோம்ஜி.

''நினைத்து என்ன செய்தீர்?'' என்று ராஜமாதா வினவினாள்.

''அதுதான் புரியவில்லை'' என்றார் சோம்ஜி.

''புரியாவிட்டால மந்திரிப் பதவியை வேறு யாரிடமாவது ஒப்படைப்பதுதானே?'' என்று கடுமையாகக் கேட்டாள் ராஜமாதா.

''இந்த விநாடியிலேயே ஒப்படைக்க சித்தமாயிருக்கிறேன். இதை ஏற்றுக் கொள்ளக் கூடிய யாரையாவது அனுப்புங்கள். இல்லை இந்த பெரும் பதவியை தாங்களே ஏற்றுக் கொள்வதாயிருந்தால் ராஜமுத்திரைகளை இப்பொழுதே தங்களிடம் ஒப்படைக்கிறேன்'' என்ற சோம்ஜி மிக விஷமமாகப் பேசினார்.

''மிகவும் கெட்டிக்காரத்தனமாகப் பேசுவதாக நினைப்போ?''

''இல்லை ராஜமாதாவின் கெட்டிக்காரதனத்தில் இம்மியளவு கூட அடியவனுக்கு இல்லை என்பதை நீண்ட நாளாக உணர்ந்திருக்கிறேன்.''

ராஜமாதா உடனடியாக இதற்கு பதில் சொல்லவில்லை. அறையில் குறுக்கும் நெடுக்குமாக பெண் புலி போல் நடந்தாள். பிறகு சோம்ஜிக்கு எதிரில் நின்று ''சோம்ஜி! உமது கருத்தும் எனது கருத்தும் மாறுபட்டிருந்தால் நிறைவேற்றத் தகுந்தது எது?'' என்று வினவினாள்.

''சந்தேகமென்ன தங்கள் கருத்துதான்'' என்ற சோம்ஜி ''கருத்து எதுவாயிருந்தாலும் தெரிவித்தால் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்று கூறினார். அவர் குரலில் பலத்த சந்தேகம் தொனித்தது.

ராஜமாதா பலத்த சிந்தனையுடன் உலாவினாள் அறையில். அவள் படும் அவஸ்தையைக் கண்ட சோம்ஜி அவளுக்கு ஒரு மஞ்சத்தை எடுத்துப் போட்டு தாம் எதிரில் கை கட்டி நின்றார். அதில் அமர்ந்த ராஜமாதா ''சோம்ஜி! உமது ராஜதந்திரத்தின் விளைவு என்ன தெரியுமா?'' என்று வினவினாள்.

''சொல்லுங்கள் மகாராணி'' என்றார் சோம்ஜி.

மேவார் சிம்மாசனத்துக்காக உயிரைக் கொடுத்த சலூம்பிராக்கள் வம்சத்தில் பிறந்தவர் பீம்சிங் சலூம்பிரா...'' என்று இழுத்தாள் மகாராணி.

''ஆம்.''

''அவர் நம்மிடம் விரோதம் கொண்டு சித்தூருக்கு போய்விட்டார்''

''சித்தூரில் ஆட்சி செய்கிறார் என்பது பொருந்தும்''

''அதைப்பற்றி எனக்குத் தெரியாது'' என்றாள் மகாராணி.

''எனக்குத் தெரியும். சலூம்பிராவும் அவரது நண்பன் கோராபூர் அர்ஜுன்சிங்குமாகச் சேர்ந்து மகாராணாவின் நிலங்களை தாங்களே விற்று சாசனம் செய்கிறார்கள். மேவாருக்கும் உதயபூருக்கும் இடையிலுள்ள பாதி நிலங்களை அவர்கள் விற்று வரிப்பணத்தையும் சாப்பிட்டு வருகிறார்கள்''

ராஜமாதா சிலையென நின்றாள். பிறகு உணர்ச்சியை வரவழைத்துக் கொண்டு ''அதைத் தடுக்க என்ன செய்தீர்?'' என்று கேட்டாள்.

''நமது வீரர்களை அனுப்பி அவர்கள் வரி வசூலைத் தடை செய்தேன். நிலங்களை மகாராணா அனுமதியில்லாமல் விற்றதற்கு காரணம் கேட்டு கடிதமும் அனுப்பியிருக்கிறேன்'' என்றார் சோம்ஜி.

''உமது கடிதத்தை சலூம்பிரா மதிப்பாரென்று நினைக்கிறீரா?''

www.cleanindians.com



''இல்லை. மதிக்கமாட்டார்''

''அப்படியானால் என்ன செய்ய உத்தேசம்?''

மந்திரி சோம்ஜி மகாராணி எதிரில் உறுதியுடன் நின்றார். ''ராஜமாதா! மன்னவனுக்குப் பணியாதவர்கள் துரோகிகள். தண்டிப்பது ராணாவின் கடமை'' என்றார் சோம்ஜி.

ராஜமாதா சிந்தனையில் இறங்கினாள். ''சோம்ஜி! நீர் சொல்வது எல்லாம் சட்டப்படி சரிதான். ஆனால் ஏட்டுச் சுரக்காய் கரிக்கு உதவாது. சமயத்துக்குத் தகுந்தபடி சட்டத்தை வளைப்பதும், விட்டுக் கொடுப்பதுந்தான் ராஜதந்திரம்'' என்று சூசகமாகப் பேசினாள் ராஜமாதா.

''எப்படி சட்டத்தை வளைக்கலாம்? எப்படி விட்டுக் கொடுக்கலாம்? யாரிடம் விட்டுக்கொடுக்கலாம்? என்பதை மகாராணியே சொல்லலாம்.'' இதை திட்டமாகச் சொன்னார்.

மகாராணி முகத்தில் மிகுந்த வேதனைக் குறி காணப்பட்டது. ''பீம்சிங் சலூம்பிரா துஷ்டன்தான். இருப்பினும் மகாராணாவுக்கு சேவை செய்ய அழைத்தால் அவன் மறுக்க முடியாது. அவன் குல ரத்தம் அதற்கு இடங்கொடாது'' என்றாள்.

ராஜமாதாவின் மனப்போக்கை சோம்ஜி நன்றாகப் புரிந்துகொண்டார். ''தங்கள் சித்தம் மகாராணி'' என்றார் சோம்ஜி.

''உமக்கு ஆட்சேபணையில்லையே?'' என்று ராஜமாதா கேட்டாள்.

''எனது மனச்சாட்சியை நான் இன்னும் அடகு வைக்கவில்லை ஆனால் என் கருத்து முக்கியமல்ல'' என்றார் சோம்ஜி.

''இன்றே நான் சித்தூருக்கு கடிதம் அனுப்புகிறேன், சலூம்பிராவை வரச்சொல்லி.'' என்றாள் ராஜமாதா.

மந்திரி பதில் பேசவில்லை தலையை மட்டும் நன்றாகத் தாழ்த்தினார்.

ராஜமாதா வேகமாக வெளியேறினாள்.

சோம்ஜி தமது அலுவலக அறைக்குச் சென்று துரிதமாக ஏதோ எழுதினார் நீண்ட நேரம். பிறகு அந்த கடிதத்தை ஒரு குழலில் போட்டு முத்திரையும் வைத்தார். அதை தமது மரப்பெட்டியில் பத்திரப்படுத்தினார். சோகமான புன்முறுவல் ஒன்று அவர் இதழ்களில் தவழ்ந்தது.

சோம்ஜியின் மாளிகையில் இருந்து அரண்மனை சென்ற ராஜமாதாவும் தனது அந்தப்புர அறையில் உட்கார்ந்து வேகமாக ஒரு கடிதம் எழுதினாள். அதற்கு அடியில் முத்திரை வைக்க எதையோ தேடினாள். அது கிடைக்காததால் அப்படியும் இப்படியும் பார்த்த ராஜமாதா தனது முதல் பேத்தி கிருஷ்ணகுமாரி மெள்ள வருவதையும் அவள் தலையில் அந்த பழய உச்சிப்பூ இருப்பதையும் கவனித்தாள்.

சிறுமியிடம் சென்று அந்த உச்சிப்பூவை தலையிலிருந்து கழற்றி அதைக்கொண்டே முத்திரையும் வைத்தாள். அந்த உச்சிப்பூவால் அனர்த்தம் விளையும் என்ற பழய வதந்தியை அவள் நம்பவில்லை முத்திரை வைத்து தானும் கையொப்பமிட்டு குழலில் செய்தியை வைத்து குழலுக்கும் முத்திரை வைத்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மகாராணியின் ஓலையுடன் ஒரு தூதன் விரைந்தான் சித்தூரை நோக்கி.

இரண்டு நாட்களில் சலூம்பிராவிடம் இருந்து பதில் வந்தது. அதை வாங்கிப் படித்த ராஜமாதா புளகாங்கிதமடைந்தாள். சலூம்பிரா எழுதியிருந்தார் ''ராஜமாதா திருவடிகளில் பீம்சிங் விழுந்து எழுதுவது: ராணாவுக்கு சேவை செய்ய என்றும் சித்தமாயிருக்கிறேன். இத்தனை

www.cleanindians.com

884/291969



நாள் நான் விலகியிருந்ததற்கு காரணம் தங்களுக்குத் தெரியும். விரைவில் ராணாவின் திருப்பாதங்களில் வணங்க வருகிறேன். ராணாவுக்கும் மேவாருக்கும் உயிரையே கொடுப்பேன்'' இப்படி எழுதியிருந்தார் சலூம்பிரா.

ராஜமாதா பூரிப்படைந்தாள். ''இன்னும் இரண்டு நாட்களில் பீம்சிங் ராணாவை சரணடைவான். அவன் வீரவாள் மேவாரை பாதுகாக்கும்'' என்று உள்ளூர எண்ணமிட்டாள்

உதயபூரில் ராஜமாதா மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில் சித்தூரில் பீம்சிங் சலூம்பிரா தமது நண்பனை கோராபூர் அர்ஜுன்சிங்கிடம் ரகசியமாக ஏதோ சொன்னான்.

அதைக் கேட்ட அர்ஜுன்சிங் பிசாசைப்போல் நகைத்தான். ''சலூம்பிரா! உங்கள் புத்தியில் பாதி ராணாவுக்கு இருந்தால் இந்த மேவார் என்றோ உருப்பட்டிருக்கும்'' என்றும் கூறினான் நகைப்பின் ஊடே.

''நூறுபேர் கொண்ட படை மட்டும் நம்முடன் வரட்டும். அதற்கு மேல் அழைத்துச் சென்றால் சந்தேகம் வரும். நான் மகாராணாவிடம் பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் நீ சோம்ஜியைப் பார்த்து விட்டு வா'' என்றார் சலூம்பிரா.

புரிந்ததற்கு அறிகுறியாக தலையை அசைத்த அர்ஜுன்சிங் ''நாம் எப்பொழுது புறப்படுகிறோம்'' என்று வினவினான்.

''நாளைக் காலையில். நாம் வருவதை அறிவிக்க இரண்டு வீரர்களை முன்னோடிகளாக அனுப்பிவை'' என்றார் சலூம்பிரா.

மோகினிவனத்தில் உள்ள தமது பெரிய மாளிகையின் நந்தவனத்தில் மகாராணா ஒரு அழகியுடன் விளையாடிக் கொண்டிருந்தார். ஓடிய அந்தப் பருவ அழகியை ராணா

கட்டிப் பிடித்தார். "மகாராணா! நான்..." என்று அச்சத்துடன் சொன்னான்.

"நான்காவது ராணி" என்ற மகாராணா அவளை அழைத்துக்கொண்டு ஒரு கொடி வீட்டை நோக்கிச் செல்ல முயன்ற சமயத்தில் சலூம்பிரா அந்த நந்தவனத்தில் நுழைந்தார். மகாராணா இருக்கும் நிலையைப் பார்த்து வெறுப்பு கலந்த புன்முறுவலுடன் நின்றார் சில விநாடிகள்.

மகாராணாவுடனிருந்த பெண் சலூம்பிராவைப் பார்த்ததும் பிரமிப்பும் அச்சமும் அடைந்தாள். "தங்களைக் காண யாரோ வந்திருக்கிறார்கள்" என்று அச்சம் குரலிலும் ஒலிக்கச் சொன்னாள். "இங்கு யாரும் வரமுடியாது பெண்ணே இங்கு யார் வந்தாலும் மரண தண்டனை கிடைக்கும்" என்று கூறிக்கொண்டு திரும்பியவர் சிலையென நின்றார்.

சலூம்பிரா வேகமாக வந்து மன்னன் காலில் விழுந்தார். பாதங்களை தனது இரு கைகளாலும் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டார். "சரணடைந்தவனுக்கு மகாராணா மரண தண்டனை கொடுக்க முடியாது" என்றும் கூறினார் புன்முறுவலுடன். தனது வாளையும் எடுத்து மகாராணாவின் பாதங்களில் வைத்து "இது இனி தங்கள் சேவையில் இருக்கும்" என்றும் கூறினார்.

மகாராணாவின் முகத்தில் பெருமை நிலவியது. "சலூம்பிரா! உன் குலப் பெருமையை மீண்டும் ஒளி பெறச் செய்துவிட்டாய். உன்னால் மேவார் பிழைக்கட்டும். எதிரிகள் நாசம் அடையட்டும்" என்று கூறி, வாளை எடுத்து அவர் கைகளில் கொடுத்தார்.

சலூம்பிரா பெரிதும் குழைந்தார். நன்றாக தமது பாத்திரத்தை நடித்தார். மகாராணாவுக்கு முதுகைக் காட்டாமல் பின்புறமாகவே நடந்தார்.

www.cleanindians.com



"நாளை இந்த மாளிகையின் மகாமண்டபத்துக்கு வந்து சேர்" என்று மகாராணா ஆணையிட்டார்.

"சித்தம்! சித்தம்!" என்று அதிகமாகக் குழைந்தார் சலூம்பிரா.

அடுத்த நாள் அவர் மகாமண்டபத்துக்கு வந்தார். அவர் வருமுன்பே மேவாரை பெரும் விபத்து ஆட்கொண்டது.

## 38. சதியும் விளைவும்!

மன்னன் காமுகனாயிருந்தால் அரசாட்சி அழிந்துவிடும் என்பதற்கு வரலாற்றுச் சான்றாக மேவார் ராணா பீம்சிங் இருந்தார் என்றால், தேசநலத்தைத் தவிர சுயநலத்தை சொப்பனத்திலும் எண்ணாமல் கர்மயோகியாக இருந்த மந்திரியின் அதோகதிக்கு சோம்ஜி உதாரணமானார்.

பீம்சிங் சலூம்பிராவை ராஜசேவைக்கு அழைக்க ராஜமாதா தீர்மானித்ததை அவர் ஆட்சேபிக்காததற்குக் காரணம், ஆட்சேபித்துப் பயனில்லை என்பதுதான். காமப் பித்தனாகத் திரியும், காமகிழத்திகளுடன் சரசமாடுவதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட மகனை மகராணாவைத் திருத்தமுடியாத ராஜமாதா, மகாராணாவை அறவே மதிக்காதவரும் மேவாரின் புராதன தலைநகரான சித்தூரில் தனி அரசு செலுத்துபவருமான சலூம்பிராவை ராஜ சேவைக்கு அழைப்பது எத்தனை கேவலமானது என்பதை உணர்ந்ததால் அன்றிரவு சிந்தைமிகுந்தவராய் தமது அறையில் உறக்கம் வராமல் புரண்டார்.

காலையில் எழுந்ததும் ஒரு கடிதம் எழுதி குழலில் போட்டு முத்திரையும் வைத்தார். ''எனக்கு ஏதாவது நேர்ந்தால் இதை ராஜமாதாவிடம் கொடுத்துவிடுங்கள்'' என்று தமது தம்பிகளான சிவதாஸ், சதிதாஸ் இருவரிடம் கூறிவிட்டு எந்த நிலைக்கும் தயாராக இருந்தார். ஒற்றர்கள் நிரம்ப இருந்த காரணத்தால், சலூம்பிரா மன்னரிடம் சரணாகதிக்கு ஒப்புக் கொண்ட விஷயமும் கோராபூர் அர்ஜுன் சிங்குடன் அவர் வந்து விட்டதையும் அறிந்தார்.

சலூம்பிராவை மோகினவன மாளிகையின் மகா மண்டபத்தில் மன்னர் வரவேற்க சித்தமாயிருந்த தினத்தில் விடியற்காலையிலேயே சோம்ஜி நீராடி தினசரி பூஜையை முடித்துக் கொண்டு தமது அலுவலக மண்டபத்துக்கு வந்து அங்கிருந்த மேடையில் திண்டு திவாசுகளின் மீது சாய்ந்துகொண்டு அன்றாட வேலைகளை கவனிக்கலானார். மந்திரியின் அலுவலக மண்டபத்தில்காவலர் எப்பொழுதும் அதிகமாகக் கிடையாது. அத்தகைய பாதுகாப்பில் மந்திரி சோம்ஜிக்கு நம்பிக்கையில்லாத காரணத்தால் அவருக்கு அன்றிருந்த ஒரே யோசனை மேவார் உள்நாட்டுப் பூசலால் பாழாகிப்போகிறதே என்பதுதானே தவிர வேறில்லை. இந்த நாடு என்றாவது தேறுமா என்று அவர் ஏங்கிக்கொண்டிருந்த சமயத்தில்தான் வெளியில் இருந்த காவலன் ஒருவன் வந்து கோராபூர் அர்ஜுன் சிங் அவரை பேட்டி காண வந்திருப்பதை அறிவித்தான்.

சோம்ஜியின் கூரிய அறிவு துரிதமாக வேலை செய்யவே அவர் கேட்டார் ''அர்ஜுன்சிங் எத்தனை பேருடன் வந்திருக்கிறான்?'' என்று.

''இரண்டே வீரர்கள்'' என்றார் காவலன்.

''சரி, வரச்சொல்'' என்று சோம்ஜி உத்தரவிட்டார்.

அர்ஜுன்சிங் உள்ளே நுழையும் முன்பு, மந்திரி மாளிகைக் காவலர் முன்பாகவே தனது நீண்ட வாளைக்

www.cleanindians.com



கழற்றி தன்னுடன் வந்த இருவீரர்களிடம் கொடுத்துவிட்டு, கச்சையில் இருந்த பிச்சுவாவுடன் மட்டும் உள்ளே நுழைந்தான். மண்டபத்துக்குள் நுழைந்தவன் தலையை நன்றாக வணங்கினான் மந்திரிக்கு தூரத்தில் இருந்தபடியே.

சற்று எட்ட இருந்த ஆசனத்தில் அமரும்படி அர்ஜுன் சிங்குக்கு சோம்ஜி சைகை செய்தார். அர்ஜுன் சிங் நின்று கொண்டே அந்த மண்டபத்தை நோக்கினான். அங்கு இரண்டொரு காவலருக்கு மேல் இல்லாததைக் கண்டு வியந்தான். ஒரு வேளை மந்திரி அக்கம்பக்க அறைகளில் யாரையாவது மறைத்து வைத்திருப்பாரோ என்று சந்தேகித்தான். அவன் சந்தேகக் கண்களைப் பார்த்த மந்திரி புன்முறுவல் கொண்டு ''இங்கு எப்பொழுதும் அனாவசிய காவல் கிடையாது'' என்றார்.

மீண்டும் நின்ற வண்ணம் வணங்கினான் அர்ஜுன்சிங். ''இன்று மோகினிவன மண்டபத்தில் மகாராணாவை சலூம்பிரா சந்திக்கிறார்'' என்று கூறினான்.

''கேள்விப்பட்டேன்'' என்றார் மகாமந்திரி.

''சலூம்பிரா அதிக வீரரை உடன் அழைத்து வரவில்லை மன்னரை சரணடைய வந்திருப்பதால்'' என்று பேச்சை வளர்த்தான் அர்ஜுன்சிங்.

''நூறு பேர்தான் வந்திருக்கிறார்கள்'' என்று சோம்ஜி புன்முறுவல் செய்தார்.

''எங்களை வேவு பார்க்க ஆட்களை வைத்திருக்கிறீரா?'' என்று கேட்டான் அர்ஜுன்சிங் புன்முறுவலுடன்.

''சிலபேரைப் பற்றி அறிய ஒற்றர் அவசியம் இல்லை'' என்றார் சோம்ஜி.

இரண்டடி முன்னே எடுத்துவைத்தான் அர்ஜுன்சிங். மந்திரி அவன் ஒவ்வொரு அசைவையும் கவனித்தார். சட்டென்று தமது பக்கப் பெட்டியில் இருந்து ஒரு துணிச்

சுருளைப் பிரித்து "அர்ஜுன்சிங்! இதைப் பார்" என்று அதை நீட்டினார்.

அர்ஜுன்சிங் மெள்ள மெள்ள மந்திரியின் மேடை அருகில் வந்து அந்த சுருளைப் படித்தான். "அதில் இருப்பது சரியா?" என்று கேட்டார் மந்திரி.

"சரிதான்" என்று கூறி அந்த மேடைக்கு அருகில் மிகவும் குனிந்து வணங்கினான் அர்ஜுன்சிங்.

"சித்தூருக்கு அருகில் உள்ள மகாராணாவுக்கு சொந்தமான நிலங்களை நீ விற்றதற்கான பத்திரம்" என்றார் மந்திரி.

"ஆம்" என்றான் அர்ஜுன்சிங்.

"எப்படி விற்றாய்? யார் அனுமதியின் மீது விற்றாய்? எப்படி திரும்ப எடுத்துக் கொண்டாய்? சமாதானம் சொல்." இம்முறை கடுமையாகவே இருந்தது சோம்ஜியின் குரல்.

www.cleanindians.com

"சமாதானமா!" என்று கேட்டுக் கொண்டே மேடைக்கு அருகிலிருந்து சோம்ஜியை நோக்கித் தாவிய அர்ஜுன்சிங் தனது கச்சையில் இருந்து குறுவாளை எடுத்து வேகமாக அவர் மார்பில் குத்தினான்.

மந்திரியின் கண்கள் அவனை வெறுப்புடன் ஒரு முறை நோக்கின. பிறகு கண்கள் பஞ்சடைய அவர் திண்டின் மீது சாய்ந்தார்.

அக்கம் பக்கமிருந்த காவலர் "ஐயோ" என்று அவலக் குரல் கொடுத்தார்கள்.

அடுத்த விநாடி—அந்த மாளிகையில் பரபரப்பு ஏற்பட்டது. சோம்ஜியின் சகோதரர்கள் சிவதாசும் சதிதாசும் வேகமாக ஓடி வந்தார்கள்.

சோம்ஜியின் புனிதமான ரத்தம் திண்டை நனைத்துக் கொண்டிருந்தது. மங்கலமாகத் துவங்கிய அந்த காலையில் அந்த மாளிகை அமங்கல ஒலிகளால் நிரம்பியது.



மகாபாதகச் செயலை செய்துவிட்ட அர்ஜுன்சிங் மந்திரியைக் கொன்றதும், ரத்தம் தோய்ந்த் தனது குறுவாளைப் பிடுங்கிக் கொண்டு வெளியில் ஓடி புரவியில் பறந்துவிட்டான்.

மகாராணாவின் நலனைப் பாதுகாப்பதைத் தவிர வேறு எதையும் அறியாத கர்மயோகியான சோம் சந்த் காந்தியின் ரத்தம் கொலைகாரச் செயலால் பெருகிக் கொண்டிருந்த அதே சமயத்தில் மோகினி வனத்தின் பெருமாளிகையின் மகாமண்டபத்தில் சலூம்பிராலை வரவேற்க அமர்க்களமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஈட்டிகளுடன் நின்ற பத்து காவலர் சலூம்பிராவுக்கு வரவேற்பளிக்க நிறுத்தப்பட்டிருந்தனர். மகாமண்டபத்தின் சுவர்கள் மோகினி வனத்தின் அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மகாராணாவும் தம்மை நன்றாக அலங்கரித்துக் கொண்டு மெய்க்காவலர் சிலர் புடை சூழ மண்டபத்துக்கு வந்தார். தூரிய வாத்தியங்கள் முழங்கின. மன்னர் தமது ஆசனத்தில் அமர்ந்ததும் அங்கு ஏற்கெனவே குழுமியிருந்த பெருமக்கள் மகாராணாவுக்கு வாழ்த்து ஒலி எழுப்பினார்கள். அடுத்து அங்கிருந்த நிர்வாகஸ்தர் பீம்சிங் சலூம்பிராவின் சிறப்புகளை எடுத்து ஓதினார். யாரையும் உடனழைத்துக் கொள்ளாமலே சலூம்பிரா தனது நீண்ட வாளுடன் மண்டபத்துக்குள் நுழைந்ததும் மன்னரைத் தவிர மற்ற எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

கம்பீரமாக நடந்து வந்த சலூம்பிரா மன்னருக்கு முன் தலை வணங்கியதும் அருகேயிருந்த ஆசனத்தில் உட்காரும்படி மன்னர் சைகை செய்ய சலூம்பிரா உட்கார்ந்தார். அவர் உட்கார்ந்ததும் மன்னர் மெதுவாகப் பேசினார். "மக்களே! இன்று மேவாரின் சரிதத்தில் மகிழ்ச்சிமிக்க நன்னாள். இன்று சலூம்பிரா மேவாரின் சேவைக்கு தமது வாளை அர்ப்பணித்திருக்கிறார். அவர் சேவையை நாம் ஏற்றுக் கொண்டோம்" என்று கூறியதும் மக்கள் மகிழ்ச்சிக் குரல் எழுப்பினார்கள்.

அந்த ஆரவாரத்தை வெளியே எழுப்பிய கோஷம் சற்று தடை செய்தது. வேகமாக நான்கு புரவிகள் வந்து மகா மண்டப வாயிலில் நின்றன. முதல் இரண்டு புரவிகளில் இருந்து கீழே குதித்த சிவதாசும், சதிதாசும் உள்ளே ஓடிவந்து "மகாராணா! காப்பாற்றுங்கள். சோம்ஜி கொல்லப்பட்டார். எங்களையும் கொல்லப் போகிறார்கள்" என்று கூவினார்கள்.

மகாமண்டபத்தில் பயங்கர நிசப்தம் நிலவியது.

மகாராணா தமது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று "கொன்ற பாதகன் யார்?" என்று கேட்டார்.

அப்பொழுது மந்திரியின் சகோதரர்களைத் துரத்திக் கொண்டும் ரத்தக்கரை படிந்த குறுவாளைக் கையில் ஏந்திக் கொண்டும் மகாமண்டபத்தில் நுழைந்தான் அர்ஜுன் சிங். அவன் துணிவைக் கண்டு சீற்றம் கொண்ட மகாராணா ஏதோ சொல்ல முயலுமுன்பு சலூம்பிரா எழுந்து நின்று நிதானமாக ராணாவை நோக்கினார். "மகாராணா! என் வீரர்கள் நூறுபேர் வெளியில் நிற்கிறார்கள்" என்றார்.

www.cleanindians.com

மகாராணாவின் முகம் சிவந்தது. ஏதும் செய்ய சக்தியோ துணிவோ இல்லாத மகாராணா "சலூம்பிரா! உன்னை வீரனென்று நம்பினேன். எந்த வம்சத்தில் பிறந்து எந்த ஈனச் செயலையும் செய்யும் நிலைக்கு வந்து விட்டாய்? சீ! நிராயுத பாணியான ஒரு மந்திரியைக் கொல்ல உனக்கு வெட்கமாயில்லை? இந்த இடத்தை விட்டுப் போய்விடு. உன் கொலைக் கருவியான இந்தக் கயவனையும் அழைத்துச் செல். இனி என் கண் முன் வராதே" என்று சொற்களைக் கொட்டினார். பிறகு அதிர்ச்சிமிகுதியால் தமது ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்.

சலூம்பிரா பேய்ச் சிரிப்பு சிரித்தான். பிறகு வெளியே சென்றான்.

அந்த சிரிப்பு மேவார் பூராவும் ஒலித்தது. அந்த ஒலி மண்டலக் கோட்டையில் திருமண மேடையில் இருந்த தீப்சந்தின் காதிலும் விழுந்தது.

## 39. கர்ம யோகியின் கடிதம்!

மண்டலக் கோட்டையின் பெரிய அரண்மனையின் திருமண மண்டபத்தில் புஷ்பாவதியின் கழுத்தில் மங்கல நாணை தீப்சந்த் முடிந்ததும் சோம்ஜியைப் பற்றிய அமங்கலச் செய்தி அடங்கிய ஓலையைத் தாங்கிவந்த தூதன் அந்த மண்டபத்தில் தோன்றினான்.

மங்கல நாணை தீப்சந்த் அணிவித்ததும் மங்கையர் மங்கல கீதம் பாடி மகிழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் அந்த மண்டபத்தில் தோன்றிய தூதன் அந்த திருமண நிகழ்ச்சி எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கி ஒரு தூணின் மறைவிலேயே நின்றான் அரைநாழிகை நேரத்துக்கு மேல். பிறகு தீப்சந்த் மட்டும் தனித்து வந்து அங்கிருந்த விருந்தாளிகளை சந்திக்க முயன்ற சமயத்தில் தனது தலையை மெதுவாக நீட்டினான். அவனைக் கண்ட தீப்சந்த் அவன் முகத்திலிருந்த துன்பக் குறியையும் அதிர்ச்சியையும் கண்டு அவனை தனியே அழைத்துக்கொண்டு சென்று வந்த காரியத்தைப்பற்றி வினவினான்.

உடனடியாக விஷயத்தை உடைக்காத தூதன் தீப்சந்துக்கு தலைவணங்கி "தங்களுக்கு அவசர ஓலை கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறினான்.

"யார் கொடுத்தது ஓலையை?" என்று தீப்சந்த் வினவினான்.

"ராஜமாதா" என்று சுருக்கமாகப் பதில் சொன்னான் தூதன்.

"சரி! நீ இந்த அரண்மனையின் தென்பகுதியில் தங்கு. சீக்கிரம் சந்திக்கிறேன்" என்று கூறி ஓலையைப் பெற்றுக் கொண்டு திரும்பவும் விருந்தாளிகளை கவனிக்கச் சென்றான்.

விருந்தாளிகளை விசாரித்து விருந்தோம்பலை முடித்து அவர்களை அனுப்பிய பிறகு ஓலையை தனது மணவறையில்

பிரித்துப் படித்த தீப்சந்த் திகைப்பின் எல்லையை அடைந்து அப்படியே உட்கார்ந்துவிட்ட சமயத்தில், அவனைத் தேடி வந்த புஷ்பாவதி அவன் பஞ்சணையில் சிலையென உட்கார்ந்திருப்பதைக் கண்டதும "ஏன்? என்ன விசேஷம்?" என்று வினவினாள்.

பதிலுக்கு கையில் இருந்த ராஜமாதாவின் ஓலையை புஷ்பாவதியிடம் நீட்டினான். அந்த ஓலையைப் படித்த புஷ்பாவதியின் மனதில் சொல்லவொண்ணா துயரம் குடி கொள்ளவே "மந்திரி கொலைக்கு மகாராணா என்ன பரிகாரம் கண்டார்?" என்று வினவினாள்.

"சோம்ஜி அவர் எதிரிகளால் அவரது மாளிகையிலேயே கொல்லப்பட்டார் என்று ஓலையில் கண்டிருக்கிறதே தவிர வேறு விவரம் இல்லை" என்று சுட்டிக்காட்டினான் தீப்சந்த்.

புஷ்பாவதியின் முகம் கோபத்தால் சிவந்தது. "வேறு ஒரு விவரம் இருக்கிறது" என்று கூறினாள் கோபம் துளிர்த்த குரலில்.

"ஆம். இருக்கிறது" என்று தீப்சந்த் சொன்ன பதிலில் வெறுப்பு இருந்தது.

"உங்களை வரச்சொல்லி இருக்கிறாள் ராஜமாதா" என்ற புஷ்பாவதியின் குரலிலும் சினம் இருந்தது.

"ஆம்."

"எதற்கு? தனது துப்புகெட்ட பிள்ளையைக் காப்பாற்றவா?"

"அப்படி மகாராணாவைப் பற்றிப் பேசாதே புஷ்பாவதி."

"வேறெப்படி பேசச் சொல்கிறீர்கள்? மந்திரி கொலையைப் பார்த்துக் கொண்டிருந்ததற்கு பாராட்டச் சொல்கிறீர்களா?"

"ஆயிரம் இருந்தாலும் அவர் மேவாரின் ராஜன்னம். அந்த வம்சத்தை காப்பது நமது கடமை."

www.cleanindians.com



"அவரே தமது பதவியை காப்பாற்றிக் கொள்ளாத போது நீங்கள் அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் என்ன?" இதை மிகுந்த வெறுப்பு நிறைந்த குரலில் வினவினாள் புஷ்பாவதி.

புஷ்பாவதியின் பூவுடலை தனக்கு அருகில் இழுத்து அணைத்தான் தீப்சந்த். அன்பு கனிந்த குரலில் பேசவும் முற்பட்டு "புஷ்பாவதி! வீரன் கடமையென்று ஒன்று உண்டு. மேவார் ராணா முக்கியமல்ல நமக்கு. இன்று மோசமான ராணா இருந்தால் அடுத்தபடி மகாவீரரான ஒரு ராணா வரலாம். இப்படி மாறி வந்ததும் வரலாற்றில் இருக்கிறது. ஆனால் மேவார் முக்கியம், அதன் நன்மை முக்கியம்" என்று கூறி அவள் பூங்கன்னத்தில் தனது இதழ்களைப் பொறுத்தினான்.

அவள் அவனை அகற்ற முயலவில்லை, அவன் அணைப்பை தடுக்கவும் முயன்றாள். "எனது சேடிகள் காத்திருக்கிறார்கள். இதற்கு நீங்கள் இரவு மட்டும் காத்திருக்க வேண்டும்" என்று சொன்னாள்.

தீப்சந்த் பெருமூச்சு விட்டான். "புஷ்பாவாதி! இன்றிரவு நான் இங்கு இருக்கமாட்டேன்" என்று துன்பக் குரலில் சொன்னான்.

புஷ்பாவதியின் முகத்தில் பேரதிர்ச்சி தெரிந்தது. "என்ன! இரவு இருக்கமாட்டீர்களா!" என்று வினவிய அவள் குரலிலும் பேரதிர்ச்சி ஒலித்தது.

அந்த அதிர்ச்சியை அவன் எதிர்பார்த்தே இருந்ததால் அவளைச் சுற்றியிருந்த தனது கைகளை சற்று இறக்கினான் அவளுக்கு ஆறுதலைக் கொடுக்க. பிறகு ஒரு கையை எடுத்து அவள் முகத்தை தன்னை நோக்கித் திருப்பி அவள் கண்களுடன் தனது கண்களை உறவாட விட்டான். அவள் கண்களில் இருந்த பெரும் சோகம் அவன் மனதை அறுக்கத் தொடங்கியது. அந்த வேதனையுடன் பேசினான் "புஷ்பாவதி! உன் மன ஏக்கம் எனக்கு மட்டும் இல்லையா?

மணந்த இரவன்றே நாம் மணவரையில் இணையாதது எனக்கு மட்டும் ஏமாற்றத்தையும் வேதனையையும் அளிக்கவில்லையா? ஆனால் வேறு வழியில்லை, புஷ்பாவதி. நான் காலம் கடந்து உதயபூர் சென்றால் அதற்குள் அங்கு இன்னும் என்னென்ன விபரீதங்கள் நேரிடுமோ எனக்குத் தெரியாது. ஆகவே உடனே புறப்படுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று சொல்லி அவள் இதழ்களை தனது இதழ்களால் சந்தித்தான். இணைந்த இதழ்கள் நீண்ட நேரம் பிரியவில்லை. பிரிந்த போது அவள் ஏக்கம் மிக அதிகமாயிற்று. ''இப்படி தொட்டும் விட்டும் ஓடுவதுதான் கணவன் கடமையா?'' என்று வினவி பெருமூச்சுவிட்டாள், அந்த மணமகள்.

அவன் கேட்டான் அவளை இடது கையால் அணைத்த வண்ணம் ''உன்னை விட்டு யார் ஓடப் போவது?'' என்று.

அவள் கண்களில் லேசாக நம்பிக்கை உதயமாயிற்று. அந்த நம்பிக்கை ஒலித்த குரலில் கேட்டாள் ''அப்படியானால்!'' என்று.

www.cleanindians.com

''உன்னையும் அழைத்துப் போகிறேன்'' என்ற தீப்சந்த் ''பயணத்துக்கு உன்னை தயார் செய்துகொள்'' என்றும் கூறினான்.

''அப்படியானால் இந்த மணவரை சடங்குகள்...'' என்று இழுத்தாள் அவள்.

''போகும் வழியிலுள்ள ஒரு தோப்பின் மண்தரை நமது மணவரையாகும்'' என்றான் தீப்சந்த்.

''இந்த மணவரையை மூடி வெளியிலிருந்து சேடிகள் மங்கலகீதம் பாடுவார்களே...'' என்றாள் புஷ்பாவதி.

''தோப்புக் குயில்கள் நமக்கு இசை பாடும்'' என்றான் தீப்சந்த்.

அதற்குமேல் அவள் தர்க்கம் ஏதும் செய்யவில்லை.

தீப்சந்த் திருமணத்துக்கு வந்திருந்த விருந்தினர்களிடமும் தாய் தந்தையரிடமும் விடை பெற்றுக்கொண்டு



அன்று மாலையே கிளம்பினான் புஷ்பாவதியுடனும் ஓலையைக் கொண்டுவந்த தூதனுடனும். இரவு மூண்ட பிறகும் அவன் பயணத்தை நிறுத்தவில்லை. மண்டலக் கோட்டையில் இருந்து கிளம்பி உதயபூரை நோக்கி வெகுவேகமாகப் பயணம் செய்தவன் கிட்டத்தட்ட நள்ளிரவு நெருங்கிய பின்பு வழியிலிருந்த சோலையொன்றில் தங்கினான். புரவியிலிருந்து தான் இறங்கி புஷ்பாவதியையும் இறக்கிவிட்ட தீப்சந்த் சோலை முகப்பில் தூதனை காவலிருக்கச் சொல்லிவிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். புஷ்பாவதி தனது புரவியிலிருந்த பையிலிருந்து ஒரு பொட்டலத்தையும் ராஜஸ்தானின் நீண்ட பித்தளைக் கூஜாவையும் எடுத்து வந்து பொட்டலத்தைப் பிரித்து அவனுக்கு உணவு பரிமாறினாள்.

தீப்சந்த் அவளை வியப்புடன் நோக்கி ''உணவு கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று வினவினான்.

''ஆம்'' என்றாள் அவள் வெட்கம் ஒலித்த குரலில்.

''முன்னேற்பாட்டுடன் வந்திருக்கிறாய்?'' தீப்சந்தின் குரலில் மகிழ்ச்சி இருந்தது.

''இது முன்னேற்பாடு அல்ல, கடமை'' என்றாள் புஷ்பாவதி.

''என்ன கடமை?''

''கணவனுக்கு காலா காலத்தில் உணவு சமைத்துப் போடுவது மனைவியின் முக்கிய கடமை.''

''இந்த சப்பாத்தி நீ தயாரித்ததா?''

''என் கடமையை வேறு யார் செய்யமுடியும்?'' என்று கேட்டு அவனுக்கு உணவை ஊட்டினாள்.

''உணவை நீ ஊட்ட வேண்டுமா? எனக்கு கை இல்லையா?'' என்றான் தீப்சந்த்.

அப்பொழுது அவன் கை தனது மார்பில் ஊர்ந்து கொண்டிருந்ததை கவனித்த புஷ்பாவதி மெல்ல நகைத்தாள்.

''ஏன் நகைக்கிறாய்?'' என்று தீப்சந்த் வினவ, ''உங்கள் கை வேறு அலுவலில் இருக்கிறது. அதை தடை செய்ய இஷ்டமில்லை'' என்று கூறினாள்.

அதற்குமேல் உணவை வேகமாக முடித்துக் கொண்ட தீப்சந்த் அவளுக்கு தானே உணவை ஊட்டினான். பிறகு தனது தலைப்பாகையை தரையில் விரித்து அவளை படுக்கச் சொல்லி தானும் அவள் அருகில் படுத்தான். ''புஷபாவதி! இந்த மண் தரை மணவரையைவிட நன்றாயில்லை?'' என்று தீப்சந்த் வினவினான்.

''ராமன் இருக்குமிடம் சீதைக்கு அயோத்தி'' என்றாள் புஷ்பாவதி.

அப்பொழுது சோலை மரங்களில் இருந்த ஏதோ இரண்டு பறவைகள் இன்பமாகக் கூவின. ''கேட்டாயா! சோலை செடிகளின் கீதத்தை'' என்ற தீப்சந்த் பக்கவாட்டில் புரண்டு அவள் பூவுடலை ஒரு கையால் அணைத்தான். உணர்ச்சிகள் அவ்விருவரையும் ஆட்கொண்டன. வேட்கை மிகுந்து வெட்கம் அகன்றது. காடே மணவரையாக மண்தரையே பஞ்சணையாக இருவரும் சொர்க்கத்தை படைத்துக் கொண்டார்கள்.

www.cleanindians.com

விடியும் நேரத்திற்கு முன்பாகவே எழுந்துவிட்ட தீப்சந்த் அலுத்துப் படுத்திருக்கும் அந்த புஷ்பக் கொடியைப் பார்த்தான். அந்த அசந்த நிலையிலும் அவள் மனோகரமாகக் காட்சியளித்தாள். சிதைந்த ஆடையும் கலைந்த குழலும் அழிந்த திலகமும் அவளை மோகனப் பதுமையாகச் செய்திருந்தது. அவளை எழுப்பாமல் தீப்சந்த் மட்டும் அருகிலிருந்த ஒரு சிறு கேணியில் முகம் கழுவி தனது உடைகளை சீர்செய்து வாளையும் கட்டிக் கொண்டான். பிறகு புஷ்பாவதியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை மெதுவாக அசைத்து எழுப்பி ''எழுந்திருக்கிறாயா, புஷ்பாவதி! சூரியன் உதயமாகு முன்பு வெகு தூரம் செல்லலாம்'' என்று கூற, அவள் எழுந்து உட்கார்ந்தாள். ''அதோ ஒரு சிறு ஊற்றுக்கேணி இருக்கிறது போய் வா முகம் கழுவி'' என்று கூற அவள் மெதுவாக இடை அசைய தளர்நடை நடந்து சென்றாள். சிறிது நேரத்தில் அவளும் சித்தமாகி விடவே அவளை தீப்சந்த் தனது கைகளால் தூக்கி புரவியில் ஏற்றி உட்கார வைத்தான். அதற்குக் காரணம் அவளுக்குப் புரிந்திருந்ததால் அவள் அவனைப் பார்த்து புன்னகை செய்தாள். அந்த ஒரு புன்னகைக்கு பெரிய சாம்ராஜ்ஜியத்தையே கொடுக்கலாம் என்று எண்ணமிட்டான் தீப்சந்த்.



மீண்டும் தூதனுடனும் புஷ்பாதியுடனும் பயணம் செய்த தீப்சந்த் வழியில் மேவாரின் கிராமங்கள் அடைந்திருந்த கேவல நிலையைக் கண்டான். எங்கும் ஏழ்மை குடிகொண்டிருந்தது. நிலங்களில் பயிர்கள் வாடிக் கிடந்தன. கோதுமை, சோளப் பயிர்கள் தங்கள் கொண்டைகளை தரையில் சாய்த்துப் படுத்திருந்தன. சில இடங்களில் ஆடு மாடுகள் மாண்டு கிடந்தன கேட்பாரற்று. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டும் இரவில் ஆங்காங்கு தங்கியும் பயணம் செய்த தீப்சந்த் நேராக உதயபூர் செல்லாமல் நாகராமக்ராவுக்குச் சென்று புஷ்பாவதியை அவள் தந்தையிடம் ஒப்படைத்து ''என் மனைவியை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு உதயபூர் நோக்கிக் கிளம்பி மூன்றாவது நாள் மாலையில் சோம்ஜியின் மாளிகையை அடைந்து சோம்ஜியின் அறைக்குச் சென்றான். அந்த அறையில் சோம்ஜிக்கு பதில் மந்திரியாக நியமிக்கப்பட்ட சதிதாஸ் நின்றிருந்தான். சற்று எட்ட இருந்த சோம்ஜியின் ஆசனத்தில் ராஜமாதா கையில் ஒரு குழலை ஏந்தி உட்கார்ந்திருந்தாள்.

தீப்சந்தைக் கண்ட பின்பும் அவள் கண்கள் அழைப்பை விடுவிக்கவில்லை. வெறித்து தீப்சந்தை நோக்கின. கையிலிருந்த குழலை தீப்சந்திடம் நீட்டினாள். அதன் முத்திரைகள் உடைக்கப்பட்டிருந்தன. அது ராஜமாதா

வுக்கு விலாசமிடப்பட்டிருந்தது. குழலின் உள்ளிருந்த சீலையை எடுத்துப் பிரித்துப் படித்தான் தீப்சந்த். சோம்ஜியின் அந்த இறுதிக் கடிதத்தின் ஒவ்வொரு வரியும் தீப்சந்தின் உள்ளத்தை தீயெனச் சுட்டது.

சோம்ஜி எழுதியிருந்தார்:

''மகாராணி! இது எனது இறுதிக் கடிதம். எப்பொழுது மகாராணாவை மதியாத சந்தாவதர்களை துணைக்கு அழைக்க ஒப்புக்கொண்டார்களோ அன்றே இந்த ராஜ்ஜியம் அழிந்தது. இன்னும் சில தினங்களில் நான் கொல்லப்படுவேன். கடமையைச் செய்த மகிழ்ச்சியுடன் நான் மடிவேன். அத்துடன் மேவார் அரசின் மேன்மையும் மடியும். சீக்கிரம் தீப்சந்தை வரவழையுங்கள். அவன் யோசனைப்படி நடக்க முற்படுங்கள்.

இப்படிக்கு
சோம்சந்த் காந்தி.''

www.cleanindians.com

இந்தக் கடிதத்தைப் படித்த தீப்சந்த் ''ஒரு கர்மயோகியை மேவார் இழந்துவிட்டது'' என்று சோகக் குரலில் சொன்னான். மகாராணியின் கண்களை ஏறெடுத்து நோக்கினான். அவன் கண்களை சந்திக்க முடியாத மகாராணி தனது கண்களை நிலத்தை நோக்கி தாழ்த்தினாள்.

## 40. இரு சபதங்கள்!

சோம்ஜியின் கொலையில் மேவார் ஒரு கர்மயோகியை இழந்துவிட்டதாக தீப்சந்த் கூறியதும் சோம்ஜியின் அறையில் விரும்பத்தகாத ஒரு மவுனம் குடிகொண்டது. அந்த மவுனம் அந்த அறையிலிருந்த



சதிதாஸ், ராஜமாதா, தீப்சந்த் மூவரின் மனத்தையுமே நிலைகுலையச் செய்திருந்ததால் மூவருமே ஏதும் பேசவில்லை. எந்த சமயத்திலும் எதையும் ஏறெடுத்து நோக்கும் துணிவுள்ள ராஜமாதாவின் கண்கள் நிலத்திலேயே பதிந்து கிடந்தன.

அந்த மவுனத்தை தீப்சந்தே உடைத்து ''ராஜமாதா! மகாமந்திரியைக் கொலை செய்தவன் என்ன ஆனான்?'' என்று வினவினான்.

''பீம்சிங் சலூம்பிராவுடன் சித்தூர் சென்று விட்டான்'' என்றாள் ராஜமாதா நிலத்திலிருந்த கண்களை எடுக்காமலே.

''அவன் பெயர்?'' தீப்சந்த் வினவினான் உக்கிரமான குரலில்.

''அர்ஜுன்சிங்.'' ராஜமாதாவின் குரலில் வெட்கமும் துக்கமும் இணைந்து கிடந்தன.

''கோராபூர் அர்ஜுன் சிங்கா?'' தீப்சந்தின் கேள்வியில் இகழ்ச்சி ஒலித்தது.

''ஆம்.'' அந்த பதிலை சதிதாஸ் சொன்னான்.

''அந்த மாளிகையில் மந்திரி கொல்லப்பட்ட போது யார் இருந்தது?''

''நானும் எனது சகோதரனும் இருந்தோம்''

''காவலர்?''

''இரண்டு மூன்று பேர் இருந்தார்கள்.''

''சோம்ஜி கொலை செய்யப்பட்ட போது நீங்கள் என்ன செய்தீர்கள்?''

''மன்னரிடம் ஓடினோம்''

''ஓடுவதற்காக மந்திரிகளா?'' இதை மிகுந்த சீற்றத்துடன் கேட்டான் தீப்சந்த்.

''நாங்கள் வீரர்களல்ல. கணக்கு பார்ப்பவர்கள்'' என்று சதிதாஸ் பதில் சொன்னான்.

அடுத்தபடி தீப்சந்த் தனது பார்வையை ராஜமாதா மீது திருப்பி ''மன்னர் ஏன் கொலையாளியை சிறை செய்யவில்லை? சிறை செய்து ஏன் தண்டிக்கவில்லை?'' என்று வினவினான்.

ராஜமாதா மெள்ள மெள்ள தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ''தீப்சந்த்! கேள்விகளைக் கேட்க உன்னை நான் வரவழைக்கவில்லை. மேவாரின் கேவல நிலைக்கு பரிகாரம் காண வரவழைத்திருக்கிறேன்'' என்று சொன்னாள். அவனை ஏறெடுத்துப் பார்க்கவும் செய்தாள்.

தீப்சந்த் அந்த அறையில் அப்படியும் இப்படியும் இருமுறை உலாவினான். ''ராஜமாதா! என்னிடம் என்ன பரிகாரத்தை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''மன்னனைக் காக்க வேண்டும்'' என்றாள் ராஜமாதா.

''அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று தீப்சந்த் வினவினான்.

''சக்தாவதர்களைத் திரட்டி சலூம்பிராவுக்கு புத்தி கற்பிக்கலாம்'' என்று ராஜமாதா யோசனை சொன்னாள்.

தீப்சந்த் ரரஜமாதாவை ஏறெடுத்து நோக்கினான். ''ராஜமாதா! நீங்கள் சொல்கிறபடி செய்தால் உள்நாட்டுப் போர் ஏற்படும் அதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஏற்கனவே நீதியோ சட்டமோ இல்லாத இந்த ராஜ்ஜியம் கலகலத்துவிடும். இப்பொழுது இங்கு அரசாள்வது மொகலாயரை எதிர்த்து தன்னந்தனியாகப் போராடிய பிரதாபசிம்மனோ அல்லது ராஜசிம்மனோ அல்ல, அரசனுக்கு வலு இல்லாதபோது வேறு பலத்தை துணை சேர்க்கவேண்டும்'' என்று வெளிப்படையாகப் பேசினான்.

ராஜமாதாவின் இதயம் வெட்கத்தால் விரிந்து கொண்டிருந்தது. ''என் மகனைப்பற்றி எனக்குத் தெரியும். அதை அறிந்து கொள்ள உன்னை வரவழைக்கவில்லை. மேவாரைக்

www.cleanindians.com



காப்பாற்ற வழி கேட்கிறேன்'' என்றாள் ராஜமாதா உடைந்த மனத்துடன்

தீவிர சிந்தனையில் இறங்கினான் தீப்சந்த். பிறகு சொன்னான் ''ராஜமாதா! ஒரு ராஜத்துரோகிக்கு, அரசனை நேருக்கு நேர் பழிப்பவனுக்கு, அரசின் ஒரு பகுதியை சுதந்திரமாக ஆண்டு வருபவனுக்கு புத்தி கற்பிக்காமல் நாம் எதையும் சாதிக்க முடியாது. நம்மால் சலூம்பிராவை அடக்க முடியாவிட்டால் அடக்கக் கூடியவர்களை நாம் துணைக்கு சேர்த்துக் கொள்ளவேண்டும்'' என்று.

''யாரை சேர்த்துக் கொள்ளலாம்?'' என்று ராஜமாதா கேட்டாள்.

''இதற்கு பரிகாரம் காணக்கூடியவர் ஒருவர் இருக்கிறார்...'' என்று சற்று சந்தேகத்துடன் சொற்களை இழுத்தான் தீப்சந்த்.

''யாரது?'' என்று ராஜமாதா கேட்டு கண்களை சற்றே நிமிர்த்தினாள் தீப்சந்தை நோக்கி.

தனது யோசனையை ராஜமாதா ஒப்புக்கொள்வாளோ மாட்டாளோ என்று சிறிது தயங்கிய தீப்சந்த் மெதுவாகச் சொன்னான் ''மாதாஜி சிந்தியா'' என்று.

இதைக் கேட்டதும் தனது ஆசனத்திலிருந்து கீழே இறங்கிவிட்ட ராஜமாதா ராம்பியாரி ''தீப்சந்த்! சிந்தியா இந்த ராஜ்ஜியத்தை சூறையாடி விடுவார். நமது கஷ்டத்துக்கு பரிகாரம் சிந்தியா அல்ல'' என்று உணர்ச்சிகள் கொந்தளிக்கப் பேசினான்.

''இப்பொழுது சலூம்பிரா சூறையாடுகிறார். வரிப்பணத்தை அவரே வசூலிக்கிறார். அவர் தூண்டுதல் இல்லாமல் அர்ஜுன்சிங் இந்த துணிகரக் கொலையைச் செய்திருக்கமாட்டான். அந்தக் கொலைக்கு பழியை இருவிதத்தில் வாங்கலாம். ஒன்று அர்ஜுன்சிங்கைக் கொல்லுவது. இரண்டு அவனைத் தூண்டிய ராஜத் துரோகி சலூம்பிரா

-வின் சக்தியை முறிப்பது'' என்று திட்டவட்டமாக தனது கருத்தைச் சொன்னான் தீப்சந்த்.

ராஜமாதாவின் முகத்தில் இகழ்ச்சிக்குறி படர்ந்தது. ''தீப்சந்த்! பேசுவது எளிது. காரியத்தை நிறைவேற்றுவது கடினம். நீ சொன்ன இரண்டு காரியங்களும் செய்ய வேண்டியவை தான். ஆனால் அர்ஜுன்சிங்கை எப்படிக் கொல்லுவாய்? சலூம்பிராவை எப்படி அடக்குவாய்?'' என்று கேட்டாள் குரலிலும் இகழ்ச்சியைக் காட்டி.

அந்த இகழ்ச்சியைக் கண்டு மனம் தளரவில்லை தீப்சந்த். ''ராஜமாதா! அர்ஜுன்சிங்கைக் கொல்லுவது எனது பொறுப்பு. இன்னும் பத்துநாளைக்குள் அர்ஜுன் சிங் எனது வாளால் இறப்பான். சலூம்பிராவை அடக்க மாதாஜி சிந்தியாவை அழைப்பதில் கவுரவக் குறைவு ஏதுமில்லை. மேவாரின் வாழ்வு முக்கியமா மன்னரின் வீண் கவுரவம் முக்கியமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்'' என்றான்.

அப்பொழுதும் மகாராணி தீப்சந்தின் யோசனைக்கு இணங்கவில்லை. பேச்சை வேறு வழியில் திருப்பி அர்ஜுன் சிங் கோராபூரில் இல்லை'' என்றாள்.

சித்தூரில் சலூம்பிராவின் பாதுகாப்பில் இருக்கலாம்'' என்று அலட்சியமாகப் பேசினான் தீப்சந்த்.

''சித்தூர் சென்று அர்ஜுன்சிங்கை சண்டைக்கு இழுக்கப் போகிறாயா?'' என்று ராஜமாதா கேட்டாள்.

''அது அவசியமில்லை அவனை மோகினிவனத்துக்கு வரவழைக்கிறேன்'' என்று சொன்னான் தீப்சந்த்.

''எப்படி?'' ராஜமாதா வியப்புடன் கேட்டாள்.

அவனை சண்டைக்கு இழுத்து சலூம்பிராவுக்கு ஓலை அனுப்புகிறேன். சலூம்பிரா அவனை அனுப்பி வைப்பார்...'' என்று சிறிது நிறுத்திய தீப்சந்த் ''என் கையால் மடிய'' என்றும் சொற்களைக் கூட்டினான்.

www.cleanindians.com



''சலூம்பிரா அவனை அனுப்பாவிட்டால்?'' ராஜமாதா கேட்டாள்.

''கண்டிப்பாய் அனுப்புவார். எதை தியாகம் செய்தாலும் சலூம்பிரா மகாவீரன். ஒரு வீரன் அழைப்பை மறுக்கமாட்டார்'' என்று திட்டமாகக் கூறினான் தீப்சந்த்.

''அடுத்து சலூம்பிராவை அடக்க?'' என்று கேள்வி எழுப்பிய ராஜமாதா சிந்தியாவை அழைப்பதைவிட வேறு வழியில்லையா?'' என்றும் துக்கத்துடன் கேட்டாள்.

அதற்கு தீப்சந்த் பதில் சொல்லவில்லை. வேறு ஒரு குரல் ஒலித்தது அந்த அறைக்கு வெளியிலிருந்து. ''வேறு வழியிருக்கிறது'' என்று கூறியவண்ணம் வாயிற்படியில் நின்றான் சக்தாவதர்களின் தலைவனும் மகா வீரனுமான சங்கிரமசிம்மன்.

சங்கிரமசிம்மன் அறை வாயிலில் கம்பீரமாக நின்றான். ''சக்தாவதர்கள் இன்னும் அழிந்துவிடவில்லை ராஜமாதா! நாங்களே சலூம்பிராவை ஒழித்துவிடுகிறோம். இந்த வாளின் மேல் ஆணை'' என்று தனது வாளின் மீது கையை வைத்தான் சங்கிரமசிம்மன்.

அர்ஜுன்சிங்கை பழி வாங்குவதாக தீப்சந்தும், சலூம்பிராவை அடக்கி விடுவதாக சங்கிரமசிம்மனும் செய்த சபதங்களை கேட்ட ராஜமாதாவின் கண்களில் நன்றி நீர் சுரந்தது. முகத்தை கைகளில் புதைத்துக்கொண்டு விம்மினாள் ராஜமாதா. அவள் உள்ளம் உடைந்து கொண்டிருந்ததை அந்த இருவீரர்களுமே புரிந்து கொண்டார்கள். அவர்கள் நெஞ்சங்களும் நெகிழ்ந்தன அந்த வீரமாதாவின் நெகிழ்ச்சியைக் கண்டு.

உதவாக்கரை பிள்ளையைப் பெற்றதன் தண்டனையை ராஜமாதா உள்ளூர அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

## 41. ரத்தத்துக்கு ரத்தம்!

கையாலாகாத பிள்ளையைப் பெற்றதால் மனம் உடைந்து உட்கார்ந்திருந்த ராஜமாதா ராம்பியாரியைக் கண்ட மகாவீரர்களான தீப்சந்தும் சங்கிரமசிம்மனும் பரிதாபத்தையே அடைந்தார்கள். மற்றது எதில் மகாராணா வீரர் அல்லவென்றாலும் காதல் போரில் மகாவல்லவர் என்பதை அந்த இருவருமே உணர்ந்திருந்தாலும், அதைப்பற்றி அவர்கள் வெளிப்படையாக எதுவும் பேசவில்லை என்றாலும், சரித்திரம் பேசவே செய்தது.

வரலாற்றுக் குறிப்புகளின்படி மேவார் மகாராணா தமது ஐம்பதாவது வயதுக்குள்ளாகவே தொண்ணூற்று ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தார் என்றால் அவர் காம இச்சைக்கு வேறென்ன சான்று வேண்டும்? தீப்சந்த் மகாராணியை தனது திருமணத்துக்குப் பின்பு சந்தித்தபோதே மகாராணாவுக்கு கிருஷ்ண குமாரியைத் தவிர நாலைந்து பெண்கள் ஏற்பட்டுவிட்டதையும் நாலைந்து மனைவிமாரும் இருந்தார்கள் என்பதையும் உணர்ந்திருந்த தீப்சந்தும் சங்கிரமசிம்மனும் மகாராணாவின் அந்தப்புரத்தில் இட நெருக்கடி ஏற்பட்டு வருவதையும், அதனாலேயே அவர் பாதி நாட்கள் மோகினிவனத்தில் சஞ்சரித்து புது மலர்களை அனுபவித்து வருகிறார் என்பதையும் அறிந்திருந்ததால் ராஜமாதாவை நோக்கி ''மகாராணி! தாங்கள் அனுமதியளித்தால் இருவரும் எங்கள் சபதங்களை நிறைவேற்றுகிறோம்'' என்று கூறி தலை வணங்கினார்கள்.

www.cleanindians.com

''இதனால் ராணாவுக்கு எந்த தீங்கும் நேரிடாதே?'' என்று ராஜமாதா வினவினாள் துன்பம் தோய்ந்த குரலில்.

''ஏற்படாது மகாராணி'' என்றான் தீப்சந்த். ஆனால்... என்றும் இழுத்தான்.

''என்ன ஆனால்?'' என்று மகாராணி வினவினாள்.

''சந்தாவதர்களும் சக்தாவதர்களும் மோதினால் உள்நாட்டுச் சேதம் அதிகமாகும். தவிர, இருவரும் சமபலமுடையவர்கள் அல்ல'' என்றான் தீப்சந்த்.



சங்கிரமசிம்மன் முகத்தில் கோபாக்கினி சுடர்விட்டது ''யார் சொன்னது எங்களுக்கு பலமில்லை என்று'' என வினவினான் வீரனான சங்கிரமசிம்மன்.

''உங்கள் வீரத்தைப் பற்றி குறை சொல்லவில்லை சங்கிரமசிம்மரே! உங்களிடம் இருக்கும் வீரர்கள் தொகை சலூம்பிராவிடமிருக்கும் வீரர்கள் தொகையை விடக் குறைவு'' என்றான் தீப்சந்த்.

சங்கிரமசிம்மன் முகத்தில் சினத்தின் சாயை குறைந்தது. ''தொகைதான் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்குமா?'' என்று வினவவும் செய்தான் சங்கிரமசிம்மன் சற்றே சினம் தணிந்த குரலில்.

''தொகையும் ஓரளவு நிர்ணயிக்குமென்பது வரலாறு கண்ட உண்மை. ராஜபுத்திரர்கள் யாருக்கும் வீரத்தில் குறைந்தவர்கள் அல்ல. போரின் பக்குவத்திலும் போரைக் கையாளும் திறனிலும் குறைந்தவர்கள் அல்ல. ஆனால் மொகலாயர்கள் நம்மை அடிக்கடி தோற்கடித்திருக்கிறார்கள் பெருவாரியான படைகளால்—நமது பிரிவினைகளால், ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுக்கும் மட்ட புத்தியால்.'' இதை மிகுந்த உணர்ச்சியுடன் கூறிய தீப்சந்த் ''சங்கிரமசிம்மரே! இன்னும் மேவாரின் ஆபத்து நீங்கவில்லை. உங்களைப் போன்ற வீரர்கள் வீணாக பலியிடப்படுவதை நான் விரும்பவில்லை'' என்றும் தனது கருத்தைத் தெரிவித்தான்.

''நமது படைபலக் குறைவால் மகாராணாவுக்கு சந்தாவதர்கள் ஏற்படுத்தியிருக்கும் அபக்கியாதி தொடர வேண்டியதுதானா? அந்த அபக்கியாதியை ரத்தத்தைக் கொண்டு நான் துடைக்கப் போகிறேன். அதாவது மகாராணியின் சம்மதம் இருந்தால்'' என்றான் சங்கிரமசிம்மன்.

மகாராணி அந்த இரு வீரர்களின் தர்க்கத்துக்கு நீண்ட நேரம் பதில் சொல்லாமல் மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள். கடைசியில் சொன்னாள் ''வீரர்களே'

மன்னனுக்கு ஏற்பட்ட மாசை, மேவாரின் அவமானத்தை மந்திரி சோம்ஜியின் கொலையினால் ஏற்பட்ட அபவாதத்தை துடைக்க முன்வந்திருக்கும் உங்களிருவருக்கும் எனது ஆசியைத் தவிர வேறெதையும் கொடுக்கும் நிலையில் நான் இல்லை. உங்களைக் காப்பாற்ற பராசக்தியை வேண்டுகிறேன்'' என்றாள்.

அத்துடன் மகாராணியை வணங்கி சங்கிரமசிம்மன் கிளம்பினான். தீப்சந்த் மட்டும் ராஜமாதாவின் சந்நிதானத்திலேயே நின்றான்.

''என்ன தீப்சந்த்?'' என்று ராஜமாதா கேட்டாள் அவன் எதையோ சொல்லத் தயங்குகிறான் என்று எண்ணி.

''என்னைத் தவறாக நினைக்கக்கூடாது. மகாராஷ்டிரர்களின் பெரும் படையைத் தவிர வேறெந்த சக்தியும் பீம்சிங் சலூம்பிராவை பணியவைக்க முடியாது. சலூம்பிரா மகாவீரர். படைகளை நடத்துவதில் வல்லவர், சங்கிரமசிம்மரும் போரில் சளைத்தவரல்ல. ஆனால் சக்தாவதர்கள் தொகை மிகக்குறைவு. இந்த உள்நாட்டு சக்திகளின் பூசலால் நாடுதான் நாசப்படும். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இன்னும் பத்தே நாட்களுக்குள் எனது சபதம் முடிந்துவிடும். நான் தேவையென்றால் மீண்டும் சொல்லியனுப்புங்கள். நான் மண்டலக் கோட்டையில் இருப்பேன்'' என்று கூறிவிட்டு புதிய மந்திரியை நோக்கி ''சதிதாஸ்! இந்த நாட்டு மக்கள் வரிப்பணத்தையும் முடிந்தவரை பாதுகாக்கப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டு வெளியேறினான்.

சோம்ஜியின் மாளிகையைவிட்டு வெளியே வந்து தனது புரவியில் ஏறிய தீப்சந்த் ஒரு முறை அந்த மாளிகையை திரும்பி நோக்கினான் புரவியில் இருந்தபடியே. ''சோம்ஜி! நீர் ஒரு தியாகி. உமது ரத்தத்தை சிந்தியவன் ரத்தம் மோகினிவனத்தில் சீக்கிரம் சிந்தப்படும்'' என்று உள்ளூர சொற்களை உதிர்த்துவிட்டு உதயபூரை விட்டுக் கிளம்பினான்.

www.cleanindians.com



அங்கிருந்து கிளம்பியவன் மோகினிவனத்தை அடைந்ததும் அங்கு மகாராணா இருந்த மாளிகைக்குச் செல்லாமல் நேராக நாகராமக்ராவை நோக்கி புரவியை செலுத்தினான்.

அன்று மாலையில் நாகராமக்ராவை அடைந்தவன் நேராக பல்வந்த்சிங்கின் வேட்டுவ விடுதியை அடைந்ததும் புஷ்பாவதி அவனை நோக்கி வந்து அவனது புரவியின் கடிவாளங்களைப் பற்றி பின்புறமிருந்த புரவிச்சாலையில் கட்டினாள். பிறகு கணவன் நீராட்டத்துக்கும் உணவுக்கும் ஏற்பாடு செய்துவிட்டு இரவில் அவனுடன் பள்ளியறைக்குச் சென்றாள். அந்த பள்ளியறையில் கட்டிலோ பஞ்சணையோ இல்லாததையும் சிங்கத்தோலும் புலித்தோலும் தரையில் விரிக்கப்பட்டிருந்ததையும் பார்த்த தீப்சந்த் ''புஷ்பாவதி! நீ புத்திசாலி'' என்று மனைவியை பாராட்டினான்.

புஷ்பாவதி இளநகை கொண்டாள். ''என் தந்தை மகாராணாவின் வேட்டைக்காரர். தான் வேட்டையாடிய மிருகங்களின் சருமங்களில்தான் படுக்கிறார். என் தாய் இறந்த பிறகு பஞ்சணையை அவர் பார்த்ததில்லை. மகாராணாவுக்கு மட்டும் ஒரு அறை இருக்கிறது. அதில் இருக்கிறது கட்டிலும் பஞ்சணையும்'' என்றாள் புஷ்பாவதி.

அவளை நின்றவண்ணம் தழுவிய தீப்சந்த் ''மகாராணாவின் வேட்டைக்குத் தகுந்த படுக்கை அது'' என்றான். என்ன வேட்டை என்பதை அவன் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் புஷ்பாவதி அதைப் புரிந்துகொண்டு புன்முறுவல் செய்தாள், ''ஏன் அந்த வேட்டை உங்களுக்குத் தெரியாதோ?'' என்று கேட்டாள்—அவன் கைகள் அவள் பூவுடலின் மர்மங்களை துழாவித் துளைந்தபோது.

''மகாராணாவின் பாக்கியம் எனக்கில்லை'' என்று கூறிய தீப்சந்த் புஷ்பாவதியை தனது கைகளால் தூக்கி சிங்கத்தோலில் படுக்க வைத்து அவள் பக்கத்தில் உட்

கார்ந்து கொண்டு, அவள் அழகிய இடையில் தனது இடது கையைச் செலுத்தினான். அந்த இடது கை அவள் உடலை மெதுவாகத் தூக்க, முன்புற எழில்களை வலது கை ஆராய்ந்தது. அவள் இதழ்களை அவன் இதழ்கள் முரட்டுத் தனமாக சந்தித்தன. அந்த இதழ்களைவிட்டு அவன் இதழ்கள் அவள் மார்பில் புதைந்த போது புஷ்பாவதி கேட்டாள் "மகாராணாவின் பாக்கியம் உங்களுக்கில்லை என்றீர்களே, என்ன பாக்கியம் அது?" என்று.

"அவருக்கு பல புஷ்பங்கள் இருக்கின்றன. எனக்கோ ஒரே ஒரு புஷ்பம். தவிர அதைவிட்டு அடிக்கடி நீங்கவும் வேண்டியிருக்கிறது" என்றான், தீப்சந்த்—அவள் நிமிர்ந்ததால் கடினப்பட்ட மார்பு மீது இதழ்களை புதைத்த வண்ணம்.

அப்படி அவன் இதழ்கள் புதைந்ததாலும், பேசுவதற்கு விரிந்து விரிந்து கூடியதாலும் உணர்ச்சிகளின் எல்லையை அடைந்த புஷ்பாவதி "ஏன்? வேறு புஷ்பங்களை நாடுவதை நான் தடுக்கவில்லையே?" என்றாள்.

"மகாராஜாவின் துணிவு எனக்கில்லை. சாமர்த்தியமும் இலலை" என்றான்.

"என்ன துணிவு? என்ன சாமர்த்தியம்?" என்ற புஷ்பாவதி அவனை இறுகத் தழுவினாள் தனது மார்புடன்.

அவன் சொன்னான் "இந்த புஷ்பத்திடமிருந்து தப்பும் துணிவு, இதை சமாளிக்கும் சாமர்த்தியம்" என்ற தீப்சந்த் மேலும் பேசவில்லை.

நீண்டநேரம் கழித்து அவள் களைத்துப் படுத்த போது அவள் தலையை மடியில் கிடத்திக்கொண்டு "புஷ்பாவதி! இங்கிருந்து சித்தூர் செல்ல எனக்கு ஒரு தூதன் வேண்டும்" என்று மெதுவாகச் சொன்னான்.

"என்ன காரியத்துக்காக?" என்று புஷ்பாவதி கேட்டாள்.

www.cleanindians.com



காரியத்தை சொன்னதும், புஷ்பாவதியின் இதயம் "திக் திக்" என்று அடித்துக் கொண்டது. அவள் அதிர்ச்சி மிகுந்த குரலில் கேட்டாள் "மீண்டும் போரா?" என்று.

"இல்லை"

"வேறு என்ன?"

"நீதி, குற்றவாளிக்கு தண்டனை"

"அந்த குற்றவாளி?"

"கோராபூர் அர்ஜுன்சிங்"

இதைக் கேட்ட புஷ்பாவதி திகைக்கவில்லை. அர்ஜுன் சிங்கைக் கொல்வது தீப்சந்துக்கு வெறும் விளையாட்டு என்று அவளுக்குத் தெரிந்தே இருந்தாலும் "இந்த வம்பு நமக்கு எதற்கு?" என்றாள்.

"இந்த வீர மண்ணில் நாம் வாழ்வதால்" என்றான் தீப்சந்த்.

மேற்கொண்டு எதைச் சொன்னாலும் அவன் காதில் வாங்கிக்கொள்ள மாட்டான் என்பதை அறிந்திருந்த புஷ்பாவதி தனது தந்தையையே தூதனுப்பத் தீர்மானித்தாள்.

அவள் தந்தை பல்வந்த்சிங் மிக முரடர் ஆனாலும் வீர உணர்வுகளை உடையவரானதால் அன்றே தீப்சந்தின் ஓலையை வாங்கிக்கொண்டு சித்தூருக்குப் பயணமானார். அவர் திரும்ப மூன்று நாட்களாயின. அந்த மூன்று நாட்களும் சொர்க்கபோகமாக இருந்தது புஷ்பாவதிக்கு. நான்காம் நாள் பல்வந்த்சிங் வந்து பௌர்ணமி அன்று அர்ஜுன் சிங்கும் சலூம்பிராவும் மோகினிவனத்துக்கு வருவார்கள் என்று செய்தி சொன்னார். அந்த பயங்கர பௌர்ணமியும் இரண்டு நாட்களில் நெருங்கியது. அன்று நடக்கும் சண்டையை கவனிக்க விரும்பியவன் போல பூர்ண சந்திரன் தனது முழு வதனத்தைக் காட்டிக் கொண்டு வானவீதியில் இருந்து மோகினிவனத்தை நோக்கினான்.

எந்த இடத்தில் முன்பு புஷ்பாவதியை தூக்க சலூம்பிராவின் வீரர்கள் முயன்றார்களோ அதே இடத்தில் இரவின் ஆரம்பத்திலேயே தீப்சந்தும் புஷ்பாவதியும் புரவிகளில் வந்து அங்கு இறங்கினர். அவன் வருமுன்பே அங்கு சலூம்பிரா அர்ஜுன்சிங்குடன் காத்திருந்தார்.

புரவியிலிருந்து இறங்கியதும் தனது அங்கியைக் கழற்றி புஷ்பாவதியிடம் கொடுத்துவிட்டு தனது வாளை உருவிக்கொண்ட தீப்சந்த், பீம்சிங் சலூம்பிராவுக்கு தலை வணங்கி'' சலூம்பிரா! மகாவீரரான தாங்கள் சோம்ஜியின் கொலைக்கு இடங்கொடுத்தது தவறு. நிராயுதபாணியும் ஆயுதங்களை கையாளத் தெரியாதவருமான ஒரு சாதாரண மந்திரியைக் கொலை செய்தவனுக்கு அடைக்கலம் கொடுத்ததும் தவறு. அவனை தண்டிக்கவே அந்த ஓலையை அனுப்பினேன்'' என்றான்.

''இதற்கு மத்யஸ்தர் யார்?'' என்று வினவினார் சலூம்பிரா.

''தாங்கள்தான்'' என்றான் தீப்சந்த்.

சலூம்பிரா தீப்சந்த் தன்னிடம் வைத்திருந்த நம்பிக்கைக்கு தலை தாழ்த்தினார். ''அர்ஜுன்சிங்! போரைத் தொடங்கு'' என்று கட்டளையிட்டு தாம் விலகி நின்றார்.

அவர் விலகிய மறுகணம் அர்ஜுன்சிங்கின் வாளை தீப்சந்தின் வாள் தடுத்தது.

அடுத்து நடந்ததை போர் என்று சொல்ல முடியாது. தீப்சந்த் பூனை எலியுடன் விளையாடுவதைப் போல் அர்ஜுன்சிங்கிடம் விளையாடினான். இஷ்டப்பட்டிருந்தால் தீப்சந்த் ஆரம்பத்திலேயே அர்ஜுன்சிங்கை வெட்டிப் போட்டிருக்கலாம். அப்படிச் செய்வது முறையல்ல என்ற காரணத்தால் அர்ஜுன்சிங்குக்குக் கூடியவரையில் இடம் விட்ட தீப்சந்த் ''அர்ஜுன்சிங்! இங்கிருப்பது எந்த தீங்கையும் எதிர்பாராது உட்கார்ந்திருக்கும் சோம்ஜி அல்ல. உனக்கு இதுவரை என்னைக் கொல்ல சந்தர்ப்பம் அளித்தேன். இனி நீ உன் கொலைக்கு தண்டனை பெறவேண்டிய

www.cleanindians.com



ஆண்டவனிடம் போ'' என்று கூறிக்கொண்டே வாளை எதிரியின் மார்பை நோக்கி இருமுறை பாய்ச்சி பாய்ச்சி இழுத்தான். அர்ஜுன்சிங் ''ஓ'' வென்று அலறிய வண்ணம் மண்ணில் சாய்ந்தான். அவன் குருதி மோகினிவனத்தின் அழகிய மண்ணை நனைத்துக்கொண்டிருந்தது.

அதே சமயத்தில், பக்கத்து புஷ்பச் செடிகளின் மறைவில் இருந்து மகாராணா வெளியே வந்தார்.

## 42. பத்தினியின் சாபம்!

உலகத்தையெல்லாம் அழகுபடுத்தக் கூடியதும், மனித உள்ளங்களில் மகிழ்ச்சியை விளைவிக்க வல்லதுமான பௌர்ணமியின் வெண்ணிலவு மோகினிவனத்தின் அந்தப் பகுதியை பயங்கரமாக அடித்திருந்தது. பக்கத்தில் புஷ்பச் செடிகளிலிருந்து வெளியே வந்து அங்கு நடந்த விபரீதத்தைப் பார்த்த மகாராணா பீம்சிங், தனது முகத்தில் பெரும் வெறுப்பை காட்டியதன்றி, சற்று எட்ட நின்றிருந்த தமது பெயருடைய சலூம்பிரா தன்னை சிறிதும் லட்சியம் செய்யாமல் நின்றிருந்ததைக் கண்டு சினத்தின் வசப்படவும் செய்தார். இருப்பினும் தம்மால் ஏதும் செய்ய இயலாததால் போசமலே நின்றார்.

அவருடைய செயலற்ற நிலையைக் கண்ட பீம்சிங் சலூம்பிரா லேசாக நகைத்து ''மகாராணா! இன்று தாங்கள் வசிக்கும் இடத்திலேயே எனது நண்பர் ஒருவரின் ரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது. இங்கே நிலத்தில் மாண்டு கிடப்பவன் அர்ஜுன்சிங். உங்களுக்கு இவனை ஏற்கனவே தெரியும்'' என்று கூறினார் நகைப்பும் இகழ்ச்சியும் ஊடுருவிய குரலில்.

மகாராணு இயற்கையாகவே கோழையானுலும் அந்த சமயத்தில் அவர் வீரபரம்பரையின் ரத்தம். அவர் கோழைத்தனத்தை தற்காலிகமாக அழித்து விடவே ''ஆம், தெரியும் மந்திரி சோம்ஜியைக் கொலை செய்தவன்'' என்ருர் சற்று தைரியத்துடன்.

''அதற்கு ஏன் அவனை தண்டிக்கவில்லை?'' என்று சலூம்பிரா கேட்டார்.

''எய்தவன் இருக்க அம்பை தண்டிப்பது நீதியாகாது என்ற காரணத்தால்.'' இதை மகாராணு உறுதியுடன் சொன்ஞர்.

''என்னை சொல்கிறீர்களா?'' என்று சலூம்பிரா கேட்டார்.

''சலூம்பிரா! உங்களுக்கு மனச்சாட்சி இருந்தால் அதுவே பதில் சொல்லும். வேறு யாரும் விளக்கத் தேவையில்லை'' இதைச் சொன்ன மகாராணுவின் கண்கள் சலூம்பிராவை நோக்கி குற்றம் சாட்டும் முறையில் பார்த்தன.

www.cleanindians.com

சலூம்பிரா சிறிது நேரம் சிந்தித்தார். பிறகு சொன்ஞர் ''நான் தனியாகத்தான் வந்திருக்கிறேன் மகாராணு'' என்று.

''அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறீர்?'' மகாராணு வினவினுர்.

''என்னை சிறை செய்யலாம். தண்டனை விதிக்கலாம்.''

''உங்களை சிறை செய்து பயனில்லை சலூம்பிரா! தண்டனை அளித்தும் பயனில்லை. அயுள் பூராவும் இனி நீங்கள் அனுபவிக்கப் போகிற தண்டனையை நான் கொடுக்க முடியாது.''

''அது என்ன தண்டனை?''



''நிராயுதபாணியான மந்திரியைக் கொல்ல இந்த வஞ்சகனை அனுப்பியதற்கு உங்கள் மனச்சாட்சி அளிக்கும் தண்டனை! மகாவீரனுன உமக்கு அதைவிட பெரிய தண்டனை தேவையில்லை. தவிர உமது ஈனச்செயல் சரித்திரத்திலும் குறிக்கப்படும். உமக்கு இதைவிட என்ன பெரிய தண்டனையை நான் அளிக்க முடியும்?'' இதைச் சொன்ன மகாராணு தைரியமாகவே சலூம்பிராவை ஏறெடுத்து நோக்கினுர். மேலும் சொன்ஞர் ''பீம்சிங்! உங்கள் வம்சம் இந்த மேவாரை பாதுகாக்கவும் மேவாரின் அரியணையை பாதுகாக்கவும் செய்த தியாகங்களும் சிந்திய இரத்தமும் வரலாற்றில் வைரக்கற்களால் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. மாசு மருவற்ற வைரங்கள் அந்த தியாக சரித்திரத்தை அலங்கரிக்கின்றன. இப்பொழுது ஒரு புது வைரம் அதில் சேர்ந்திருக்கிறது. அதில் கரும் புள்ளி இருக்கிறது'' என்று

அப்பொழுதும் சலூம்பிரா தமது முகத்தில் அனுதாப உணர்ச்சிகளை காட்டவில்லை. அச்சப்பட்டதாகவும் தெரியவில்லை அவர் முகபவத்தில். திடமாகவே பேசினுர் சலூம்பிரா. ''மகாராணு! நீர் சொல்லும் தியாகம் வீரர்களான மகாராணுவை மேவார் பெற்றிருந்த காலம். இப்பொழுது காலம் வேறு. காலத்திற்கேற்ற மாறுதல் ஏற்படுவது இயற்கையின் போக்கு'' என்று தமது வெறுப்பை பூரணமாக காட்டினுர். பிறகு மகாராணுவைவிட்டு தீப்சந்தை நோக்கி ''தீப்சந்த்! அர்ஜுன் சிங்கை தர்மயுத்தத்தில் கொன்ருய். நீ உன்னை கொல்ல அவனுக்கு பல முறை இடம் அளித்தாய். அவன் அவற்றை பயன்படுத்திக் கொள்ளவில்லை. சரி, முடிந்துவிட்டது அவன் கதை அவன் சடலத்தை என்ன செய்ய உத்தேசம்?'' என்று வினவினுர்.

தீப்சந்த் வெறுப்புடன் பார்த்தான் அர்ஜுன் சிங்கின் சடலத்தை! ''சலூம்பிரா! நீங்கள் எப்படி உத்தரவிடுகிறீர்களோ அப்படிச் செய்கிறேன்'' என்ருன்.

"நானே அவனை எடுத்துப் போகிறேன்" என்றார் சலூம்பிரா.

இந்த நாடகம் எதிலும் சேராமல் எட்ட நின்றிருந்த புஷ்பாவதியை நோக்கிய தீப்சந்த் "அவன் காயத்தைக் கட்ட துணி ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயா?" என்று வினவ, அவள் தனது புரவியிடம் சென்று ஒரு பையை எடுத்து வந்தாள். அதிலிருந்து துணியை எடுத்து அர்ஜுன் சிங் சடலத்தை தீப்சந்தே துடைத்து அவனை தூக்கி அவன் புரவியிலேயே கயிறு கொண்டு பிணைத்தான். பிறகு விலகி நின்று "சலூம்பிரா! புரவி சித்தமாகிவிட்டது" என்றான்.

"சலூம்பிரா புரவியின் குறுக்கே கிடந்த தனது நண்பன் சடலத்தை பார்த்தார். "தீப்சந்த்! இந்த விவகாரம் இத்துடன் நிற்காது. ஒரு கொடுமை இன்னொரு கொடுமையை சரிக்கட்டது. இன்று நடந்ததும் கொலைதான். இவன் ஆயுதம் அணிந்திருந்தாலும் உன் முன் நிராயுதபாணிதான்" என்றார்.

www.cleanindians.com

தீப்சந்த் அந்த மகாவீரனை ஏறெடுத்து நோக்கினான் "சலூம்பிரா! மேவார் அரசு நிலங்களை சூறையாடியதற்காக மந்திரி கேள்வி கேட்டார். அது அவர் கடமை. கடமைக்காக தமது உயிரையும் விட்டார். அந்தக் கொலை சரி என்று நினைக்கும் பட்சத்தில் அர்ஜுன் சிங்கை தூண்டியதற்குப் பழி வாங்க நீண்ட நாள் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். இதோ நான் இங்கேயே இருக்கிறேன். நம் இருவரிடமும் வாள் இருக்கிறது" என்றான் தீப்சந்த் நிதானமான குரலில்.

சலூம்பிரா பதில் சொல்லவில்லை. மெதுவாக தீப்சந்தை அணுகி அவன் தோள்மீது கையை வைத்தார். "ஏற்கனவே நமது வாட்கள் சந்தித்திருக்கின்றன. என்னை உனது வாள் காயப்படுத்தியும் இருக்கிறது. ஆனால் நீ அன்று காட்டிய கண்ணியத்தை நான் மறக்கவில்லை.



நாம் சந்திப்பதானால் இதல்ல இடம்" என்று கூறிவிட்டு நடக்க முற்பட்டவர் மகாராணாவை நோக்கி தலைவணங்கி "மகாராணா! அந்தப் பொறுப்பு உங்களுடையது" என்று கூறிவிட்டு தமது புரவியில் ஏறி உட்கார்ந்து அர்ஜுன் சிங் உடல் இருந்த புரவியின் கயிற்றை தமது இடது கையால் பிடித்தவண்ணம் சண்டை நடந்த இடத்தை ஒருமுறை பார்த்தார். பிறகு எட்ட கணவன் பக்கத்தில் நின்றிருந்த புஷ்பாவதியை பார்த்தார். உதடுகளில் புன்முறுவல் தவழ "புஷ்பாவதி! ராஜபுதனத்தின் மகா வீரனை உன் கணவனாகப் பெற்றிருக்கிறாய். நீ அதிஷ்டம் செய்தவள்" என்று கூறினார். பிறகு புரவியை நடக்க விட்டார்.

அவர் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற மகாராணா அவர் கண்ணுக்கு மறைந்ததும் "நீ எங்கிருக்கிறாய் தீப்சந்த்?" என்று வினவினார்.

"என் மாமனார் வீட்டில்" என்ற தீப்சந்த் மனைவியை நோக்கினான்.

மகாராணா அடுத்து புஷ்பாவதியைப் பார்த்தார். "இவள் தந்தை வீட்டிலா?" என்று கேட்டார்.

"இவள் என் மனைவி. இவள் தந்தை வீடு என்றால் என் மாமனார் வீடாகத் தானே இருக்கமுடியும்?" என்றான்.

"நாகராமக்ராவிலா?" என்று மகாராணா வினவினார்.

"இன்னும் இரண்டு நாட்களுக்கு அங்குதான் இருப்பேன்".

"அதற்குப் பிறகு?"

"என் ஊருக்குப் போவேன்."

"மண்டலக்கோட்டைக்கா?"

"ஆம்"

"இங்கிருந்தால் என்ன?"

"இனி இங்கு நிகழப் போவது சக்தாவதர் சந்தாவதர் போர். அதனால் நாடு நாசமடையும். அதில் கலந்து கொள்ள நான் தயார் இல்லை" என்ற தீப்சந்த் மகாராணாவை மேற்கொண்டு பேச விடாமல் அவருக்குத் தலைவணங்கி "நான் வருகிறேன் மகாராணா" என்று விடைபெற்றுக் கொண்டான். புஷ்பாவதி நின்றிருந்த இடம் சென்று அவள் சிற்றிடையைப் பிடித்துத் தூக்கி அவளை அவளது புரவி மீது உட்காரவைத்துவிட்டு தானும் தனது புரவி மீது தாவினான். இரு புரவிகளும் நாகரா மக்ராவை நோக்கி நடந்தன.

அவர்கள் இருவரையும் பார்த்தவண்ணம் நீண்ட நேரம் நின்ற மகாராணா புஷ்பாவதியின் உருவம் புரவியின் மீது உட்கார்ந்திருந்த இடத்தையும் அழகையும் கவனித்தார் "சலூம்பிரா சொன்னதில் தவறில்லை. இவள் அதிஷ்டசாலி. இவளைவிட தீப்சந்த் பெரிய அதிர்ஷ்டசாலி. அவன் என்ன லாகவமாக ஆசையாக அவள் இடையை பிடித்து தூக்கி புரவி மீது வைத்தான்! எத்தனை சிறிய இடை! என்ன பக்குவமான உடல்! இடையைத் தூக்கியவன் அவளைத் தழுவித் தானே புரவி மீது உட்காரவைத்தான்" என்று கூறி பெருமூச்செறிந்தார்.

www.cleanindians.com

தீப்சந்தும் புஷ்பாவதியும் புரவிகளை நெருங்கியே நடக்கச் செய்தனர். அப்பொழுது புஷ்பாவதி சொன்னாள் "நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. மேவார் இனி உருப்படாது" என்று.

"சாபம் கொடுக்காதே புஷ்பாவதி. உன் சாபம் மேவாரை அழித்துவிடும்" என்றான் தீப்சந்த் கெஞ்சிய குரலில்.

"சாபம் கொடுக்காமல் என்ன செய்வார்களாம்?" என்றாள் புஷ்பாவதி.

"ஏன் சாபம் கொடுக்கவேண்டும்? உன்னை மேவார் என்ன செய்தது?" என்று கேட்டான் தீப்சந்த்.



"மேவார் எதுவும் செய்யவில்லை."

"வேறு யார் உன்னை என்ன செய்தார்கள்?"

"என்ன செய்யவேண்டும்? நீங்கள் என்னை புரவியில் தூக்கி உட்கார வைத்தபோது அந்த மகாராணா என்னை எப்படிப் பார்த்தார் தெரியுமா?"

"சே, சே! வீண் கற்பனை. மகாராணா காமுகன்தான். ஆனால் பிறன் மனைவியைப் பார்க்கும் அளவுக்கு கேவலமானவர் அல்ல."

புஷ்பாவதி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. "அவர் கண்களை நீங்கள் சரியாகப் பார்க்கவில்லை. மேவார் இனி உருப்படுவது குதிரைக் கொம்புதான்" என்று வலியுறுத்தியே சொன்னாள்.

தீப்சந்த் பதில் ஏதும் சொல்லவில்லை. உள்ளூர நினைத்துக்கொண்டான். "பத்தினியின் சாபம்!" என்று.

அந்த சாபம் வெகுவிரைவில் பலித்தது. அடுத்த மாதமே சக்தாவதர்களும் சந்தாவதர்களும் மோதிக் கொண்டார்கள்.

தீப்சந்த் அந்த மோதலில் கலந்துகொள்ளவில்லை.

ராஜமாதா ராம்பியாரி அனுப்பிய ஓலைக்கும் அவன் பதில் அனுப்பவில்லை. பெரும் நாசத்தை மேவாருக்கு விளைவித்த அந்த போரிலிருந்து விலகியே நின்றான்.

அடுத்த ஆறுமாத காலம் மேவார் ரணகளப்பட்டுக் கொண்டு இருந்தது. அந்த நேரத்தில் தீப்சந்த் மண்டலத் கோட்டையில் புஷ்பாவதியுடன் உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். புஷ்பாவதி ஒருநாள் அவன் அணைப்பில் இருந்தபோது கேட்டாள் "இது நியாயமா?" என்று.

"எது?" என்று கேட்ட தீப்சந்த் அவளை மேலும் இறுக்கினான்.

"இதுதான்" என்றாள் புஷ்பாவதி. அவள் மனம் உலகையே மறந்தது, அவளுக்கு தீப்சந்தே உலகமானான். அவன் அவளை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தான்.

## 43. தீப்சந்த் விரும்பிய பட்டம்!

மண்டலக் கோட்டையில் புஷ்பாவதியுடன் தீப்சந்த் உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த முதல் எட்டு மாதங்களுக்குள்ளாகவே சக்தாவதர் சந்தாவதர் கட்சிப் போரில் மேவார் ராஜ்ஜியம் பெரும் நாசமடைந்து கொண்டிருந்தது. வெகுசீக்கிரம் அந்த ராஜ்ஜியம் பாலைவனமாகும் நிலையை எட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்த அக்கம் பக்க அரசுகள், அப்படியே நிலைமை நீடித்தால் ராஜஸ்தானம் சரித்திரத்தில் அடைந்துள்ள பெரிய பெயர், அதன் வீரசரித்திரம் அடியோடு அழிந்துவிடும் என்று ஏங்க முற்பட்டன.

இந்த நிலையிலும் மகாராணா மோகினிவனத்தில் காம சுகங்களை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

மகாராணாவின் நிலையையும் அவர் கையாலாகாத தன்மையால் ராஜ்ஜியம் சின்னாபின்னப்பட்டு கொண்டிருந்ததையும் இருவர் கவனித்து மனம் நொந்து கொண்டிருந்தார்கள்.

ஒருத்தி ராஜமாதா ராம்பியாரி.

இன்னொருவன் கோட்டா சமஸ்தான மன்னனான ஜலீம்சிங்.

ராம்பியாரி தனது மகன் இப்படி சீர்கெட்டு விட்டானே, அரசு நாசமாகிவிட்டதே என்று ஏங்கினாள்.

www.cleanindians.com



மேவார் அழிந்தால் மற்ற அரசுகளும் பலவீனப்படும். ஆகையால் அதன் நிர்வாகத்தை சளும்பிராக்களிடம் இருந்து தனது வசப்படுத்திக் கொண்டால் என்ன என்று எண்ணினான் ஜலீம்சிங். பலவீனனான மகாராணா எதற்கும் ஒப்புக்கொள்வார் என்பதில் ஜலீம்சிங்கிற்கு சிறிதும் சந்தேகமில்லாததால் அதைப்பற்றி அவனே முயற்சி எடுத்து ராஜமாதாவுக்கு கடிதம் எழுதினான்.

ராஜமாதா மிகுந்த சோகத்துடன் தனது அரண்மனையில் இருந்த சமயத்தில் அந்த ஓலை வந்தது. அதைப் பிரித்து படித்த ராஜமாதாவுக்கு இது பெரிய வரப்பிரசாதம் போலிருந்ததாலும், அதற்கு உடனடியாக என்ன பதில் எழுதுவது என்று தெரியாததால் ஒருநாள் கழித்து பதில் எழுதுவதாக ஓலை கொண்டு வந்த தூதனிடம் தெரிவித்தாள். ஜலீம்சிங்கின் இறமையை பற்றி அவளுக்கு சிறிதும் சந்தேகம் இல்லை. ஏற்கனவே அவன் உதவியை நாடலாம் என்று தீப்சந்த் சொல்லியிருந்தான். ஆனால் ஜெய்பூருக்கும் கோட்டாவுக்கும் நடந்த போரில் ஜெய்பூரின் ராணுவத்தை ஜலீம்சிங் அனாசியமாகத் தோற்கடித்துவிட்டதை நினைத்து, ஜலீம்சிங்கின் கை மேவாரில் ஓங்கிவிட்டால் என்ன செய்வது என்று சிந்தித்தாள். எதற்கும் தீப்சந்தை கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வர தீர்மானித்து அவனுக்கு ஓலை அனுப்பினாள். தீப்சந்தை வெகு சீக்கிரம் கோட்டாவுக்கு அனுப்புவதாக ஜலீம்சிங்குக்கு பதிலும் அனுப்பினாள்.

மண்டலக் கோட்டையின் வெளியேயிருந்த சிறு தோப்பு ஒன்றில் தீப்சந்த் புஷ்பாவதியுடன் சுகமாக காலம் கழித்து கொண்டிருக்கையில் ராஜமாதாவின் கடிதம் கிடைத்தது. தானும் புஷ்பாவதியும் தங்குவதற்காக அந்த தோப்பில் தனது கைகளாலேயே கூடாரம் ஒன்றை நிர்மாணித்திருந்தான் தீப்சந்த். ராஜமாதாவின் தூதன் வந்தபோது புஷ்பாவதியின் மடியில் தலைவைத்து கூடாரத்துக்குள் படுத்துக்கொண்டிருந்த தீப்சந்த்

வெளியே ஒரு புரவி வந்து நின்ற சத்தம் கேட்டு "யாரது?" என்று வினவினான் மடியில் இருந்து தலையை எடுக்காமலே.

ராஜமாதாவின் தூதன் வெளியிலிருந்தே மிகுந்த பணிவுடன் பதில் கொடுத்தான் "மேவாரில் இருந்து தூதன் வந்திருக்கிறேன்" என்று.

"மகாராணாவிடம் இருந்தா?" என்று தீப்சந்த் சயன நிலையிலேயே வினவினான்.

"இல்லை, ராஜமாதாவிடம் இருந்து" என்று தூதன் உரக்கப் பேசினான்.

"படுக்கை என்ன வேண்டியிருக்கிறது இப்பொழுது? வெளியில் போய் பதில் சொல்லுங்கள்" என்று கடிந்து கொண்டாள் புஷ்பாவதி.

"முடியாது. அவனை இங்கு வரச்சொல்" என்றான் தீப்சந்த்.

www.cleanindians.com

"வெட்கக்கேடு. இந்த நிலையில் உங்களை அவன் பார்த்தால் என்ன நினைப்பான்?" வெட்கம் கலந்த எரிச்சலுடன் கேட்டாள் புஷ்பாவதி.

"மகாராணா என்று நினைப்பான்."

"நீங்கள் மகாராணாவா?"

"இல்லாவிட்டால், இப்படி என்னை பார்த்தால் அவனுக்கு மகாராணாவின் நினைப்பு வரும். பாதி நேரம் மகாராணா இப்படித்தான் இருக்கிறார்."

"போதும் போதும் எழுந்திருங்கள்" என்று கணவன் தலையை தனது கைகளால் தூக்க முயன்றாள் புஷ்பாவதி.

ஆனால், தீப்சந்த் இறுக படுத்துவிட்டதாலும் இடி போல் அவள் மடியில் தனது தலையை அழுத்திவிட்டதாலும் அவள் அவனைத் தூக்க முடியாமல் முனகினாள். பிறகு சற்று தனது கால்களை அகற்றி அவனை மண்ணில் தள்ளிவிட முயன்று, அது பெரிய அனர்த்தத்தில் கொண்டு விடவே "தூதனே! உள்ளே வா!" என்று அவளே கூவினாள்.



இதன் விளைவாக அலட்டி புரண்டு தீப்சந்த் எழுந்திருப்பதற்கும் ராஜமாதாவின் தூதன் உள்ளே நுழைவதற்கும் நேரம் சரியாய் இருந்தது.

அவசர அவசரமாக புஷ்பாவதி தனது சேலையை சரிப்படுத்திக்கொண்டு தலையில் முக்காடும் போட்டுக் கொண்டாள். உள்ள நிலையை ஊகித்துவிட்ட தூதனும் வணக்கம் தெரிவிக்கும் முறையில் தலையை குனிந்தவன் நிமிராமல் குனிந்தபடியே தனது மடியிலிருந்த கடிதத்தை எடுத்து தீப்சந்திடம் நீட்டினான்.

தீப்சந்த் அந்தக் கடிதத்தின் முத்திரைகளை உடைத்து படித்துவிட்டு, புஷ்பாவதியிடம் கடிதத்தை கொடுத்தான். "நீ போய் கோட்டையில் இரு. நாளைக்கு பதில் சொல்லுகிறேன்" என்று தூதனிடம் சொல்லி அனுப்பிவிட்டான்.

ராஜமாதாவின் ஓலையைப் படித்த புஷ்பாவதியின் கண்களில் சீற்றம் மிதமிஞ்சி தெரிந்தது. "ராஜமாதா தங்களை உதவிக்கு அழைக்கிறார்" என்ற அவள் குரலில் சீற்றம் இருந்தது.

தீப்சந்த் அவள் சீற்றத்தை கண்டு புன்முறுவல் கொண்டான். "உன்னிடம் எத்தனை மதிப்பு வைத்திருக்கிறார் ராஜமாதா" என்று கூறவும் செய்தான் புன்முறுவலின் ஊடே.

"எல்லாம் சுயநலம்." இதை புஷ்பாவதி எரிச்சலுடன் சொன்னாள்.

"அந்த சுயநலத்தில் என்ன தவறு? தனது மகனைக் காப்பாற்ற தாய் முயலுவது நியாயந்தானே? நாளைக்கே உனக்கு ஒரு மகன் பிறந்து அவன் கஷ்டத்திலிருந்தால் நீயும் இப்படித்தானே செய்வாய்?" என்று தீப்சந்த் கேட்டான்.

"எனக்கு பிள்ளை மகாராணாவைப் போல் பிறப்பதானால் எனக்கு பிள்ளையே வேண்டாம்" என்றாள் புஷ்பாவதி.

"உனக்கு எப்படி மகாராணாவைப்போல் பிள்ளை பிறக்க முடியும்?" என்று கேட்டு நகைத்தான் தீப்சந்த்.

"புஷ்பாவதியின் கோபம் தலைக்கேறியது. அவள் மீது பாய்ந்து அவனை கீழே தள்ளினாள். "உங்கள் பல்லை உடைத்து விடுவேன்" என்றும் சீறினாள்.

தன்மீது பாய்ந்த அந்த புஷ்பக் கொடியை, மலர்க்கொத்துகளுடன் தன் மேலேயே இருத்தி இறுக நொறுக்கிய தீப்சந்த், அவள் இதழ்களை தன் இதழ்களால் மூடினான். அவள் மார்பு அவன் மார்பு மீது அழுந்திக் கிடந்தது. கால்களும் அவன் கால்களில் சிக்கிக் கிடந்தன. "இன்னும் ஒருநாள்" என்று சோகப் பெருமூச்சுவிட்டு அவன் கழுத்தில் முகத்தைப் புதைத்தாள்.

அன்று முழுவதும் புஷ்பாவதியின் மையலில் சிக்கி மண்ணில் புரண்டு கிடந்த தீப்சந்த், மறுநாள் காலையில் புஷ்பாவதியை நோக்கி "புஷ்பாவதி! ராஜபுதனத்தின் இந்த மண் எத்தனை சுகமாயிருக்கிறது? இது எத்தனை இன்பத்தை நமக்கு அளித்திருக்கிறது? இதை நாம் காக்க வேண்டாமா?" என்று வினவினான்.

அவள் அவனுக்கு பதில் சொல்லவில்லை. பிரிவினை ஏக்கத்தால் துன்பச் சாயை முகத்தில் படர நிலத்தில் உட்கார்ந்திருந்தாள். "உம் எழுந்திரு, கோட்டைக்கு போவோம் என்று கூறிய தீப்சந்த் அவளை எழுப்பி கோட்டைக்குச் சென்று அங்கிருந்த தனது காவலனை நோக்கி "இரண்டு புரவிகள் தயாராகட்டும், நானும் புஷ்பாவதியும் உதயபூர் போகிறோம்" என்றான்.

புரவிகளை காவலன் தயார் செய்யச் சென்றதும், தீப்சந்தை இறுக அணைத்து இதழ்களுடன் இதழ் சேர்த்து கொண்ட புஷ்பாவதி "இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?" என்று வினவினாள்.

www.cleanindians.com



"சொல்வானேன்? உன்னைவிட்டு தனியாக நான் எப்படி போக முடியும்?" என்று கேட்டான். "அது மட்டுமல்ல புஷ்பாவதி! ஒரு பட்டமும் பெற நான் ஆசைப்படுகிறேன்" என்றான் தீப்சந்த்.

"என்ன பட்டமோ?" என்று புஷ்பாவதி கேடடாள்.

"மனைவி தாசன் என்ற பட்டம்" என்று கூறிய தீப்சந்த் மிகுந்த மகிழ்ச்சியுடன் நகைத்தான். அந்த நகைப்பு மேவார் வரைக்குமே நிலைத்தது.

மேவாரில் நுழைந்ததும் அது அடியோடு அகன்றது. முதல் அனுபவமே அவனுக்கு பெரும் வெறுப்பை ஊட்டியது. மேவார் எல்லைக்குள் நுழைந்ததும் வேல்களை ஏந்திய இரு வீரர்கள் அவனை மறித்தார்கள் "அந்த பெண்ணை இறங்கச் சொல்" என்றான் ஒரு வீரன். "அவள் நகைகளை கழற்றச் சொல்" என்றான் இன்னொருவன்.

"நாமே கழற்றுவோம். மயிலே மயிலே என்றால் இறகு போடாது" என்று கூறிய முதல் வீரன் புஷ்பாவதியின் புரவியை நெருங்கினான், வேலை அவள் கழுத்துக்குக் குறிவைத்த வண்ணம்.

## 44. ராணியின் தூதர்!

வேல் விழியாள் புஷ்பாவதியின் கழுத்தில் வேலை ஊன்றிய வண்ணம் அவள் நகைகளைக் கழற்றும் உத்தேசத்துடன் அவள் புரவியை நெருங்கிய வீரன் அடுத்த விநாடி ஓவென்று அலறி மண்ணில் சாய்ந்தான்.

அதே நேரத்தில் இன்னொரு வீரனின் மேல் பலமான வாள் ஒன்றால் தட்டப்பட்டு அவன் கையிலிருந்து பறந்து

மண்ணில் வீழ்ந்தவன் மார்பு மீது குறுக்கே படுத்துக் கொண்டது.

புஷ்பாவதியின் கழுத்தில் வேலை அழுத்தியவன் வயிற்றில் திடீரெனப் பாய்ந்துவிட்ட புஷ்பாவதியின் குறுவாள் அவன் குருதியால் மண்ணை நனைத்துக்கொண்டிருந்தது.

தீப்சந்தின் வாளால் வேலைத் துறந்தவன் என்ன செய்வதென்று தெரியாமல் திருதிருவென விழித்தான் சில விநாடிகள். பிறகு அங்கிருந்து ஓட எத்தனிக்கவே ''டேய்! உனக்கு உயிரின் மேல் அசையிருந்தால் இருந்த இடத்தை விட்டு நகராதே'' என்று எச்சரித்த தீப்சந்த், தனது புரவியைவிட்டு தரையில் குதித்து ''இப்படி வா'' அந்த வீரனை அழைத்தான். அவன் அருகில் வந்ததும் அவனை ஏற இறங்கப் பார்த்த தீப்சந்த் ''உன்னைப் பார்த்தால் வீரனைப் போல் தெரிகிறது'' என்றான்.

''ஆம், வீரன்தான்'' என்று அவன் தலையைக் குனிந்த வண்ணம் பதில் சொன்னான்.

''இந்த வழிப்பறி வேலையில் எத்தனை நாளாக ஈடுபட்டிருக்கிறாய்?'' என்று விசாரித்தான் தீப்சந்த்.

''சில மாதங்களாகத்தான். வீரனாயிருக்க வாய்ப்பில்லை. ஆகையால் இந்தத் தொழிலை மேற்கொண்டோம். நாங்கள் மட்டுமல்ல, மேவாரின் படைவீரர் பலரும் அப்படித்தான் சம்பாதிக்கிறார்கள்'' என்று தெரிவித்தான் அந்த வீரன்.

''நீ யாருடைய படையைச் சேர்ந்தவன்?'' தீப்சந்த் சூடாகக் கேட்டான்.

''இப்பொழுது திட்டமான படையேதும் மேவாரில் கிடையாது. ஊதியமின்றி ஊழியம் செய்வதானால் சந்தாவதர் கட்சி, அல்லது சக்தாவதர் கட்சியில் சேரலாம். அந்த இரண்டு இடங்களிலும் இப்பொழுது படையில்லை என்று கேள்வி. சஹூம்பிரா சித்தூரில் அரசாள்கிறார். உதயபூரில் சங்கிரமசிம்மன் அரசாள்வதாகக் கேள்வி.

www.cleanindians.com



மகாராணா எங்கும் அரசு செய்வதாகக் கேள்வி இல்லை'' என்று தைரியமாகவே பதில் சொன்னான் அந்த வீரன்.

''நீ ராஜபுத்திரன் தானே?'' இந்தக் கேள்வி சூடாகப் பிறந்தது தீப்சந்திடம் இருந்து.

''பிறந்தது அப்படித்தான்.'' வெறுப்புடன் வந்தது வீரன் பதில்.

தீப்சந்த் அதற்குமேல் வார்த்தைகளை வளர்க்கவில்லை. ''உன் சிநேகிதன் காயத்தை கவனி. பிழைத்தால் இனி வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளச் சொல். பிழைக்கா விட்டால் நமது சம்பிரதாயப்படி அவனை எரித்துவிடு'' என்று சொல்லிவிட்டு மீண்டும் தனது புரவி மீது ஏறினான். புரவியை செலுத்தும் முன்பு வீரனாக வாழ இஷ்டமிருந்தால் உதயபூருக்கு வந்து சேர். மந்திரி சதிதாசின் மாளிகையில் என்னை சந்திக்கலாம். அங்கில்லாவிட்டால் மோகினிவனத்தில் இருப்பேன்'' என்று கூறிய தீப்சந்த் புரவியை நடக்க விட்டான். புஷ்பாவதியும் தனது புரவியை நகர்த்தினாள்.

கொள்ளையடிக்க வந்த வீரன் ''தங்கள் பெயரைச் சொல்லவில்லையே. மந்திரி மாளிகைக்கு வந்து யாரென்று விசாரிப்பது?'' என்று கேட்டான்.

''தீப்சந்த் என்று கேள்'' என்று கூறிய தீப்சந்த், புரவியை தட்டி விட்டான் வேகமாக.

புஷ்பாவதியும் அவன் பக்கத்தில் சென்றாள்.

கொள்ளையடிக்க வந்தவன் ஏதோ பிசாசைக் கண்டு விட்டவன் போல் தீப்சந்த் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றான். ''அப்படியானால் அந்தப் பெண் புஷ்பாவதியாக இருக்கவேண்டும். நல்லவேளை இத்துடன் தப்பினோமே'' என்று கூறிக்கொண்டு மண்ணில் விழுந்திருந்த சகோதரனைக் கவனிக்க மண்டியிட்டு உட்கார்ந்

தான். புஷ்பாவதியின் குறுவாள் சகவீரன் வயிற்றில் பாய்ந்திருந்தாலும் அதிக ஆழமாகப் பாயவில்லை என்பதையும், அவன் பிழைத்துவிடுவான் என்பதையும் ஊகித்துக் கொண்டதால் சிகிச்சையில் இறங்கினான்.

அங்கிருந்து வேகமாக மேவாரின் பல பகுதிகளையும், ஆங்காங்கு சீரழிந்து இருந்த அந்த மாபெரும் ராஜ்ஜியத்தின் முக்கிய இடங்களையும் கவனித்துக் கொண்டே உதயபூரில் நுழைந்த தீப்சந்த் நேராக அரண்மனை அந்தப்புரம் சென்று ராஜமாதாவை சந்தித்தான்.

அவன் முதல் நாள் புகுந்த அதே அறையில் ராணா பீம்சிங்குக்குப் பதில் அன்று ராஜமாதா அமர்ந்திருந்தாள்.

அந்த முதல் நாள் புஷ்பாவதியை தோள்மீது போட்டுக்கொண்டு வந்த தீப்சந்த், இந்த நாள் புஷ்பாவதி அவன் பக்கத்தில் உராய்ந்து வர ராஜமாதாவின் சந்நிதானத்தில் நின்றான். பிறகு இருவரும் ராஜமாதாவின் முன்பு மண்டியிட்டு வணங்கினார்கள்.

அந்த இரு அன்னியோன்னிய வீர தம்பதிகளைப் பார்த்த ராஜமாதாவுக்கு ஒருபுறம் மகிழ்ச்சி பொங்கினாலும் இன்னொரு புறம் துயரமே மனத்தில் ததும்பி நின்றது. இப்படி தனது மகன் மட்டும் இருந்திருந்தால், தான் எப்படி தலைதூக்கி நிற்கமுடியும் என்ற நினைப்பால் பெருமூச்சுவிட்டாள் ராஜமாதா. ''தீப்சந்த்! நீங்கள் இருவரும் நீண்ட நாள் மங்கல வாழ்வு வாழ வேண்டும்'' என்று ஆசீர்வாதம் செய்தாள்.

தீப்சந்த் ராஜமாதாவின் ஆசிக்கு நன்றி தெரிவித்தான். ''வீரன் வாழ்க்கை நலம், நல்ல அரசை திடமான மன்னனை பொறுத்தது'' என்றான்.

ராஜமாதா பெருமூச்சு விட்டாள். ''தீப்சந்த்! அந்த பாக்கியம் மேவாருக்கு இல்லை'' என்று துக்கம் நெஞ்சை அடைக்க வெளிப்படையாகவே பேசினாள். மேலும்

www.cleanindians.com



சொன்னாள் ''தீப்சந்த்! மன்னன் தூசியாக மதிக்கப் படுகிறான். மேவார் அரியணைக்குத் துணை நின்ற சளும்பிரா இனம் இப்பொழுது அதே அரியணையைத் தகர்ப்பதில் முனைந்திருக்கிறது. என் மகன் எப்படி மேவாருக்கு துரதிர்ஷ்டமோ, அது போல் சளும்பிராவின் நடவடிக்கையும் மேவாரின் சாபக்கேடு. இந்த ராஜவர்க்கம் பிழைக்க வேண்டுமானால்—மேவார் சீர்பட வேண்டுமானால்—நாம் பீம்சிங் சளும்பிராவை அழிக்கவேண்டும். அல்லது அடக்க வேண்டும். வேறு உதவியில்லாமல் அதை செய்யமுடியாது. ஆகவே துணை அழைக்க முடிவு செய்துவிட்டேன் என்றாள், ''நீங்கள் இருவரும் பயணத்தால் களைத்திருப்பீர்கள். நீராடி உணவருந்துங்கள். பிறகு பேசுவோம்'' என்றும் கூறினாள் ராஜமாதா.

தீப்சந்த் இருந்த இடத்திலிருந்து நகரவில்லை. ''புஷ்பாவதி! உள்ளே போய் நீராடி உணவருந்து. நான் ராஜமாதாவுடன் பேசிவிட்டு வருகிறேன்'' என்று கண்டித்துச் சொல்ல, புஷ்பாவதி அந்தப்புரத்துக்குள் சென்றாள்.

அவள் உள்ளே சர்வசகஜமாகப் போவதைக் கண்ட மகாராணி புன்முறுவல் கொண்டு ''தீப்சந்த்! உங்கள் பழைய அறை அப்படியே இருக்கிறது. அதை நான் யாருக்கும் அளிக்கவில்லை. பூட்டியே வைத்திருக்கிறேன்'' என்றாள். தீப்சந்தும் புன்முறுவல் கொண்டான். பழைய நினைவுகள் அவன் முகத்தில் தனி சோபையை விரியச் செய்தது. ''ராஜமாதா! எது செய்தாலும் அதில் நியாயமிருக்கும். முன்யோசனையும் இருக்கும்'' என்று கூறினான். மேற்கொண்டு கேட்டான். ''சோம்ஜிக்குப் பிறகு ஆட்சி எப்படியிருக்கிறது?'' என்று.

''ஆட்சி இருந்தால் அல்லவா எப்படியிருக்கிறதென்ற கேள்வி'' என்ற ராஜமாதா ''தீப்சந்த்! மேவாரை சீர்திருத்த, அதன் மதிப்பை பழைய நிலைக்கு கொண்டு செல்ல பலமான ஒரு கைவேண்டும். யாரை அழைக்கலாம் அப்பணிக்கு?'' என்று வினவினாள்.

தீப்சந்துக்கு ராஜமாதாவின் நோக்கம் புரியாமல் இல்லை. ஏதோ முன்னேற்பாட்டுடனேயே தன்னை அழைத்திருக்கிறாள் என்பதை ஊகித்ததால் "ராஜமாதாவின் முடிவு எதுவானாலும் நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன்" என்றான்.

ராஜமாதா புன்முறுவல் கொண்டாள். "தீப்சந்த்! நீ வீரனா, ராஜதந்திரியா அல்லது இரண்டும் சேர்ந்தவனா என்பது விளங்கவில்லை எனக்கு" என்று கூறினாள் புன்முறுவலின் ஊடே. பிறகு முகத்தில் கவலை படர கேட்டாள் "ஜலீம்சிங் நமக்கு உதவி செய்வதாகக் கூறுகிறான். ஏற்றுக்கொள்ளலாமா?" என்று.

தீப்சந்த் சிந்தனையில் இறங்கினான் சில விநாடிகள். பிறகு சொன்னான் "ஜலீம்சிங் மகாவீரன். ஆனால் அவனிடமுள்ள படைகளைக் கொண்டு சலூம்பிராவை வெற்றிக் கொள்வது கஷ்டம். தவிர சலூம்பிராவின் ஆதிக்கத்தில் இருந்து ஜலீம்சிங்கின் ஆதிக்கத்தில் சிக்கிக்கொள்வதில் அர்த்தமில்லை."

www.cleanindians.com

ஒப்புதலுக்கு அறிகுறியாக தலையை அசைத்தாள் ராஜமாதா. கடைசியில் சொன்னாள் "உசிதப்படி செய்."

"நீங்கள் எண்ணியிருப்பது சரி மகாராணி" என்றான் தீப்சந்த்.

"நான் எண்ணியிருப்பதா?" ராஜமாதாவின் கேள்வியில் வியப்பு அதிகமாக ஒலித்தது.

"ஆம், ஜலீமசிங்கின் வீரத்தை ஈடுசெய்ய மகாராஷ்டிரர் உதவி தேவை" என்றான் தீப்சந்த்.

"தீப்சந்த்!" என்று ஆச்சரியக்குரல் எழுப்பினாள் ராஜமாதா.

"மகாராணி! வேறு வழியில்லை. மாதாஜி சிந்தியா தான் இங்கு ஒரு சீரான நிலையை ஏற்படுத்த முடியும்" என்றான் தீப்சந்த்.



"சரி, தீப்சந்த். உன் விருப்பப்படி செய்" என்று ராஜமாதா கூறினாள்.

அன்று பகலே புஷ்பாவதியுடன் புறப்பட்ட தீப்சந்த், நேராக மாதாஜி சிந்தியா தங்கியிருந்த புஷ்கரத்தை நோக்கிக் கிளம்பினான்.

"உற்சாகத்தில் இருக்கிறீர்கள்" என்றாள் புஷ்பாவதி.

"இருக்காதா? மாமனார் வீட்டுக்கு அல்லவா போகிறேன்?" என்றான் தீப்சந்த்.

புஷ்கரத்தை தீப்சந்த் அடைந்தபோது மாதாஜி சிந்தியா அவனை நேரில் வரவேற்றார். "மாப்பிள்ளை! வாருங்கள். மாமனார் அழைக்காமல் மாப்பிள்ளை வந்தால், விசேஷம் ஏதாவது இருக்கவேண்டுமே" என்றார்.

அப்பொழுது சிந்தியாவின் மனைவி தலையை நீட்டி "வந்ததும் வராததுமாக மாப்பிள்ளையை விசாரிக்க ஆரம்பிக்காதீர்கள்" என்று கடிந்துகொண்டாள்.

"இப்பொழுது வந்திருப்பது மாபிள்ளையல்ல" தூதர் என்றார் சிந்தியா.

"யார் தூதர்?" என்று கேட்டாள் சிந்தியாவின் மனைவி.

"ராணியின் தூதர்" என்று விஷமமாகப் புன்முறுவல் செய்தார்.

நுழைநரியான சிந்தியா தன்னை அனுப்பியது யார், எதற்காக என்பதையெல்லாம் ஊகித்து விட்டதைக் கண்ட தீப்சந்த், அவரிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். ஆனால் மறுநாள் ஆலோசனையில் சிந்தியாவுடன் இன்னொருவரும் கலந்து கொண்டார். அவரைப் பார்த்ததும் பெரிதும் எச்சரிக்கை அடைந்தான் தீப்சந்த்.

"மேவார் நிலையை சீர்திருத்தவே இவரை வரவழைத்தேன்" என்று அந்த மனிதரை அறிமுகப்படுத்தினார் சிந்தியா தமது மருமகனுக்கு. "மாப்பிள்ளை இவர் பெயர் அம்பாஜி இங்கே இவரைத் தெரியாதவர் யாரும் இருக்க முடியாது" என்றும் வந்தவரைப் புகழ்ந்தார்.

அம்பாஜியின் கழுகுக் கண்கள் தீப்சந்தை அளவெடுத்தன நிதானமாக தலையில் சிறிதேயிருந்த சிகையுடனும் கூரிய நீண்ட நாசியுடனும் ஒட்டிய கன்னங்களுடனும் ஜொலிக்கும் கண்களுடன் காட்சியளித்த அம்பாஜி இங்ளேயை சமாளிப்பது எளிதல்ல என்பதை புரிந்து கொண்டான் தீப்சந்த்.

## 45. விடுதலையின் விலை!

மாதாஜி சிந்தியாவின் வலக்கரம் போன்ற அம்பாஜி இங்ளே பெரிய வீரரோ படைத் தலைவரோ அல்லவென்றாலும், போர்த் தந்திரங்களின் நுட்பங்களை சாங்கோபாங்கமாக அறிந்தவர் என்பதை புஷ்கரம் வந்த இரண்டாவது நாளே தீப்சந்த் உணர்ந்துகொண்டான். இரண்டாவது நாள் சிந்தியா நடத்திய மந்திராலோசனையில் அம்பாஜி இங்ளே மிகவும் சங்கடமான கேள்விகள் சிலவற்றை கேட்டார்.

முதலில் ராஜமாதாவின் கோரிக்கையும் தீப்சந்தின் தூதும் மட்டும் மராட்டியர் மேவாரில் தலையிடுவதற்குப் போதாதென தமது கருத்தைத் தெரிவித்த அம்பாஜி, "தீப்சந்த் மாவீரன் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால், மேவார் இருக்கும் நிலையில் தனி நபர் வீரம் மட்டும் பயன்படாது. நல்ல படை வசதியுள்ள ஒரு ராஜ



புத்திரனின் ஈடுபாடும் வேண்டும்" என்று கூறிய அம்பாஜி, "தீப்சந்த்! நீங்கள் சொல்லும் கோட்டா சமஸ்தானாதிபதி ஜலீம்சிங் தனது படைகளுடன் இந்த போரில் ஈடுபடுவாரா?" என்றும் கேட்டார்.

"கண்டிப்பாய் ஈடுபடுவார்" என்றான் தீப்சந்த்.

அம்பாஜி தமது நீண்ட மூக்கை ஒருமுறை உருவி விட்டுக்கொண்டு, தமது கழுகுக் கண்களை தீப்சந்த் மீது நிலைநாட்டி, "அவரது ஈடுபாட்டைப்பற்றி நாம் தீர்மானிப்பதைவிட அவர் மூலமே அதை அறிந்து கொள்வது நலம் அல்லவா?" என்று விசாரித்தார்.

அம்பாஜியை சந்தேகப் பார்வையாகப் பார்த்தான், தீப்சந்த். "ஏன் நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?" என்று வினவினான்.

"படைபலம் இல்லாமல் நம்பிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு போரை வெல்ல முடியாது" என்ற அம்பாஜி, "நீங்கள் இங்கு வருமுன்பே ஜலீம்சிங்கை இங்கு வரும்படி கேட்டு தூது அனுப்பியிருக்கிறேன். எப்படியும் நாளைக்கு அவர் வருவார். இல்லை, பதிலாவது வரும்" என்றார்.

அதற்குமேல் அவருடன் பேசுவதில் பயனில்லை என்று தீர்மானித்த தீப்சந்த், "சரி, ஜலீம்சிங் வரட்டும்" என்று சொல்லிவிட்டு புஷ்பாவதி இருந்த இடத்துக்குச் சென்றான். அங்கு சிந்தியாவும் அவனுடன் சேர்ந்துகொண்டு "மாப்பிள்ளை! இன்று அம்பாஜி சொன்னதைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். எந்த ஓர் அலுவலை எடுத்தாலும் அவர் தோல்வி கண்டவர் இல்லை. அவர் மேவாரில் தலையிட ஒப்புக்கொண்டதே மேவாரின் பாக்கியம்" என்று சமாதானப்படுத்தினார்.

"அப்படியானால் உங்கள் முடிவு என்பது இதில் இல்லையா?" என்று வினவினான், தீப்சந்த்.

"முடிவு என்னுடையதாகத்தான் இருக்கும். ஆனால், அந்த முடிவை எடுக்கும் முன்பு அதன் சாதகபாதகங்களை

www.cleanindians.com

கவனிக்கவேண்டும். அதற்கு அம்பாஜியை நியமித்திருக்கிறேன். அவர் போட்ட கணக்கு இதுவரை தவறியது இல்லை" என்றார், மாதாஜி சிந்தியா.

"ஆம், மாப்பிள்ளை. எல்லாவற்றையும் இவரே கவனிக்க முடியுமா? அதற்காகத்தான் இங்னேயை வைத்திருக்கிறார். கவலைப்படாதீர்கள். எல்லாம் உங்கள் விருப்பப்படி முடியும். ஜலீம்சிங் வரும்வரையில் நீங்களும் புஷ்பாவதியும் இங்கு ஆனந்தமாயிருங்கள். இந்த அரசியல் தொந்தரவு எப்பொழுதுந்தான் இருக்கிறது" என்றாள், சிந்தியாவின் மனைவி.

அடுத்த ஒருநாள் அரசியலை சிறிது மறந்து புஷ்கரத்தின் புண்ணிய நீரில் புஷ்பாவதியுடன் நீராடுவதிலும் சுற்றுப்புறங்களை சுற்றிப் பார்ப்பதிலும் காலம் கழித்தான் தீப்சந்த். ஆனால், அவன் சுகவாழ்வுக்கு அதிக நாட்கள் கிடைக்கவில்லை.

www.cleanindians.com

மறுநாள் மாலையிலேயே ஜலீம்சிங் புஷ்கரத்துக்கு வந்து சேர்ந்தார். தம்மையும் ராஜமாதாவின் தூதர் என்று அறிவித்துக்கொண்டார். புஷ்கரத்தின் மாளிகையின் முன் கூடத்தில் அவருக்கு அம்பாஜியை அறிமுகப்படுத்தி வைத்தார். தீப்சந்தையும் சுட்டிக்காட்டி "இவரை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கத் தேவையில்லை" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

"ராஜபுதனத்தின் மாவீரனை, ராஜமாதாவின் முதல் தூதனை அறிமுகப்படுத்தத் தேவையில்லை ராஜமாதாவின் இரண்டாவது தூதனாக என்னை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

"இரவு இளைப்பாறுங்கள். நாளை பேசுவோம்" என்ற சிந்தியாவை நோக்கிய ஜலீம்சிங், "மராட்டிய தளபதி! இனி விரயம் செய்யக் காலமில்லை. பேசவேண்டியதை இன்று இரவே பேசி முடிப்போம்" என்று கூறினார்.



"தங்கள் விருப்பம்" என்ற சிந்தியா, அம்பாஜியுடனும் தீப்சந்துடனும் ஜலீம்சிங்குடனும் மந்திராலோசனை அறையை அடைந்தார். அங்கிருந்த மஞ்சங்களில் அமர்ந்ததும் ஜலீம்சிங் பேசத்தொடங்கி, "மேவார் துரோகிகளிடம் சிறைபட்டுக் கிடக்கிறது. அதிலிருந்து மேவாரை மீட்கவும் ராணாவின் மரியாதையை அதன் உரிய நிலைக்குக் கொண்டுவரவும் நாம் கூடியிருக்கிறோம். இந்தப் பணிக்கு எனது படை சித்தமாயிருக்கிறது" என்றார்.

"மகிழ்ச்சி" என்றார் சிந்தியா.

"எதற்கு மகிழ்ச்சி?" என்று கேட்டார் ஜலீம்சிங்.

"மேவாரில் புரட்சிக்காரரைத் தவிர ராஜபக்தியும் தேசபக்தியும் கொண்டவர்கள் இருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் படையும் சித்தமாயிருக்கிறது. அதில் ஒரு பகுதி டீபாயினின் பீரங்கிப் படை" என்று சிந்தியா தனது படையின் உயர்வை மறைமுகமாக சுட்டிக் காட்டினார்.

ஜலீம்சிங்கும் சளைக்கவில்லை. "அந்தப் படையைத் தானே இந்த தீப்சந்த் பிளந்து சென்றான்" என்று கேட்டார்.

சிந்தியா பதிலுக்கு புன்முறுவல் செய்தார். "அதைப் பற்றி உங்களைவிட எனக்குத்தான் அதிகப் பெருமை. டீபாயினின் யந்திரப்படையைப் பிளந்தது என் மருமகன்" என்று புன்முறுவலின் ஊடே கூறினார்.

ஜலீம்சிங்கின் முகத்தில் சிறிது குழப்பம் தெரிந்தது. "புஷ்பாவதி நாகராமக்ராவின் தலைவர் பல்வந்த் சிங்கின் பெண் அல்லவா?" என்று கேட்டார் குரலிலும் குழப்பம் ஒலிக்க.

"பெற்றது அவர்தான். ஆனால், புஷ்பா எங்கள் வளர்ப்புப் பெண்" என்றார் சிந்தியா.

அந்த நேரத்தில தமது ஒட்டிய கன்னங்களையுடைய வாயைத் திறந்த அம்பாஜி இங்லே "போரைப்பற்றி சிறிது பேசுவோமா?" என்று வினவினார்.

சிந்தியா, அம்பாஜியைப் பெருமை துலங்கிய கண்களால் நோக்கினார். "அம்பாஜி! நீ எப்பொழுதும் கருமத்திலேயே கண்ணுடையவன். சரி, நீயே விலாதத்தைத் தொடங்கு" என்று தமது இருக்கையில் சாய்ந்து கொண்டார்.

அம்பாஜி கழுகுக் கண்களை ஜலீம்சிங்கின் மீது நாட்டி, "கோட்டா மன்னனே! மேவாரைக் காப்பது மராட்டியத்தின் கடமைகளில் ஒன்றல்ல, அதைக் காப்பாற்றுவதும் எளிதல்ல. படை நாசம், பண நாசம் சகலமும் ஏற்படும். ஆகவே, இந்தப் பணிக்கு நீங்கள் எத்தனை பணம் கொடுக்க முடியும்?" என்று கேட்டார்.

www.cleanindians.com

ஜலீம்சிங் சிறிது முகம் சுளித்து "எடுத்த உடனே பணப்பேச்சுதானா?" என்று வினவினார்.

அம்பாஜி புன்முறுவல் செய்தார். அவரின் ரத்தமற்ற கன்னங்கள் அந்தப் புன்முறுவலை பிசாசின் புன்முறுவலைப் போல் காட்டின. அவர் சொற்களும் வரண்டு உணர்ச்சியற்று வெளிவந்தன. "பணம் இல்லாமல் இந்த உலகத்தில் எது நடக்கும்? படை வீரர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டாமா? உணவு அளிக்க வேண்டாமா? டூபாயின் பீரங்கிகளுக்கு வெடிமருந்தும் குண்டுகளும் வாங்க வேண்டாமா? பணம் இல்லாமல் எதைச் செய்யமுடியும்?" என்று இங்லே விசாரித்தார், பயங்கரப் புன்முறுவலின் ஊடே.

ஜலீம்சிங் வாதாட முற்படவில்லை. "எத்தனை பணம் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"முன்னமே கணக்குப் போட்டு வைத்திருக்கிறேன்-எழுபது லட்ச ரூபாய் பிடிக்கும்" என்றார் அம்பாஜி.



ஜலீம்சிங் இந்தத் தொகையைக் கேட்டதும் அசந்து போனார். "தீப்சந்த்! நம்மால் எழுபது லட்சம் கொடுக்க முடியுமா?" என்று வினவினார்.

"முடியாது. கொஞ்சம் குறைந்தால் முடியும்" என்று தீப்சந்த் சொன்னதும், பிரமிப்பின் உச்சத்தை அடைந்தான் ஜலீம்சிங் "கொஞ்சம் குறைப்பு எவ்வளவு?" என்று கேட்டார்.

"பத்து லட்சம்" என்றான் தீப்சந்த்.

"மீதி அறுபது இலட்சம் உன்னிடம் இருக்கிறதா?" ஜலீம்சிங்கின் கேள்வியில் சிறிது சீற்றம் துளிர்த்தது.

"என்னிடம் இருக்கவேண்டிய அவசியமில்லை. மேவாரிடம் இருக்கிறது" என்றான் தீப்சந்த் திட்டமாக.

அறுபது லட்சம் போதாது என்று இங்லே சொன்னார். அதற்கு மேல் கிடைப்பது கஷ்டமென்று தீப்சந்தும் பேரம் செய்தான். முடிவில் 64 இலட்சம் கொடுப்பது என்று தீர்மானமானதும் சிந்தியா விசாரித்தார் "தீப்சந்த்! இந்தப் பணம் எங்கிருக்கிறது?"

தீப்சந்த் சற்று எழுந்து அந்த அறையில் அங்குமிங்கும் சிறிது நேரம் உலாவினான். பிறகு நிதானமாகச் சொன்னான்—"இந்த 64 இலட்சத்தை சந்தாவதர் தலைவர்களுக்கு அபராதமாக விதிப்போம். இதில் முக்கால் பாகத்தை மராட்டியர் எடுத்துக்கொள்ள வேண்டியது. மீதி கால் பாகத்தை மகாராஜாவுக்கு மேவாரின் புனர் நிர்மாணத்துக்குக் கொடுக்கவேண்டியது."

அம்பாஜியின் கழுகுக் கண்கள் பளிச்சிட்டன. "தீப்சந்த்!" என்று எரிச்சல் துலங்கிய குரலில் அழைத்தார்.

"அம்பாஜி!" என்று தலைவணங்கினான் தீப்சந்த்.

"மேவாரில் பணம் ஏது?" என்று கேட்டார் அம்பாஜி-

''மேவாரை சூறையாடியவர்களிடம் இருக்கிறது. அப்படி இல்லாவிட்டாலும் அவர்கள் ஆதிக்கத்திற்கு உள்ளிருக்கும் பகுதிகளில் வரி வசூலிக்கலாம்'' என்றான் தீப்சந்த்.

''வரி வசூல் ஆகாவிட்டால்?'' என்று அம்பாஜி கேட்டார்.

''நிலம் உங்களுடையது.''

''இந்த வரண்டுபோன நிலத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது?''

''வரட்சி என்பது சாசுவதம் அல்ல. நல்லாட்சி எனும் மழை பெய்யும் போது வரண்ட நிலங்கள் கதிர்விட்டுக் குலுங்கும். மேவாரின் சுரங்கங்களை மீண்டும் இயக்கினால் உலோகமும் கிடைக்கும். மேவார் போன்ற பேரரசில் 64 இலட்சத்தை வசூலிப்பது மிகவும் சுலபம்.''

www.cleanindians.com

இதைக்கேட்ட சிந்தியாவின் முகத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டது. ''சரி, இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொள்வோம்'' என்ற சிந்தியா, ''ஜலீம்சிங்! உமது படைகளை எத்தனை நாட்களில் நமது படையுடன் இணைக்க முடியும்?'' என்று கேட்டார்.

''பத்தே நாட்களில்'' என்றான், ஜலீம்சிங். ''இன்றிலிருந்து பதினைந்தாவது நாள் நமது படைகள் மேவாருக்குள் நுழையும்'' என்றார்.

சிந்தியா அன்று எடுத்த முடிவைப்பற்றி அம்பாஜி இங்ளேக்கு பெரிதும் சந்தேகம் இருந்தும் அவர் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. சிந்தியா ஆழம் தெரியாமல் காலை விடுகிறார் என்று அம்பாஜி திட்டமாக எண்ணினார். எப்பேர்ப்பட்ட சிக்கலில் தாம் மாட்டிக்கொண்டோம் என்று போர் தொடங்கிய பின்பே சிந்தியா உணர்ந்துகொண்டாலும், முன்பே அதை ஓரளவு ஊகித்திருந்தார் என்பதை தீப்சந்த் புரிந்து கொண்டான்.



அன்று இரவு சிந்தியா தம் மனைவியிடம் ''இன்று நான் பெரிய முடிவு எடுத்தேன், நமது மாப்பிள்ளைக்காக'' என்று சொன்னார்.

''என்ன, அப்பேர்ப்பட்ட முடிவு?'' என்று சிந்தியாவின் மனைவி கேட்டாள்.

''மேவாரில் தலையிட ஒப்புக்கொண்டேன். அதைவிட அது...'' என்று சிந்தியா வாசகத்தை முடிக்கவில்லை.

''மாப்பிள்ளையை திருப்திசெய்ய'' என்று கூறி நகைத்தாள், சிந்தியாவின் மனைவி.

அவள் கூறியதில் ஓரளவு உண்மையிருப்பதை சிந்தியா புரிந்துகொண்டார். ''குடும்ப பாசங்களும் பொது வாழ்வின் திருப்பங்களுக்கு முக்கிய காரணம்'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டார்.

இதை அடுத்த அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த தீப்சந்த் ''இந்த வெற்றி உன்னுடையது புஷ்பாவதி'' என்று கூறி அவளை இறுக அணைத்துக்கொண்டான். ''மேவார் விடுதலையின் விலை 64 இலட்சம்'' என்றும் மனைவியைப் பாராட்டினான். ''நீ விலைமதிக்க முடியாதவள்'' என்றும் மனைவியைப் பாராட்டினான்.

அடுத்த பதினைந்தாவது நாள் சிந்தியாவின் பெரும் படை மேவாருக்குள் நுழைந்தது.

## 46. முதல் பலி!

முதல் நாள் மந்திராலோசனை நடத்திய மாதாஜி சிந்தியா மேவாருக்குள் நுழைய பதினைந்து நாட்களை

எடுத்துக்கொண்டாலும், முதலில் அம்பாஜி இங்ளேயை யும் ஜலீம்சிங்கையும் சித்தூரை நோக்கி படையெடுத்துச் செல்லுமாறு அனுப்பிவிட்டார். அவர் உத்தரவுப்படி புறப்பட்ட ஜலீம்சிங்கும் இங்ளேயும் தீப்சந்தும் தங்க ளுடன் வரட்டும் என்று சொன்னதும், புஷ்பாவதியும் புறப்படவே "குழந்தாய்! நீ பிறந்தகத்தில் சில நாட் களாவது இருக்க வேண்டாமா? நீ என்னுடன் வரலாம். மாப்பிள்ளை முன்னால் போகட்டும்" என்றார்.

கணவனை விட்டுப் பிரிய புஷ்பாவதிக்கு இஷ்டமில்லை என்றாலும் மாதாஜியின் மனைவி கங்காபாய் "அடி புஷ்பா! சில நாட்கள் என்னுடன் இரு. எனக்கும் உடல்நிலை சரியாயில்லை. நான் அதிக நாள் இருக்கமாட்டேன்" என்று குரல் தழுதழுக்கக் கேட்டுக்கொண்டாள்.

"புஷ்பாவதி! இந்த உன் தாய் தந்தையர்கள் சிக்கலும் தொந்தரவும் மிகுந்த மேவாருக்குள் நுழைய ஒப்புக் கொண்டதே உன்னை முன்னிட்டுத்தான். ஆகையால் நீ அவர்களுடன் வா" என்று தீப்சந்தும் வற்புறுத்தினான்.

அதற்கு மறுக்க முடியாமல் வளர்ப்புப் பெற்றோருடன் தங்க புஷ்பாவதி ஒப்புக்கொள்ளவே தீப்சந்த் மாதாஜி சிந்தியாவையும் கங்காபாயையும் வணங்கிவிட்டு படை களுடன் மேவாருக்குப் பயணமானான்.

மராட்டியர் படைகளுடனும் ஜலீம்சிங்கின் கோட்டா சமஸ்தானப் படைகளுடனும் மேவாருக்குள் நுழைந்த அம்பாஜி இங்ளே "நாம் முதலில் எந்த திக்கில் போகப் போகிறோம். நாம் தாக்க வேண்டிய முதல் இடம் எது?" என்று ஜலீம்சிங்கை வினவினார். இந்தக் கேள்வியை இரண்டாவது நாளிரவு படைகள் முகாம் செய்திருந்த போது தமது கூடாரத்தில் உட்கார்ந்து தீர்க்க ஆலோசனை யில் இருந்த சமயத்தில் இங்ளே கேட்க "இந்த விவகாரங் களை தீப்சந்திடம் கேட்பது நல்லது" என்றும் ஜலீம்சிங் சொன்னார்.

www.cleanindians.com



"உங்களைவிட மேவாரின் மர்மங்கள் அந்த வாலிப னுக்கு அதிகமாகத் தெரியுமா?" என்று வினவிய இங்ளே தமது நீண்ட மூக்கை தடவி விட்டுக்கொண்டார்.

"தீப்சந்த்துக்கு மேவாரைப் பற்றி தெரிந்ததில் அரை வாசி எனக்குத் தெரியாது. போரிடத் தெரியும், படைகளை இயக்கத் தெரியும். ஆனால் எந்த இடத்தில் தாக்கலாம்? எது பலவீனமான இடம்? என்பதெல்லாம் தீப்சந்த் நன்றாக அறிவான்" என்று ஜலீம்சிங் தமது பெருந்தன்மை யைக் காட்டினார்.

அம்பாஜி இங்ளேயின் கழுகுக் கண்களில் மகிழ்ச்சி கூட தாண்டவமாடியது அந்த சமயத்தில். "ஜலீம்சிங்! ஒரு மன்னனுக்கு வேண்டிய வீரம் மட்டுமின்றி அடக்கமும் உண்மையும் உம்மிடம் இருக்கின்றன. இந்த ராணாவுக்குப் பதில் மேவாரில் நீர் ராணாவாகப் பிறந்திருந்தால் இத்தனை கேவல நிலைக்கு மேவார் வந்திருக்காது" என்று பாராட்டி னார் இங்ளே.

"அப்படிச் சொல்வது சரியல்ல மராட்டியர் படைத் தலைவரே! மகாராணா சூரிய வம்சத்தில் பிறந்தவர். எங்களை ஆளப் பிறந்த குலம் அது" என்று கூறினார் ஜலீம்சிங்.

அதற்குமேல் அந்த வாக்குவாதத்தில் ஈடுபடாத இங்ளே தீப்சந்தை அழைத்துவர வீரன் ஒருவனை அனுப்பினார்.

சில நிமிடங்களுக்குள்ளாகவே கூடாரத்துக்குள் நுழைந்த தீப்சந்த், ஜலீம்சிங்குக்கும் இங்ளேவுக்கும் தலை வணங்கி தன்னை அழைத்த காரணம் என்ன என்று வினவினான்.

"மேவார் எல்லைக்குள் நுழைந்தாயிற்று..." என்று துவங்கினார் இங்ளே.

இங்ளேயின் இந்த முகவுரை வேறு எதற்கோ ஆரம்பம் என்பதைப் புரிந்துக்கொண்ட தீப்சந்த் தனது தலையை வணங்க மட்டும் செய்தான்.

இங்ளே தொடர்ந்தார். "எந்த இடத்தில் நாம் தாக்குதலைத் துவக்கினால் சித்தூரைப் பிடிக்க அனுகூலமாயிருக்கும்?" என்று வினவினார் மெதுவாக.

ஜலீம்சிங் இருக்கும் போது தான் கருத்தை சொல்வது தகாது என நினைத்த தீப்சந்த் ஜலீம்சிங்கை நோக்கினான். அந்த ஜாடையைப் புரிந்துகொண்ட இங்ளே "உன்னைக் கேட்கவேண்டும் என்று யோசனை சொன்னதே ஜலீம்சிங் தான்" என்று குறிப்பிட்டார். "தீப்சந்த்! நிற்கவேண்டாம், அந்த ஆசனத்தில் உட்கார்" என்று சற்று எட்ட இருந்த ஆசனத்தை சுட்டிக்காட்டினார்.

ஆனால் ஆசனத்தில் அமராமல் நின்றவண்ணமே சிந்தனையில் சில விநாடிகளே ஆழ்ந்த தீப்சந்த் "என் யோசனையை அங்கீகரிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சித்தூரைத் தாக்குமுன்பு சித்தூருக்கு வடக்கிலுள்ள ஹமீர் கோட்டையை தாக்கினால் நல்லது என்று நினைக்கிறேன்" என்று மிக அடக்கமாகப் பேசினான்.

"ஏன்?" ஒற்றைச் சொல்லில் வினா தொடுத்தார் இங்ளே.

"அது ஒன்றும் அப்படி பலவீனமான கோட்டையல்லவே?" என்றார் ஜலீம்சிங்.

"கோட்டை பலவீனமானதல்ல. அதன் தலைவன் பலவீனமானவன்" என்றான் தீப்சந்த். "அதுமட்டுமல்ல..." என்று இழுக்கவும் செய்தான்.

"வேறென்ன?" இங்ளே கேட்டார்.

"ஹமீர் கோட்டையை சுலபமாகப் பிடிக்கலாம். அந்தக் கோட்டைக்குள் நிரம்ப உணவுப் பொருள்களும், புரவிகளும், வெடி மருந்தும் குண்டுகளும் இருக்கின்றன" என்றான் தீப்சந்த்.

www.cleanindians.com



"அப்படியா!" என்று வாயைப் பிளந்தார் இங்ளே.

"இருப்பினும் அதை முதலில் கைப்பற்றுவானேன்? பிறகு பிடித்தால் என்ன?" என்று ஜலீம்சிங் வினவினார்.

"அதைக் கைப்பற்றினால் சலூம்பிராவின் இதயத்தைத் தாக்கினது போலாகும்" என்று தீப்சந்த் மர்மமாகப் பேசினான்.

ஜலீம்சிங் வியப்பு நிரம்பிய கண்களால் தீப்சந்தை நோக்கினார். அவரை நோக்கிச் சொன்னான் தீப்சந்த். "அந்த கோட்டையின் தலைவன் கும்பன். சலூம்பிராவின் ஆசைநாயகியின் மகன். அவனைத் தொட்டால் நீங்கள் சலூம்பிராவின் இதயத்தில் கத்தியைப் பாய்ச்சுகிறீர்கள்" என்று.

ஜலீம்சிங் சட்டென்று தமது ஆசனத்தில் இருந்து எழுந்து தீப்சந்தைக் கட்டிக் கொண்டார். "தீப்சந்த்! உன்னுடைய அறிவு மேவாரில் யாருக்கும் கிடையாது" என்று சிலாகித்தார்.

இங்ளேயின் கழுகுக் கண்களில் ஒளிவீசியது. "நாளைக் காலையில் நாம் ஹமீர் கோட்டையை நோக்கிச் செல்கிறோம்" என்று அவர் கூறியதும் மந்திராலோசனை முடிந்தது. ஜலீம்சிங்கும் தீப்சந்தும் சென்ற பிறகு தனியே தமது கூடாரத்தில் உலாவத் தொடங்கிய இங்ளே "இந்த வாலிபன் தீட்சண்யமான புத்தியை உடையவன். ஜலீம்சிங்கின் படையைவிட இவன் புத்தி அதிகமாகப் பயன்படும். ஒரு ஆசைநாயகியின் பிள்ளையைவிட நெறி கெட்ட தந்தைக்கு யாரிடம் பிடிப்பு இருக்கும்?" என்று சற்று இறைந்தே சொல்லிக் கொண்டு "களுக் களுக்" கென்று இருமுறை நகைக்கவும் செய்தார்.

மறுநாள் படை நகர்ந்து முற்றுகையிட்டதும் பதினைந்தாவது நாள் மேவாருக்குள் நுழைந்த மாதாஜியும் தமது சிறு படையுடன் அவர்களுடன் கலந்துகொண்டார்.

சிந்தியா வந்து சேர்ந்த ஒரே வாரத்தில் ஹமீர் கோட்டை வீழ்ந்தது. சலூம்பிராவின் ஆசைநாயகி மகன் கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. கால்களில் சங்கிலித் தளைகள் போடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

ஜலீம்சிங்கின் ஒரு படைப் பிரிவுக்குத் தலைமை வகித்த தீப்சந்த் கோட்டைக்குள் நுழைந்தான். அங்கிருந்த நிலை கண்டு பெரிதும் வெகுண்டான். வெளியே மக்கள் உணவுக்குத் திண்டாடிய சமயத்தில் சலூம்பிரா தமது ஆசை நாயகியின் மகனுக்கு நிரம்ப தானியங்களை சேகரித்து வைத்திருந்தார். தீப்சந்த் அந்தக் கோட்டையில் இருந்த தானியக் குவியல்களையும் பீரங்கிகள், குண்டுகள், வெடி மருந்துகள் இவற்றையெல்லாம் கைப்பற்றினான். மாதாஜி சிந்தியா சகல மரியாதைகளுடன் கோட்டைக்குள் வரவேற்கப்பட்டார்.

அங்கிருந்து படைகள் சித்தூரை நோக்கி முன்னேறிய போது சிந்தியா அந்தப் படையுடன் செல்லவில்லை. தமது மனைவி உடல்நிலை சீர்குலைந்து வந்த காரணத்தால் முதலில் நாதத்வாரத்துக்குச் செல்ல முடிவு செய்தார். அவர் அந்த முடிவை எடுக்கும்போது தீப்சந்தும் புஷ்பாவதியும் கங்காபாயின் அருகில் இருந்தார்கள். கங்காபாய் தனது கணவனை நோக்கிச் சொன்னாள் ''என் உடல் நலத்துக்காக நீங்கள் கடமையை நிறுத்த வேண்டாம். நாதத்வாரத்தில் என்னை விட்டுச் செல்லுங்கள்'' என்று.

அந்த வீரத் தாயைப் பார்த்த புஷ்பாவதியின் கண்களில் நீர் துளிர்த்தது. ''அம்மா! உங்களுக்கு அப்படியொன்றும் பிரமாத நோயில்லை. ராஜசமுத்திரம் ஏரியின் காற்றும் நாதத்வார கிருஷ்ணன் தரிசனமும் உங்களைக் காப்பாற்றும்'' என்றாள். ஆனால் அந்த இரண்டும் பயனளிக்கவில்லை கங்காபாயின் தேகநிலைக்கு. நாள் ஆக ஆக மூச்சு திணறியது. ஆங்கிலக் கணக்குப்படி 1791-வது ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ந் தேதி கங்காபாயின் உடல் நிலை மிகவும் மோசமாயிற்று.

www.cleanindians.com



புஷ்பாவதி தனது வளர்ப்புத் தாயை தனது மார்பு மீது சாத்திக் கொண்டு சாளரத்தருகே அமர்ந்திருந்தாள். கங்காபாயின் கண்கள் நாதத்வாரத்தை நோக்கிக் கொண்டிருந்தன. ''புஷ்பா! கிருஷ்ணன் என்னை அழைக்கிறான்'' என்றாள் கங்காபாய் மெதுவாக.

புஷ்பாவதி நீர்ததும்பும் கண்களுடன் ''அம்மா! அப்படிப் பேசாதீர்கள்'' என்றாள் தழுதழுத்த குரலில்.

சற்று எட்ட அதே அறையில் உலாவிக் கொண்டிருந்த சிந்தியா தமது மனைவியை நோக்கி வந்தார். கங்காபாயின் கண்கள் கணவனை அன்புடன் ஏறெடுத்து நோக்கின. ''எது நேரிட்டாலும் நமது குழந்தைகளைக் கைவிடாதீர்கள். மாப்பிள்ளையின் நோக்கத்தை ஈடேற்றுங்கள்'' என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டாள். வயோதிகத்திலும் அழகாயிருந்த கண்கள் கணவனை ஏறெடுத்து நோக்கின. நோக்கிய கண்கள் நிலைத்து விட்டன.

புஷ்பாவதி திடீரென வீறிட்டுக் கதறினாள். எதற்கும் மசியாத மாதாஜி சிந்தியா தமது முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டார். அந்த இரும்பு மனிதனின் உடல் குலுங்கியது. முகத்தைத் தாங்கிய கைகளில் இருந்து நீர் அருவியாக ஓடியாது. ''விடுதலைக்கு மேவார் வாங்கிய முதல் பலி இது'' என்று உள்ளூர எண்ணி விம்மினார் சிந்தியா. ''இதற்கெல்லாம் காரணமான சலூம்பிராவை அழித்துவிடுகிறேன்'' என்றும் சபதம் செய்து கொண்டார்.

அடுத்த மாதம் சிந்தியாவின் பீரங்கிகள் சித்தூர் கோட்டையை தூள் செய்ய பக்கத்துக் குன்றுகளில் ஏற்றப்பட்டன. சித்தூருக்குள் ஈ எறும்பு கூட நுழைய முடியாதபடி கோட்டையை முற்றுகையிட்டார் சிந்தியா. சித்தூருக்குள் பெரும் புரட்சியொன்று விளைந்து கொண்டிருந்தது. புஷ்பாவதி சிந்தியாவைவிட்டு அகலவில்லை.

மனைவி போன துக்கத்தை ஆற்ற முடியாவிட்டாலும் சிந்தியாவின் மனதை திடப்படுத்த பெரும் ஊன்று கோலாக விளங்கினாள் புஷ்பாவதி. தீப்சந்த் அவரது பக்கத்தில் சதா இருந்ததாலும் புஷ்பாவதியின் அன்பினாலும் மெள்ள ஆறுதலடைந்து கொண்டிருந்தார் சிந்தியா. காலம் மெள்ள அவரது மனப்புண்ணை ஆற்றிக் கொண்டிருந்தது.

ஆனால் அதை வேறு விதத்தில் ஊறினார் பீம்சிங் சலூம்பிரா.

## 47. அன்னியர் புகுவது நீதியா?

www.cleanindians.com

கோட்டா சமஸ்தானாதிபதியும் மகாவீரனுமான ஜலீம்சிங் ஜாலாவின் திறமைமிக்க படையும் சிந்தியாவின் தட்சணதேச வாயுவேகப் புரவிப் படையும் டூபாயின் பீரங்கிப் படையும் இணைந்த படைகள் சித்தூரை முற்றுகையிட்டும் புரட்சிக்காரரான பீம்சிங் சலூம்பிரா சித்தூரைவிட்டு வெளியே வரவில்லை. கோட்டையை பட்டினி போடுமுன்பு அவரே சரணடைய ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்பிய சிந்தியா தீப்சந்துடனும் புஷ்பாவதியுடனும் ஆலோசனை நடத்தினார். ''என்ன தவறு செய்தவராயிருந்தாலும் சலூம்பிரா சரணடைய ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டாமா?'' என்று தீப்சந்தை நோக்கி வினவினார் சிந்தியா.

''மன்னரிடம் அபராதப்பட்டு மேவாரை சீர்குலைத்த ராஜத் துரோகிக்கு மன்னிப்பு உண்டா?'' என்று புஷ்பாவதி கேட்டாள்.



''மனைவியை தூக்கிக் கொண்டு சென்ற ராவணனையே ராமன் மன்னிக்க சித்தமாயிருப்பதாகக் கூறவில்லையா?'' என்று மாதாஜி சிந்தியா வினவினார்.

''ராவணன் ராமனின் அடிமையல்ல. அவன் செய்தது குற்றம், பாதகம். ஆனால் ராமன் அவனது அரசனாக இல்லாதவரை ராவணன் செய்தது ராஜத் துரோகக் குற்றமாகாது'' என்று சுட்டிக்காட்டினாள் புஷ்பாவதி.

தீப்சந்த் ஏதும் பேசமலே இருந்ததால் அவன் வாயையும் கிண்டிய சிந்தியா ''நீ என்ன சொல்கிறாய் தீப்சந்த்?'' என்று வினவினார்.

''நான் வீரனே தவிர ராஜதந்திரியல்ல. படைத் தலைவர் சொல்வதைக் கேட்கவேண்டியவன். நீங்கள் எதைச் சொன்னாலும் நிறைவேற்ற சித்தமாயிருக்கிறேன்'' என்று பட்டும் படாமலும் பேசினான் தீப்சந்த்.

மனைவி இறந்த பின்பு முதன் முதலாக அன்று தான் புன்முறுவல் செய்தார் சிந்தியா. ''தீப்சந்த்! உண்மையான ராஜதந்திரி நீதான். எதற்கும் புரட்சிக்காரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்க நான் முடிவு செய்துவிட்டேன். சலூம்பிராவுக்கு யாரை தூது அனுப்பலாம்?'' என்று கேட்டார் மெதுவாக.

சிந்தியாவின் மனதில் இருப்பதைப் புரிந்து கொண்டதால் புஷ்பாவதியின் முகத்தில் அச்சத்தின் சாயை லேசாகப் படர்ந்தது. அதைக்கண்ட சிந்தியா சொன்னார் ''மகளே! உனக்கு விருப்பமில்லை என்றால் மாப்பிள்ளை போக வேண்டாம். வேறு யாரையாவது அனுப்புகிறேன்'' என்று.

''வேறு யாரையும் அனுப்பவேண்டாம். தூதனுக்குத் தீங்கு செய்யும் கயவரல்ல சலூம்பிரா. மகாவீரர். நானே போகிறேன்'' என்றான் தீப்சந்த்.

சிந்தியா தனது தூதை வாய்மூலமாகவே சொல்லியனுப்பினார். "சலூம்பிரா நாற்பது இலட்ச ரூபாய் இந்த போருக்கு நஷ்ட ஈடாகக் கொடுத்து, சித்தூரை விட்டு சரணடையும் பட்சத்தில் அவரும் அவரது படையும் எந்தவித தொந்தரவுமின்றி வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று சொல், தீப்சந்த். மறுமொழியையும் பெற்று வா" என்றார்.

புஷ்பாவதி முகத்தில் சிறிது கலக்கத்தைக் காட்டினாள். அவளை தனிமையில் அழைத்துச் சென்று "புஷ்பாவதி! வீரன் மனைவி ஆபத்தைக் கண்டு கலங்கக் கூடாது. எனக்கு எந்தவிதத் தீங்கும் வராது. நான் இன்றிரவே திரும்பி விடுவேன்" என்று தைரியம் கூறினான். புஷ்பாவதி அவனை இரு கைகளாலும் அணைத்து முகத்தைத் தூக்கினாள். துடித்த அவளுடைய இதழ்களை தனது அதரங்களால் பற்றி தைரியம் கொடுத்துவிட்டு சித்தூரின் கோட்டையை நோக்கி புரவியில் கிளம்பிய தீப்சந்த் அந்தக் கோட்டையை அணுகியதும், சரித்திரம் பிரசித்தி பெற்றது மேவார் ராணாக்களின் ஆதி தலைநகரும், எத்தனையோ வீரச்செயல்களுக்கும் ராஜபுதன வீரர்களின் தியாகங்களுக்கும் அத்தாட்சியானதுமான சித்தூரின் கோட்டையின் அமைப்பில் அப்படியே மனதைப் பறிகொடுத்து நின்றான். மகாராஜாவுக்காக உயிரைக் கொடுத்த ஜெய்மல், பட்டா ஆகிய இரு மகா வீரர்கள் அக்பரை எதிர்த்து மாண்டுவிழுந்த இடங்களைப் பார்த்து மனம் உருகி "இத்தகைய கோட்டைக்குள் ராணாவுக்கு துரோகியான சலூம்பிரா இருக்கிறார்" என்று எண்ணி துன்பத்தின் வசப்பட்டான். பிறகு கோட்டையின் வாயிலுக்குச் சென்று அங்கிருந்த காவலரை நோக்கி "தீப்சந்த் வந்திருக்கிறான் என்று சலூம்பிராவிடம் சொல்லுங்கள்" என்று இரைந்து அறிவித்தான்.

பதிலுக்கு கோட்டை மீதிருந்து ஒரு பீரங்கி அவனை நோக்கி குறிவைக்கப்பட்டது. உள்ளே ஒரு புரவி விரைந்து செல்லும் அரவமும் கேட்டது. தீப்சந்த் கோட்டை பீரங்கி

www.cleanindians.com



யைக் கண்டு அலட்சியமாக நின்றான். அடுத்த சிறிது நேரத்திற்குள் கோட்டைக் கதவு திறக்கப்பட்டு இரு வீரர்கள் அவனை வணங்கினார்கள். அவர்களுடன் சென்ற தீப்சந்த் ராணாக்களின் பிரதான அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

கோட்டையின் உட்புறம் சீர்கேடு அடைந்திருப்பதைப் பார்த்துக் கொண்டே சென்றான் தீப்சந்த். எங்கும் வறுமையும் துன்பமும் பரந்து கிடந்தன. இருப்பினும் சலூம்பிராவின் வீரர்கள் ஆணவத்துடன் ஆங்காங்கு உலாவிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வோர் இடத்திலும் குழந்தைகளின் அழுகுரலும் தாய்மார்கள் அவற்றை சமாதானப் படுத்த சொல்லிக் கொண்டிருந்த சமாதான சொற்களும் அவன் காதில் விழுந்தன. "இவ்வளவு பேரை இம்சைப் படுத்துவது சலூம்பிராவுக்கு சந்தோஷந்தானா?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டே புரவியைச் செலுத்தினான் தீப்சந்த்.

பீம்சிங் சலூம்பிரா சித்தூர் ராணாக்களின் கொலு மண்டபத்திலேயே தீப்சந்தை வரவேற்றார். அந்த மண்டபத்திலிருந்த ராணாக்களின் அரியணையில் அமராமல் பக்கத்திலிருந்த ராஜ பிரதிநிதியின் ஆசனத்தில் பீம்சிங் அமர்ந்திருந்ததைப் பார்த்த தீப்சந்த் "சலூம்பிரா! இன்னும் ராஜ மரியாதையைக் கைவிட வில்லை" என்று தனக்குள் மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டான். இந்த எண்ணங்களுடன் தலை வணங்கிய தீப்சந்த் உட்கார ஒரு ஆசனத்தை கையால் சுட்டிக் காட்டினார் சலூம்பிரா.

தீப்சந்த் அதில் உட்காராமல் நின்ற வண்ணம் சலூம்பிராவை ஏறெடுத்து நோக்கினான். "மேவாரின் மகாவீரருக்கு தலைவணங்குகிறேன்" என்றும் சம்பிரதாயமாகக் கூறினான்.

பீம்சிங் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அக்கம் பக்கத்தில் காவல் நின்ற வீரர்களை ஒருமுறைப் பார்த்ததும்

அவர் குறிப்பை அறிந்து காவல் வீரர்கள் வெளியே சென்றனர். அந்த மகாலின் கதவுகளும் மூடப்பட்டன. ''தீப்சந்த்! நீண்ட நாட்களுக்குப் பின்பு சந்திக்கிறோம்...'' என்று பேச்சை சலூம்பிராவே தொடங்கினார்.

''ஆம் பிரபு! இடையில் அந்த பாக்கியம் எனக்கு இல்லை'' என்றான் தீப்சந்த்.

''உன் மனைவி புஷ்பாவதி எப்படி இருக்கிறாள்?'' என்று குசலம் விசாரித்தார் சலூம்பிரா.

''பழைய சம்பவத்துக்குப் பிறகு அவளுக்கு தொந்தரவு ஏதும் இல்லை'' என்று தீப்சந்த் கூறினான்.

அதைக் கேட்ட சலூம்பிரா புன்முறுவல் செய்தார். ''என் வீரர்களின் தவறை நீ மன்னிக்கவில்லை?'' என்றும் சொன்னார் புன்முறுவலின் ஊடே.

''எனக்கு மகாவீரரான தங்கள் பெருந்தன்மைதான் நினைவிருக்கிறது'' என்றான் தீப்சந்த்.

www.cleanindians.com

அதுவரை தீப்சந்த் நின்றுகொண்டே பேசுவதைக் கண்ட சலூம்பிரா ''ஏன் நிற்கிறாய் தீப்சந்த்? உட்காருவதுதானே!'' என்றார் அன்புடன்.

''தூதன் நிற்பதுதான் முறை'' என்று தான் வந்த காரியத்தை சூசகமாகக் குறிப்பிட்டான் தீப்சந்த்.

''ஓ! தூது வந்திருக்கிறாயா?'' என்று ஏதும் தெரியாததுபோல் கேட்டார் சலூம்பிரா.

''ஆம்.''

''சிந்தியாவிடம் இருந்து?''

''ஆம்.''

''சித்தூரை நான் விட்டுச்செல்ல என்ன லஞ்சம் கேட்கிறார் சிந்தியா?''

''லஞ்சம் கேட்கவில்லை. தமது படைகளின் செயலுக்கு நஷ்டஈடு கேட்கிறார், நாற்பது இலட்ச ரூபாய்.''



இதைக் கேட்டதும் பயங்கரமாகச் சிரித்தார் சலூம்பிரா. ''நாற்பது இலட்சமா? இந்தக் கோட்டையைப் பார்த்தாயல்லவா?'' இதில் நாற்பது இலட்சம் இருக்குமா?'' என்று கேட்டார் சலூம்பிரா சிரிப்பின் ஊடே.

''நாற்பது இலட்சத்தை இந்தக் கோட்டையில் இருந்து வசூலிக்கச் சொல்லவில்லை, சிந்தியா. வழியையும் உங்களுக்கு சொல்லித்தர இஷ்டப்படவில்லை. நீங்கள் சரணடைய ஒரு வாய்ப்பு கொடுக்கிறார். அதன் விலை நாற்பது இலட்சம்.'' இதை மிக அடக்கமாகச் சொன்னான் தீப்சந்த். அவன் குரலில் அடக்கத்துடன் உறுதியும் இருந்தது.

பீம்சிங் சலூம்பிரா தமது ஆசனத்தில் இருந்து எழுந்து அந்த மகாலில் அங்குமிங்கும் சிங்கம் போல் உலாவினார். பிறகு திடீரென்று நின்று ''தூதுவரே!'' என்று அழைத்தார் சிங்கக் குரலில்.

தீப்சந்த் நின்ற நிலையைவிட்டு அகலவில்லை. பீம்சிங்கே பேசினார். ''அந்த மராட்டியக் குள்ளநரியிடம் சொல், பணம் எதுவும் இல்லை என்று. சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களையெல்லாம் சிந்தியா சூரையாடிய பிறகு நான் எங்கிருந்து பணம் கொடுப்பதென்று கேள். இங்கு என்னிடம் பணம் இல்லை. ஆனால் பீரங்கிகள், குண்டுகள், வெடிமருந்துகள் இருக்கின்றன. அவை இனி பதில் சொல்லும் என்று சொல்'' என்றார் இடிபோல் ஒலிக்க குரலில்.

தீப்சந்த் அவருடைய குரலைக்கண்டு மசியவில்லை. ''இதுதான் பதிலா?'' என்று மட்டும் வினவினான்.

''ஆம்.'' திட்டமாக வந்தது சலூம்பிராவின் பதில்.

தலைவணங்கி திரும்ப முற்பட்ட தீப்சந்தை இரண்டு எட்டில் அணுகிய சலூம்பிரா அவன் தோள் மீது கையை வைத்து ''தீப்சந்த்! மகாராணா இருக்கையில் இந்த மராட்டியர் எனக்கெப்படி தூது அனுப்பலாம். மகாராணாவே

இந்தக் கோட்டைக்கு நேரில் வருவதுதானே. அதற்குக் கூட துப்பில்லையா மகாராணாவுக்கு?'' என்று இரகசியமாக மாக வினவினார். ''ஆயிரம் உண்டு இங்கு சண்டை, எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி'' என்றும் இரகசியம் ஓதினார்.

தீப்சந்த் லேசாகத் திரும்பினான் சலூம்பிராவை நோக்கி. ''சலூம்பிரா; நம் உடலில் நோய் தோன்றும் போது வைத்தியன் வருகிறான். அது இயற்கைக்கு முரண்பாடு அல்ல'' என்று கூறினான்.

அதைக்கேட்ட சலூம்பிரா அவனைவிட்டு விலகி நின்றார். தீப்சந்த் கதவுகளைத் திறந்துகொண்டு வெளியே சென்றான். அவனைத் தொடர்ந்து வெளியே வந்த சலூம்பிரா அவன் புரவியிலேறிப் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றார். தீப்சந்தைத் தொடர முற்பட்ட இரு வீரர்களைத் தமது பார்வையாலேயே சிலைகளாக அடித்தார்.

www.cleanindians.com

சித்தூர் கோட்டையில் இருந்து கிளம்பி மாதாஜி சிந்தியாவின் கூடாரத்துக்கு வந்த தீப்சந்த், சிந்தியாவிடம் சித்தூரில் நடந்ததை வரிக்கு வரி எடுத்துச் சொன்னான். மனைவியின் மரணத்தால் துன்பம் அடைந்திருந்த மாதாஜி சிந்தியாவுக்கு சலூம்பிராவின் பதில் புண்ணில் வேலிடுவதைப் போலிருந்ததால் ஒரு விநாடி முகம் சுளித்தார். மறுவிநாடி தமது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு ''சலூம்பிரா சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. நான் மகாராணாவை உடனடியாகப் பார்க்க வேண்டும்'' என்றார்.

தீப்சந்த் திகைத்தான். சூர்ய வம்சத்தின் வாரிசைப் பார்ப்பது அத்தனை எளிதல்ல என்பது தீப்சந்துக்குத் தெரிந்தே இருந்தது. மராட்டிய பேஷ்வாவான முதல் பாஜிராவுக்குப் பிறகு யாருக்கும் மேவார் மகாராணா



பேட்டி அளித்ததில்லை. மரபுக்கு முரணான அந்த பேட்டி எப்படி சாத்தியம் என்று தீப்சந்த் சிந்தனைவசப்பட்டான்.

''தீப்சந்த்! நான் மகாராணாவை சந்திக்கவேண்டும். இல்லாவிடில் சலூம்பிராவின் கேள்வி நியாயமாகிவிடும். மகாராணா இங்கு வந்து பெயருக்காவது போரில் ஈடுபட்டால்தான் மேவார் வீரர்களுக்கு நமது படையெடுப்பின் நியாயம் தெரியும். மகாராணா இங்கு வராமல் நான் இனி ஒரு அடி முன்னெடுத்து வைக்கமாட்டேன்'' என்று தீர்மானமாகச் சொன்னார்.

அவர் பிடிவாதத்தை நன்கு அறிந்திருந்த தீப்சந்த் ஜலீம்சிங்குக்கு விஷயத்தை தெரிவிக்கவே ஜலீம்சிங் மகாராணாவும் சிந்தியாவும் சந்திக்க ஏற்பாடு செய்வதாக ஒப்புக்கொண்டார். ஜலீம்சிங்கும் சிந்தியாவின் மந்திரி சதாசிவமல்ஹாரும் மகாராணாவை சந்திக்க உதயபூர் சென்றார்கள்.

மகாராணா மாதாஜியை நாகராமக்ரா (புலிமலை) வேட்டுவ விடுதியில் சந்திக்க ஒப்புக்கொண்டார்.

சிந்தியாவும் மகாராணாவும் நாகராமக்ரா வேட்டுவ விடுதியில் சந்தித்ததும் அதிர்ச்சிதரும்படியான விண்ணப்பத்தை சிந்தியா தெரிவித்தார். ''மகாராணா! போர்க்களத்துக்கு தாங்களும் வரவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

கோழையான மகாராணாவின் வதனத்தில் சற்றே ஒளி படர்ந்தது. அந்த சமயம் உள்ளே வந்தது ஒரு பெண் குழந்தை. அதன் தலையில் இருந்த உச்சிப்பூவைப் பார்த்த சிந்தியா பெரும் பீதிக்குள்ளானார். அதுவரை அவருக்கிருந்த சந்தோஷமெல்லாம் காற்றில் பறந்தது.

## 48. இரண்டாவது பலி!

மகாராணாவின் ஆசைப் புதல்வி கிருஷ்ணகுமாரி கிருஷ்ண விக்ரகம் போலவே உள்ள நுழைந்ததும் மாதாஜி சிந்தியா குழந்தையை ஆர்வமுடன் தமதருகில் அழைத்து அதன் உச்சிமீது தமது கையை வைத்து ஆசீர்வதிக்க முயன்றவர், கையைத் தடுத்த உச்சிப் பூவைக் கண்டதும் அதை சில நிமிடம் உற்று நோக்கினார். பிறகு கையில் ஏதோ சுட்டுவிட்டது போல் கையை இழுத்துக் கொண்டு "மகாராணா! இந்த உச்சிப்பூ ஏது உங்களுக்கு?" என்று வினவினார்.

மகாராணா அவர் கேள்வியின் உட்கருத்தைப் புரிந்து கொண்டாலும் புரியாததுபோலவே கேட்டார். "ஏன் இந்த உச்சிப்பூவுக்கு என்ன?" என்று.

மாதாஜி சிந்தியா அதிகமாக பேச்சை வளர்த்தாமல் "இந்த உச்சிப்பூ இந்த நாட்டை நாசம் செய்துவிடும். இந்தக் குழந்தையின் வாழ்வுக்கும் உலைவைத்துவிடும். இதை முதலில் ஏதாவது ஒரு தெய்வத்துக்கு சமர்ப்பித்து விடுங்கள்" என்றார்.

www.cleanindians.com

"ஒரு நகை நாட்டுக்கு எப்படி உலைவைக்க முடியும்?" ராணா தமது இயற்கையான பிடிவாதத்தைக் காட்டினார்.

"உங்கள் நாட்டுக்கு வந்த தீமையெல்லாம் இந்த நகை வந்த காலத்தில் இருந்துதான் ஏற்பட்டிருக்க வேண்டும். இதன் நடுக்கல்லில் ரத்தச் சிவப்பு காணப் படுகிறது. இடையே கறுப்பும் இருக்கிறது. இந்த சிவப்பு நாட்டில் ரத்தத்தைப் பாய்ச்சும், இந்த கறுப்பு, நாட்டை கரியாக்கிவிடும். இதை அணிந்தால் இந்த குழந்தையின் வாழ்வும் பருவத்துக்குப் பிறகு அதிக நாளிருக்காது" என்று திட்டமாகச் சொன்னார்.

மகாராணா தமது பிடிவாதத்தையும் பகுத்தறிவையும் காட்டி ஒரு கல் எப்படி நாட்டை நாசம் அடையச் செய்யும்?" என்று கேட்டு "சிந்தியா! இப்பொழுது நான்



என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். சிந்தியாவின் ஒவ்வொரு வார்த்தையும் பிற்காலத்தில் சரித்திரத்தில் உண்மையாகி நிலைக்கப் போவதை அன்று மகாராணா அறிந்தாரில்லை.

மகாராணாவுக்கு மற்றது எதுவும் கையாலாகா விட்டாலும் பிடிவாதத்தில் குறைவில்லை என்பதை உணர்ந்த மாதாஜி சிந்தியா சொன்னார். "மகாராணா! கல்பரீட்சை எனக்குத் தெரியும். மனித வாழ்க்கை ஏதேதோடோ பின்னப்படுகிறது இயற்கையால். அதை நாம் அறிய முடியாவிட்டாலும் சாத்திரங்கள் அறிந்திருக்கின்றன. மண்ணோடு நமது வாழ்க்கை பின்னப்படவில்லை. இதற்காகத்தானே சண்டை போடுகிறோம். மடிகிறோம். கல்லோடு மாத்திரம் அது ஏன் பிணைந்திருக்கக் கூடாது?" என்று என்ன சொன்னாலும் மகாராணாவின் புத்தியில் எதுவும் ஏறாது என்பதை உணர்ந்ததால் "மகாராணா! எனது கருத்து ஒரு புறமிருக்கட்டும். தாங்கள் முற்றுகைக் களத்துக்கு புறப்படுங்கள்" என்றார்.

"நான் அவசியமா?" என்று தயங்கினார் மகாராணா.

"மகாராணா! என்ன இருந்தாலும் நான் மூன்றுமவன். சித்தூரை முற்றுகையிட இந்த மராட்டியனுக்கு என்ன உரிமை என்று சலூம்பிரா கேட்கிறார். நீங்கள நேரில் பங்குகொண்டால் இந்த கேள்வி எழாது. ஒருவேளை தங்களுக்கு சலூம்பிரா பணிந்தாலும் பணியலாம்" என்றார் சிந்தியா.

"அந்த துரோகியாவது பணியவாவது?" என்றார் மகாராணா

"சலூம்பிரா உங்கள் காலில் விழுந்தாலொழிய சித்தூர் முற்றுகை முடியாது. அவர் சரணடையா விட்டால் அவரை சிறை செய்துகொண்டு வருகிறேன்" என்று சிந்தியா சபதம் செய்தார். "மகாராணா! இந்த மராட்டியன் சிநேகம் செய்தால் காரியத்தை முடிக்காமல்

விடமாட்டான். உங்கள் நலம் எங்கள் நலம் உங்கள் விரோதிகள் எனது விரோதிகள்'' என்று உறுதியுடன் பேசினார்.

அன்று மாலையே மகாராணா சிந்தியாவுடனும் ஜலீம் சிங்குடனும் சித்தூருக்குக் கிளம்பினார். மகாராணாவும் போரில் கலந்துகொண்டார் என்ற விஷயத்தை சித்தூர் கோட்டையிலிருந்த வீரர்கள் அறிந்ததும் புரட்சி செய்யத் தொடங்கினார்கள். சலூம்பிராவிடம் சென்று ''மகாராணாவுக்கு எதிராக நாங்கள் வாளை எடுக்க மாட்டோம். நீங்களாக சரணடையாவிட்டால் நாங்கள் உங்களைப் பிணைத்து மகாராணாவிடம் ஒப்படைப்போம்'' என்று சீறினார்கள்.

அந்த நிலையை நன்றாகக் கிளறிவிட்டார் இங்ளே. சிந்தியா மகாராணாவைப் பார்க்கப் போயிருந்த போது தாம் ஒரு வெள்ளைக் கொடியைப் பிடித்துக் கொண்டு சமாதான தூதனாக சித்தூருக்குள் போய் சலூம்பிராவை சந்தித்தார். ''சலூம்பிரா! நீர் சரணடைவது நல்லது. இல்லாவிட்டால் நாளை முதல் டீபாயின் பீரங்கிகளை இயக்க உத்தரவாயிருக்கிறது. சித்தூர் வீணாக நாசப்படும். உங்கள் வீரர்களின் உயிரும் சேதம் அடையும். இது அவசியமா என்பதை சிந்தித்து பாருங்கள்'' என்றார்.

www.cleanindians.com

ஏற்கனவே பீரங்கித் தாக்குதலாலும் சிந்தியா ஊரை வளைத்து விட்டிருந்த முற்றுகையாலும் பெரும் அலதிக்குள்ளாயிருந்த அவர் உபதளபதிகளும் ''மராட்டியர் தளபதி சொல்வதை ஒப்புக்கொள்ளுங்கள்'' என்று வற்புறுத்தினார்கள்.

உபதளபதிகளின் வேண்டுகோளுக்கு தூபம் போட்டார் இங்ளே. ''ஆம், சலூம்பிரா! ஒப்புக்கொள்ளுங்கள்'' என்றார். ''சிந்தியா கேட்ட நஷ்ட ஈட்டை நான் சொல்லி குறைத்து விடுகிறேன். நீங்கள் இருபது இலட்ச ரூபாய் கொடுத்துவிடுங்கள். மீதியை உங்கள் கிராமங்



களில் இருந்து வசூலித்துக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுங்கள்'' என்று ஊக்கினார் இங்ளே.

இங்ளேயின் கழுகுக் கண்களை உற்று நோக்கினார் சலூம்பிரா. இங்ளே சொல்வது பேருக்கு சலுகை போலத் தோன்றினாலும் உண்மையில் நாற்பது இலட்சத்தையும் அவர் கிராமங்களில் இருந்து உறிஞ்சிவிடுவார் என்று உணர்ந்த சலூம்பிரா பேசாமலே இருந்தார். பிறகு ஒரு ஆட்சேபனை கிளப்பி ''சக்தாவதர்கள் தலைவனாகவும் தண்பனாகவும் இயங்கும் ஜலீம்சிங் அங்கு அதிகாரத்தில் இருக்கும் வரையில் நான் எப்படி சரணடைய முடியும்? எங்கள் ஜன்ம எதிரிகளிடம் தாழ்ந்துபோகச் சொல்கிறீர்களா?'' என்று வினவினார்.

இதைக்கேட்ட மற்ற உபதளபதிகள் சிந்தனையில் இறங்கினார்கள். ''ஆம், தலைவர் சொல்வது சரிதானே? சந்தாவதர்கள் எப்படி சக்தாவதர்களுக்கு தலைவணங்க முடியும்?'' என்று ஒரு உபதளபதி கேட்டார்.

''அதை நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்றார் இங்ளே.

''ஜலீம்சிங் அகன்றால் நாங்கள் சரணடைகிறோம் மகாராணாவிடம்'' என்று மற்ற உபதளபதிகள் கூறினார்கள். பீமசிங் சலூம்பிரா பதில் சொல்லவில்லை. அவர் வீரமனம் வெந்து கொண்டிருந்தது. தமது வீரர்களிடம் தமது பிடிப்பு போய்விட்டதை உணர்ந்து கொண்டார்.

''என்ன சலூம்பிரா! உமது முடிவு என்ன?'' என்று கேட்டார் இங்ளே.

''என் வீரர்கள் முடிவுதான் என் முடிவும்'' என்றார் சலூம்பிரா.

அந்த உறுதியை வாங்கிக்கொண்டு தமது பாசறைக்குத் திரும்பிய இங்ளே, சிந்தியா முன்பாக ஒரு நாடகமாடினார். மகாராணா, சிந்தியா இவர்கள் இருந்த கூடாரத்தில் இந்த பிரச்சினையை மிக சாமர்த்தியமாகக் கிளப்

பினார். "சலூம்பிரா சரணடைய சித்தமாயிருக்கிறார். ஆனால் ஒரு தடையிருக்கிறது" என்றார்.

"என்ன தடை?" என்று சிந்தியா கேட்டார்.

"ஜலீம்சிங்கும் சலூம்பிராவும் எதிரிகள். ஜலீம்சிங் சக்தாவதர்களின் தலைவராக பணிபுரிகிறார். சலூம்பிரா பணிந்தால் சக்தாவதர்களுக்கு சலூம்பிராக்கள் பணிந்தது போலாகுமாம். வெட்டி கவுரவம். இதற்காக நாட்டை நாசம் செய்வதா?" என்று அலுத்துக்கொண்டார் இங்ளே.

போரிடாதிருக்க எந்த பிடி கிடைத்தாலும் அதைப் பற்றிக்கொள்ளும் மகாராணா "அதுவும் நியாயந்தான். எதற்கும் ஜலீம்சிங்கைக் கேட்டுவிடலாமே" என்றார்.

இதைக்கேட்ட சிந்தியாவுக்கு மகாராணாவிடம் பெரும் அருவருப்பு ஏற்பட்டாலும் அதை காட்டிக் கொள்ளவில்லை அவர். "இங்ளே! எதற்கும் ஜலீம்சிங்கை கேட்டும் பாரும்" என்றார்.

அடுத்த விநாடி அங்கு நிற்கவில்லை இங்ளே. தமது புரவியில் ஏறி ஜலீம்சிங்கின் கூடாரத்துக்கு விரைந்தார். ஜலீம்சிங்கை சந்தித்து "கோட்டா தலைவரே! பெரும் அக்கிரமம் இது. என்னால் தாங்கமுடியவில்லை" என்று நடித்தார்.

"என்ன அம்பாஜி?" என்று சந்தேகத்துடன் வினவினார் ஜலீம்சிங்.

"தாங்கள் சக்தாவதர்களின் தலைவராயிருக்காவிட்டால் சலூம்பிரா சரணடையத் தயாராம். இதை தாங்கள் ஒப்புக்கொள்ளக்கூடாது" என்றார் அம்பாஜி இங்ளே.

ஜலீம்சிங் உணர்ச்சிவசப்பட்டார். "அம்பாஜி! இதில் நமது கவுரவத்தைப் பார்ப்பது சரியல்ல. நாட்டு கவுரவம், நன்மை இவைதான் முக்கியம் நாட்டு நன்மைக்கு. இந்த போரையும் நாசத்தையும் தவிர்ப்பதற்கு, நான் விலகுவது அவசியமானால் நான் விலகுகிறேன்" என்றார்.

www.chennaiindians.com



அம்பாஜி போலி துயரத்தை முகத்தில் காட்டினார். "வேண்டும் போது உங்களை உதவிக்கு அழைப்பது, வேண்டாதபோது விலக்குவது. இது என்ன நியாயம்? நீங்கள் ஒப்புக்கொள்ளாதீர்கள்" என்றும் சொன்னார் துயரம் மிகுந்த குரலில்.

எதற்கும் உணர்ச்சிவசப்படும் ராஜபுத்திர குலத்தைச் சேர்ந்த ஜலீம்சிங் அம்பாஜியின் தந்திரத்தில் சிக்கி விடுவிடுவென்று தமது கூடாரத்தின் மூலைக்குச் சென்று ஒரு கடிதத்தை எடுத்து தாம் போரில் இருந்து விலகுவதாக மன்னருக்கு விலாசமிட்டு கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட அம்பாஜி காலம் தாழ்த்தாமல் மகாராணாவின் கூடாரத்துக்கு வந்து கடிதத்தை சமர்ப்பித்தார். மகாராணா அதைப் படித்துவிட்டு பக்கத்தில் இருந்த சிந்தியாவிடம் கொடுத்தார். சிந்தியா தமது கூரிய விழிகளால் இங்ளேயை நோக்கினார். உண்மை அவருக்குப் புரிந்திருந்தது. இருப்பினும் அவர் செய்யக் கூடியது எதுவுமில்லை. மராட்டியர்கள் எதிர்பார்த்த நஷ்டஈடு மொத்தத்தில் கிடைக்கிறது. போரும் நிற்பதால் வீரர்களுக்கும் கஷ்டம் இல்லை. தவிர ராணா சித்தமாயிருக்கிறார் போரில் ஈடுபடாமலே அதை முடித்துக் கொள்ள. இந்த சூழ்நிலையில் இங்ளேயின் ஏற்பாட்டுக்கு சிந்தியா ஒப்புக்கொண்டார்.

ஒரே ஒருவன் மட்டும் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இந்த போலி சமாதானத்தை வீரனான அவனால் ஜீரணிக்க முடியவில்லை. புஷ்பாவதியிடம் தனிமையில் சொன்னான் தீப்சந்த். "புஷ்பாவதி! இது வெட்கக்கேடு. நாம் இதில் சம்பந்தப்பட வேண்டாம்" என்று கூறினான்.

"அப்பா, காரணம் இல்லாமல் சலூம்பிராவின் சரணாகதிக்கு ஒப்புக்கொள்வாரா?" என்று சப்பை கட்ட முயன்றாள் புஷ்பாவதி.

"அவர் ராஜதந்திரி. மொத்தத்தில் எது நல்லது என்பதைத்தான் கருதுவார். இந்த ஏற்பாட்டில் மகா

ராணாவின் உதவிக்கு வந்த ஜலீம்சிங் பலியிடப்படுகிறார். இந்த போரின் இரண்டாவது பலி இது.''

''முதல் பலி?''

''கங்காபாய்! அது தவிர்க்கமுடியாது நோய் அவளை முறித்தது. இது அரசியல் நோய் இது நண்பரான ஜலீம்சிங்கை பலி எடுத்துக்கொள்கிறது. இனி மேவார் உருப்படாது''

இதைக் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்த சிந்தியா பெருமூச்சு விட்டார் ''மாப்பிள்ளை! சில சமயங்களில் நாம் நாட்டு நலத்துக்கு சில அதர்மங்களுக்கு உட்பட வேண்டியதாயிருக்கிறது'' என்றார் துன்பச்சாயை மிகுந்த குரலில்.

''மாதாஜி! அகர்மத்தால் தர்மம் விளைந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை'' என்றான் தீப்சந்த் அத்துடன் சொன்னான், ''நாங்கள் இந்த சமாதானத்துக்குப் பிறகு எங்கள் ஊருக்குச் செல்கிறோம்'' என்று.

www.cleanindians.com

சிலையென நின்றுவிட்டார் சிந்தியா சில விநாடிகள். புஷ்பாவதி இல்லாமல் தாம் எப்படி தனிமையில் இருக்க முடியும் என்று சிந்தித்தார். அந்த சிந்தனை அவருக்கு பெரும் வேதனையைத் தந்தது. புஷ்பாவதியிடம் சென்று அவள் நெற்றியில் முத்தமிட்ட சிந்தியா ''மகளே! மாப்பிள்ளை சொல்வதில் நியாயமிருக்கிறது. எந்த பெண்ணும் பிறந்த வீட்டில் நீண்டகாலம் இருக்க முடியாது'' என்று தழுதழுத்த குரலில் சொன்னார். அவர் கண்களில் இருந்து இரண்டு துளிகள் உருண்டு அவள் நெற்றியை நனைத்தன.

## 49. மேவாரின் தலையெழுத்து!

இரும்பு மனதை உடையவரும் எதற்கும் கண்கலங்காதவருமான சிந்தியா முதலில் மனைவி கங்காபாய் இறந்தபோது கண்ணீர் விட்டார். அடுத்து அவர் கண்ணீர்



விட்டது புஷ்பாவதி தன்னைவிட்டுப் பிரிந்து செல்லப் போகிறாள் என்ற நினைப்பினால்தான்.

அவர் கண்ணீரைப் பார்த்த புஷ்பாவதி ''அப்பா! கலங்காதீர்கள் நாங்கள் இப்பொழுது ஊருக்குப் போனாலும் திரும்பத் திரும்ப உங்களை வந்து பார்த்துக்கொண்டுதான் இருப்போம்'' என்று ஆறுதல் சொன்னாள்.

தீப்சந்த் மட்டும் பதில் சொல்லவில்லை. ராணா பீம்சிங்கின் ஆட்சியில் ராஜபுதனம் நாளுக்கு நாள் பலவீனப்பட்டு வருவதை உணர்ந்தான். ராணா கோழையாக இருந்தாலும் வீரனான சலூம்பிரா தலை வணங்கமாட்டார் என்று திட்டமாக நம்பியிருந்த தீப்சந்துக்கு அவரும் சரணடைய ஒப்புக்கொண்டது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. தவிர சமயத்தில் ஜலீம்சிங் சொந்த ஊருக்குக் கிளம்பியதை நினைத்தும் மனம் நொந்தான். இத்தனையிலும் மராட்டியர் ராஜதந்திரம் வென்றதேயொழிய ராஜபுதன வீரம் அழிந்து விட்டதை எண்ணி ராஜஸ்தானத்தையே வெறுத்தான்

இதன் விளைவாக இருமுறை அம்பாஜி இங்லேயை சந்திக்க முயன்றான். தீப்சந்தின் உள்ளத்தை நன்றாக அறிந்திருந்த அம்பாஜி அவனை சந்திக்காமல் சாக்கு போக்கு சொல்லி தப்பித்துக் கொண்டார். கடைசியாக அவர் கூடாரத்திலேயே அன்றிரவு அவரை சந்தித்த தீப்சந்த் ''அம்பாஜி! தங்களை ஒரு சந்தேகம் கேட்க வேண்டும்'' என்று தொடங்கினான் உரையாடலை

அம்பாஜி இங்லே அப்பொழுது தமது திண்டு திவாசுகளில் ஒரு கையை ஊன்றிக்கொண்டும் இன்னொரு கையால் எதிரே இருந்த சாய்வு எழுது பலகை மீதிருந்த கணக்குகளைப் பார்த்துக்கொண்டும் எழுதிக்கொண்டுமிருந்தார். தீப்சந்த் கூடாரத்துக்குள் வருவதை பார்த்தாலும் பார்க்காதது போல கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்த அம்பாஜி தீப்சந்த் வாய் திறந்து கேள்வி கேட்ட பின்பு தலையைத் தூக்கி ''யார் தீப்சந்தா!

மகாவீரனே வா'' என்று மரியாதையும் அன்பும் நிறைந்த குரலில் அழைத்தார்.

அவரது பேச்சு நடத்தை எல்லாமே போலி என்பதை தீப்சந்த் உணர்ந்திருந்ததால் தனது இதழ்களில் புன்முறுவலைத் தோற்றுவித்து ''அம்பாஜி! சலூம்பிராவின் சரணாகதியைத் தடுக்க முடியாதா?'' என்று வினவினான்.

''இதென்ன கேள்வி தீப்சந்த்? மேவாரின் இந்த வீண் புரட்சி நல்லபடியாக முடிவதை நீ விரும்பவில்லையா?'' என்று வினவினார்.

''அம்பாஜி! புரட்சி வீண் புரட்சிதான். ஆனால் முடிவு நல்லபடியானது இல்லை'' என்று தீப்சந்த் சுட்டிக்காட்டினான்.

''ஏன் சரியல்ல? சக்காதவதர்களுக்கு தலைமை வகித்த ஜலீம்சிங் நாட்டு நன்மையை முன்னிட்டு சொந்த ஊர் செல்லவில்லை. தங்கள் தந்திரத்தால் விலக்கப்பட்டார். இந்த போர் முனையிலிருந்து. பீம்சிங் சலூம்பிரா ராணாவுக்கு எதிராக புரட்சி செய்தது ராஜதுரோகம். அதற்கு ஈடு அவர் உயிர்தான். சுயமானத்துக்காக உயிர்விட்ட ராஜபுத்திரர்கள்தான் அதிகம். அந்த சுரணையையும் தங்கள் தந்திரம் உடைத்துவிட்டது. இனி ராஜபுதனத்தில் என்ன இருக்கிறது சிறப்பாக? எதைச் சொல்லி ராஜபுத்திரர் தலைநிமிர்ந்து நிற்பார்கள்?'' என்று தீப்சந்த் சினத்துடன் வினவிக்கொண்டே அம்பாஜியின் கணக்கு பெட்டியிடம் வந்து நின்றான்.

அம்பாஜி நீண்ட நேரம் சிந்தனையில் இறங்கினார். பேச ஆரம்பித்த போது யாரும் பதில் சொல்லமுடியாத தர்க்க ரீதியில் பேசினார். ''தீப்சந்த்! இதே பிரச்சினைகளை இன்னொரு கோணத்தில் பார். மேவாரில் தலையிட மராட்டியர் தாங்களாக வரவில்லை. தலையிட அழைக்கப்பட்டோம். மகாராணியின் தூதனாக நீயே வந்தாய் சிந்தியாவிடம். அவருக்கு இந்த சதிப்புற்றில் காலை விட விருப்பமில்லை என்றாலும் உன் மனைவி புஷ்பாவதியிடம்

www.cleanindians.com



உள்ள பாசத்தில் இந்த மகா உபத்திரவத்துக்கு ஒப்புக்கொண்டார். இந்த மேவாரில் என்ன இருக்கிறது நாங்கள் எடுத்துச் செல்ல? கிராமங்கள் வரண்டு கிடக்கின்றன. செல்வம் எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. இருபது லட்சம் முப்பது லட்சம் என்று இதோ கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன். இந்த கணக்கை வைத்துக் கொண்டு என்ன செய்வது?'' என்று கேட்டார் அம்பாஜி இங்லே. தமது கூரிய மூக்கை ஒருமுறை தடவி விட்டுக் கொண்டார். தீட்சண்யமான அவர் கண்கள் வெறுப்பைக் கக்கின.

அம்பாஜி சொன்னதில் அநேகமாக எல்லாமே சரிதான் என்று தீப்சந்த்துக்குத் தெரிந்திருந்தும் அவன் வீர மனம் அவர் விளக்கிய காரணங்களை ஒப்புக் கொள்ள மறுத்தது. ''அம்பாஜி! இன்று ராஜபுதன கிராமங்கள் வரண்டு கிடக்கலாம். ஆனால் நாளையே உயிர் பெற்று முளைக்கும். நீங்கள் பிடிக்கும் நகரங்களில் பணம் வசூலிக்கலாம். நீங்கள் விதிக்கும் அபராதம் மக்கள் வீடுகளில் இருந்து நகைகளாகவும் வெள்ளிப் பேழைகளாகவும் வந்து குவியும். வசூலிக்கும் முறையை நான் உங்களுக்கு சொல்லித்தர வேண்டியதில்லை. நாங்களாகத்தான் உங்களை அழைத்தோம் கையாலாகாத மகாராணாவைக் காப்பாற்ற. வந்த நீங்கள் மகாராணாவின் கவுரவத்தைக் காப்பதைவிட நஷ்டஈடு வசூலிப்பதில் முனைந்தீர்கள்'' என்றான் உணர்ச்சியுடன்.

இதைக் கேட்ட பின்பும் அம்பாஜியின் கழுகுக் கண்கள் தீப்சந்தை தைரியத்துடன் ஏறெடுத்து நோக்கின. அவர் பேசிய போது சொற்களும் சந்தேகத்துக்கு இடமின்றி வந்தன. ''தீப்சந்த்! முதலில் நான் கேட்கும் சில கேள்விகளுக்கு பதில் சொல்'' என்று கூறிவிட்டு ''மகாராணாவை கோழையாக பிறப்பித்தது நாங்களா?'' என்று வினவினார்.

''இல்லை'' திட்டமாக வந்தது தீப்சந்தின் பதில்.

"சலூம்பிராவை புரட்சி செய்ய நாங்கள் தூண்டினோமா?"

"இல்லை."

"உதவிக்கு வந்த ஜலீம்சிங் போனால்தான் தான் சரணடைவேன் என்று சலூம்பிரா சொன்னார். அதை ஜலீம்சிங்கிடம் சொன்னேன். தன்னை விட்டால் போதுமென்று அவர் போக ஒப்புக்கொண்டார். அது எங்கள் தவறா?"

"இல்லை."

இதற்குப் பிறகு கேள்வி கேட்கவில்லை அம்பாஜி. "தீப்சந்த்! இங்குள்ள சீர்கேட்டுக்கு மராட்டியர் பொறுப்பாளிகள் அல்ல. பாரதத்தில் இருவர் சண்டையிடுவதும் வெளி ஆட்களை உதவிக்கு அழைப்பதும் இன்று புதிதல்ல. அக்பர் வந்தபோது இதே சித்தூர் சரணடையவில்லை. வீரர்கள் வீர மரணமடைந்தார்கள். போரில் அக்பர் வெற்றிகொண்டார். ஏராளமான ராஜபுதன வீரர்களின் சடலங்கள் மீது அவர் நடந்தார். அப்பேர்ப்பட்ட வீரர்களை இன்று ராஜபுதனத்தில் காணோம். சிந்தியாவுக்குப் பதில் வேறு யாராவது இங்கு வந்திருந்தால் இந்த மேவாரின் கதி என்னவாயிருக்கும்?" இந்த கேள்விகளை மிகுந்த உக்கிரத்துடன் கேட்டார் அம்பாஜி. இங்கு நான் கணக்கு எழுதுகிறேன் தீப்சந்த். இது பலமற்ற வெட்டிக் கணக்கு. என் தலையெழுத்தை எழுதுகிறேன் இந்த ஏடுகளில்' என்று வெறுப்புடன் சொன்னார்.

தீப்சந்தின் உள்ளம் வெட்கத்தால் வெடித்துக் கொண்டிருந்தது "அம்பாஜி! நீங்கள் எழுதுவது உங்கள் தலையெழுத்தையல்ல. ராஜபுதனத்தின் தலையெழுத்து அந்த கணக்கு ஏடுகளில் இருக்கிறது" என்று கூறிவிட்டு தலை வணங்கி செல்ல முயன்றான். கூடாரத்து வாயிற்படி வரையில் சென்றுவிட்ட அவனை "தீப்சந்த்!" என்று குரல் கொடுத்தார் அம்பாஜி.

www.cleanindians.com



தீப்சந்த் தலையை மட்டும் திருப்பி அம்பாஜியைப் பார்த்தான். ஆனால் பதிலேதும் சொல்லவில்லை. அம்பாஜி சொன்னார் "தீப்சந்த்! இந்த ஏற்பாட்டில், சலூம்பிராவின் சரணாகதியில், நீ தலையிடாதே" என்று.

பதிலேதும் சொல்லாமலே தீப்சந்த் வெளியே சென்றுவிட்டான். அன்று மாலையும் இரவும் அவன் அந்த வட்டாரத்திலேயே காணப்படவில்லை. அவன் வராது போகவே புஷ்பாவதி மனம் கலங்கி "அப்பா! இன்னும் அவர் வரக் காணோமே?" என்று வினவினாள் துன்பத்துடன்.

"எப்படியும் காலையில் வந்துதான் ஆகவேண்டும்" என்றார் சிந்தியா.

"ஏன் வரவேண்டும் அவர்?"

"நாளை சலூம்பிரா சரணடைகிறார். உடனடியாக மகாராணா சித்தூருக்குள் பட்டணப் பிரவேசம் செய்வார். அதை தீப்சந்த் காண வேண்டாமா?" கண்டிப்பாய் வருவான் கவலைப்படாதே" என்றார் சிந்தியா.

ஆனால், அவர் எதிர்பார்த்தபடி தீப்சந்த் வரவில்லை. குறித்த சமயத்தில் சலூம்பிரா சித்தூர் கோட்டை வாசல்களை திறந்துகொண்டு வெளியே வந்தார். மாதாஜி சிந்தியா அவரை வரவேற்று மகாராணாவிடம் அழைத்துப் போனார். மகாராணாவின் பாதங்களை தொட்டு கண்களில் ஒத்திக்கொண்டார் சலூம்பிரா. பிறகு சலூம்பிராவின் வலது கையைப் பிடித்து ராணாவின் வலது கையில் "இனி இவர் உங்கள் அபயம்" என்று கூறி கொடுத்தார். சலூம்பிராவின் பாணிக் கிரகணத்தில் சரணாகதி படலம் முடிந்தது. அந்த சமாதானத்தில் மேவார் பிழைத்தது என்று எல்லோரும் நம்பினார்கள். நம்பாத ஒருவன் அந்த விழாக்கள் எதிலும் கலந்து கொள்ளவில்லை. ராணா பீம்சிங் தனது மூதாதைகளின் தலைநகரான சித்தூருக்குள் நுழைந்ததும் சலூம்பிராவிடம் ஒரு ஓலை கொடுக்கப்பட்டது.

அதை பிரித்துப் படித்த சலூம்பிரா திக்பிரமை அடைந்தார். அவர் முகத்தை பேரதிர்ச்சி ஆட்கொண்டது

## 50. சோதிடம் பலித்தது

மோகினிவனப் பள்ளத்தாக்கில் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு எந்த இடத்தில் பீம்சிங் சலூம்பிராவை சந்தித்தானோ, அதே இடத்தில் அதே சமயத்தில் அதே சூழ்நிலையில் அன்றும் திப்சந்த் நின்றிருந்தாலும், அவன் அந்த பழைய நாளைப் போன்ற மன நிம்மதியோ மகிழ்ச்சியோ சிறிதும் இல்லாமலே தனது பார்வையை நான்கு புறங்களிலும் செலுத்தினான்.

www.cleanindians.com

அவனுக்குப் பின்னால் அப்பொழுதும் மகாராணா, மாதர்களுடன் குலாவும் அந்த பழைய மாளிகை இருந்தது. அவன் நின்றிருந்த இடத்துக்கு இருபுறங்களிலும் மலர்ச் செடிகள் பல நானாவித வண்ண மலர்களைத் தாங்கி நின்றிருந்தாலும், அவற்றில் சில செக்கச்செவேலென்ற பெரும் பூக்களைத் தாங்கி, அது இரத்தக்களறி ஏற்படுவதற்கே ஏற்பட்ட நிலம் என்பதை சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தன.

அவற்றைப் பார்த்து தரையையும் நோக்கிய திப்சந்த் "இந்த இடத்தில்தான் புஷ்பாவதியை நான் முதலில் சந்தித்தேன். அதற்கு பின்பு இங்குதான் அந்த அவல உச்சிப்பூ ஆபரணத்தை கண்டெடுத்தேன். இங்குதான் பீம்சிங் சலூம்பிராவுடன் போரிட்டேன், இது வினையின் விளைவு நிலம்" என்று சொல்லிக்கொண்டான். பிறகு அண்ணாந்து நோக்கி வானத்தில் உலாவிக்கொண்டிருந்த வெண்மதியை நோக்கி "அன்றும் இப்படித்தான் உன்



தண்ணொளியை வீசிக்கொண்டிருந்தாய். ஆனால் உன் விளைவில் இங்கு நிகழ்ந்ததெல்லாம் பூசலும் ராஜத்துரோகமும் தானே?" என்று குற்றமும் சாட்டினான்.

அடுத்து நான்கு நாட்களுக்கு முன்பு நடந்த மகாராணாவின் சித்தூர் பட்டணப் பிரவேசத்தையும் நினைத்துப் பார்த்தான். "என்ன மாற்றம்! என்ன விந்தை! மகாராணாவுக்கு துரோகம் செய்து சித்தூரையே ஆக்ரமித்திருந்த பீம்சிங் சலூம்பிரா அவரது வலதுபுறத்தில் தேசபக்தராக, மகாராணாவின் நலத்தைக் காக்கும் ராஜ பக்தராக, சித்தூரில் சகல மரியாதைகளுடன் நுழைகிறார். மகாராணாவின் நலனைப் பாதுகாக்க உயிர்விட்ட மந்திரி சோம்சந்த் காந்தியைப்பற்றி கேட்பாரைக் காணோம். மகாராணாவைக் கைவிடாது காத்து நின்ற சக்தாவதர்களின் தலைவனும் மகாவீரனுமான சங்கிரமசிம்மனைக் காணோம்.

சலூம்பிரா மன்னரை எதிர்த்தபோது சலூம்பிராவை அடக்க தமது பெரும் படையுடன் உதவிக்கு வந்த ஜலீம்சிங் சொந்த ஊருக்கு அனுப்பப்பட்டார். இதுதான் லட்சியவாதிகளுக்கு அரசியலில் கிடைக்கும் பரிசு போலிருக்கிறது. தேச தியாகிகள் கீழே போவதும் தேசத் துரோகிகள் மேலே வருவதும் இயற்கையின் நியதியா?" என்று நினைத்து "இதென்ன உலகம்!" என்று உலக நிந்தனையிலும் இறங்கினான்.

எது எப்படியிருந்தாலும் அன்று தனது வாழ்வில் ஒரு முடிவு ஏற்படும் என்ற தீர்மானத்துடன் சற்று எட்ட நின்று புல்மேய்ந்து கொண்டிருந்த புரவியை தடவிக் கொடுத்து "நாம் இன்று பிரிந்தாலும் பிரியலாம்" என்று அதன் காதில் சொன்னான். புரவியும் தனது தலையைத் தூக்கி தனது முகத்தை அவன் முகத்துடன் இழைத்தது. அதன் கண்களை உற்றுநோக்கிய திப்சந்த் அதன் கண்களிலும் தனது பிரிவை நினைத்து நீர் துளிர்ப்பதாக நினைத்தான். பிறகு தன்னை திடப்படுத்திக் கொண்டு தனது

கச்சையில் இருந்து இடையில் தொங்கிய வாளை தட்டிக் கொண்டான்—வலது கரத்தால். பிறகு மோகினிவனத்துக்கு சித்தூரில் இருந்து வரும் பாதை மீது கண்ணை ஓடவிட்டான். "சலூம்பிரா வருவாரா வரமாட்டாரா?" என்று தன்னைக் கேட்டுக்கொண்டு "வராதிருக்கமாட்டார். என்ன இருந்தாலும் வீரர்" என்று சமாதானமும் சொல்லிக்கொண்டான்.

அவன் அப்படி பலவிதமாக எண்ணங்களை ஓட்டிக் கொண்டிருந்த சமயத்தில் தூரத்தே ஒரு பெரும் புரவி நிதான நடைபோட்டு வந்து கொண்டிருந்ததைக் கவனித்தான். அதன் மீது மிக அலட்சியமாக உட்கார்ந்திருந்த ராட்சத உருவத்தைக் கண்டதும் "சலூம்பிரா வந்து விட்டார். இனி எங்கள் வாழ்க்கை வெகுவிரைவில் நிர்ணயிக்கப்படும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

www.chennaiindians.com

சந்தாவதர்களின் தலைவரும் வீரனுமான பீம்சிங் சலூம்பிராவும் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் நேராக புரவியைச் செலுத்தி வந்து தீப்சந்தின் முன்பு நிதானமாக இறங்கி புரவிமீது சேணத்தை எறியவே, அது சென்று தீப்சந்தின் புரவியுடன் உராய்ந்து நின்றது.

அதைப்பார்த்த சலூம்பிரா, தீப்சந்தை நோக்கி "தீப்சந்த்! நமது புரவிகள் நேசத்தைக் காட்டுகின்றன" என்றார் புன்முறுவலுடன்.

"நாமும் மிருகமாயிருந்தால் எதிலும் எப்பொழுதும் நட்பைக் காட்ட முடியும்" என்றான் தீப்சந்த்

துன்பப் புன்முறுவல் ஒன்றை உதடுகளில் தோற்றுவித்த பீம்சிங் தனது கச்சையிலிருந்த கடிதமொன்றை எடுத்து தீப்சந்திடம் காட்டி "இது நீ எழுதிய ஓலைதானே?" என்று வினவினார்

ஆம் என்பதற்கு அறிகுறியாக தலையை ஆட்டிய தீப்சந்த் "அந்த ஓலையில் கண்டபடி நான் போரிடுவதில்



தங்களுக்கு ஆட்சேபணையில்லையே?" என்று வரண்ட குரலில் வினவினான்.

"இல்லை. ஆனால் இது தேவைதானா?" பீம்சிங் வருத்தத்துடன் கேட்டார்.

"தேவையில்லாவிட்டால் ஓலையை அனுப்பியிருக்க மாட்டேன்." தீப்சந்த் இதை திட்டமாகச் சொன்னான்.

"நாம் இருவரில் ஒருவர் மரணமடையும் வரையில் போரிடவேண்டும் என்று எழுதியிருக்கிறாய்."

"ஆம்"

"என்மேல் உனக்கு என்ன கோபம்?"

"ஆயுதம் ஏந்த முடியாத சோம்ஜியைக் கொன்றீர்கள். ராஜத் துரோகியாக இன்னொரு மன்னனாக சித்தூரைப் பிடித்தீர்கள்"

"அவற்றை மன்னரே மன்னித்துவிட்டாரே?"

"மன்னர் எதையும் மன்னிப்பார். நாட்டை கவனிக்காமல் அந்தப்புரப் பஞ்சணையில் புரளும் வீரமற்ற மகாராணா எதையும் சரியென்று நினைக்கலாம். நான் நினைக்க முடியாது."

"ஏன்?"

"மன்னனையும் நாட்டு நலத்தையும் காப்பதாக ராஜமாதாவுக்கு உறுதி அளித்திருக்கிறேன். எனது வாளின்மீது ஆணையிட்டு இருக்கிறேன்."

"தீப்சந்த்! நன்றாக சிந்தித்துப்பார். தனிமனிதர் விருப்பு வெறுப்புகள் நாட்டை பாதிக்கக் கூடாது நீ என்னைக் கொன்றால் நாட்டில் மறுபடியும் சந்தாவதர், சக்தாவதர் சச்சரவு ஏற்படும். இந்தப் பூசல்களைத் தடை செய்ய சிந்தியா மேலும் தமது படைகளை ஏவினால் மேவார் சீக்கிரம் அவர் வசமாகும்" என்று சலூம்பிரா விளைவுகளை சுட்டிக்காட்டினார்.

"தீப்சந்த் புன்முறுவல் செய்து "சலூம்பிரா இப்பொழுது திடீரென நாட்டின் நலத்தில் சிரத்தை ஏற்பட்டிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். நாட்டுப் பற்று சமயத்துக்குத் தக்கபடி ஏற்படுவதும் நீங்குவதும் சரியல்ல. தவிர தனி மனிதர்கள் சண்டையில் விபரீதங்கள் ராஜபுதனத்தில் விளைவது சரித்திரம் பூராவும் காணப்படுகிறது" என்று கூறினான். "காலம் கடத்தாமல் வந்த காரியத்தை முடிப்போம்" என்று கூறிக்கொண்டு தனது வாளை கச்சையில் இருந்து உருவினான்.

சலூம்பிரா அதற்கு மேல் ஏதும் பேசாமல் தனது வாளை உருவிக் கொண்டார். இரு வாட்களும் அடுத்த விநாடி இணைந்து மீண்டன. சலூம்பிரா அன்று மிக நிதானமாகவும் எச்சரிக்கையுடனும் போராடினார். ஆனால் தீப்சந்த் மிகுந்த அனாயாசமாக வாளைச் சுழற்றினாலும் கூடியவரை தற்காப்புப் போரிலேயே ஈடுபட்டான். அவனது வாள் இருமுறை சலூம்பிராவின் வாளின் பாதுகாப்பு எல்லையையும் மீறி அவர் மார்புக்குச் சென்ற போதும் அந்த வாய்ப்பை அவன் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை சலூம்பிரா கவனிக்கவே செய்தார். "இவன் ஏன் என்னைக் கொல்ல மறுக்கிறான்?" என்று தனக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தார். ஒருவேளை இதே இடத்தில் முன்பு காயப்படுத்தியதுபோல் காயப்படுத்த முயலுகிறானா? எனது வாட்கரத்தை செயலற்றதாக அடித்து மீண்டும் மன்னிப்பு அளித்து என்னைப் பார்த்து ராஜபுதனம் சிரிக்கும்படி செய்ய உத்தேசிக்கிறானா?" என்று வினவிக்கொண்டு அந்த கேள்விகள் விளைவித்த பீதியால் மும்முரமாக போரிட முற்பட்டார் உக்கிரமாக தமது வாளால் தீப்சந்தின் வாளைத் தாக்கிக்கொண்டு முன்னேற முற்பட்டார். இருமுறை தீப்சந்தின் கழுத்துக்கு அருகிலும் தனது வாள் சென்றுங் கூட தீப்சந்தின் வாள் அதை அகற்றிவிட்ட விந்தையைப் பார்த்து வாட்போரில் இணையற்ற ஒரு வீரனிடம் தாம் சிக்கிக்கொண்டு விட்டதை உணர்ந்தார். உணர்ந்ததால் போரையும் உக்கிரப்படுத்தினார். இருவரும் ஒருவருக்-



கொருவர் சளைக்காமல் போரிட்டார்கள். அவர்கள் வாட்கள் சந்தித்த ஒலியும் சந்திப்பிலிருந்து மீண்டபோது ஏற்பட்ட கிரீச் சென்ற சத்தமும் அந்த மோகினிவனப் பகுதியை மரணவனப் பகுதியாக அடித்தன.

போர் சுமார் அரை ஜாமத்துக்கு மேல் நடந்தும் இருவரும் சளைத்ததாக தெரியவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் தீப்சந்த் திடீரென தனது போர் முறையை மாற்றினான். மிக வேகமாக சலூம்பிராவின் வாளுடன் தனது வாளை இணைத்து ஒரு சுழற்று சுழற்றினான். அவரும் அதே போல் சுழற்றவே இருவர் வாட்களும் மேலே பறந்தன. அப்பொழுது திடீரெனப் பின்வாங்கிய சலூம்பிராவின் கால் தரையிலிருந்த பாறையொன்றால் தடுக்கவே அவர் மல்லாந்து விழுந்தார். தீப்சந்த் பறந்த தனது வாளை அந்தரத்திலேயே பற்றினான்.

"தீப்சந்த்! தாமதிக்காதே. முடித்துவிடு என்னை" என்று கூவினார் சலூம்பிரா. மரணத்தின் மீது அவருக்கு பெரும் ஆசை ஏற்பட்டது அவர் குரல் ஒலியில் நன்றாகத் தெரிந்தது.

தீப்சந்த் அவருக்கு அந்த மரணத்தை அளிக்க விரும்பாமல் சற்று எட்ட விழுந்த அவரது வாளை எடுத்து அவரிடம் கொடுத்து அவரது கையை தூக்கி எழுப்பியும் விட்டான். அவர்கள் சண்டை மீண்டும் மூண்டிருக்கும் வேறு தலையீடு ஏற்படாதிருந்தால்.

மரணமடையும் வரை போரிடத் தீர்மானித்த அந்த இருவரும் மீண்டும் வாட்களை எடுத்து முன்னேற முயன்ற சமயத்தில் திடீரென புரவிகள் வரும் ஒலி கேட்கவே சலூம்பிரா சொன்னார் "யாரோ வருகிறார்கள்" என்று.

அடுத்து, மாதாஜி சிந்தியா வீரர்கள் பலருடன் வந்து, சலூம்பிராவையும் தீப்சந்தையும் வளைத்துக் கொண்டார்.

இருவருக்கும் குறுக்கே சிந்தியாவின் வீரர்கள் புகுந்து விட்டதால் இருவருக்கும் எந்த செயலும் சாத்தியமில்

லாது போயிற்று. "மகாராணாவின் ஆணைப்படி உங்கள் இருவரையும் கைது செய்கிறேன்" என்றார் சிந்தியா.

"என்ன குற்றத்திற்கு?" என்று கேட்டார் சலூம்பிரா.

"மேவாரில் தனி நபர் சண்டைகளைத் தவிர்க்க உத்தரவு போட்டிருக்கிறார் மகாராணா. அரசர் உத்தரவை மீறிய குற்றத்திற்கு உங்களை சிறை செய்கிறேன். உங்கள் வாட்களை என்னிடம் கொடுத்து விடுங்கள்" என்று கையை நீட்டினார்.

வீரர்களால் சூழப்பட்டு நின்ற இருவரும் வாட்களைக் கொடுக்க மறுத்தார்கள். "வாளைக் கொடுப்பதைவிட மடிவேன்" என்றார் சலூம்பிரா.

"ராஜபுதனமே தினம் மடிந்துகொண்டிருக்கிறது. தனி மனிதர்கள் சாக முற்படுவதில் வியப்பில்லை" என்ற சிந்தியா இகழ்ச்சியாகப் புன்முறுவல் கொண்டார்.

"எந்த ராஜபுத்திரனும், மனைவி, வாள், புரவி மூன்றில் எதையும் இன்னொருவரிடம் ஒப்படைக்கமாட்டான் ராஜபுத்திரராகப் பிறந்திருந்தால் உமக்கும் இது தெரிந்திருக்கும்" என்றான் திப்சந்த்.

"சரி உன்னிடம் இப்பொழுது வாளும் இருக்கிறது. புரவியும் இருக்கிறது, மனைவியையும் அழைத்துக்கொள்" என்றார்.

"மனைவியா! எங்கே?" என்று கேட்டான் திப்சந்த்.

அவன் கேட்டதும் கேட்காததுமாக பக்கத்தில் இருந்த மலர்ச்செடிகள் அசைந்தன. அந்தக் கூட்டத்தில் இருந்து மலர்ச்செடியாக புஷ்பாவதி வெளியே வந்தாள்.

பிரமை பிடித்தவன் போல் நின்றான் திப்சந்த். புஷ்பாவதியின் விழிகள் நிலத்தில் தாழ்ந்து கிடந்தன. அவள் ஏதும் பேசவில்லை. உதடுகள் லேசாகத் துடித்தன. சிந்தியா பேசினார் "திப்சந்த்! இவளை நட்டாற்றில் நிறுத்துவதற்காக உனக்கு இவளை மணமுடித்துத் தரவில்லை நான். அவள் நினைப்புக்கு துரோகம் செய்ய நீ உன்னை அழித்துக் கொள்வது தீயசெய்கையாகும்" என்றார்.

www.cleanindians.com



திப்சந்த் தனது கண்களை அவர் கண்களுடன் உறவாட விட்டான். "வீரன் வாழ்வு என்றும் நிலையுள்ளதல்ல" என்றான் திப்சந்த்.

"வீண் மரணமும் புத்திசாலித்தனமல்ல. மேவார் பல வீரர்களை பலி கொடுத்திருக்கிறது. மேவாரைக் காப்பது உன்னையும் சலூம்பிராவையும் போன்றவர் கடமை" என்றார் சிந்தியாா.

திப்சந்த் ஏதும் பதில் சொல்லவில்லை. புஷ்பாவதியிடம் சென்று அவளைக் கையைப்பிடித்து அழைத்து வந்து "சிந்தியா! நான் இனி மேவாரில் இருந்து பயனில்லை. மண்டலக் கோட்டைக்குச் செல்கிறேன்" என்று கூறி அவருக்கு தலைவணங்கினான்.

சிந்தியா அந்த தம்பதிகளை நெருங்கி தமது கைகளை அவர்கள் தலைமீது வைத்து ஆசிர்வதித்தார். புஷ்பாவதியும் அவனும் புரவிகளில் ஏறிச்சென்றபோது அவர் கண்களில் நீர் மல்கியது "ஒரு மாபெரும் வீரன் போகிறான்" என்று முணுமுணுத்தார். சலூம்பிராவைப் பார்த்தார்.

சலூம்பிராவின் முகத்தில் வேதனை நிரம்பிக் கிடந்தது.

நான்கு நாட்களுக்குப் பிறகு மண்டலக் கோட்டை அரண்மனை உப்பரிகை அறையிலிருந்து சாளரத்தின் மூலம் வெளியே நோக்கிக் கொண்டிருந்த திப்சந்தை பின்னாலிருந்து அணுகிய புஷ்பாவதி "இன்னும் ஏன் மனதை அலட்டிக் கொள்கிறீர்கள். மேவாரின் நிலைதான் சீரடைந்து விட்டதே. தந்தைதான் ஓரளவு அமைதியை நிலைநாட்டி விட்டாரே" என்று கூறி அவன் தோள்மீது சாய்ந்தாள்.

அவளைத் திரும்பிப் பாராமலே பேசினான் திப்சந்த். "புஷ்பாவதி! இனி மேவாரில் நிம்மதி கிடையாது. மராட்டியர் ஆதிக்கத்தில் இப்பொழுது நிம்மதி கிடைத்திருக்கிறது. அடுத்து வேறு ஏதாவது ஆதிக்கம் வரும். இனி மேவாரின் நிம்மதி அடிமைகளின் நிம்மதிதான்.

வீரர்களின் நிம்மதி கிடையாது. காத்திருந்து பார்'' என்றான்.

''இந்த பூமி எப்பொழுதும் வீரர்களைப் பெற்றெடுக்கும் என்று சொல்வீர்களே?'' என்று கேட்டாள் புஷ்பாவதி. பிறகு பின்னடைந்து பஞ்சணையில் உட்கார்ந்தாள்.

தீப்சந்த் அவளை திரும்பி நோக்கினான். மெள்ள அவளை நோக்கி நடந்தான். பஞ்சணையை அடைந்து அவள் முகத்தைத் தூக்கி ''புஷ்பா! நீ சொன்னது உண்மை'' என்றான்.

''ஆம்'' என்றாள் அவள்.

''என்ன ஆம்?'' என்று அவன் கேட்டான்.

''அவள் தலையைக் குனிந்து அவன் மார்பில் புதைத்துக்கொண்டாள். இன்னும் எட்டு மாதங்கள்...'' என்று அவன் இதயத்துக்கு செய்தி சொன்னாள்.

அப்புறம்?'' என்றான் தீப்சந்த்.

''இந்த வீரனுக்கு ஒரு வீரன் பிறப்பான்...'' என்று முணுமுணுத்த புஷ்பாவதி பஞ்சணையில் குப்புற விழுந்தாள்.

பஞ்சணைப் பக்கத்தில் அவளைப் பார்த்துக் கொண்டே நின்ற தீப்சந்த் முகத்தில் இன்ப ரேகை படர்ந்தது. பஞ்சணை முகப்பில் உட்கார்ந்து அந்த புஷ்பக்கொடியின் முதுகைத் தடவலானான். பிறகு குனிந்து ''அடி கள்ளி! இதை ஏன் முன்னமே சொல்லவில்லை?'' என்று அவள் காதில் ரகசியமாகக் கேட்டான். முகத்தை அவள் தலையணையில் புதைத்துக்கொண்டாள்.

★

ளத்தூர், சென்னை-